கழக வெளியீடு : ௧௨௬௯

சிதம்பரம் ஈசானியமடம் இராமலிங்க சுவாமிகள்

இயற்றியருளிய

முருகேசர் முதுநெறி வெண்பா

மூலமும் உரையும்

உரையாசிரியர் :
கருப்பக்கிளர் சு அ இராமசாமிப் புலவர்

VTN003

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.
திருநெல்வேலி - 6. சென்னை - 1.
1965

சுப்பிரமணிய அருட்டிரு சதாசிவ இராமசாமிப் புலவர் (1907)

© THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,

Ed 1 Dec. 1965

O31,IC5
*kw*1K5

MURUGESAR MUDUNERI VENBA
(MOOLAMUM VURAIYUM)

Paari Achakam, Madras-1.

முன்னுரை

திருக்குறள் பின்னிரண்டடிகளில் அமையுமாறு முன்னிரண்டடிகளில் அக்குறளுக்கேற்ற எடுத்துக்காட்டுகளை எடுத்தமைத்து முழுவெண்பாவாகச் செய்யும் முறையில், சினேந்திரவெண்பா, இரங்கேசவெண்பா, தினகரவெண்பா, வடமலைவெண்பா திருமலைவெண்பா, திருமலைக் கொழுந்து வெண்பா, முதுமொழி மேல்வைப்பு, சோமேசர் முதுமொழி வெண்பா, வள்ளுவர் நேரிசை, சிவசிவவெண்பா, முருகேசர் முதுநெறிவெண்பா முதலிய பல நூல்கள் தோன்றின. ஒவ்வொருவரும் தத்தமக்குத் தக்கதாகத் தோன்றிய எடுத்துக் காட்டுகளை யமைத்து நூலை முடித்துள்ளனர். பெரும்பாலார் அதிகாரத்திற்கு ஒரு குறளை எடுத்துள்ளனர். சினேந்திரவெண்பா திருக்குறள் முழுமைக்கும் அமைக்கப்பட்ட ௧௩௩௦ பாடல்களைக் கொண்ட நூல் என்று அறியப்படுகிறது. ஆனால் அந்நூல் மறைந்துவிட்டதாகத் தெரிகிறது. சோழவந்தானூர் அரசஞ் சண்முகனாரும் அதிகாரம் முழுமைக்குமாக அமைத்து இருபதுக்கு மேற்பட்ட அதிகாரங்களுக்கு வள்ளுவர் நேரிசை என்ற தலைப்பில் வெண்பா யாத்துள்ளார். ஆனால் இவருடைய நூல் முடிவு பெறவில்லை. தற்காலத்தில் நம் மிடையே வாழ்ந்துவரும் பெரும்புலவர் உயர் திரு செக வீரபாண்டிய கவிராசர் அவர்கள் ௧௩௩௦ குறள்களுக்கும் எடுத்துக்காட்டுக் கதைகளமைத்து விரிவான உரையோடு திருக்குறள் குமரேச வெண்பா என்னும் நூலை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

முருகேசர் முதுநெறி வெண்பாவாகிய இந்நூலை இயற்றியவர் சிதம்பரம் ஈசானியமடத்தில் இருந்த இராமலிங்க சாமிகள் என்னும் பெரியாராவர். இவர் வீர சைவக் கொள்கையினர். இலக்கண இலக்கியங்களையும் சங்கநூல்களையுந் தக்காரிடங் கற்றுணர்ந்தவர். தம்மையடுத்தவர்கட்குப் பல நூல்களைப் போதித்துப் புலவர்களாக்கியவர். சொற்பொழிவு செய்யும் ஆற்றல், நூலியற்றும் ஆற்றல், உரையெழுதும் ஆற்றல்

முதலியன இவரிடம் நன்கு அமைந்திருந்தன. இவர் பழைய நூல்கள் பலவற்றைத் திருத்தமான முறையில் வெளியிட்டார். முருகேசர் முதுநெறி வெண்பாவாகிய இந்நூலை அதிகாரத்திற்கு ஒருகுறள் வீதம் தெரிந்தெடுத்து முருகக்கடவுளை முன்னிலைப் படுத்தி "முருகேசா!" என விளித்து முடித்திருக்கிறார். ௧௩௩ அதிகாரங்கட்கும் ௧௩௩ வெண்பாக்கள் உள்ளன.

இந்நூலுக்கு இவருடைய மாணவர்களில் ஒருவராகிய சோ. குமாரவீரையர் உரையியற்றியுள்ளார். அவ்வுரை கதை உரை எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துப் பிண்டமாக முடிக்கப்பட்டுள்ளது. தனியாக உரையோ கதையோ இல்லை. நான் இவ்வுரையைப் பெரும்பான்மையுந் தழுவிப் பதவுரையாக எழுதியதோடு கற்போருக்குப் பொருள் எளிதில் விளங்குமாறு பொழிப்புங் கொடுத்துக் கதையையுந் தனியாக அமைத்து முடித்திருக்கிறேன். இதனைக்கொண்டு உரை, பொழிப்பு, கதை முதலியவைகளைத் தனித்தனியே உணர்ந்து கொள்ளலாம்.

20-12-65
பைந்தமிழ்ப்பண்ணை
கருப்பக்கிளர்
தஞ்சைமாவட்டம்.

சு. அ. இராமசாமிப் புலவர்

உ

சிவமயம்

வேலுமயிலுந் துணை

முருகேசர் முதுநெறி வெண்பா

மூலமும் உரையும்

காப்பு

கதிநெறியர் நெஞ்சிற் கதிர்க்குமுரு கேசர்
முதுநெறிவெண் பாவை மொழியப்—பதிநடம்வேட்
டற்பகத்தர் மல்குதில்லை யம்பலமேற் பாற்சிகரிக்
கற்பகத்தின் பொற்பதமே காப்பு.

(இதன் பொருள்.) கதிநெறியர் நெஞ்சில் - வீடுபேற்று வழியை விரும்பும் உணர்வுடையவர்களின் உள்ளத்தில், கதிர்க்கும் முருகேசர் - வெளிப்பட்டு நிற்கும் முருகப் பெருமானை முன்னிலைப்படுத்தி, முதுநெறி வெண்பாவை மொழிய - முதுநெறி வெண்பா என்னும் இந்நூலைக் கூறுதற்கு, பதிநடம் வேட்டு - கூத்தப் பெருமானுடைய திருக் கூத்தை விரும்பி, அன்பு அகத்தர் மல்கு - அன்பினை உள்ளத்திலே கொண்டிருப்பவர்கள் நிறைந் திருக்கின்ற, தில்லை அம்பலம் மேல் பால் சிகரி - திருத் தில்லைப் பொன்னம்பலத்திற்கு மேற்குப் பக்கத்திலேயுள்ள கோபுரத்தில் எழுந்தருளிய, கற்பகத்தின் பொற் பதம் காப்பு - கற்பகப் பிள்ளையாருடைய பொன்போலுஞ் சிறந்த திருவடிகளே காக்கும் துணையாம்.

(விளக்கம்.) முதுநெறி வெண்பாவை மொழியப் பொற்பதமே காப்பு என்பதாம். கதிநெறி - சிறந்து விளங்கும் நெறி. முதுமை நெறி - முதுநெறி. பழங் காலத்தவர் கூறிய அறநெறி. அன்பு எனற்பாலது எதுகையை நோக்கி அற்பு என வலித்தல் விகாரம் பெற்றது. மல்குதல் - மிகுதிப் படுதல். தில்லை - திருத் தில்லை. அந் நாளில் தில்லை மரங்கள் மிகுந்து காடாக விளங்கிய இடம் பின்னுளில் தில்லையெனப் பேர் பெற்று நின்றது. இந் நாளில் தில்லை என்னும் வழக்கில்லை. கோயிலின் பெயராகிய சிதம்பரம் என்பதே பெயராக வழங்குகின்றது. தில்லை என்பது அருகி நிற்கின்றது. சிகரி - கோபுரம். மேற்குக் கோபுரத்தில் கோபுரத்தோடு ஒன்ருகப் பொருந்தியுள்ள பிள்ளையாரின் பெயர் கற்பகப் பிள்ளையார். வேண்டுவார் வேண்டுஞ் சிறப்புக்களை யெல்லாம் அப்பிள்ளையார் அளித்து நிற்றலின் கற்பகப் பிள்ளையார் என்று பெயர் பெற்ருர். (க)

அவையடக்கம்

தேசுமலி தெய்வத் திருக்குறள்க ளோடுமுரு
கேசனெனு நாமங் கெழுமுதலி—னுசகன்ருேர்
குற்றமது நோக்காரேன் கோள்கையினுல் நீதிசில
சொற்றனனோர் நூலாத் தொகுத்து.

(இ - ள்.) தேசுமலி - புகழாகிய ஒளிமிகுந்த, தெய்வத் திருக்குறள்களோடு - தெய்வத்தன்மை பொருந்திய திருக் குறட்பாக்களுடனே, முருகேசன் எனும் நாமம் கெழு முதலின் - திருமுருகனுடைய திருப்பெயராகிய முருகேசன் என்னும் பெயரானது பொருந்துகிறபடியினுல், ஆசு அகன்ருேர் - குற்றமற்ற பெரியோர்கள், குற்றம் அது நோக்கார் என் கொள்கையினுல் - குற்றத்தைப் பார்க்க மாட்டார்கள் என்னும் துணிவைக் கொண்டு, நீதிசில - திருக்குறள் நீதிகளிற் சிலவற்றை, ஓர் நூல் ஆ தொகுத்து- ஒரு நூலாகத் தொகுத்து, சொற்றனன் - கூறினேன்.

(வி - ம்.) புகழ் பொருந்திய திருக்குறட் பாக்களோடு முருகேசன் என்னும் திருப்பெயரும் பொருந்துகிறபடியினுல் பெரியோர்கள் இந்நூலினிடத்தே குற்றங்காணமாட்டார்கள் என்பதாம். தேசு என்பது அழகு ஒளி மிகுபுகழ் முதலிய பொருள்களைக் குறித்து நிற்பது. திருவள்ளுவர் தாஞ்செய்த நூலை அரங்கேற்றுவான் ஆலவாய்ப்பதிக்குக் கொண்டு சென்று சங்கத்தார்களிடங் காட்ட அவர்கள், "தெய்வத் தன்மை பொருந்திய சங்கப்பலகை இந்நூலுக்கு இடங்கொடுப்பின் நாங்களும் இதனை ஒப்புக் கொள்ளுகிறோம்" என்று கூறத் திருவள்ளுவனுர் தம்முடைய நூலைச் சங்கப் பலகையில் வைக்க அப்பலகை குறளளவாகச் சுருங்கித் திருக்குறளொன்றுக்கே யிடங் கொடுத்துச் சங்கப்புலவர்களையும் பொற்றாமரையில் தள்ளியதாதலின் அச் சிறப்புத் தோன்றத் தெய்வத் திருக்குறள் என்றார். இறையனுர், நாமகள், சங்கப்புலவர்களாகியோர் சிறப்புப்பாயிரம் வழங்கியமையானுந் தெய்வத்தன்மை தெளியப் படும். கெழுமுதல் - ஒன்றாகப் பொருந்துதல். குற்றமற்றவர்கள் பிறரிடத்துங் குற்றங் காணமாட்டார்களாகலின், "ஆசகன்றோர் குற்றமது நோக்கார்" என்றார். ஆயிரத்து முந்நூற்று முப்பது குறள்களினின்றும் நூற்றுமுப்பது குறள்களையே தேர்ந் தெடுத்தாராகலின், "நீதி சில" என்றார். சொற்றனன் - சொன்னேன்; எதுகை நோக்கி வலித்தல் விகாரமாயிற்று. (உ)

க. அறத்துப் பால்

கடவுள் வாழ்த்து

1. தேவரையுஞ் சூரனையுந் தேற்றுருவாற் றேர்ந்தனர்நீ
மூவரிறை யென்ன முருகேசா—வோவில்
அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே !, நீ மூவர் இறை என்ன - தேவரீரே நான்முகன் திருமால் உருத்திரன் என்னும் மூன்று கடவுளர்கட்கும் தலைவர் என்பதனை, தேவரையும் - தேவர்களையும், சூரனையும - சூரபதுமன் முதலியவர்களையும், தேற்று உருவால் - தெளிவிக்கக் காட்டிய வடிவத்தினால், தேர்ந்தனம் - நன்குணர்ந்து கொண்டோம் ; ஓவில் - ஒழிதலில்லாத, எழுத்து எல்லாம் - எல்லா மொழிகளின் எழுத்தும், அகரம் முதல - அகரமாகிய உயிரெழுத்தை முதலாகக் கொண்டன ; அதைப்போல ; உலகு - இந்த உலகமானது ; ஆதிபகவன் முதற்று - ஆதிபகவனாகிய கடவுளை முதலாகக் கொண்டுள்ளது.

(வி - ம்.) தேவர்களையும் சூரபன்மனையும் மயக்கித் தெளிவித்த படியினால் தேவரீரே மூவர்க்கும் முதல்வர் என்பதை நாங்களுணர்ந்து கொண்டோம் ; எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாகக் கொண்டிருத்தல் போன்று இவ்வுலகம் கடவுளையே முதலாகக் கொண்டிருக்கின்றது என்பதும் இதனால் பெறப்பட்டது என்பதாம். ஓவின்மை - நீங்குதலின்மை ; ஓ முதனிலைத் தொழிற்பெயர்.

தெளிவித்த கதை

முருகக்கடவுள் சூரபன்மன் முதலிய அவுணர்களை வென்று தேவர்களைக் காக்கும் பொருட்டுத் தோன்றியருளினர். பாலப் பருவத்திற்கேற்பப் பல திருவிளையாடல்களைப் புரிந்தார். முருகன் திருவிளையாடல்களைப் பார்த்துத் தேவர்களும் அவுணர் களுந் திகைத்தார்கள். அவர்களுடைய திகைப்பைப் போக்க எண்ணிய முருகக் கடவுள் மேருமலையை அடைந்தார். அதன் கொடுமுடிகளைப் பறித்து நான்கு பக்கங்களினும் வீசினர். பல திருவிளையாடல்களை அங்கும் புரிந்தருளினர். இந்திரன் முதலியோர் உலகத்தை நிலை கலங்கச் செய்கிறவன் இவனே. இவனை இப்பொழுதே கொன்றொழிக்க வேண்டும் என்று எண்ணியவர் களாய்ப் போர் செய்யத் தொடங்கினர்கள். போரின் முடிவில் தம்முடைய உண்மை வடிவத்தை அவர்களுக்குக் காட்டினர். அதனல் தேவர்கள் தம்முடைய மயக்கம் நீங்கி உண்மையை உணர்ந்தார்கள். போர் நிகழ்ந்த காலத்தில் முருகக் கடவுள் தம்முடைய உண்மை வடிவத்தைச் சூரபன்மனுக்கு ஒரு கணப் பொழுது காட்டினர். அப்பொழுது சூரபன்மனும் முழுமுதற் கடவுள் முருகக்கடவுளே என்னும் உண்மையை உணர்ந்து கொண்டான்.

வான் சிறப்பு

2. அன்பரிடர் கண்டரன்பா லப்பருஞ்சம் பந்தரோடு
முன்போருகா சேற்ருர் முருகேசா—இன்புதருந்
தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே, அப்பரும் சம்பந்தரொடு-திருநாவுக்கரசு நாயனரும் திருஞானசம்பந்த ரோடு கூடி, அன்பர் இடர்கண்டு - அடியார்கள் பசியாலடையும் துன்பத்தைப் பார்த்து, அரன்பால் - சிவ பெருமானிடத்தில், முன்பு ஒரு காசு ஏற்ருர் - முன்னளிலே

ஒரு காசைப் பெற்றுக் கொண்டார்; ஆகவே, வியன் உலகம்-பரந்த இந்த உலகத்திலே, வானம் வழங்காது எனின் - மழை பெய்யாமற் போனால், தானம் தவம் இரண்டும் தங்கா-தானமுந் தவமுமாகிய இரண்டும் இவ்வுலகிலே நிலைபெற மாட்டாவாம்.

(வி - ம்.) அடியார்களுடைய பட்டினித் துன்பத்தைக் கண்ட திருநாவுக்கரசரும், திருஞானசம்பந்தரோடு சிவ பெருமானிடம் இருந்து காசைப் பெற்றுக் கொண்டார் ; மழை பெய்யா தொழிந்தால் உலகில் தானமுந் தவமும் நிலைபெற மாட்டா என்பதாம். அன்பர் - திருநாவுக்கரசரையும் திருஞான சம்பந்தரையுஞ் சூழ்ந்திருந்த அடியார்கள். அப்பரும் என்பதி லுள்ள உயர்வு சிறப்பும்மை அப்பர் தாம் இறைவனுக்குக் கைத் தொண்டு செய்தலேயன்றி அவ்விறைவனிடம் எந்நாளினும் விரும்பி வேண்டாதிருந்த விழுமிய மாண்பைச் சுட்டி நின்றது.

காசு பெற்ற கதை

திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் அடியார்களுடைய திருக்கூட்டத்தோடு திருவீழிமிழலையை அடைந்து அங்கு இறை வழிபாடு செய்துகொண்டு தங்கியிருந்தார்கள். அப்பொழுது மழையில்லாத படியால் வற்கட மேற்பட்டு எல்லோரும் வருந்தி னார்கள். இவர்களோடு சென்றிருந்த அடியார்களும் உணவு கிடைக்காமல் திண்டாடினார்கள். இவர்களுடைய வருத் தத்தைக் கண்ட சிவபெருமான் இருவருடைய கனவிலுந் தோன்றி, "இப்பஞ்சத்தினால் உங்களுக்கு வருத்தமில்லா விடினும் அடியார்கள் பொருட்டு இரண்டு பொற்காசு கிழக்குப் பீடத்திலும் மேற்குப் பீடத்திலும் வைக்கின்றோம். அதனை நீங்களிருவரும் எடுத்து உணவுப் பொருள் வாங்கி அடி யார்கட்கு அமுது படையுங்கள்'' என்று திருவாய் மலர்ந்தருளி னார். அவ்வாறே இரண்டிடங்களினும் காசு வைத்தார். அதனை இருவரும் எடுத்து அடியார்கட்குணவளித்துக் கொண்டிருந் தனர். பிறகு இருவரும் அவ்விடம் விட்டுச் சென்றார்கள்.

நீத்தார் பெருமை

3. ஈண்டுதச தோற்றமா லேய்ந்தான் பிருகுரையால்
மூண்டரற்பூ சித்தும் முருகேசா—பூண்ட
நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, மூண்டு அரன் பூசித்தும் - மிகுதியான அன்பு கொண்டு சிவ பெருமானைப் பூசைசெய்தும் வசவுரைப் பயனைப் போக்கிக் கொள்ளமுடியாமல், மால் - திருமாலானவர், பிருகு உரையால் - பிருகுமுனிவருடைய வசவுரை மொழியினால், ஈண்டு- இவ்வுலகத்தில், தசதோற்றம் ஏய்ந்தான் - பத்துப் பிறப்புக்களை எடுத்தார்; ஆகவே; பூண்ட - பொருந்திய, நிறைமொழி மாந்தர் பெருமை - பயன்நிறைந்த மொழிகளை யுடைய பெரியோர்களின் பெருமையை, நிலத்து - இவ்வுலகத்திலே, மறைமொழி காட்டி விடும் - அவர்களுடைய சீரிய மொழிகளே புலப்படுத்தி விடுவனவாம்.

(வி - ம்.) பிருகுமுனிவருடைய சாபமொழியைப் பெற்ற திருமால் இறைவனைப் போற்றி வழிபட்டுங்கூட அச்சாப மொழியின் பயனைப் போக்கிக் கொள்ள வியலாமல் பத்து வகையான பிறவிகளை யெடுத்தார்; வாக்குநலமுடைய பெரியோர்களுடைய பெருமையை அவர்களுடைய அரிய உரைகளே காட்டிவிடும் என்பதாம்.

பத்துப் பிறப்பெடுத்த கதை

ஒருகாலத்திலே தேவர்கட்கும் அசுரர்கட்கும் போர் மூண்டது. அப்போரில் தேவர்கள் தோல்வி யடைந்து திருமாலிடஞ் சென்று தங்களுடைய துன்பங்களைக் கூறி முறையிட்டுக் கொண்டார்கள். திருமால் அசுரர்களோடு போருக்குச் சென்று அசுரர்களை விரட்டியடித்தார். திருமாலோடு போர் செய்ய முடியாத அசுரர்கள் தங்களுடைய குலகுருவாகிய

சுக்கிராச்சாரியாரின் தந்தையான பிருகுமுனிவருடைய இருப்பிடத்தை யடைந்து முனிவருடைய மனைவியாகிய கியாதி என்பவளிடம் அடைக்கலம் புகுந்தனர். கியாதி அவர்களைக் காப்பதாகக் கூறி மறைத்து வைத்தனள். திருமால் துரத்திக் கொண்டே அங்கு வந்தார். கியாதி உள்ளே செல்லக் கூடாது என்று தடுத்ததையும் பொருட்படுத்தாமல், அவள் தமக்கு மாமியாக இருத்தலோடு முனிவருடைய மனைவியாகவும் உள்ளாள் என்பதையும் நோக்காமல் அவளையுங் கொன்று உள்ளே போய் அசுரரையுங் கொன்று சென்றார். இச்செய்தியை உணர்ந்த பிருகு முனிவர், "திருமாலே! நீ நிலவுலகத்தின்கண் பத்துப் பிறவிகளை யெடுப்பாயாக" என்று வசவுரை வழங்கினர். இவ்வசவுரையை உணர்ந்த திருமால் இதனைப் போக்கிக் கொள்ளுமாறு சிவபிரானைப் பூசித்து வழிபட்டார். ஆயினும் முனிவருடைய தீமொழியிலிருந்து விடுபட முடியவில்லை. நிலவுலகில் பத்துப்பிறப்புக்கள் எடுக்க வேண்டியதாகவே முடிந்துவிட்டது.

அறன்வலியுறுத்தல்

4. அற்றமின்றிச் சாமந்தன் கோனிதியா லண்ணல்பணி
முற்றுவித்தின் புற்றான் முருகேசா—மற்றதனால்
ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.

(இ - ள்.) முருகேசா-முருகப் பெருமானே!, சாமந்தன்-சாமந்தன் என்பவன், அற்றம் இன்றி - சிறிதும் சோர்வில்லாமல், கோன் நிதியால் - அரசனுடைய பொருளினால், அண்ணல் பணி - சிவபெருமானுடைய திருப்பணிகளை, முற்றுவித்து அதனால் இன்பு உற்றான் - நிறைவேறச் செய்து -அதனால் இன்பத்தை அடைந்தான்; அறவினை - அறச் செயலை, ஓவாதே - ஒழியாமல், ஒல்லும் வகையால் - செய்யக் கூடிய அளவோடு, செல்லும்வாய் எல்லாம் செயல்- செல்லுமிடமெல்லாம் செய்தல் வேண்டும்.

(வி- ம்.) சாமந்தன் என்பவன் அரசனுடைய பொருளைக் கொண்டு சிவபெருமானுடைய திருப்பணிகளைச் செய்து மகிழ்ந்தான். அறச் செயலை ஒழிவில்லாமல் இயன்ற பொழுதெல்லாம் செய்தல் வேண்டும் என்பதாம். அற்றம் - சோர்வு குறைவு முதலியவற்றைக் குறிக்கும் ஒரு சொல். மற்று - அசைநிலை.

சாமந்தன் திருப்பணி செய்த கதை

மதுரைமா நகரில் குலபூடண பாண்டியன் அரசாட்சி செய்து கொண்டிருக்கும் நாளையில் சாமந்தன் என்பவன் பாண்டியனுடைய படைத் தலைவனாக விருந்தான். அவன் சிவபெருமானிடத்தில் அன்புள்ளவன். அடியார்களைச் சிவமாக எண்ணி வழிபடும் பண்புடையவன். அந்நாளில் வேடர்கட்குத் தலைவனாகவிருந்த சேதிராயன் என்பவன் படைப் பெருக்கும் ஆற்றலும் உடையவனாக விளங்கினான். அவன் பாண்டிய நாட்டின்மேற் படை யெடுத்துச் சென்று அதனைக் கைப்பற்ற வேண்டுமென்னும் எண்ணமுடையவனாய் அதற்குத் தக்க ஏற்பாடுகளைச் செய்தான். இச்செய்தியை உணர்ந்த பாண்டியன் சாமந்தனை யழைத்து, "வேண்டிய பொருளைக் கொண்டு போய் நம்முடைய படையையும் பெருக்குவாயாக" என்று கட்டளையிட்டான். சாமந்தன் ஏராளமான பொருளை யெடுத்துக் கொண்டுபோய்ச் சோமசுந்தரப் பெருமானுக்குப் பல வகையான திருப்பணிகளைச் செய்தான்.

பொருளைக் கொண்டு திருப்பணிகளைச் செய்ததலை யுணர்ந்த பாண்டியன் சாமந்தனை யழைத்துப், "படைகள் எவ்வளவு சேர்ந்துள்ளன? எப்பொழுது வருகின்றன? உடனே படைகள் வருதல் வேண்டும்" என்று கடுமையான கட்டளையிட்டான். சாமந்தன் கடவுளிடம் முறையிட்டுக் கொண்டான். கடவுள் தம்முடைய பூதப் படையை மனிதப் படையாக்கிக் கொண்டு வந்து சேர்ந்தார். சாமந்தன் பாண்டியனுக்குப் படை வந்துள்ள செய்தியைக் கூறினான். பாண்டியன் படையைப் பார்த்து மகிழ்ந்தான். படைத் தலைவராக வந்த பரமனுக்கு நன்கொடைகள் வழங்கினான். சேதிராயன் வேட்டைக்குச் சென்றவிடத்தில் புலியால் கொல்லப்பட்டதாகச் செய்தி வந்தது. கடவுள் தம்

முடைய படையோடு மறைந்தருளினர். பாண்டியன் உண்மை யுணர்ந்து சாமந்தனைப் போற்றிப் பாராட்டினன்.

இல்வாழ்க்கை

5. மெய்த்தமிழ்வே தத்துலகுய் வித்துயர்ந்தார்
வள்ளுவனர்
முத்தவில்வாழ் வுற்று முருகேசா—உத்தமமாம்
ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து.

(இ - ள்.) முருகேசா-முருகப் பெருமானே!, வள்ளுவனர் - திருவள்ளுவர், முத்த இல்வாழ்வு உற்று - முதிர்ந்து சிறந்த முறையிலே இல்வாழ்க்கையை நடத்தி, மெய்த்தமிழ் வேதத்து - மெய்ம்மை பொருந்திய தமிழ் மறையாகிய திருக்குறளினலே, உலகு உய்வித்து - உலகத்தினர் கடைத் தேறுமாறு செய்து, உயர்ந்தார் - தாமுஞ் சிறந்த பெருமையை அடைந்து திகழ்ந்தார்: ஆகவே, உத்தமமாம்-சிறந்ததாகிய, ஆற்றின் - வழியிலே, ஒழுக்கி - பிறரும் நடக்குமாறு செய்து, அறன் இழுக்கா இல்வாழ்க்கை - தானும் அறநெறியிலே வழுவாத இல்லற வாழ்க்கையை மேற் கொண்டிருத்தல், நோற்பாரில் - தவஞ் செய்வாரை விட, நோன்மை உடைத்து - வல்லமையை உடையதாகும்.

(வி - ம்.) திருவள்ளுவநாயனர் தாம் இல்வாழ்க்கையை நடத்த வேண்டிய முறைப்படி நடத்திக் காட்டியதன்றித் தமிழ் மறையாகிய திருக்குறளைச் செய்து உலகத்தையும் வாழ்வித் தருளினர்; இல்வாழ்க்கையை முறைப்படி நடத்துவோர் தவஞ் செய்வோரைப் பார்க்கினுஞ் சிறந்தவர்களாவர் என்பதாம். முத்தம் என்பதற்கு விருப்பு எனவும் உரை கூறுவர்; அவ்

வுரைக்கு விருப்பத்தோடு இல்வாழ்க்கை என்று பொருள் கொள்க.

திருவள்ளுவர் கதை

தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனுர் பகவன் என்பவருக்கும் ஆதியென்பவளுக்கும் மகனுகத் தோன்றினுர். வாசுகி என்னுங் கற்பிற் சிறந்த மாதை மணந்து இல்லறத்தை நல்லறமாக இனிது நடத்தினுர். திருவள்ளுவ தேவருடைய இல்லறம் எல்லோரும் போற்றத் தக்கதாக விருந்தது. தேவர்கட்குண்டாகும் ஐயத்தைக் கூட அகற்றத்தக்க சீரிய நிலையில் திருவள்ளுவருடைய தெய்வத்தன்மை சிறந்து விளங்கியது. ஆயிரத்து முந்நூற்று முப்பதருங் குறளடங்கிய தமிழ் மறையைச் செய்து உலகிற் களித்தார். அம்மறை நான்மறையைப் போன்றே சிறப்புடையதாய் நானிலத்தில் விளங்கிப் பெருமையுறுவதாயிற்று. அம்மறையை நாட்டினர் பரிந்து கற்றுப் பலன் பெற்று உய்யலாயினர்.

வாழ்க்கைத்துணைநலம்

6. கோதில் சுதரிசனன் சொற்றிறம்பாக் கோதையோடு
மூதஞர்தீர்ந் துய்ந்தான் முருகேசா—பேதமிலாப்
பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, கோது இல் சுதரிசனன் - குற்றமற்ற சுதரிசனன் என்கின்ற பெயரையுடையவன், சொல் திறம்பாக் கோதையொடு - தன்னுடைய சொல்லுக்கு மாறுபடாத மனைவியோடு இல்வாழ்க்கை நடத்தி, மூது அஞர் தீர்ந்து உய்ந்தான் - மிகுந்த துன்பத்தைப் போக்கி நல்ல கதியை அடைந்தான்; ஆகவே; கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின் - கற்பு என்று கூறப் பெறுகின்ற திட்பமானது அமையப் பெற்ற மனைவியை ஒருவன் வாழ்க்கைத்துணையாகப் பெற்ருல், பெண்ணில் -

மனைவியைப் பார்க்கினும், பெருந்தக்க யாஉள - பெருமை அடைதற்கு வேறு என்ன இருக்கின்றன?

(வி - ம்.) குற்றமற்ற சுதரிசனன் என்பவன் கற்பிற் சிறந்த தன்னுடைய மனைவியோடு துன்பந் தீர்ந்து நல்ல கதியை அடைந்தான்; கற்பென்று சொல்லப்பெறுந் திட்பமானது அமையப் பெற்ருல் ஒருவன் அடையத் தக்க சிறந்த பேறுகளுள் பெண்ணைத்தவிரச் சிறந்தன வேறு யாவையுள்ளன என்பதாம். மூது அஞர்; முதுமை அஞர் - அஃது துன்பங்களுள் எல்லாம் கொடிய துன்பம்.

சுதரிசனன் கதை

முன்னுளிலே சுதரிசனன் என்னும் பெயருடைய அந்தணன் ஒருவன் இருந்தான். அவன் சிவபெருமானிடத்திலும் சிவனடியார்களிடத்திலும் பேரன்புடையவன். அம்மறையவனுடைய மனைவியின் பெயர் யோகவதி. அந்தணன் தன்னுடைய மனைவியைப் பார்த்துப், "பெண்ணே! நீ சிவனடியார்கட்கு வேண்டுவன புரிந்து அவர்களைப் போற்றுவாயாக! அவர்கள் நின்பாற் கலவியை விரும்பினும் மருதளிப்பாயாக" என்று கட்டளையிட்டான். இயமன் யோகவதியின் கற்புத் திண்மையை ஆராய்ந்து பார்க்க எண்ணினுன். சிவனடியார் கோலம் பூண்டு யோகவதியிடம் வந்தான். யோகவதி அவனுக்கு வேண்டும் பணிகளைப் புரிந்தாள். அவன் தன்பாற் காதல் கொண்டிருத்தலைக் குறிப்பாலுணர்ந்து அதற்கு மிசைந்தாள். உடனே நமன் தன்னுடைய இயற்கைவடிவத்தோடு வெளிப்பட்டு நின்ருன். அவளைப் பார்த்து, "நான் வந்தது உன்னுடைய கற்பை ஆராய்ந்தறிதற்கே யல்லது கலத்தற்கன்று கணவன் மொழிக்கு மாறுபடாத நின்னுடைய கற்புடைமை கண்டு மகிழ்ந்தேன்; உங்களிருவருடைய இயமவேதனையையும் நீக்கினேன்" என்று கூறி மறைந்தான். சுதரிசனனும் அவனுடைய மனைவியும் இயமவேதனை யற்றவர்களாய் நல்ல கதியை அடைந்தார்கள். கற்புடைய மனைவியைத் தவிரச் சிறந்த பொருள் வேருென்றுமில்லை யென்பது யோகவதியினுல் நன்கு பெறப்பட்டது.

புதல்வரைப் பெறுதல்

7. துற்றுநர குற்றோர் சசிவன்னன் சூழ்நெறியான்
முற்றினர்சோர்க் காதி முருகேசா—உற்றுப்
பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, சசிவன்னன் சூழ்நெறியால் - சசிவன்னன் என்பவன் தான் மேற்கொண்ட நடக்கையினாலே, துற்று நரகு உற்றோர் - பொருந்திய நிரயத்தையடைந்தவர்கள், சொர்க்காதி முற்றினர் - பிறகு அவன் நன்னெறியி லொழுகியபடியினால் விண்ணுலகம் முதலிய நற்கதியை அடைந்தனர்; ஆகவே, பெறுமவற்றுள் - பெறத்தகுந்த பேறுகளில், அறிவு அறிந்த - அறிய வேண்டியவைகளையெல்லாம் நன்கு கற்றறிந்த, மக்கட்பேறு அல்ல பிற - மக்கட்பேறு அல்லாத பிற பேறுகளை, யாம் அறிவது இல்லை-நாம் ஒருபொருளாக மதிப்பதில்லை.

(வி - ம்.) சசிவன்னன் செய்த தீவினையால் நிரயமடைந்தவர்கள் பிறகு அவன் நல்வினைபுரிந்த படியினால் நல்ல கதியை அடைந்தார்கள் ; அறிய வேண்டியவைகளையெல்லாம் அறிந்த அறிவுடைய மக்கட் பேற்றைத் தவிர மற்றைப்பேறுகள் சிறப்புடையன அல்ல என்பதாம். துன்று எனற்பாலது துற்று என வலித்தல் விகாரம் பெற்றது. துன்றுதல் - பொருந்துதல்.

சசிவன்னன் கதை

முன்னாளிலே பாகவெக்கியன் என்னும் பெயரையுடைய அந்தணன் ஒருவனுக்குச் சசிவன்னன் என்னும் பெயருடைய மைந்தன் ஒருவன் தோன்றினான். அவன் கட்குடித்தல், காமத்தில் ஈடுபடல், ஊனுண்டல் முதலிய கொடிய தீமைகளையெல்லாஞ் செய்தான். அவன் செய்த தீவினையினால் அவனுடைய குலத்தினர் நிரயத்தில் வீழ்ந்து மிகுந்த துன்பத்தையடைந்து வருந்தி

னர்கள். பாகவெக்கியன் தன்னுடைய மகனுடைய செய்கைகளைப் பாத்து உள்ளம் வருந்தினன். மாநந்திபராயணர் என்னும் மெய்யறிவாளர் ஒருவரிடஞ் சசிவன்னனைக்கொண்டு போய் விட்டு அவன் செய்துள்ள தீமைகளையெல்லாங் கூறினன். மாநந்திபராயணர் சசிவன்னனிடத்தில் அன்பு கொண்டார். தம்முடைய அருட்பார்வையை அவன் மீது செலுத்தினர். மெய்யறிவு பிறக்குமாறு அறிவு நூலின் முடிந்த பொருளை அவனுக்குப் போதித்தார். இதனல் சசிவன்னன் மெய்யறிவு பெற்றுத் தீவினையிலிருந்து நீங்கி வீடுபெற்றுன். நிரயத்தில் வீழ்ந்து வருந்திய அவனுடைய குலத்தினரும் நற்கதியை அடைந்து மகிழ்ந்தார்கள்.

அன்புடைமை

8. கின்னரரோ டேமேதா கேதரைமீட் டார்வசவர்
முன்னரன்பாற் சென்று முருகேசா—மன்னுலகில்
அன்போ டியைந்த வழக்கேன்ப வாருயிர்க்
கேன்போ டியைந்த தொடர்பு.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, வசவர் முன் அரன்பால் சென்று - வசவதேவர் முன்னாளிலே சிவபெருமானிடம் போய், கின்னரரோடு மேதாகேதரை - கின்னரையர் மேதாகேதையர் என்னும் சிவசரணர்கள் இருவரையும், மீட்டார் - மீட்டுக்கொண்டு வந்தார்; ஆகவே, மன் உலகில் - நிலைபெற்ற இந்த உலகத்திலே, ஆர் உயிர்க்கு - அருமையான உயிருக்கு, என்போடு இயைந்த தொடர்பு - உடலோடு பொருந்தியிருக்கின்ற தொடர்பானது, அன்போடு இயைந்த வழக்கு என்ப - அன்போடு பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என்று கூறுவர்.

(வி - ம்.) வசவதேவர் முன்னாளிலே சிவபெருமானிடம் போய்க் கின்னரர், மேதாகேதர் என்பவர்களை மீட்டுக் கொண்டு வந்தார்; உயிருக்கு உடலோடு பொருந்தியிருக்கிற தொடர்

பானது அன்போடு பொருந்திவாழும் வாழ்க்கையின் பயன் என்று கூறுவர் என்பதாம். என்பு உடலையுணர்த்துதலால் ஆகு பெயர்.

வசவதேவர் கதை

முன்னாளிலே கலியாணபுரியிலே வசவதேவர் என்னும் வீரசைவர் வாழ்ந்திருந்தார். அவர் சிவனடியாரிடத்திலே மிகுந்த அன்புடையவராக விளங்கினர். அவ்வசவதேவருடைய அன்புடைமையைச் சிவபெருமான் உலகத்தார்கட்கு உணர்த்த எண்ணினர். அவ்வசவதேவர் மிகுந்த அன்புவைத்திருந்த கின்னரையர் மேதாகேதையர் என்பவர்களைத் தம்முடைய பதவியாகிய திருக்கைலையிலே சேர்த்தருளினர். வசவதேவர் அவர்களிடத்திற் கொண்டிருந்த மிகுந்த அன்புடைமையினல் அவர்களுடைய பிரிவுக்கு வருந்தினர். எப்படியும் அவர்களை மீளவுங் கொண்டு வந்து தம்மோடு வைத்துக்கொள்ள வேண்டுமென்று எண்ணினர். திருக்கைலைக்குச் சென்று இருவரையும் மீட்டுக்கொண்டு வந்தார். இச்செய்கையைக் கண்டோர் வசவதேவர் அவ்விருவர் மீதுங்கொண்டிருந்த அன்பினைப் பெரிதும் பாராட்டலாயினர்.

விருந்தோம்பல்

9. துன்னுவனத் துந்தருமன் சூழ்முனிவர்ப் பேணுதலான்
முன்னுவளம் பெற்றான் முருகேசா—உன்னின்
வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று.

(இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே!, தருமன்- பாண்டவர்களில் முதல்வராகிய தருமர், துன்னும் வனத்தும் - தாம் அடைந்திருந்த காட்டிலும், சூழ் முனிவர் பேணுதலால் - தம்மைச் சூழ்ந்திருந்த முனிவர்களாகிய விருந்தினரைப் போற்றி யுணவிட்டபடியினல், முன்னு வளம் பெற்றான்-எண்ணிய செல்வத்தை இனிது அடைந்

தான்; ஆகவே, வரு விருந்து - தன்னை நோக்கி வந்த விருந்தினரை, வைகலும் - நாள்தோறும், ஓம்புவான் வாழ்க்கை-உணவு முதலியனவளித்துப்போற்றுபவனுடைய வாழ்க்கைச் சிறப்பானது, பருவந்து-குற்றத்தை யடைந்து, பாழ் படுதல் இன்று - கெட்டுப் போவது இல்லை.

(வி - ம்.) தருமர் தாம் தங்கியிருந்த காட்டிலுந் தம்மைச் சூழ்ந்திருந்த முனிவர்கட்கு விருந்திட்டுப்போற்றிய பண்பினாலே தாம் எண்ணிய செல்வத்தைப் பெற்றார்; தன்னிடம் வருகிற விருந்தை நாள்தோறும் போற்றுபவன் வாழ்க்கையானது குற்றத்தையடைந்து கெட்டுப்போதல் இல்லை யென்பதாம். முன்னுவளம் - தான் எண்ணிய அரசாட்சிச் சிறப்பு.

தருமர் விருந்திட்ட கதை

நாடு நகரங்களை யெல்லாம் துரியோதனன்பாலிழந்த தருமர் தம்முடன் பிறந்தார்களோடு காட்டையடைந்து தங்கியிருந்தார். தமக்குக் கிடைத்த தெய்வத் தன்மை பொருந்திய கலத்தின் உதவியைக் கொண்டு தம்மை யெக்காலத்திலுஞ் சூழ்ந்திருந்த பல முனிவர்கட்கும் பிறருக்கும் விருந்தளித்தலாகிய பணியை நாளுங் குறைவின்றிச் செய்து கொண்டிருந்தார். இந்த நல்வினை யினாலே அவர் பன்னிரண்டு ஆண்டுகளுங் கழிந்த பிறகு தாம் எண்ணியவாறு தம்முடைய நாடு நகரங்கள் முதலியவைகளைப் பெற்று மகிழ்ந்தார். விருந்தினரைப் போற்றுபவருடைய வாழ்க்கை கெட்டொழிந்து போகாதென்பது தருமரிடம் நன்கு விளங்கியது.

இனியவை கூறல்

10. அண்டமுதல் வற்பழித்தே யைந்தலையு
ளொன்றிழந்தான்
முண்டகன்சேம் மாந்து முருகேசா—மண்டிப்
பணிவுடைய னின்சொல னாதலொருவற்
கணியல்ல மற்றுப் பிற.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே! முண்டகன் செம்மாந்து - தாமரையிலுள்ளவனுகிய நான்முகன் இறுமாப்பையடைந்து, அண்டம் முதல்வன் பழித்து - உலகங்கட்கெல்லாம் முதல்வனுகிய சிவபெருமானை இகழ்ந்து கூறி, ஐந்து தலையுள் ஒன்று இழந்தான் - ஐந்து தலைகளில் ஒன்றைப் போக்கிக் கொண்டான்; ஆகவே, பணிவுடையன் - வணக்கமுடையவனுகவும், இன் சொலன் - இனிமையாகப் பேசுபவனுகவும், ஆதல்-இருத்தல், ஒருவற்கு அணி-ஒருவனுக்கு அழகாகும், பிற அல்ல-இவ்வணிகளன்றிப் புறத்தே யணியும் பொன்னணிகள் அழகு தருவன ஆகா.

(வி - ம்.) நான்முகன் இறுமாப்பையடைந்து சிவபெருமானை இகழ்ந்த படியினுல் ஐந்து தலைகளுள் ஒரு தலையைப் போக்கிக் கொண்டான்; வணக்கமுடையவனுகவும் இனிய மொழிகளைப் பேசுபவனுகவும் இருத்தலே ஒருவனுக்குச் சிறந்த அணிகலமாம்; பொன்னணி முதலியன சிறந்த அணி அல்ல என்பதாம். அண்டமுதல்வன் - எல்லா உலகங்களுக்குந் தலைவன்; ஐந்தலை-பிரமனுக்கும் முன்னுளில் சிவபிரானுக்குள்ளதைப் போல் ஐந்து தலைகள் இருந்தன. ஆணவங் கொண்டு இறுமாந்தபொழுது ஒரு தலையை இழந்தபடியால் பிறகு நான்முகன் ஆனுன். முண்டகம் - தாமரை; தாமரையிலிருப்பவன் முண்டகன்.

பிரமன் தலையிழந்த கதை

ஒருகாலத்தில் சனகர் முதலிய முனிவர்கள் நான்முகனிடஞ் சென்று, "உலகத்திற்குத் தலைவர் யாவர்?" என்று உசாவினர். ஆணவங் கொண்ட பிரமன், "நானே உலகத்திற்குத் தலைவன்" என்று செருக்கோடு கூறித் தருக்கினுன். இதனை யுணர்ந்த திருமால் பிரமனுக்குமுன் தோன்றி, "உலகத்திற்கு நானே தலைவன்" என்றுர். அவர்களிருவருக்கும் போர் மூண்டது, இவர்களுடைய செய்கையை உணர்ந்த சிவபெருமான் இவர்கட்கு முன்னே தோன்றினுர். பிரமன் சிவபிரானைப் போற்றி வழிபடாமல் ஆணவங் கொண்டு பலவாறு இகழ்ந்

தான். அப்பொழுது வைரவக் கடவுள் தோன்றிப் பிரமனுடைய ஐந்து தலைகளுள் ஒன்றைத் தம்முடைய நகத்தாற் கிள்ளி யெறிந்தார். அந்நாள் முதல் பிரமன் நான்முகனானன்.

செய்ந்நன்றியறிதல்

11. மெய்த்தரும தெய்வநன்றி வீட்டிமதி மம்மருற்றான்
முத்தவற்ச நாபன் முருகேசா—இத்தரையில்
எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, மெய்த் தரும தெய்வம் நன்றி - மெய்ம்மைத் தன்மை பொருந்திய அறக் கடவுள் செய்த நன்றியை, வீட்டி - அழித்து, முத்த வற்சநாபன் - விடுபேற்று நெறியை நாடிநின்ற வசற்நாபர் என்னும் முனிவர், மதிமம்மர் உற்றார் - அறிவு மயக்கத்தை யடைந்தவரானர். இத்தரையில் - இந்நிலவுலகில், எந்நன்றி கொன்றார்க்கும் உய்வு உண்டாம் - எத்தகைய நன்மையை அழித்தவர்கட்கும் வாழ்தல் உளதாம், செய்ந்நன்றி கொன்ற மகற்கு உய்வு இல்லை - பிறர்செய்த நன்மையை மறந்தவர்கட்குச் சிறப்புறுதல் இல்லையாகும்.

(வி - ம்.) வற்சநாபமுனிவர் அறக்கடவுள் செய்த நன்மையை மறந்து அறிவு மயக்கத்தை யடைந்தார். எந்த நன்மையை மறந்தவர்கட்கும் உய்வுண்டு. பிறர் செய்த நன்மையை மறந்தவர்கட்கு உய்வில்லை என்பதாம், தரும தெய்வம்,- அறக் கடவுள். வீட்டுதல் - அழித்தல். முத்தவற்சநாபன் - நல்வினைகளில் முதிர்ச்சி பெற்று நின்ற வற்சநாப முனிவர்.

வற்சநாப முனிவர் கதை

வற்சநாப முனிவர் என்பவர் தம்முடல் புற்றினுல் மூடுமாறு நெடுநாள் தவஞ் செய்து கொண்டிருந்தார். இவருடைய தவ நிலையை இந்திரன் ஆராய்ந்து பார்க்க எண்ணினன். முகில்களைக்

கொண்டு பெருமழை பொழியச் செய்து புற்றழியச் செய்தான். அந்நாளில் அறக்கடவுள் எருமைக் கடாவுருவொடு வந்து புற்றைத் தன்னுடலால் மறைத்து முனிவருக்கு எத்தகைய இடையூறும் வராமற் செய்தது. முனிவர் தவநிலை நீங்கிப் பார்த்தார். காத்து நின்ற கடாவை அறக்கடவுள் என்றுணர்ந்து கொள்ளவில்லை. பொதுவான கடாவே என்று எண்ணி அதற்கு நீண்ட வாழ்வுண்டாகுமாறு வாழ்த்துரை வழங்கி மீண்டும் தவ நிலையில் அமர்ந்தார். அறக்கடவுளைப் போற்றி வழிபடாது நன்றி மறந்த தன்மையினால் முனிவருடைய உள்ளம் ஒருமை நிலைமையை அடையவில்லை. பிறகு உண்மையை உணர்ந்து கொண்ட முனிவர் இதற்குக் கழுவாய் உயிர்விடுதலே என்று முடிவு செய்து மலைமுடியிலேறி உயிர்விடத் தொடங்கினர். உடனே அறக்கடவுள் வெளிப்பட்டு, "வீணாக உயிரை விடாதே சேதுவிலே சங்கத் தீர்த்தம் என்னும் புனித நீரிலே நீராடினால் இத்தீவினை நீங்குமென்று இயம்பியது. முனிவர் அவ்வாறே மூழ்கித் தூய்மை பெற்றார்.

நடுவு நிலைமை

12. நீதியிற்பாஞ் சாலிகடா விற்குவிடை நேர்விகன்னன்
மூதவையிற் சொற்றான் முருகேசா—காதலினால்
சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, நீதியில் பாஞ்சாலி கடாவிற்கு - நேர்மையோடு பாஞ்சாலியானவள் கேட்ட கேள்விக்கு, விடை - மறுமொழியை, நேர்விகர்னன் - நேர்மை பொருந்திய விகர்னன் என்பவன், மூதவையில் சொற்றான் - முதுமை தங்கிய பெரியோர்கள் கூடியிருந்த அவையிலே கூறினான். காதலினால் - ஒருவரிடத்திலே கொண்ட அன்பினால், ஒருதலையா உள்கோட்டம் இன்மை பெறின் - உறுதியாக உள்ளத்தில் மாறுபட்டுப் பேசாத தன்மையைப் பெற்றிருந்தால், சொல் கோட்டம் இல்லது

செப்பம் - சொல்லுகிற சொல்லும் கோணுது செம்மையாக அமையும்.

(வி - ம்.) பெரியோர்கள் கூடியிருந்த பேரவையில் பாஞ்சாலி கேட்ட கேள்விக்கு விகர்னன் தகுந்தவாறு மறுமொழி கூறினன், ஒருவர் நேர்மையான உள்ளம் படைத்தவர்களாக இருப்பார்களானல் அவர்கள் கூறுஞ் சொல்லும் செம்மையானதாக அமைந்திருக்கு மென்பதாம், சடா - வினு. மூதவை - முதுமை தங்கிய பெரியவர்களாகிய விடுமர், திருதராட்டிரன் துரோணர் முதலிய பெரியவர்கள் கூடியிருந்த அவை. சொற்ருன் - சொன்னுன் என்பது வலித்தல் விகாரம் பெற்றது.

விகர்ணன் கதை

துரியோதனன் பாண்டவர்களைத் தன்னுடைய அவைக்கு வரவழைத்து வஞ்சகமாகச் சூதாடி, நாடு நகரம் முதலியவைகளைப் பற்றிக்கொண்டு பல தீமைகளைச் செய்தான். திரௌபதியையும் அவைக்குக் கொண்டு வரச் செய்தான். அரசர்கள் கூடியிருந்த அவைக்கு வந்த திரௌபதி அங்குக் கூடியிருந்த பெரியோர்களைப் பார்த்துச் சில கேள்விகளைக் கேட்டாள். அப்பெரியோர்கள் அரவக் கொடியோனுகிய துரியோதனனுக்கு அஞ்சி யாதும் மறுமொழி கூருது ஊமைபோலிருந்தார்கள். துரியோதனனுக்குத் தம்பியாகிய விகர்ணன் துரியோதனனுக்குச் சிறிதும் அஞ்சாது நேர்மையான மொழிகளை அவையிலே எடுத்துப் பேசினன். அனைவரும் விகர்ணன் பேசியதைப் பாராட்டிப் புகழ்ந்து பேசினர்கள்.

அடக்கமுடைமை

13. ஓங்குதருக் கம்வாத வூரருழைச் செய்தபுத்தர்
மூங்கையராய்ச் சோர்ந்தார் முருகேசா—வாங்கதனல்
யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சோல்லிழுக்குப் பட்டு.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, வாதவூரர் உழை - திருவாதவூரடிகளிடத்தே, ஓங்கு தருக்கம்

செய்த புத்தர் - பொய்மை மிகுந்த சொற்போரைச் செய்த புத்தர்கள், மூங்கையராய்ச் சோர்ந்தார் - ஊமையர்களாகித் தளர்ச்சியை அடைந்தார்கள் : அதனுல் - ஆகையால், யா காவாராயினும் - ஒருவர் கர்க்க வேண்டியவற்றுள் எதனைக் காக்காமற்போனலும், நாகாக்க - நாவானது உண்மைக்கு மாருன சொற்களைப் பேசாமல் அதனைப் பாதுகாத்தல் வேண்டும், காவாக்கால் - அவ்வாறு காவாவிடின், சொல் இழுக்குப்பட்டு - சொற்குற்றத்தின் கண்ணே அகப்பட்டுக் கொண்டு, சோகாப்பர் - துன்பத்தை யடைவார்கள்.

(வி - ம்.) திருவாதவூரடிகளிடம் சொற்போரிட்ட புத்தர்கள் ஊமைகளாகித் துன்புற்ருர்கள். ஒருவர் காக்க வேண்டிய வற்றுள் எதனைக் காவாதொழியினும் நா ஒன்றினையேனும் பேச வேண்டிய வரம்பைக் கடந்து பேசாது காத்தல் வேண்டும் என்பதாம். ஓங்கு தருக்கம் - சொற்போர் முறையைக் கடந்து நெறியல்லாமற் செய்த சொற்போர். மூங்கை - ஊமை. சோகத் தால்-துன்புறுதல். ஆங்கு : அசைநிலை.

புத்தர் கதை

திருவாதவூரடிகள் என்னும் மாணிக்கவாசகர் காலத்தில் ஈழ நாட்டில் புத்தர்கள் மிகுதியானர்கள். அவர்கள் எல்லா விடங்கட்குஞ் சென்று தங்களுடைய புத்தசமயத்தைப் பரப்ப எண்ணினர்கள். சிதம்பரம் என இந்நாளில் வழங்குந் திருத்தில்லையில் தங்களுடைய சமயத்தைப் பரப்ப வேண்டும் என்று எண்ணினர்கள். தங்கள் நாட்டு அரசனேடு புறப்பட்டுத் திருத்தில்லைக்கு வந்தார்கள். தில்லைவாழந்தணர்களைக் கண்டு, "சொற்போர் செய்யுங்கள் அல்லது புத்தர்களாகுங்கள்" என்று கூறினர்கள். தில்லைவாழந்தணர்கள் கூத்தப்பிரானுடைய குறிப்பின்படி மாணிக்கவாசகரைப் புத்தர்களோடு சொற்போர் செய்யச் செய்தார்கள். மாணிக்கவாசகர் ஈழநாட்டரசனுடைய ஊமைப் பெண்ணைக் கொண்டே புத்த குருக்களின் கேள்விகட் கெல்லாம் மறுமொழி கூறச் செய்தார். ஆயினும் புத்தர்கட்கு நல்லறிவு உண்டாகவில்லை. அவர்கள் நெறி கடந்து குதர்க்க

வாதத்தில் (நேர்மையற்ற சொற்போரில்) இறங்கினர்கள். மாணிக்கவாசகர் அவர்களனைவரும் ஊமைகளாகும்படி செய்தார். இதனல் புத்தர்கள் மிகுந்த துன்பத்தை யடைந்து வருந்தினர்கள்.

14 வேதநெறி பேணுத் துராசாரன் மிக்கயர்ந்தான்
மோதலகை பற்ற முருகேசா—தீதில்
ஒழுக்கத்தி னெல்கா ருரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து.

(இ - ள்.) முருகேசா-முருகப்பெருமானே! 'வேத நெறி பேணுத்' துராசாரன்-மறையொழுக்க நெறிகளைப் போற்ருதவனுகிய துராசாரன் என்னும் பெயரினையுடைய அந்தணன், மோது அலகை பற்ற மிக்கு அயர்ந்தான் - வருத்துதலைச் செய்கிற பேயானது பிடிக்க மிகுந்த தளர்ச்சியை அடைந்தான்; தீது இல் - குற்றமற்ற, உரவோர் - அறிவாளர்கள், இழுக்கத்தின் - நல்லொழுக்கநெறியில் தவறுதலால், ஏதம் படுபாக்கு அறிந்து - குற்றமுண்டாதலை உணர்ந்து, ஒழுக்கத்தின் ஒல்கார் - நல்லொழுக்கத்திலே சிறிதுங் குறைவு படமாட்டார்கள்.

(வி - ம்.) துராசாரன் என்பவன் மறைநெறிப்படி ஒழுகாதபடியினல் பேயினல் பிடிக்கப்பட்டு வருந்தினன். குற்றமற்ற அறிவுடையோர் நல்லொழுக்க நெறியில் தவறுதலால் குற்றமுண்டாதலை யுணர்ந்து நல்லொழுக்கத்தில் சிறிதுந் தவறமாட்டார்கள் என்பதாம். மோது அலகை - தாக்குதலைச் செய்கின்ற பேய். படுபாக்கு - உண்டாதல்; பாக்கு - தொழிற்பெயர் விகுதி.

துராசாரன் கதை

கௌதமி யாற்றுக் கரையில் ஓர் அந்தணன் இருந்தான். இவன் நல்லொழுக்கத்தைவிட்டுத் தீயொழுக்கத்தை மேற்கொண்டபடியினல் துராசாரன் என்னும் பெயரையடைந்தான். இவன் எல்லாவகையான தீவினைகளையுஞ் செய்துகொண்டு

திரிந்தபடியினுல் இவனைப் பேய்பற்றி வருத்தத் தொடங்கியது. அதனுல் இவன் மிகுந்த வருத்தமடைந்து தளர்ந்தான். அந்தணனுகப் பிறந்தும் இவன் மறையோர்க்குரிய ஒழுக்கத்தைப் பாது காவாது இவ்வாறு துன்புறலானுனே என்று பலரும் வருந்தினர். பிறகு இவன் சேதுவுக்குச் சென்று புனித நீராடித் தனக்கு நேர்ந்த அல்லலைப் போக்கிக் கொண்டான்.

பிறனில் விழையாமை

15. பார்க்கவனுர் பன்னியத்தம் பற்றியலி யாயினன்முன்
மூர்க்கனுந் தண்டன் முருகேசா—வேர்க்கும்
பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, முன்-முன்னுளிலே, மூர்க்கனும் தண்டன்-மூர்க்கத்தன்மையுடையவனுகிய தண்டன் என்னும் அரசன், பார்க்கவனுர் பன்னி அத்தம்பற்றி-பார்க்கவமுனிவருடைய மனைவியின் கையைப் பற்றியிழுத்து, அலி ஆயினன் - ஆணும் பெண்ணுமல்லாத தன்மையை அடைந்தான்: வேர்க்கும் - வருத்தத்தையுண்டாக்குகிற, பகை பாவம் அச்சம் பழி என நான்கும் - பகை பாவம் அச்சம் பழி என்று சொல்லப் பெறுகிற நான்கும் இல் இறப்பான்கண் - பிறன் மனைவியிடத்திலே நெறி கடந்து நடப்பவனிடத்தில், இகவாவாம் - அவனை விட்டு நீங்கமாட்டாவாம்.

(வி - ம்.) முன்னுளில் தண்டன் என்னும் அரசன் பார்க்கவ முனிவருடைய மனைவி கையைப் பிடித்து இழுத்து அம்முனிவருடைய தீமொழியினுலே ஆணும் பெண்ணு மல்லாத அலித் தன்மையினை அடைந்தனன்: பகை பாவம் அச்சம் பழி என்னும் நான்கும் பிறன் மனைவியிடத்திலே தீமை புரிவோனை விட்டு நீங்காமாட்டா என்பதாம். பன்னி - மனைவி. அத்தம் - கை. இறத்தல் - நெறிகடந்து நடத்தல்.

தண்டன் கதை

முன்னாளிலே தொண்டை நாட்டைத் தண்டன் என்னும் அரசன் அரசாட்சி செய்து கொண்டிருந்தான், அவன் வேட்டையாடுதற்கு ஒருநாள் காட்டிற்குச் சென்றான். நீர்வேட்கையால் மெலிந்து பார்க்கவ முனிவருடைய இருப்பிடத்திற்குச் சென்றான். முனிவருடைய மனைவி அரசனுடைய நீர் வேட்கையை யுணர்ந்து தண்ணீர் கொடுத்து அவனுடைய துன்பத்தைப் போக்கினாள். தண்டன் அவளுடைய அழகைப் பார்த்துக் காமவேட்கை கொண்டான். அவளுடைய கையை வலிந்து பற்றினான். இச் செய்தியை உணர்ந்த பார்க்கவ முனிவர் தண்டன் அலியாகுமாறு திமொழி புகன்றார். அதனால் தண்டன் ஆணும் பெண்ணு மல்லாத அலித் தன்மையை அடைந்து மிகுந்த வருத்தத்திற் குள்ளானான். தண்டனிடத்தில் பகை பாவம் அச்சம் பழி என்னும் நான்கும் என்றும் நீங்காதனவாய் நிலைபெறலாயின.

பொறையுடைமை

16. மன்னவனாற் றன்னையோறுப் பித்துமரு வாவசுதன்
முன்னவனைக் காத்தான் முருகேசா—வுன்னும்
நிறையுடைமை நீங்காமை வேண்டிற்
பொறையுடைமை
போற்றி யொழுகப் படும்.

(இ - ள்.) முருகேசா-முருகப்பெருமானே!, அருவாவசு-அருவாவசு என்பவன், மன்னவனால் தன்னை ஒறுப்பித்து-அரசனால் தனக்கு ஒறுத்தலை உண்டாக்கிக்கொண்டு, தன் முன்னவனைக் காத்தான்-தன்னுடைய தமையனைத் துன்பத்திலிருந்து விடுபடச்செய்தான்; உன்னும் - எண்ணுகின்ற, நிறைஉடைமை - நிறை உடையவனாக இருக்குந் தன்மை, நீங்காமை வேண்டின் - தன்னைவிட்டு நீங்காமலிருத்தலை விரும்பினால், பொறை உடைமை - பொறுமையை, போற்றி ஒழுகப்படும் - பாதுகாத்து நடக்க வேண்டும்.

(வி - ம்.) அருவாவசு என்பவன் அரசனால் தனக்கு ஒறுத்தலை உண்டாக்கிக் கொண்டு தன்னுடைய தமையனைப் பாதுகாத்தான்; ஒருவன் நிறைந்த நன்மையுடையவனாக இருத்தலை விரும்பினால் பொறுமையை மேற்கொண்டு நடக்கவேண்டும் என்பதாம்.

அருவாவசு கதை

பிருகத்துய்மன் என்னும் அரசன் இரயிப்பிய முனிவருடைய மக்களாகிய பராவசு அருவாவசு என்னும் இருவரைக் கொண்டு வேள்வி யொன்றைச் செய்தான். அவர்கள் இருவரும் அவ் வேள்வியை முறைப்படி செய்து கொண்டிருந்தார்கள். ஒருநாள் மாலையில் மூத்தவனாகிய பராவசு என்பவன் தன் தந்தையினுடைய இருப்பிடத்திற்குச் சென்றான். அப்பொழுது இரயிப்பிய முனிவராகிய தந்தை குளிரின் பொருட்டுப் புலித்தோலைப் போர்த்துக் கொண்டு ஒரு மூலையிலிருந்தார்; புலி வந்து பதுங்கியிருக்கிறதென்று மாறுபட எண்ணித் தடியை ஓங்கித் தலைமேலடித்தான். அவ்வடிக்கு ஆற்றாத முனிவர் விழுந்து மாண்டார். பராவசு மாண்டது தன்னுடைய தந்தை யென்று உணர்ந்தான். செய்யவேண்டிய இறுதிக் கடன்களைச் செய்து முடித்தான். பிறகு தன்னுடைய தம்பியிடஞ் சென்று நிகழ்ந்ததைக் கூறினான். தந்தையைக் கொன்றதற்குக் கழுவாய் செய்தல் வேண்டும்; ஒப்புக்கொண்டிருக்கிறபடியால் அரசனுடைய வேள்வியையும் முடித்தல்வேண்டும்; என்னுடைய பழியை ஏற்றுக் கொண்டு கழுவாய் தேடினால் யான்மட்டும் தனியே வேள்வியைச் செய்துமுடித்து விடுகிறேன் என்று சொன்னான். அருவாவசு தன் தமையன் கூறியதற்கு உடன்பட்டான். கழுவாயின் பொருட்டுக் காட்டிற்குச் சென்று பன்னிராண்டுகள் தவஞ் செய்து பின்னர் வேள்விச்சாலையை அடைந்தான். பராவசு தன் தம்பியாகிய அருவாவசுவை வஞ்சிக்க எண்ணினான். அரசனைப் பார்த்துத், "தந்தையைக் கொன்ற இவன் இங்கிருந்தால் வேள்வி பலிக்காது" என்று சொன்னான். அரசன் கொலைபுரிந்தவன் எவன் என்று தெளியாமல் அருவாவசுவை நீக்கினான். அருவாவசு வேறு காட்டை யடைந்து கதிரவனை வழிபட்டுத் தந்தையுயிர் பெற்றெழச் செய்தான். தமையனையுஞ் சேதுவில்

நீராடச் செய்து தூய்மைப்படுத்தி உடன் வாழ்ந்தான். அருவாவசு பழியேற்ற தன்மை தமையன் செய்த குற்றத்தைப் பொறுத்தமை முதலியவற்றைப் பலரும் பெரிதும் பாராட்டினார்கள்.

அழுக்காறுமை

17. ஆர்த்தபொறு மைச்சிசுபா லன்கண்ண னாழியினான்
மூர்த்தமறப் புண்டான் முருகேசா—கூர்த்த
அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, ஆர்த்த பொறுமை சிசுபாலன் - பேராரவாரஞ் செய்த பொறுமையினையுடைய சிசுபாலன், கண்ணன் ஆழியினால்-கண்ணபிரானுடைய உருளைப்படையினாலே; மூர்த்தம் அறுப்புண்டான்-தலையறுபட்டு மாண்டான்; கூர்த்த-நுட்பமாகப் பொருந்திய, அழுக்காற்றில்-பொறுமையினால், ஏதம் படுபாக்கு அறிந்து-குற்றம் உண்டாதலை உணர்ந்து, இழுக்காற்றில்-தீநெறிக்கட் சென்று, அல்லவை செய்யார்-அறமல்லாதவைகளைச் செய்ய மாட்டார்கள்.

(வி - ம்.) பொறுமையினால் சிசுபாலன் தலையறுப்புண்டு மாண்டானாகையால் பொறுமை காரணமாக எவரும் அறமல்லாத காரியங்களைச் செய்யார் என்பதாம். மூர்த்தம் - உறுப்பு, தலை. அழுக்காறு - பிறருடைய மேன்மையைக் கண்டு உள்ளம் புழுங்குதல். இதனில் எழுவாய் மறைந்து நின்றது.

சிசுபாலன் கதை

தருமர் குதிரை வேள்வியை (அசுவமேத யாகத்தை) மிகுந்த சிறப்போடு செய்து முடித்தார், வேள்வியின் இறுதியில் முதல் வழிபாடு யாருக்குச் செய்வதென்னும் ஐயம் தருமருக்குண்டாகியது. அங்கிருந்தபெரியோர்களை அதுகுறித்து உசாவினர். கண்ண

பிரானே முதல் வழிப்பாட்டிற்குரியவர் என்று வியாச முனிவர் விளம்பினர். தருமர் கண்ணபிரானுக்கு முதல்வழிபாடு செய்யத் தொடங்கினர். இதனைக் கண்ட சிசுபாலன் கண்ணபிரானிடத்திற் பொருமை கொண்டான். கண்ணபிரான்மீது பல குற்றங்களைக் கூறிப் பலவாறு இகழ்ந்தான். இதனைக் கண்டு கண்ணபிரான் மிகுந்த சினங்கொண்டார். தம்முடைய ஆழிப்படையைச் சிசுபாலன் மீது செலுத்தினர். அவ்வாழிப்படை சிசுபாலனுடைய தலையை அறுத்து அவனைக் கொன்றது.

வெஃகாமை

18. மாண்டுநக ரோடளறு வாய்ந்தான் பராந்தகக்கோன்
மூண்டரன்பூ வெஃகி முருகேசா—வேண்டும்
நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, பராந்தகக்கோன் - பராந்தகன் என்னுஞ் சோழமன்னன், அரன் பூ மூண்டு வெஃகி - சிவபெருமானுக்குரிய செவ்வந்திமலர்களை மிகுதியாக விரும்பி, அதனுல்; நகரோடு மாண்டு அளறு வாய்ந்தான் - நகரிலுள்ளவர்களோடு இறந்து நிரயத்தையடைந்தான்; வேண்டும்-விரும்பப்படுவதாகிய, நடுவுஇன்றி-நடுவுநிலைமை இல்லாமல், நன்பொருள் வெஃகில் - பிறருக்குரிய நல்ல பொருளை விரும்பினுல், குடிபொன்றி-குடியானது கெட்டு, குற்றமும் ஆங்கே தரும் - குற்றத்தையும் அப்பொழுதே கொடுக்கும்.

(வி - ம்.) சிவபிரானுக்குரிய மலரை விரும்பியபடியினுல் பராந்தகச் சோழன் தன்னுடைய நகரத்தார்களோடு மாண்டு நிரயத்தை யடைந்தான். நடுவு நிலைமையில்லாமல் பிறருக்குரிய பொருளை விரும்பினுல் விரும்பியோருடைய குடிகெடுவதல்லாது அப்பொழுதே குற்றமும் உண்டாகும் என்பதாம். வெஃகுதல் - விரும்புதல்.

பராந்தகச் சோழன் கதை

சாரமா முனிவர் என்பவர் சிவபிரானைத் திரிசிரா மலையிலே போற்றி வழிபட்டுக் கொண்டிருந்தார். ஒரு காலத்தில் பாதலத்தில் இருந்து நாககன்னிகைகள் செவ்வந்தி மலரைக் கொண்டு வந்து அம்மலரால் இறைவனை வழிபட்டார்கள். அம்மலரின் நறுமணம் முதலிய சிறப்புணர்ந்த முனிவர் தாமும் அப்பெண்களோடு பாதலஞ் சென்று செவ்வந்திச் செடியை வாங்கிவந்து பயிரிட்டு அதன் மலரைக் கொண்டு இறைவனைப் பூசித்து வழிபட்டார். அக்காலத்தில் உறையூரில் அரசு புரிந் திருந்த சோழன் செவ்வந்தி மலர்களின் சிறப்பை யுணர்ந்து அவைகளைக் களவு செய்துகொண்டுவரச் செய்து தான் அணிந்து மகிழ்ந்தான். இதனை யுணர்ந்த சாரமாமுனிவர் மண்மாரி பெய்து உறையூர் அழியுமாறு செய்தார். நகரழிந்தொழிந்ததும் அரசனும் இறந்து தொலைந்து இறைவனுக்குரிய மலரை விரும்பிய தீவினையால் நிரயத்தை யடைந்தான்.

புறங்கூறாமை

19. துஞ்சுமனத் தோடுவணஞ் சூரன்முத லோர்த்தூற்றி
முஞ்சலுற்ற தந்தோ முருகேசா—விஞ்சலுறக்
கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

(இ - ள்.) முருகேசா-முருகப்பெருமானே!, துஞ்சுமனத் தோடு - தளர்ந்த உள்ளத்துடனே, உவணம் - கருடன், சூரன்முதலோர்த் தூற்றி-சூரன் முதலியவர்களை இகழ்ந்து, அந்தோ-வீணே, முஞ்சலுற்றது - மாண்டொழிந்தது, விஞ்சல் உற - மிகுதியாக, கண்நின்று - கண்ணுக் கெதிரே நின்று, கண் அறச் சொல்லினும் - அருள் இல்லாமற் பேசினாலும், முன் இன்று - முன்னேயில்லாமல், பின் நோக்காச் சொல் - பின்னுண்டாகும் பயனைப் பாராத சொற்களை சொல்லற்க - சொல்லாதொழிக.

(வி - ம்.) கருடன் சூரன் முதலியவர்களை இகழ்ந்து வீணே மாண்டொழிந்தது; அருளில்லாத சொற்களைச் சொன்னாலும், பின் தீமையுண்டாகக் கூடிய சொற்களைக் காணுவிடத்தே கூறுதொழிக என்பதாம். துஞ்சுமனம் - தளர்ந்த மனம். முஞ்சல் - இறத்தல்.

கருடன் கதை

சாகரத் தீவின் அரசனாகிய பிரபாகரனுடைய மக்கள் நால்வருள் சூரன் பதுமன் என்னும் இருவரும் அகத்திய முனிவரால் முருகக் கடவுளுடைய ஊர்தியுங் கொடியுமாகிய மயில் சேவல்களின்பெருமைகளையும்; சிங்கன் தாரகன் என்னும் இருவரும் திரணவிந்து முனிவரால் வீரமாகாளி, ஐயனார் இவர்களுடைய ஊர்திகளாகிய அரிமா வெள்ளையானையென்பவைகளின் பெருமைகளை உணர்ந்து அப்பதவிகளை அடைய விரும்பிச் சிசைலத்தில் தவம் புரிந்திருந்தனர். அதனை உணர்ந்த அன்னமும் கருடனும் திருக்கைலையிலே மயிலுஞ் சேவலும் சிங்கமும் வெள்ளையானையுமாகிய நான்கும் இருக்குமிடத்தை யடைந்து அவைகளைப் பார்த்து, “உங்களுடைய பதவியை அடைய விரும்பி நால்வர் தவஞ் செய்கின்றனர்” என்று தூண்டிவிட அவைகள் சினந்து சென்று அந் நால்வரையும் பூதகணங்களாகுமாறு வசவுரை வழங்கின. அந் நால்வரும் அவ்வாறே நெடுநாளிருந்து சமயம் வாய்த்த ஒருநாள் மயிலும் சேவலும் இருக்கும் திருக்கைலை மலைச் சாரலை யடைந்து அவைகளைப் பார்த்து, “உங்களை வணங்காது இக் கருடனும் அன்னமும் இறுமாந்திருத்தலைப் பார்த்திர்களோ” என்று தூண்டிவிட அவ்விரண்டுஞ் சினந்தெழுந்து தாக்குதலால் அக்கருடனும் அன்னமும் அடிபட்டு இறந்தன.

பயனிலசொல்லாமை

20. கற்றும் பயனிலசோல் கன்னனுரைத் தேஞ்ஞான்று
முற்றுபழி பூண்டான் முருகேசா—வுற்றுணரிற்
பல்லார் முனியப் பயனில சோல்லுவான்
எல்லாரு மேள்ளப் படும்.

(இ - ள்.) முருகேசா-முருகப்பெருமானே !, கன்னன்-கன்னனுவன், கற்றும் - பலநுல்களைக் கற்றுணர்ந்திருந்தும் பயன் இல சொல் உரைத்து - பயனில்லாத சொற்களைப் பேசி, எஞ்ஞான்றும்-எப்பொழுதும், முற்றுபழி பூண்டான்-நிறைந்த பழியையே மேற்கொண்டவனுனன்; உற்று உணரில் - ஆராய்ந்து பார்த்தால், பல்லார் முனிய-பலருஞ் சினங்கொள்ளுமாறு, பயன் இல சொல்லுவான் - பயனற்ற சொற்களைப் பேசுகிறவன், எல்லாரும் எள்ளப்படும்-எல்லோராலும் இகழ்ந்து பேசப்பெறுவான்.

(வி - ம்.) கன்னன் பல நூல்களை ஓதியுணர்ந்தவனுக இருந்தும் பயனற்ற சொற்களை எப்பொழுதும் பேசிக் கொண்டிருந்த படியினுலே நிறைந்த பழியையே மேற்கொண்டவனுனன்; எல்லாருஞ் சினமடையுமாறு பயனில்லாத சொ,ங்களைப் பேசிக் கொண்டிருப்பவன் எல்லோராலும் இகழப் பெறுவான் என்பதாம். முற்றுபழி - நிறைந்து நின்ற பழி.

கன்னன் கதை

கன்னன் நூல்களைக் கற்றுணர்ந்து அறிவுடையவனுகச் சிறந்து திகழ்ந்தான். தானமளிப்பதினும் சிறந்த புகழ்பெற்றவனுய்க் "கொடைக்குக் கன்னன்" என்று கூறுமாறு உயர்ந்து நின்முன். ஆயினும் துரியோதனனேடு கூடிக்கொண்டு பாண்டவர்கட்குத் திமை புரியுமாறு பயனில்லாத சொற்களை அடிக்கடி கூறிக்கொண்டிருந்தான். நல்லவனுக விளங்கும் இவனிடத்தில் இப்புல்லிய குணமும் பொருந்தியிருக்கிறதே என்று எல்லோரும் உள்ளம் இரங்கினர். அவனுடைய கொடைப் புகழ் முதலியவெல்லாம் பயனில கூறிய இழிந்த செய்கை யொன்றினுலேயே அழிந்தொழிந்தன.

தீவினையச்சம்

21. பாவ மேனாதரன்செய் பற்றலின்வேந் தோடயர்ந்தார்
மூவர் மறையோர் முருகேசா—மேவ
எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே,! மூவர் மறையோர்-மூன்று அந்தணர்கள், பாவம் எனாது-தீவினையென்று எண்ணாமல், அரன் செய் பற்றலின் - சிவபிரானுக்குரிய நிலத்தைப் பற்றியபடியினால், வேந்தோடு அயர்ந்தார்-அரசனோடு மாண்டார்கள், மேவ - பொருந்த, எனைப்பகை உற்றாரும் உய்வர் - எவ்வளவு கொடியபகையை அடைந்தவர்களும் உயிர்பிழைப்பர், ஆனால்; வினைப்பகை - தீவினையாகிய பகை, வீயாது-நீங்காமல், பின்சென்று அடும்-பின்னாலேயே போய் வருத்தும்.

(வி - ம்.) மூன்று மறையவர்கள் சிவபிரானுக்குரிய பொருளைக் கைப்பற்றுதல் தீவினையை உண்டாக்கும் என்று எண்ணாமல் அரசனோடு மாண்டொழிந்தார்கள்; எவ்வளவு கொடிய பகையை அடைந்தவர்களும் உயிர் பிழைப்பர். ஆனால் தீவினைப் பகையோ நீங்காமற் பின்னாகவே சென்று வருத்துதலைச் செய்யும் என்பதாம்.

மூவர் மறையோர் கதை

முன்னாளிலே சிங்கள நாட்டிலே பூச்சக்கர நகரத்திலே தன்மியன் என்னும் பெயருடைய ஓர் அந்தணன் இருந்தான். அவன் தன்னுடைய பாக நிலத்தையும் பொருளையும் அரிச்சுரம் என்னுந் திருக்கோயிலுக்குத் தானஞ் செய்துவிட்டுத்தான் தவஞ் செய்யச் சென்றான். பிறகு அவனுடைய தந்தையாகிய சவிதா என்பவன் அந்நிலம் தனக்குரியதென்று வழக்கிட்டான். அரசனால் தன்னுடைய பக்கத்திற்கு ஏற்பத் தீர்ப்புப் பெறமுடியவில்லை. சிலநாட் சென்ற பிறகு வேறு அரசனிடத்திலும் அந்நிலத்தைப்

பற்றி வழக்கிட்டான். அவ்வரசனலும் இவனுக்குத் தக்க தீர்ப்புக் கிடைக்கவில்லை. ஊரார்கள் சவிதாவையும் அவனுடைய மக்கள் இருவரையும் சிவத் துரோகிகளென்று இழித்துரைத்த தோடு நாட்டை விட்டுத் துரத்திவிட்டார்கள். சவிதா தன்னுடைய மக்களோடு மகத நாட்டிற்குபோய் அந் நாட்டரசனல் பாதுகாக்கப்பட்டிருந்தான். அவ்வரசனுடைய வேள்வி யாசானகிய விசாந்தகன் என்பவன் அரசனிடம். "இவர்கள் சிவத் துரோகிகள் இவர்களைக் காப்பாற்றினல் உனக்கும் சிவத் துரோகம் உண்டாகும். ஆகவே இவர்களை நீக்கிவிடுக" என்று கூறினன். அரசன் இதற்கு உடன்பட்டு அவர்களை நீக்கவில்லை. அதனல் அவ்வரசனும் சிவத் துரோகியானன். சிவத் துரோகிகளாகிய நால்வருங் கொலை செய்யப்பட்டு மாண்டொழிந்தனர்.

ஒப்புரவறிதல்

22. தொண்டருக்கேற் றுந்தரும சீலரமு துத்தொகுத்தார்
முண்டகன்மால் போற்றும் முருகேசா—மிண்டும்
இடனில் பருவத்து மோப்புரவிற் கோல்கார்
கடனறி காட்சி யவர்.

(இ - ள்.) முண்டகன் மால் போற்றும் முருகேசா- நான்முகனலும் திருமாலாலும் போற்றப் பெறும் முருகப் பெருமானே!, தருமசிலர் - தருமசிலர் என்பவர், தொண்டருக்கு-தம்மை யடைந்த அடியார்க்கு, ஏற்றும்-இரந்தும், அமுது தொகுத்தார்-அமுதூட்டிப் போற்றினர், மிண்டும்-மிகுதியாக வருத்தும், இடன் இல் பருவத்தும் - உணவிடுதலாகிய பணியைச் செய்வதற்குத் தகுதி யில்லாத காலத்திலும், கடன் அறி காட்சி அவர் - தாஞ்செய்ய வேண்டிய கடமையை உணர்ந்த அறிவையுடையவர்கள், ஒப்புரவிற்கு ஒல்கார்-உதவிசெய்வதற்குத் தளரமாட்டார்கள்.

(வி - ம்.) தருமசீலர் என்பவர் தாம் வறுமை யடைந்த காலத்திலும் ஐயமேற்று உணவிடும் பணியைச் செய்தார். தாம் செய்ய வேண்டிய கடமையை உணர்ந்த பெரியோர்கள் செய் வதற்குத் தகுதியில்லாத காலத்திலுங் கூடப் பிறருக்கு உதவி செய்வதற்குத் தளரமாட்டார்கள் என்பதாம்.

தருமசீலர் கதை

திருக்கூவம் என்னும் பதியிலே தருமசீலர் என்னும் பெய ருடைய அந்தணர் ஒருவர் இருந்தார். அவர் நாள்தோறுஞ் சிவ பெருமானைப் போற்றி வழிபட்டுக் கொண்டிருந்ததோடு தம்மிடம் வந்த அடியவர்கட்கெல்லாம் உணவிடும் பணியையுஞ் செய்து கொண்டிருந்தார். ஒருகாலத்தில் மழையில்லாமல் வற்கடம் உண்டாகியது. தம்மிடமிருந்த செல்வங்களை யெல் லாஞ் செலவிட்டார். பிறகு தம்முடைய மனைவியின் தாலி முதலியவைகளையும் விற்றுத் தாம் மேற்கொண்டிருந்த பணியை நடத்தினர். பிறகு ஐயமேற்று நடத்தினர். ஒரு சமயத்தில் எட்டு நாள் பலியேற்றும் இடுவாரின்றி வாடினர். ஒருநாள் அடியவர் ஒருவர் பசித்தடைய, அவரை இல்லத்தில் இருத்தி விட்டு நகர் முழுவதுஞ் சென்று பலியேற்றார். அகப்பட்ட இரு நாழி நெல்லைக் கொண்டு சமைத்து உணவருத்தினர். வந்தவரை அனுப்பிவிட்டுத் தாம் உண்ணச் சென்றார். அச் சமயத்தில் இறைவன் முதியவராக வந்து உணவு வேண்டினர். தருமசீலர் தம்முடைய பசியைப் பொருட்படுத்தாமல் அவரை வணங்கி எஞ்சியிருந்த உணவைப் படைத்தார். கடவுள் திருவுளம் மகிழ்ந்து நாளும் ஒரு குடம் செந்நெல் அளித்தார். அதனல் எண்ணிறந்த அடியார்கட்கு அமுதளித்து எஞ்சியதை யுண்டு சிவனடி சேர்ந்தார்.

ஈகை

23. பொன்னகர்க்கோ னேற்பத் ததீசி புறவெலும்பை
முன்னலின்றித் தந்தான் முருகேசா—மன்னி
இலனேன்னு மேவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, பொன் நகர் கோன் ஏற்ப - பொன்னுலகத்திற்கிறைவனுகிய இந்திரன் இரந்து வேண்ட, ததீசி - ததீசிமுனிவர், புற எலும்பை - முதுகெலும்பை, முன்னல் இன்றி தந்தான் - சிறிதும் எண்ணிப் பாராமலே கொடுத்தார், மன்னி - நிலைபெற்று, இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல்-நான் வறியவன் என்னுந்துன்பச்சொல்லை ஒருவன் கூறுவதற்கு முன்னரே கொடுத்தல், குலன் உடையான் கண்ணே உள - நல்ல குடியிற் பிறந்தவனிடத்தில்தான் இருக்கிறது.

(வி -ம் .) இந்திரனுனவன் இரந்து வேண்டத் ததீசி முனிவர் தம்முடைய முதுகெலும்பைத் தமக்கு இறுதி யேற்படுதலையும் எண்ணிப் பாராமல் கொடுத்தார். தன்னுடைய வறுமை நிலையை இரப்போன் இயம்புதற்கு முன்னரே வழங்குதல் நற்குடியில் பிறந்தவனிடத்தில்தான் உண்டு என்பதாம். முன்னல் - எண்ணுதல்.

ததீசி முனிவர் கதை

ததிசி என்பவர் புகழ்பெற்ற முனிவர்களில் ஒருவர். இவர் இறைவனை நோக்கித் தவஞ் செய்தலை மேற்கொண்டிருந்தார். இந்திரன் ஒரு காரணத்தை முன்னிட்டு விருத்திராசுரன் என்பவனேடு போர்புரியத் தொடங்கினன். இந்திரனுடைய வச்சிரப் படை பழையதாகையால் கெட்டுப்போயிற்று. புதிய வச்சிரப் படையை எவ்வாறு செய்யலாம் என்று திருமாலிடம் அறிவுரை கேட்டான். அம் மாயவன், "ததிசி முனிவனுடைய முதுகெலும்பைக் கொண்டு அப்படையைச் செய்துகொள். பல படைக்கலங்களின் திரட்சியே முதுகுத் தண்டாக விளங்குகிற" தென்று சொன்னர். இந்திரன் ததிசி முனிவரிடஞ் சென்று உற்றதையுரைத்து அவ்வெலும்பினை யிரந்தான். முனிவர் அவ்வெலும்பைக் கொடுப்பதால் தமக்கு இறுதியேற்படும் என்பதையும் எண்ணிப் பாராமல் அதனை அவனுக்கு வழங்கி வீடுபேற்றை யடைந்தார்.

புகழ்

24. எத்தனையோ வாசவர்நா ளின்பமிந்திரத்
துய்ம்மனுற்றே
மொய்த்தபுகழ் பூண்டான் முருகேசா—உய்த்துணரின்
ஒன்ரு வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்ருது நிற்பதோன் றில்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, இந்திரத துய்ம்மன் - இந்திரத்துய்ம்மன் என்னும் அரசன், எத்தனையோ வாசவர்நாள் - எண்ணிறந்த இந்திரர்காலம், இன்பம் உற்று-இன்பத்தை யடைந்து, மொய்த்த புகழ் பூண்டான்-மிகுந்த புகழைப் பெற்ருன், உய்த்து உணரின் - நன்ருக ஆராய்ந்து பார்க்கு மிடத்தில், உலகத்து-இவ்வுலகத்திலே, உயர்ந்த புகழ் அல்லால் - சிறந்த புகழையல்லாமல், ஒன்ரு-ஒருபொருளாக, பொன்ருது – அழியாது, நிற்பது - நிற்கக் கூடியது, ஒன்று இல் - வேறென்றுமில்லை.

(வி . ம்.) இந்திரத்துய்ம்மன் என்பவன் எண்ணிறந்த இந்திரர் காலம் வரையிலும் இன்பத்தையடைந்து மிகுந்த புகழைப்பூண்டான்; இவ்வுலகத்திலே உயர்ந்த புகழையல்லாமல் வேறு எதுவும் நிலைபெற்று நிற்கக்கூடியது அன்று என்பதாம். மொய்த்த புகழ் - மிகுந்த புகழ்.

இந்திரத்துய்ம்மன் கதை

இந்திரத்துய்ம்மன் என்னும் அரசன் பல அறங்களையுஞ் செய்து தேவருலகத்தை யடைந்தான். எண்ணிறந்த இந்திரர் காலம் இன்பம் நுகர்ந்து வாழ்ந்தான். தேவர்கள் இவனுடைய புகழை விளக்க விரும்பினர்கள். இவனைப் பார்த்து, "உன்னுடைய பெயர் நிலவுலகத்திலே நிலைபெருமையால் அங்கே செல்வாயாக" என்று கூறினர்கள். அவன் மார்க்கண்டேய முனிவரை யடைந்து, "எனது காலமும் யானியற்றிய அறமுந் தோன்ருதபடியினல் தேவர்கள் என்னை நிலவுலகத்திற்குச்

செலுத்தினர்கள். என்னுடைய நிலையைத் தாங்கள் கூற வேண்டும்" என்று சொல்லி வேண்டிக் கொண்டான். அதற்கு அவர் "நீ எனக்கு முந்தியவனுகையால் நான் அறியேன்'' என்றார். மேலும் அவனைப் பார்த்து, "எனக்கு மூத்ததாகிய ஒரு கூகை யிருக்கிறது, அதனைக் கேட்க வேண்டும்'' என்றார். அரசன் அவரோடு அக்கூகையை அடைந்து :கேட்டான். அது, "எனக்கு மூத்ததாக ஒரு கொக்கு இருக்கிறது, அதனிடங் கேட்க வேண்டும்'' என்றது. அரசன் அதனையும் அழைத்துக்கொண்டு கொக்கினிடஞ் சென்றான். அது, "எனக்கு மூத்ததாக ஓர் ஆமையிருக்கிறது, அதனைக் கேட்டால் விளங்கும்'' என்று கூறியது. கொக்கையும் அழைத்துக்கொண்டு ஆமையிடஞ் சென்றான். அஃது அரசனியற்றிய அறம் முதலியவைகளை எல்லோரும் அறியும்படியாகக் கூறியது. தேவர்கள் உடனே விமானத்தோடு வந்து அரசனை விண்ணுலகிற் கழைத்தனர். அரசன் எல்லோரையும் அவரவரிடத்திற் சேர்த்து விட்டு விண்ணுலகஞ் சென்றான். [கூகை, கொக்கு, ஆமை முதலிய வடிவங்களைப் பெற்றிருந்தவர்கள் சிறந்த முனிவர்கள்.]

அருளுடைமை

25. வாழ்கணங்க ளாக்கினன்ச தாநந்தன் வன்னரகின்
மூழ்குகோடி யோரை முருகேசா—தாழ்கிலா
நல்லாற்று னாடி யருளாள்க பல்லாற்றாற்
றேரினு மஃதே துணை.

(இ - ள்.) முருகேசா-முருகப்பெருமானே!, சதாநந்தன்-சதாநந்தர் என்னும் முனிவர், வல்நரகில் மூழ்கு கொடியோரை - கொடிய நிரயத்திலே அமிழ்ந்து கிடந்த பொல்லாதவர்களை, வாழ் கணங்கள் ஆக்கினன் - சிவலோகத்தில் வாழுகின்ற சிவகணங்களாகச் செய்தார், தாழ்கிலா-இகழ்ச்சியில்லாத, நல் ஆற்றால் நாடி-நல்வழியை ஆராய்ந்து, அருள் ஆள்க - அருளைச் செலுத்துக, பல் ஆற்றால் தேரினும்-

பலவழிகளால் ஆராய்ந்து பார்த்தாலும், அஃதே துணை- அந்த அருளே சிறந்த துணையாக உயிர்கட்கு விளங்கும்.

(வி - ம்.) சதாநந்தமுனிவர் நிரயத்தில் கிடந்து வருந்திய உயிர்த்தொகைகளை யெல்லாம் சிவகணங்களாகச் செய்து திருக்கைலைக்கு அனுப்பினர். நல்ல நெறியை நாடி அருளை எல்லா உயிர்களிடத்திலுஞ் செலுத்தவேண்டும். பலவழிகளில் ஆராய்ந்து பார்த்தாலும் அவ்வருளே உயிர்களுக்குச் சிறந்த துணையாக விளங்கு மென்பதாம்.

சதாநந்தர் கதை

சதாநந்தர் என்பவர் பதரிகாச்சிரமத்திலிருந்த பூரணவித்து என்னும் முனிவருடைய புதல்வர். இவருடைய தாய்பெயர் பத்திரதத்தை. சில முனிவர்கள்கூடிப் புராணம் படித்தார்கள். அப்போது, உயிர்த்தொகைகள் நிரயத்தை யடைந்து வருந்துகிற செய்திகளை யெல்லாம் விளக்கமாகக் கூறினார்கள். இதனைக் கேட்ட சதாநந்தர் அவ்வுயிர்களிடத்திலே மிகுந்த இரக்கங் கொண்டார். தம்முடைய தவச்சிறப்பினால் ஒருவிமானத்திலேறி எமலோகத்திற்குச் சென்றார். எமன் முனிவரை வரவேற்றுப் போற்றினான். நிரயங்கட்கு அழைத்துக் கொண்டு போய்க் காட்டினான். நிரயத் துன்பத்தைப் பார்த்து உள்ளம் பதைத்தார். சிவபிரானுடைய திருப் பெயரைக் கூறி அவ்வுயிர்த்தொகைகளை யெல்லாம் விடுவித்தார். சிவகணங்களாக்கித் திருக்கைலைக்கு அனுப்பிவிட்டார். முனிவருடைய அருளுடைமையைக் கண்டு அனைவரும் மனம் மகிழ்ந்தார்கள்.

புலான்மறுத்தல்

26. காழுறுமூன் றுய்த்தலின்மா யீகனுமார்க் கண்டனுன்
மோழலுருப் பெற்றான் முருகேசா—வீழும்
படைகொண்டார் நெஞ்சம்போ னன்றாக்கா தொன்றன்
உடல்சுவை யுண்டார் மனம்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, காழ்உறும் ஊன் துய்த்தலின் - குற்றம் பொருந்திய ஊனை உண்டபடியினால், மாயிகன் - மாயீகன் என்பவனும், மார்க்கண்டனால்- மார்க்கண்டேய முனிவரால், மோழல் உரு பெற்றான் - பன்றியின் வடிவத்தை யடைந்தான்; வீழும் - விரும்பும், படை கொண்டார் நெஞ்சம் போன்று - கொலைசெய்யும் படைக் கலங்களைக் கைக்கொண்டவர்களுடைய மனத்தைப் போல், ஒன்றன் உடல் சுவை உண்டார் மனம்-ஓர் உயிரின் உடலைச் சுவையுண்டாகுமாறு செய்து சாப்பிட்டவர்களுடைய மனமானது, நன்று ஊக்காது - நல்வழியிலே சென்று அருளைச் செய்யமாட்டாது. மோழல் - பன்றி.

(வி - ம்.) குற்றம் பொருந்திய ஊனையுண்டபடியினாலே மாயிகன் என்பவன் மார்க்கண்டேய முனிவரால் பன்றியானான். ஒன்றன் உடலைத் தின்றவர்களுடைய உள்ளமானது படைக்கலங்களைக் கையிலே கொண்டவர்களுடைய உள்ளத்தைப் போல அருள் வழியிலே செல்லமாட்டாது என்பதாம்.

மாயிகன் கதை

மாயிகன் என்பவன் ஓர் அரக்கன். நினைத்த வடிவத்தை அப்பொழுதே எடுக்கத் தக்க ஆற்றலுடையவன். இவன் தான் பார்க்கும் விலங்குகளைப் போலவே வடிவமெடுத்துக் கொண்டு அவைகளை நெருங்கிக் கொன்று தின்று திரிந்தான். ஒருநாள் மார்க்கண்டேய முனிவருடைய இருப்பிடத்திலேயிருந்த ஒரு பெரிய பன்றியைக் கண்டான். கண்டதும் அதனைக் கொன்று தின்ன வேண்டுமென்று பழக்க வாசனையினால் எண்ணினான். அப்பன்றியைப் போலவே வடிவமெடுத்துக் கொண்டு அதன் பக்கத்திற் சென்றான். அவனுடைய நோக்கத்தை யுணர்ந்த மார்க்கண்டேயர் அவன் பன்றியாகவே திரிந்துழலுமாறு வசவுரை வழங்கினார். அரக்கன் பன்றியாகவே அலைந்து திரிந்தான்.

தவம்

27. பற்றிலனந் தன்புற் பதத்தனோடா னந்தநட
முற்றவத்தாற் கண்டான் முருகேசா—வற்றமற
வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவம்
ஈண்டு முயலப் படும்.

(இ - ள்.) முருகேசா-முருகப்பெருமானே!, பற்று இல் அனந்தன் - பற்றற்றவனாகிய ஆதிசேடன், புல்பதத்தனொடு - வியாக்கிரபாத முனிவரோடு, ஆனந்த நடம்-அம்பலவாணனுடைய இன்பத்திருக்கூத்தை, முன் தவத்தால் கண்டான்-முன்னே செய்த தவத்தினாலே பார்த்தான்; அற்றம் அற-குறைவில்லாமல், வேண்டிய-வேண்டியவைகளையெல்லாம், வேண்டியாங்கு எய்தலால் - விரும்பியபடியே அடையச் செய்வதால், செய்தவம் - செய்யவேண்டிய தவத்தை, ஈண்டு முயலப்படும் - இப்பொழுதே செய்யத் தொடங்குதல் வேண்டும்.

(வி - ம்.) ஆதிசேடன் வியாக்கிரபாத முனிவனோடு அம்பலவாணனுடைய இன்பத் திருக்கூத்தை முற்றவத்தால் கண்டு மகிழ்ந்தான். வேண்டியவைகளை யெல்லாம் வேண்டியவாறே அடையச் செய்வித்தலால் செய்ய வேண்டிய தவத்தை இப்பொழுதே செய்யத் தொடங்க வேண்டுமென்பதாம். புல்-புலி; புல்பதத்தன் - வியாக்கிரபாதன்.

பதஞ்சலி முனிவர் கதை

சிவபெருமான் தேவதாரு வனத்தில் நாற்பத்தெண்ணாயிரம் முனிவர்கட்காக இன்பக் கூத்தாடியதைச் சிவயோகத்தினால் உணர்ந்தார். வியாக்கிரபாத முனிவர் அக் கூத்தைக் காட்டியருளுமாறு திருத்தில்லையிலே சிவபெருமானை வழிபட்டிருந்தார். அக் கூத்தை அறிதுயிலாலே கண்டு இன்புற்றெழுந்த திருமாலால் ஆதிசேடனும் உணர்ந்தான். அக்

கூத்தைத் தானுங் காண விரும்பினன். கைலைமலைச் சாரலிலே கடுந்தவம் புரிந்தான். சிவபிரானருளியவாறே பதஞ்சலி முனிவர் என்னும் பெயரோடு திருத்தில்லையை அடைந்து சிவபெருமானை வழிபட்டிருந்தான். தைப்பூசமும் குருவாரமுங்கூடிய நன்னாளிலே முன் கூறியிருந்தபடியே அப் பெருமானுடைய திருக்கூத்தைக் காணப்பெற்று மகிழ்ந்தான். தவத்தினாலே எதனையும் பெறலா மென்பது பதஞ்சலி முனிவன் தவஞ் செய்து திருக்கூத்தைக் காணப்பெற்றபடியினாலே நன்குணரப்பட்டது.

கூடாவொழுக்கம்

28. சந்நியா சம்புனைந்தே சானகியைத் தான்கவர்ந்தான்
முன்னிலங்கை வேந்தன் முருகேசா—துன்னும்
தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, முன்-முன்னாளிலே, இலங்கை வேந்தன்-இலங்கைக்கு அரசனாகிய இராவணன், சந்நியாசம் புனைந்தே - பொய்யான துறவுக் கோலத்தை மேற்கொண்டு, சானகியைக் கவர்ந்தான்-சீதாபிராட்டியைப் பற்றிக் கொண்டு சென்றான், துன்னும்-பொருந்தும், தவம் மறைந்து - தவக்கோலத்திலே ஒளிந்து நின்று, அல்லவை செய்தல் - பொல்லாத காரியங்களைப் புரிதல், புதல்மறைந்து - புதரிலே மறைந்து நின்று, வேட்டுவன்—வேடனானவன், புள்சிமிழ்த்தற்று-பறவைகளைப் பிடித்தலைப் போன்றதாம். தான் : அசை.

(வி - ம்.) இலங்கை வேந்தனாகிய இராவணன், துறவுக் கோலம் பூண்டு சீதாபிராட்டியைக் கவர்ந்து கொண்டு சென்றான்; ஒருவன் தவக் கோலத்திலே மறைந்து நின்றுகொண்டு அக்கோலத்திற்கு ஏலாத காரியங்களைச் செய்தல் வேடனானவன் புதரிலே மறைந்து நின்று பறவைகளைப் பிடிப்பது போன்றது என்பதாம்.

இராவணன் கதை

இலங்கைவேந்தனுகிய இராவணன் சீதாபிராட்டியினுடைய அழகு முதலியவைகளை அறிந்தான். நேரே சென்று இராமபிரானை வென்று சீதையைக் கவர்ந்து கொள்ளக் கூடிய ஆற்றல் அவனுக்கில்லை. மாரீசனை மாயமானுகச் செய்து முன்னர் அனுப்பிவிட்டுத் தான் பிறகு இலட்சுமணனும் இல்லாத சமயத்திலே பொய்க் கோலத் துறவியாகச் சென்று சீதையைக் கவர்ந்து கொண்டு சென்ருன். இராவணனுடைய இக்களவு வேலையைப் பிறகு பலரும் இகழ்ந்தனர்.

கள்ளாமை

29. நாகவசுக் கள்வசிட்ட னற்சுரபி யைப்பற்று
மோகமல்கிக் கேட்டார் முருகேசா—போகுங்
களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, நாக வசுக்கள் - தேவருலகிலுள்ள அட்டவசுக்கள் என்பார், நல் சுரபியைப் பற்றும் - வசிட்டருடைய இருப்பிடத்திலிருந்த நல்ல காமதேனுவைக் கைப்பற்றிக் கொள்ளும், மோகம்- இச்சையானது, மல்கிக் கெட்டார்-மிகுதிப்பட்டபடியினுலே கெட்டொழிந்தார்கள், போகும் - செய்யும், களவின் கண் கன்றிய காதல் - களவினிடத்திலே மிகுந்த விருப்பத்தைக் கொள்ளுதல், விளைவின்கண் - அதன் பயனை நுகரு நேருங்காலத்தில், வீயா விழுமம் தரும் - கெடாத துன்பத்தைக் கொடுப்பதாகும்.

(வி - ம்.) தேவர்களாகிய வசுக்கள் எண்மரும் வசிட்டருடைய காமதேனுவைக் கைப்பற்றிக் கொள்ள வேண்டுமென்னும் விருப்பம்மேலிட்டபடியினுலே கெட்டொழிந்தார்கள்: களவின் கண் மிகுந்த விருப்பத்தைக் கொள்ளுதல் அதன் பயனை

நுகர வேண்டிய சமயத்தில் கெடாத துன்பத்தை அடைய வேண்டியதாக முடியுமென்பதாம்.

வசுக்கள் கதை

அனலன் முதலியோர் அட்டவசுக்கள் என்று ஒரே தொகையாகக் குறிக்கப் பெறுவர். இவர்களில் ஒருவனுடைய மனைவி காமதேனுவை விரும்பித் தன்னுடைய கணவனிடஞ் சென்றாள். அவன் தன்னுடைய அண்ணன்மார்களையுந் துணைக்குச் சேர்த்துக் கொண்டு வசிட்டருடைய இருப்பிடத்திற்குப் போய் அங்கிருந்த காமதேனுவைக் களவு செய்து கொண்டு சென்றான். இச்செய்தியை வசிட்டர் உணர்ந்தார். அவர்களனைவரும் மனிதர்களாகப் பிறக்குமாறு தீ மொழி புகன்றார். அவர்கள் அவ்வாறே பிறந்து துன்பத்தையடைந்தார்கள். களவின் பயன் பெருந்துன்பமாக முடிந்து விட்டது.

வாய்மை

30. மாழ்கித் தருமனொரு பொய்யுரைத்தே வன்துயருண்
மூழ்கிமிகச் சோர்ந்தான் முருகேசா—தாழ்கலின்றிப்
போய்யாமை போய்யாமை யாற்றி னறம்பிற
சேய்யாமை சேய்யாமை நன்று.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, தருமன்- பாண்டவர்களில் முதல்வராகிய தருமர், ஒரு பொய் உரைத்து - ஒரு பொய்யைக் கூறிவிட்டு, மாழ்கி - பிறகு வருத்தத்தை யடைந்து, வன்துயருள் மூழ்கிமிகச் சோர்ந்தான் - வலிய துன்பத்துள் அமிழ்ந்து மிகத்தளர்ச்சியை யடைந்தான், தாழ்கல் இன்றி - தாழ்த்துதல் இல்லாமல், பொய்யாமை பொய்யாமை ஆற்றின் - பொய்யாமையாகிய அறத்தை உண்மையாகவே செய்தால், பிற அறம் - பிற அறங்களை, செய்யாமை செய்யாமை நன்று - செய்யாதிருத்தலும் நன்மையேயாம்.

(வி - ம்.) தருமர் ஒரு பொய்யைக் கூறிவிட்டுப் பிறகு மனம் வருந்தி மிகுந்த துன்பத்தையடைந்து சோர்ந்தார். ஒருவன் பொய் புகலாமை யாகிய அறத்தை மேற் கொண்டொழுகுவானு யின் அவன் வேறு அறங்களைச் செய்யாதிருந்தாலுங்கூட அவனுக்கு நன்மையே உண்டாகுமென்பதாம்.

தருமர் பொய்யுரைத்த கதை

பாரதப் போரில் துரோணரை வெற்றி கொள்வது மிகக் கடினமாக இருந்தது. அவர் மிகக் கொடுமையாகப் போர் புரிந்தார். அசுவத்தாமா இறந்துவிட்டான் என்றுல் துரோணர் தளர்ந்து விடுவார். அச்சமயத்தில் அவரைக் கொன்று விடலாமென்று கண்ணன் முதலியோர் முடிவு செய்தனர். ஒரு நாள் அசுவத்தாமா என்னும் யானையொன்று இறந்து போய் விட்டது. இச்சமயத்தில் கண்ணன் முதலியோர் தருமரிடம் வந்து அசுவத்தாமா (யானை) மாண்டு போன செய்தியைத் துரோ்ண ருடைய காதிலே விழுமாறு கூறவேண்டுமென்று வற்புறுத்தினர். தருமனுகிய மெய்யன் இதனுல் திமையுண்டாகுமென்று முதலில் மறுத்தானுயினும் பிறகு கூறினுன். அதனுல் துரோணர் இறந்தார். போர் முடிந்து அரசுரிமை பெறத் தொடங்குஞ் சமயத்தில், "பொய் கூறிய தீவினையை அகற்றுமல் அரசாளு தற்குரியவனுக மாட்டாய்" என்று விண்ணெளி விளம்பியது. தருமன் மனங் கலங்கினுன். வியாசர் விளம்பியவாறே சேது வுக்குப் போய் நீராடி அத்தீவினையைப் போக்கிக் கொண் டான்.

வெகுளாமை

31. சித்தரா மன்வெகுளி மூண்டிழந்தான் றீக்கண்ணை
முத்தனல்ல மன்பால் முருகேசா—நித்தம்
மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்த லதனுன் வரும்.

(இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே!, முத்தன் அல்லமன் பால் - விடுபேற்றிற்குரியவராகிய அல்லம தேவ

ரிடத்திலே, சித்த ராமன் வெகுளி மூண்டு - சித்தராமன் என்பவர் மிகுந்த சினங் கொண்டு, தீக்கண்ணை இழந்தான்- தீக் கண்ணைப் போக்கடித்துக் கொண்டான்; நித்தம் நாள் தோறும், யார்மாட்டும் வெகுளியை மறத்தல் - எவரிடத்தி லும் சினத்தை மறந்து விடுதல் வேண்டும், இன்றேல்; தீய பிறத்தல் - தீமையானவைக ளுண்டாதல், அதனுல் வரும் - அந்தச் சினத்தினுலே உண்டாகும்.

(வி - ம்.) அல்லம தேவரிடத்திலே சித்தராமர் சினங் கொண்டு அதனுல் தம்முடைய தீக் கண்ணை யிழந்தார். எவரிடத்திலும் சினங் கொள்ளாமல் சினத்தை மறந்து விடுதல் வேண்டும்; தீமையெல்லாம் உண்டாதல் அந்தச் சினத்தினுல் தான் என்பதாம்.

சித்தராமர் கதை

சித்தராமர் என்பவர் சொன்னலாபுரம் என்னும் ஊரில் வாழ்ந்திருந்தார். குளம் வெட்டல் முதலிய அறங்களை அவர் செய்து கொண்டிருந்தார். சித்தராமரை அத்தொழில்களிலே யிருந்து விலக்கி வீடு பேற்று வழியிலே செலுத்த வேண்டு மென்று அல்லமதேவர் எண்ணினுர். சித்தராமரிடஞ் சென்று அறிவுரைகள் பலவற்றைக் கூறினுர். அல்லம தேவர் கூறிய உரைகளைக் கேட்டுச் சித்தராமர் மிகுந்த சினங் கொண்டார். தம்முடைய நெற்றிக் கண்ணுல் அல்லம தேவரை எரித்துவிட எண்ணினுர். அக்கண்ணைத் திறந்து அல்லமதேவரைப் பார்த்தார். அக்கண் அல்லம தேவரை யாதுஞ் செய்ய முடியாமல் ஒளி மழுங்கிப் போய் விட்டது. இதனைக் கண்ட சித்தராமர் ஆணவம் அடங்கியவராய் அல்லம தேவருக்கு அடிமையாய் நல்லவரானுர்.

இன்னுசெய்யாமை

32. தன்னைவதை முத்திநா தன்றனையு மெய்ப்பொருளார்
முன்னைநனி காத்தார் முருகேசா—மன்னுலகில்
இன்னுசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

(இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே!, மெய்ப் பொருளார்-மெய்ப் பொருள் நாயனார், தன்னை வதை முத்தி நாதன் தனையும் - தன்னைக் கொலைபுரியுமாறு வெட்டிய முத்திநாதன் என்பவனையும், முன்னை - முன்னாளிலே, நனி காத்தார் - நன்கு பாதுகாத்தார், மன்னுலகில் - நிலை பெற்ற வுலகத்தில், இன்னா செய்தாரை ஒறுத்தல் - தனக்குத் துன்பஞ் செய்தவர்களை வருத்துதல், அவர் நாண - அவர்கள் நாணத்தை யடையுமாறு, நன்னயம் செய்து விடல் - அவர்கட்கு நன்மை செய்தலே யாம்.

(வி - ம்.) மெய்ப்பொருள் நாயனார் தம்மைக்கொலை செய்த முத்தி நாதன் என்பவனை ஏவலர்கள் கொன்று விடாமல் பாது காத்தார். தனக்குத் துன்பஞ் செய்தவர்களைத் தான் ஒறுத்தல் எவ்வாறெனின் அவர்கட்கு நன்மை செய்து அவர்கள் நாணுமாறு செய்தலே என்பதாம்.

மெய்ப்பொருள் நாயனார் கதை

முன்னாளிலே மெய்ப் பொருள் நாயனார் என்பவர் ஒருவர் இருந்தார். அவருக்கும் முத்திநாதன் என்பவனுக்கும் பகை மூண்டது. அவன் மெய்ப் பொருளுநாயனாரைப் பன்முறை எதிர்த்துத் தோற்றோடினன், பிறகு வஞ்சகமாகக் கொல்லத் துணிந்து சிவக்கோலம் பூண்டு வந்தான். அவருக்கு அருளுரை வழங்கப் போவதாகக் கூறித் தனியே யிருக்கச் செய்தான். நூற் சுவடியை அவிழ்ப்பான் போன்று மறைத்து வைத்திருந்த உடைவாளையெடுத்து மெய்ப்பொருள் நாயனாரைக் குத்தினன். அவன் அவ்வாறு செய்தும் அவனுக்கு எத்தகைய தீங்கும் அணுகாமல் வெளியே அனுப்பி வருமாறு தத்தன் என்பவனை அனுப்பினார். அவன் வந்து கூறுமளவும் உயிர் தாங்கியிருந்து பின்னர் இறந்தார். தன்னைக் கொலை புரிந்தவனிடத்திலும் மெய்ப்பொருளார் காட்டிய அருள் எல்லோருக்கும் மிகுந்த வியப்பை யளிப்பதாயிற்று.

கொல்லாமை

33. தத்திநடந் தெவ்வுயிரும் தாங்குதயை யாற்பரதர்
முத்தரின்மேம் பட்டார் முருகேசா—மெத்து
நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் தலை.

(இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே !, பரதர்-பரதர் என்பவர், எவ்வுயிரும் தாங்கு தயையால்-எவ்வுயிரையும் பாதுகாக்க வேண்டும் என்னும் அருளினால், தத்தி நடந்து - தாண்டித் தாண்டி நடந்து, முத்தரின் மேம் பட்டார் - முத்தர்களைப் பார்க்கினுஞ் சிறந்தவரானார்; மெத்து - மெதுவான, நிலை அஞ்சி - வாழ்க்கை நிலைக்கு அச்சமுற்று, நீத்தாருள் எல்லாம் - துறவை மேற்கொண்டவர்களி லெல்லாம், கொலை அஞ்சி- பிறவுயிரைக் கொலை செய்தற்கு அஞ்சி, கொல்லாமை சூழ்வான் - கொல்லா நோன்பை மேற்கொண்டு நடப்பவன், தலை - தலை சிறந்தவனாவான்.

(வி-ம்.) பரதமுனிவர் என்பவர் பிற உயிர்களிடத்திலே கொண்ட அருளினால் தாண்டித் தாண்டி நடந்து, முத்தர்களினுஞ் சிறந்து விளங்கினர்; உலகநிலையாமைக்கு அஞ்சித் துறவை மேற் கொண்டவர்களெல்லாரினும் கொலைத்தன்மைக்கு அஞ்சிக் கொல்லாமையை மேற்கொண்டொழுகுபவர்களே சிறந்தவர்கள் என்பதாம்.

பரத முனிவர் கதை

பரதமுனிவர் என்பவர் நீராடும்பொருட்டுக் கண்டகியாற்றுக்குச் சென்றார். அங்கு நீர்ப் பெருக்கிலே மான் கன்று ஒன்று மிதந்து வந்தது. அதனை எடுத்துச் சென்று அதனிடம் அன்பு பாராட்டினார். இறுதிக் காலத்திலும் அதன்மீது எண்ணங்கொண்டவராய் உடலை விட்டார். மறுபிறப்பினும்

மெய்யறிவுடையவராய்த் திகழ்ந்தார். நிலத்தில் அடிபரவுமாறு நடந்தால் உயிர்த்தொகைகள் மடியுமேஎன்று அஞ்சித் தாண்டித் தாண்டி நடந்து கொண்டிருந்தார். ஒருநாள் இரகுகணன் என்னும் அரசன் கபிலமுனிவருடைய இருப்பிடத்திற்குச் சென்ருன். அவன் சென்ற சிவிகையைத் தாங்கிச் சென்ருேர் வழியில் நின்ற இவரையும் பிடித்துச் சிவிகையைத் தாங்குமாறு செய்தனர். முனிவர் தாண்டித்தாண்டிச் சென்றமையால் சிவிகையாடியது. அரசன் சிவிகையாடியதனுல் பரத முனிவருடைய செய்தியை அறிந்து அவரைப் போற்றிப் பாராட்டி அருள் பெற்ருன்.

நிலையாமை

34. தக்கன்மதர்த் தேச்சமோன்று தான்செய்தயச்
சேன்னிபெற்ருன்
முக்கணனை யெள்ளி முருகேசா—வுக்கமின்போல்
நில்லாத வற்றை நிலையின வென்றுணரும்
புல்லறி வாண்மை கடை.

(இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே!, தக்கன் - தக்கன் என்பவன், மதர்த்து - ஆணவங் கொண்டு, முக்கணனை எள்ளி-சிவபிரானை யிகழ்ந்து, தான் எச்சம் ஒன்று செய்து-தான் வேள்வி யொன்றைப் புரிந்து, அயம் சென்னி பெற்ருன் - ஆட்டின் தலையை அடைந்தான்; உக்க மின் போல் - சிதறுகின்ற மின்னலைப் போல்; நில்லாதவற்றை - நிலையில்லாத பொருள்களை, நிலையின என்று உணரும் - என்றும் நிலைபெறத் தக்கவை என்று அறியும், புல்லறிவு ஆண்மை கடை - அற்ப அறிவுடையவராக இருக்குந் தன்மை இழிந்ததாகும்.

(வி - ம்.) தக்கனைவன் ஆணவங்கொண்டு சிவபெருமானை யிகழ்ந்து ஒருவேள்வியைச் செய்து அதனுல் ஆட்டுத்தலையைப்

பெற்றான். மின்னலைப் போல் விரைந்தழியும் பொருள்களை நிலையுடையன என்று எண்ணும் அறிவானது இழிந்த தாகும் என்பதாம்.

தக்கன் கதை

தக்கன் என்பவன் சிவபிரானைக் குறித்துத் தவஞ் செய்து பல சிறப்புக்களையுமடைந்ததன்றி இறைவி தனக்கு மகளாகத் தோன்றும் பேற்றையும் பெற்றான். ஒருநாள் திருக்கைலைக்குச் சென்றுள்ளபோது மருகனாகிய சிவபிரான் தன்னை வணங்கிப் போற்றவில்லை யென்று சினங்கொண்டான். நிலைபேறில்லாத தன்னுடைய செல்வம் என்றும் நிலைத்து நிற்கக் கூடியதென்று மாறுபாடாக எண்ணிச் சிவபிரானையிகழ்ந்து வேள்வியொன்றைச் செய்தான். சிவபிரானுடைய சினத்தில் தோன்றிய வீரபத்திரக் கடவுள் தக்கனுடைய தலையை அறுத்து வீழ்த்தினார். பிறகு அத் தலைக்குப்பதிலாக ஆட்டுத்தலையொன்று தக்கனுக்குண்டாகியது, தக்கன் ஆட்டுத்தலையோடு விளங்குதலைக் கண்டவர்கள் எள்ளி நகையாடினார்கள்.

துறவு

35. மேக்குவணை யின்பும் வெறுத்துச் சிவிமகவான்
மோக்கநிலை சார்ந்தான் முருகேசா—வூக்கித்
தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

(இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே !, சிவிமகவான்-சிவிகைகளையுடைய இந்திரன், மேக்கு உவணை இன்பும் வெறுத்து - மேலாகிய விண்ணுலக இன்பத்தையும் வெறுத்து, மோக்க நிலை சார்ந்தான் - விடுபேற்று நிலையை அடைந்தான்; ஊக்கி - ஊக்கத்தைச் செலுத்தி, தீரத் துறந்தார்-முற்றுந் துறந்தவர்கள், தலைப்பட்டார்-உயர்ந்த நிலையினராவர், மற்றையவர் - துறவாத மற்றவர்களோ, மயங்கி வலைப்பட்டார் - அறியாமை யாகிய வலையிலே அகப் பட்டவர்களாவர்.

(வி - ம்.) தேவேந்திரனானவன் விண்ணுலக இன்பத்தையும் வெறுத்து வீடு பேற்று நிலையை அடைந்தான். இவ்வுலகத்தில் எல்லாவற்றையும் முற்றுந் துறந்தவர்களே உயர்ந்த நிலையினராவர்; துறவாதவர்களோ அறியாமையாகிய வலையிலே அகப்பட்டவர்களாவர் என்பதாம்.

இந்திரன் கதை

எவ்வளவு சிறப்புடையவர்களும் நூறுவேள்விகளைச் செய்தால் அல்லாமல் அடைதற்கரிய மேலாகிய விண்ணுலக இன்பங்களை இந்திரன் நுகருங் காலத்திலே அவைகளையெல்லாம் நிலையற்றன வென்று வெறுத்து விட்டு வியாழபகவான் விளம்பியவாறே காஞ்சியில் சிவபெருமானை வழிபட்டு வீடு பேற்று நிலையை அடைந்தான்.

மெய்யுணர்தல்

36 செம்மைப் பொருளென்னத் தேர்ந்துநினைக் கும்பமுனி
மும்மலமற் றுய்ந்தான் முருகேசா—இம்மைதனில்
கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

((இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே !, நினை - தேவரீரை, கும்பமுனி-அகத்தியர், செம்மைப் பொருளென்னத் தேர்ந்து - முழுமுதற் பொருள் என்று உணர்ந்து, மும்மலம் அற்று உய்ந்தான் - ஆணவம் காமியம் மாயை என்னும் மும்மலத்தையும் போக்கி வீடுபேற்றையடைந்தான்; இம்மைதனில்-இப்பிறப்பில், கற்று - கற்க வேண்டிய அறிவு நூல்களைக் கற்று, ஈண்டு மெய்ப்பொருள் கண்டார் - இங்கு மெய்ம்மைப் பொருளை உணர்ந்தவர்கள், ஈண்டு வாரா நெறி- மீண்டும் இவ்வுலகில் பிறவாத வழியை, தலைப்படுவர் - அடைவார்கள்.

(வி - ம்.) அகத்திய முனிவர் தேவரீரே உண்மையான மெய்ப்பொருளென் றுணர்ந்து மும்மலங்களையும் போக்கி வீடு பேற்றை யடைந்தார். கற்கவேண்டிய அறிவு நூல்களைக் கற்று இவ்வுலகில் மெய்ம்மைப்பொருளை யுணர்ந்தவர்களே மீண்டும் உலகில் தோன்றாத வீடுபேற்று நெறியை அடைவர் என்பதாம்.

அகத்தியர் கதை

அகத்திய முனிவர் பொதியமலையிலே தவஞ் செய்து கொண்டிருந்தார். நாம் எக்கடவுளைப் போற்றினால் தமிழறிவையும் மெய்யறிவையும் பெறலாம் என்று எண்ணமிட்டார். முருகக் கடவுளைப் போற்றி வழிபட்டால் இவ்விரண்டையும் ஒருங்கே பெறலாம் என்னுந் துணிவு அவருக்குண்டாகியது. திருத்தணிகையை அடைந்து போற்றி வழிபட்டுத் தமிழறிவையும் மெய்யறிவையும் ஒருங்கே பெற்றார். அதனால் அவருக்கு வீடு பேற்று நெறி எளிதில் கைகூடுவதாயிற்று.

அவாவறுத்தல்

37 பற்றறுத்து வாமதே வன்பிறவாப் பான்மைபெற்றான்
முற்றியரன் பூசை முருகேசா—கற்றுணர்ந்தோர்
வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

(இ - ள்.) முருகேசா-முருகப்பெருமானே!, வாமதேவன்-வாமதேவ முனிவர், பற்று அறுத்து-எல்லாப் பற்றுக்களையும் விட்டு அரன் பூசை முற்றி - சிவபெருமானைப் பூசித்து, பிறவாப் பான்மை பெற்றான் - பிறவாத நெறியை அடைந்தார்; கற்று உணர்ந்தோர் - அறிவு நூல்களை ஓதி உணர்ந்தவர்கள், வேண்டுங்கால்-ஒன்றை விரும்புமிடத்து, பிறவாமை வேண்டும் - பிறவாநிலையை விரும்புதல் வேண்டும், மற்றது-அந்நிலை, வேண்டாமை வேண்டவரும் - அவாவற்ற நிலையை விரும்பினால் உண்டாகும்.

(வி - ம்.) வாமதேவ முனிவர் என்பவர் பற்றுக்களை யெல்லாம் விட்டுச் சிவபெருமானை வழிபட்டுப் பிறவாநிலையை அடைந்தார்; ஒன்றை விரும்பினுல் பிறவாமையையே விரும்புதல் வேண்டும். அந்நிலையானது அவாவற்ற நிலையை விரும்பினுல் உண்டாகும் என்பதாம்.

வாமதேவர் கதை

வாமதேவ முனிவர் என்பவர் தாயினுடைய கருப்பத்திலிருக்கும் போதே பிறவிக்கு அஞ்சிச் சிவபெருமானை மனத்தாலே வழிபட்டுப் போற்றினுர். அப்பெருமான் தோன்றி அருள் செய்தார். அதன்பிறகு உலகத்திற் பிறந்து எல்லாப் பற்றுக்களையும் ஒழித்துச் சிவபூசை செய்து பிறவாநிலையை அடைந்தார்.

ஊழ்

38 விஞ்சுகங்கைத் தம்பநுனி மேவுபரிக் கித்தரவால்
முஞ்சினனுய்ந் தோர்முன் முருகேசா—எஞ்சலிலா
ஊழிற் பெருவலி யாவுள மற்றுென்று
சூழினுந் தான்முந் துறும்.

(இ-ள்.) முருகேசா-முருகப் பெருமானே!, விஞ்சு-மிகுதியான, கங்கை-கங்கை யாற்றிலே, தம்பம்நுனி-தூணின் முடியில், மேவு பரிக்கித்து-சென்றிருந்த பரிட்சித்து மன்னன், ஆய்ந்தோர் முன்-முனிவர்கட்கு முன்னே, முஞ்சினன்-மாண்டான்; எஞ்சலிலா - குறைதலில்லாத, ஊழில் - ஊழ்வினையைப் பார்க்கினும், பெருவலி யாவுள - மிகுந்த ஆற்றல் படைத்தது வேறே யாதிருக்கின்றது, மற்றுென்று சூழினும்-வேறொரு முயற்சியைச் செய்தாலும், தான் முந்துறும் - தானே முற்பட்டு நிற்பதாகும்.

(வி - ம்.) பரிட்சித்து மன்னனுனவன் கங்கையாற்றுத் தம்பத்திலே சென்றிருந்தும் பாம்பினுல் கடியுண்டிறந்தான்.

ஊழ்வினையைக் காட்டினும் மிகுந்த ஆற்றலுள்ளது வேறே யாதிருக்கின்றது? வேறொரு முயற்சியைச் செய்தாலும் அவ்வூழே எல்லாவற்றிற்கும் முற்பட்டு நிற்குமென்பதாம்.

பரிட்சித்து மன்னன் கதை

பரிட்சித்து என்னும் பெயரையுடைய அரசன் வேட்டையாடுவதற்குக் காட்டிற்குச் சென்றான். வேட்டையாடுகையில் ஒருமான் அம்புபட்டு ஓடிமறைந்தது. அரசன் அதனைத் தேடிக்கொண்டு சென்றான். ஓரிடத்தில் சமீக முனிவர் என்பவர் தவத்திலிருந்தார். அரசன் அவரைப் பார்த்துத் தான் எய்த மான் அப்பக்கம் வந்ததா என்று உசாவினான். முனிவர் தவத்திலிருந்தபடியால் யாதும் மறுமொழி கூறவில்லை. அவர் தன்னை இழிவுபடுத்தியதாக அரசன் எண்ணினான். செத்துக்கிடந்த பாம்பு ஒன்றை எடுத்து அம்முனிவருடைய கழுத்தில் மாலையாகப் போட்டு விட்டுச் சென்றான். அம்முனிவருடைய மகனாகிய சிரிங்கி என்பவர் அங்கு வந்தார். தந்தையின் கழுத்தைப் பார்த்து மிகுந்த சினமடைந்தார். இவ்வாறு செய்தவன் ஒரு கிழமைக்குள் தட்சகன் என்னும் பாம்பால் கடியுண்டிறக்கக் கடவன் என்று வசவுரை கூறினார். அரசன் முனிவருடைய வசவுரையை அறிந்தான். பாம்பினால் கடிபடாமலிருப்பதற்காகக் கங்கையின் நடுவில் ஒரு தூணை நாட்டி அதன்முடியில் ஒரு மண்டபத்தை அமைத்து அதில் பலமுனிவர்கள் சூழ அமர்ந்திருந்தான். எட்டாம் நாளில் சில பாம்புகள் தட்சகன் கூறியபடி தவக்கோலம் பூண்டு முனிவர்களைப் போல் அரசனிடஞ் சென்று சில கனிகளைக் கொடுத்தன. அரசன் கனிகளை எடுத்து முனிவர்களிடங் கொடுத்தான். ஒரு கனியைத் தான் தின்பதற்குக் கையிலெடுத்தான். அதில் ஒரு சிறு புழு இருந்தது. அஃது அப்பொழுதே பெரும் பாம்பாகி அரசனைக் கடித்தது. அதனால் அரசன் இறந்தான்.

உ. பொருட்பால்

இறைமாட்சி

39 உற்றபுற வும்புரப்பா னோங்குசிபி தன்னுடலம்
முற்றுமரிந் தீந்தான் முருகேசா—பற்றும்
முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

(இ - ள்.) முருகேசா-முருகப் பெருமானே!, ஓங்கு சிபி-புகழால் ஓங்கி விளங்கிய சிபிச் சக்கரவர்த்தி, உற்ற - தன்பால் அடைக்கலம் புகுந்த, புறவும் புரப்பான் - புறுவையும் காப்பாற்றும் பொருட்டு, தன் உடலம் முற்றும் அரிந்து ஈந்தான் - தன்னுடைய உடல் முழுவதையும் அரிந்து கொடுத்தான்; பற்றும் - பொருந்தும், முறை செய்து காப்பாற்றும் மன்னவன் - செங்கோல் முறையைச் செய்து உயிர்த் தொகைகளைக் காப்பாற்றுகின்ற அரசன், மக்கட்கு - அவன் கீழ் வாழும் மக்களுக்கு, இறை என்று வைக்கப்படும் - அரசன் என்று சொல்லப் பெறுவான்.

(வி - ம்.) சிபிச் சக்கரவர்த்தி தன்னிடம் அடைக்கலம் புகுந்த புறுவைக் காப்பாற்ற வேண்டித் தன்னுடைய உடல் முழுவதையும் அரிந்து கொடுத்தான்; அரசாட்சியைச் செய்ய வேண்டிய முறைப்படி செய்து தன் குடிமக்களைப் பாதுகாக்கும் அரசனே அம்மக்கட்கு அரசன் என்று சொல்லப்படுவான் என்பதாம்.

சிபிச்சக்கரவர்த்தி கதை

முன்னாளில் சிபிச்சக்கரவர்த்தி என்னும் அரசன் அரசாட்சி செய்து கொண்டிருந்தான். அவன் சீகாழியை அடைந்து ஒரு வேள்வி செய்யத் தொடங்கினான். அப்போது சிவபிரான் இந்திரனையுந் தீக்கடவுளையும் அழைத்து, "நீங்களிருவருஞ்

சிபியினது நெறிமுறையை உலகில் வெளிப்படுத்துவீர்களாக'' என்று கட்டளையிட்டருளினர். தீக்கடவுள் புருவடிவங் கொண்டார். இந்திரன் கழுகுவடிவங்கொண்டு அப்புருவைத் துரத்தினன். புரு சிபிச்சக்கரவர்த்தியிடம் போய் அடைக்கலம் புகுந்தது. கழுகு சென்று, ''இப்புரு என்னுடைய உணவாகும். என்னுடைய உணவை விட்டுவிடுக'' என்று கூறிற்று. அரசன், ''நான் இப்புருவினை விடேன். இதற்குப் பதிலாக என்னுடைய உடல் தசையையே தருவேன். அதனைப் பெற்றுக்கொள்ளுவா யாக'' என்று கூறினன். அக்கழுகின் விருப்பப்படியே அரசன் வேள்விச் சாலையில் ஒரு நிறைகோலை நாட்டிப் புருவை ஒரு தட்டிலே விட்டு மற்றொரு தட்டிலே தன்னுடைய உடல்தசையை அரிந்து வைத்தான். கழுத்தளவு அரிந்தும் புருவின் நிறைக்கு நேராக வரவில்லை. தானே அத்தட்டிலேறித் தட்டைச் சமமாக்கினன். அதனைக் கண்ட இந்திரன் அஞ்சித் தன்னுருவத்தோடு தோன்றினன். ஆராய்ந்து பார்க்க வந்தமையைக் கூறினன். அரசனுடைய அறுபட்ட உடல் வளர்ந்து நிரம்பியது. சிவபிரான் காட்சி கொடுத்து அரசனைத் தம்முடைய திருவடி நீழலிலே சேர்த்தருளினர்.

கல்வி

40 மன்னியின்பந் துய்த்தசங்க வாணர்நக்கீ ரர்பிரிவை
முன்னி முன்னிச் சோர்ந்தார் முருகேசா—நன்னர்
உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே !, மன்னி- ஒன்றாகப் பொருந்தி, இன்பம் துய்த்த சங்கவாணர் - இன்பத்தோடு கல்வியில் அளவளாவியிருந்த சங்கப் புலவர்கள், நக்கீரர் பிரிவை முன்னி முன்னி - நக்கீரர் தங்களைவிட்டுப் பிரிந்ததை எண்ணி எண்ணி, சோர்ந்தார் - தளர்ச்சியடைந்தார்கள்; நன்னர் - நன்றாக, உவப்ப - மகிழு மாறு, தலைக்கூடி - கூடிப்பழகி, உள்ளப் பிரிதல் - இனிமேல்

இவரை எப்பொழுது காணப் பெறுவேம் என்று எண்ணு மாறு பிரிதல், அனைத்தே புலவர் தொழில் - அந்தத் தன்மையினதேயாம் புலவர் தொழில்.

(வி - ம்.) ஒன்றுகச் சேர்ந்து அளவளாவியிருந்த சங்கப் புலவர்கள் நக்கீரருடைய பிரிவை எண்ணி எண்ணிச் சோர் வடைந்தார்கள்; மகிழுமாறு ஒன்றுகப் பொருந்தியிருந்து பிரியுங் காலத்திலே இனிமேல் நாம் எப்பொழுது இவரைக் காணப்பெறு வேம் என்று எண்ணுமாறு பிரியும் அத் தன்மையினையுடைய தாம் புலவர்களுடைய நட்புத்தொழில் என்பதாம்.

நக்கீரர் கதை

நக்கீரர் சங்கப் புலவர்கள் நாற்பத்தொன்பதின்மரில் ஒருவரா யமர்ந்து அப்புலவர்கட் கெல்லாம் தலைமைத் தன்மையைப் பெற்று இனிது அளவளாவிக் கலந்திருந்தார். பிறகு கால வேறுபாட்டினுலே சிவபெருமானுடைய பாடலுக்குக் குற்றங் கூறி அப்பரமனேடு சொற்போரிட்டார். இதனுல் வெகுண்ட பரமன் நக்கீரரைப் பொற்ருமரையில் வீழ்த்திய தோடு பொதிய வரைக்குச் சென்று அகத்தியரிடம் இலக்கணங் கற்குமாறும் தம்மை யெதிர்த்த குற்றம் நீங்குமாறு திருக்கைலையைப் போற்றி வழிபடுமாறுங் கட்டளையிட் டருளினுர். இதனுல் சங்கப் புலவர்கள் நக்கீரரை விட்டுப் பிரியுமாறு நேர்ந்தது. அப் பொழுது அவர்கள் நாம் இனிமேல் எப்பொழுது இவரைக் கண்டு உரை யாடி மகிழப் போகின்ருேமோ என்று உள்ளம் வாடி வருந்திஞர்கள்.

கல்லாமை

41 ஈண்டிவச வேசர்முன்னேர்க் கீடழிந்தார் வீண்வாத
மூண்ட மறையோர் முருகேசா—வேண்டுவன
கல்லா வோருவன் தகைமை தலைப்பெய்து
சோல்லாடச் சோர்வு படும்.

(இ - ள்.) முருகேசா-முருகப்பெருமானே!, வீண்வாத மூண்ட மறையோர் - வீணன சொற்போரைச் செய்யத்

தொடங்கிய அந்தணர்கள், ஈண்டி - நெருங்கி, வசவேசர் முன்னோர்க்கு ஈடு அழிந்தார் - வசவேசர் முதலியோரிடந் தோற்றுப்போனார்கள்; வேண்டுவன - கற்க வேண்டியவை களை யெல்லாம், கல்லா ஒருவன் - கற்றுணராத ஒருவன், தகைமை-மதிப்பானது, தலைப்பெய்து-கற்றோரை யடைந்து, சொல்லாட - பேசத் தொடங்கினால், சோர்வுபடும்-பெருமை கெட்டொழிவதாகும்.

(வி - ம்.) வசவேசர் முதலியோரிடத்திலே வினாகச் சொற் போர் செய்யத் தொடங்கிய அந்தணர்கள் தோற்றுப் போனார் கள்; கற்க வேண்டிய நூல்களை யெல்லாம் நன்கு கல்லாத ஒருவ னுடைய மதிப்பானது கற்றவர்களிடத்திலே உரையாடத் தொடங்கினால் கெட்டொழிந்து போகு மென்பதாம்.

மறையோர்கள் கதை

கலியாணபுரி என்னும் ஊரிலே வசவதேவர், சென்ன வசவ தேவர், மடிவாலமாச்சையர், சிவநாகமையர் முதலிய பல பேர் வேதாகம ஆராய்ச்சியிலே வல்லவர்களாக விளங்கியிருந்தார்கள். இவர்களிடத்திலே பொறாமைகொண்ட சில அந்தணர்கள் விச்சல ராசனுடைய அவையில் அவ்வடியவர்களுடைய கொள்கையை மறுத்துத் தமது வைதிகக் கொள்கையை நிலைநிறுத்த எண்ணி வினாகச் சொற்போரிட்டார்கள். அவர்களுடைய கேள்விக்கு இவ்வந்தணர்களால் மறுமொழி கூற முடியவில்லை. அதனால் தோல்வியடைந்து பெருமை யிழந்தார்கள்.

கேள்வி

42 அத்தனையீ மப்பலியா லர்ச்சித்து வேந்துரையின்
முத்திபெற்றான் சண்டன் முருகேசா—நத்தி
எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்.

(இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே! சண்டன்- சண்டன் என்பவன், அத்தனை - சிவபெருமானை, ஈமப்

பலியால் அர்ச்சித்து - இடுகாட்டுச் சாம்பலாலே வழிபட்டு, வேந்துரையின் - அரசன் உரைப்படியே, முத்தி பெற்றான் - வீடுபேற்றை யடைந்தான். நத்தி - விரும்பி, எனைத்தானும் - எவ்வளவு சிறியதாயினும், நல்லவை கேட்க - நல்லவைகளைக் கேட்டறிதல் வேண்டும், அனைத்தானும் - அந்த அளவிற்கு, ஆன்றபெருமை தரும் - நிறைந்த பெருமையைக் கொடுக்கும்.

(வி - ம்.) சண்டன் என்பவன் அரசன் கூறியபடியே சிவ பிரானைச் சுடலைச் சாம்பரால் வழிபட்டு வீடுபேற்றை யடைந்தான்; எவ்வளவு சிறிதாயினும் நல்லவைகளைக் கேட்டல் வேண்டும்; அவ்வாறு கேட்பின் அதுகேட்ட அளவுக்காவது பெருமையைக் கொடுக்கும் என்பதாம்.

சண்டன் கதை

சண்டன் என்னும் ஒரு வேடன் சிங்ககேது என்னும் அரசனோடு வேட்டைக்குச் சென்றான். ஒரு கோயிலில் விழுந்து கிடந்த சிவலிங்கவுரு ஒன்றைக் கண்டான். அதனை விருப்பத்தோடு எடுத்துக் கொண்டு போய் அரசன் முன்பு வைத்தான். "இதனை வழிபடுவதற்குரிய முறைமைகளை அடியேனுக்குரைத்தருள வேண்டும்" என்று அரசனைப் பார்த்து வேண்டிக் கொண்டான். அரசன், "ஓ சண்டனே! நீ பூசைக்குரிய பொருள்களோடு சுடலைச் சாம்பலையும் கொண்டு இச் சிவலிங்கத்தை வழிபடுவாயாக" என்று வேடிக்கையாகக் கூறினான். வேடன் அரசன் கூறியதை உண்மையென்று நம்பினான். நாளுஞ் சுடலைச் சாம்பலைக் கொண்டு வழிபட்டுக் கொண்டிருந்தான். ஒரு நாள் சுடலைச் சாம்பல் அகப்படவில்லை. அதனால் மனந் தளர்ந்தான். இறத்தற்கு உடன்பட்ட மனைவியைக் கொன்று நீறாக்கி அச் சாம்பரைக் கொண்டு பூசையை முடித்தான். பூசை முடிவில் அவள் உயிர்பெற்று எந்நாளும் போலவே வந்து பூசைப் பொருள்களை யேற்று நின்றாள். அவ்வாறு நின்ற மனைவியைக் கண்டு சண்டன் மகிழ்ச்சியடைந்தான். இறுதியில் அவளோடு வீடுபேற்றைப் பெற்றான்.

அறிவுடைமை

43 தீதையுன்னி நீங்கினன்சு சீலன் புயபலன்பின்
முதனுர்கோட் பட்டான் முருகேசா—ஓதில்
அறிவுடையா ராவ தறிவா ரறிவிலார்
அஃதறி கல்லா தவர்.

(இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே!, சுசிலன் தீதை உன்னி நீங்கினன் - சுசிலன் என்பவன் தீமை என்று நினைத்து நீங்கிவிட்டான், புயபலன் - புயபலன் என்பவன், மூது அனுர் கோட்பட்டான் - மிகுந்த துன்பத்தினுலே பிடிக்கப்பட்டான், ஓதில் - சொன்னுல், அறிவுடையாராவது- அறிவுடையவர்கள் ஆவது, அறிவார் - பின்னுலே நிகழப் போவதனை முன்னே அறிய வல்லவராவார், அறிவிலார் - அறிவற்றவர்கள், அஃது அறி கல்லாதவர் - அதனை அறிய முடியாதவராவர்.

(வி - ர்.) சுசிலன் என்பவன் பிறகு தீமை விளையுமென்று நீங்கிவிட்டான், புயபலனே பிறகு மிகுந்த துன்பத்துக் குள்ளானுன், பின்னுலே நிழகப் போவதனை முன்னுலே அறிந்து கொள்பவர்தாம் அறிவுடையவர், அறிவற்றவர்களோ பின்னுலே நிகழப் போவதனை முன்னே அறிந்து கொள்ளமாட்டார்கள் என்பதாம்.

புயபலன் கதை

வங்க நாட்டிலே முன்னுளில் புயபலன் என்னும் பெயருடைய அரசன் அரசாட்சி செய்து கொண்டிருந்தான். அவன் ஒரு நன்னுளிலே பலருக்குந் தானமளிக்க எண்ணினுன். விதர்ப்ப நாட்டிலேயிருந்த சுசிலன் என்னும் அந்தணன் இதனை யுணர்ந்து தானம் பெறுதற்குச் சென்முன். சுசிலன் மிகுந்த பெருமை யுடையவன் என்பதைப் பிறரால் உணர்ந்த அரசன் அவனை மிகுதியாகப் பாராட்டித் தானமளிக்கத் தொடங்கினுன். சுசிலன் தானம் பெறச் சென்றபோது புயபலனுடைய நெற்றியைப்

பார்த்தான். திருநீறில்லாதிருத்தலைப் பார்த்து வெறுத்து, "நீர் திருநீறணிந்துகொண்டு தானமளிப்பீராக. இன்றேல் இதனை நான் ஏற்றுக்கொள்ள மாட்டேன்" என்று கூறினான். இதனைக் கேட்ட புயபலன், "திருநீறணிவதால் யாது பயன்? அதனை நான் அணியமாட்டேன். விருப்பமானால் வாங்கிக் கொண்டு போம். இன்றேல் சும்மா போம்" என்று கூறிவிட்டான். சுசீலன் பின்னல் நேரப்போவதை யுணர்ந்து, "நீ சிவபிரானுக்குக் குற்றஞ் செய்தவனாகையால் நான் இத்தானத்தை வாங்க மாட்டேன்" என்று கூறிவிட்டு அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டான். அப்பொழுது அரசனுடைய மனைவி மூக்கிலே துரும்பைவிட்டுத் தும்மித் தடுத்தாள். அவ்வாறு தடுத்துஞ் சுசீலன் தானத்தை வாங்காமலே சென்றுவிட்டான். அரசன் திருநீற்றை யிகழ்ந்த குற்றத்தினால் பெரும் பிணியுடையவனானான். அவனுடைய நாட்டைப் பகைவர்கள் கவர்ந்துகொண்டார்கள். பிறகு அரசன் தன்னுடைய மனைவியோடு காட்டை யடைந்து தங்கியிருந்தான். அப்பொழுது ஒரு வேடன் அரசனுடைய மனைவியைக் கவர்ந்து சென்றான். அவனை ஒரு புலி தாக்கிக் கொன்றது. அவள் உயிர் பிழைத்து விதர்ப்ப நாட்டை யடைந்தாள். ஐயமேற்றுத் திரிந்தாள். ஒரு வீட்டிற் களவு செய்தபொழுது காவலரால் மூக்கும் தனமும் அறுபட்டு வருந்தி யலைந்தாள்.

அரசனும் அந்நாட்டை யடைந்து ஐயமேற்று வருந்தித் திரிந்தான். ஒருநாள் களவு செய்ய முயன்றபொழுது காலுங் கையும் வெட்டப்பட்டு முடவனாகி வருந்தி யுழன்றான். அப்பொழுது முன்பு தன்னில்லத்தில் தானமேற்க வந்த சுசீலனுடைய இல்லத்தை யடைந்து உணவு வேண்டினான். சுசீலன் அரசனைப் பார்த்து ஐயுற்று வினவினான். அரசன் யாதும் மறுமொழி கூறாமலிருக்கவே, "நீ முன்பு திருநீற்றை யிகழ்ந்த புயபலனல்லனோ?" என்று உசாவினான். அரசனும் சுசீலனை உணர்ந்துகொண்டான். தான் செய்த குற்றத்தைப் பொறுத்துத் திருநீறு வழங்கித் தன்னை யாட்கொண்டருள வேண்டுமென்று வேண்டிக் கொண்டான். சுசீலன் கொடுத்த திருநீற்றை யணிந்து சிறிது உட்கொண்டவுடன் வெட்டுண்ட கையுங்காலும்

வளர்ந்தன. அச்சமயத்தில் அவ்வழியே வந்த அரசனுடைய மனைவியும் அரசனைக் கண்டு வணங்கினாள். பிறகு அவளும் சுசீலனிடம் திருநீறு பெற்றணிந்து குறைக்கப்பட்ட உறுப்புக்கள் வளரப்பெற்றாள். அந்நாட்டரசன் இவர்களுடைய செய்தியை யறிந்து சுசீலரிடம் வந்து வணங்கினான். அங்கிருக்கும் அரசனும் அரசியும் தன்னுடைய மாமனும் மாமியும் என்றறிந்து அவர்களைத் தன்னுடைய அரண்மனைக்கு அழைத்துச் சென்றான். சில நாள் சென்ற பிறகு புயபலன் படைகளோடு சென்று தன்னுடைய நாட்டை யடைந்து அதனைக் கைப்பற்றி அரசாட்சி செய்தான்.

குற்றங்கடிதல்

44 தெய்வநிதி யாதிகவர் தீமையின்ம னோசவன்கான்
மோய்வளந்தோற் றேய்ந்தான் முருகேசா—வுய்யச்
செயற்பால செய்யா திவறியான் செல்வ
முயற்பால தன்றிக் கெடும்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, மனோசவன் - மனோசவன் என்பவன், தெய்வநிதி ஆதி கவர் தீமையில் - தெய்வத்திற்குரிய பொருள் முதலியவைகளைக் கவர்ந்த தீமையினால், மோய்வளந் தோற்று - மிகுந்த தன்னுடைய செல்வ நலத்தை யிழந்து, கான் தோய்ந்தான் - காட்டிற்குச் சென்றான், உய்ய - பிழைக்குமாறு, செயல்பால செய்யாது - செய்ய வேண்டிய அறங்களைச் செய்யாமல், இவறியான் செல்வம் - இவறன்மையை மேற்கொண் டிருப்பவனுடைய செல்வமானது, உயற்பாலது அன்றிக் கெடும் - உய்யுந் தன்மையில்லாது அழிந்து போகும்.

(வி - ம்.) தெய்வத்திற் குரிய பொருளைக் கவர்ந்த மனோசவன் என்பவன் தன்னுடைய பெருஞ் செல்வத்தை யிழந்து விட்டுக் காட்டுக்குப் போய்ச் சேர்ந்தான்; செய்ய வேண்டிய அறங்களைச் செய்யாமல் பொருட்பற்றுக் கொண்டு அதனைப்

பற்றி யிருப்பவனுடைய செல்வமானது உய்யுந்தன்மை யில்லாமல் அழிந்து போகும் என்பதாம்.

மனேசவன் கதை

முன்னுளில் மனேசவன் என்னும் பெயரையுடைய அரசன் ஒருவன் இருந்தான். அவன் சிவபிரான் முதலிய கடவுளரைப் போற்றி வழிபட்டுப் பகைவரை வென்று செங்கோல் முறைப்படி அரசாட்சியைச் செய்து கொண்டிருந்தான். செல்வக்களிப்பினுல் அவ்வரசனுக்கு ஆணவம் உண்டாயிற்று. திருக்கோயில்கட்குரிய பொருள் முதலியவைகளைக் கவர்ந்தான். அந்தணர் முதலியோருடைய நிலங்களுக்கும் இறைப்பொருள் வாங்கினுன். இத்தீவினையினுல் ஊணநாட்டரசனுகிய கோலபன் என்பவன் மனேசவனை எதிர்த்துப் போரிட்டு நாடு நகரங்களைக் கவர்ந்து கொண்டான். மனேசவன் மனைவி மக்களோடு காட்டை யடைந்து திரிந்தான். ஒருநாள் சந்திரகாந்தன் என்னும் மகன் பசியினுல் தளர்ந்து உணவு வேண்டுமென்றுன். அரசன் தன் னுடைய மனைவியிடம் தான் முன்னே செய்த கொடுமைகளை யெல்லாம் கூறி மூர்ச்சையடைந்தான். பிறகு பழைய நல் வினையினுல் பராசரமுனிவருடைய அருளைப் பெற்றுப் பழைய நிலைமையை அடைந்தான்.

பெரியாரைத் துணைக்கோடல்

45 நாரதனுற் சம்வரத நற்றவற்சேர்ந் தேமருத்து
மூரியின்மேம் பட்டான் முருகேசா—பாரதனில்
உற்றநோய் நீக்கி உறுஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கோளல்.

(இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே!, மருத்து- மருத்து என்னுமரசன், நாரதனுல் - நாரதமுனிவர் சொற்படி, சம்வரத நற்றவன் சேர்ந்து - சம்வரதன் என்னும் பெயரை யுடைய முனிவரையடைந்து, மூரியின்மேம்பட்டான்-பெருமை யிற் சிறந்து விளங்கினுன்; பாரதனில் - இவ்வுலகத்தில், உற்ற

நோய் நீக்கி - அடைந்த துன்பத்தைப் போக்கி, உறுமை முன் காக்கும் - துன்பம் வராதபடி முன்னதாகவே காக்க வல்ல, பெற்றியார் பேணிக் கொளல் - தன்மையுடையவர் களைப் போற்றி நட்புக் கொள்ளுதல் வேண்டும்.

(வி - ம்.) மருத்து என்னும் அரசன் நாரதமுனிவருடைய உரையினால் சம்வரதரென்னும் முனிவரையடைந்து பெருமையிற் சிறந்து விளங்கினான்; உண்டான துன்பத்தைப் போக்கி மேலும் துன்பம் வராமற் காக்கவல்ல தன்மையுடையவர்களையே நட்புக் கொள்ளுதல் வேண்டும் என்பதாம்.

மருத்து என்னும் அரசன் கதை

முன்னாளில் மருத்து என்னும் பெயருடைய மன்னவன் ஒருவன் இருந்தான். அவனுடைய தந்தை ஆங்கிரசர் என்னும் முனிவரைக் கொண்டு வேள்வியொன்று செய்து கொண்டிருந்தான். மருத்து தான் ஒரு வேள்வி செய்ய எண்ணினான். அவ்வேள்வியை நடத்துமாறு வியாழபகவானை வேண்டிக் கொண்டான். தேவேந்திரனுடைய உடன்பாடில்லாமையினால் அவர், "யான் தேவகுருவாக இருக்கிறபடியால் என்னால் நடத்துதல் இயலாது" என்று கூறினார். அரசன் யாது செய்வதென்று கவலையுற்றிருந்தான். இச்சமயத்தில் நாரதர் அரசனிடம் வந்தார். அரசனுடைய கருத்தை யறிந்தார். அவர் வியாழபகவானோடு பகை கொண்டிருந்தாராதலின் அரசனை நோக்கி, "சம்வரதமுனிவர் என்பவர் உன்மத்தர் போல நடித்துக்கொண்டு ஆடையற்றவராய்க் காசியிலே யிருக்கின்றார். அவரைக் கொண்டு வேள்வி நடத்துக" என்று கூறியதோடு அவரைப் பார்க்கத்தக்க வழியையுங் கூறிவிட்டுச் சென்றார். அரசன் சம்வரத முனிவரை யடுத்த தன்னுடைய எண்ணத்தைக் கூறினான். அவர் உள்ளமிரங்கினார். அரசனைப் பார்த்து, "வியாழ பகவானுக்கு என்பாலுள்ள பகைமையால் இந்திரன் முதலியோர் உன்னைக் கலைப்பர். அதனால் மாறுபடா திருப்பை யாகில் மிகுந்த சிறப்படைவாய்" என்று வற்புறுத்திக் கூறினார். அரசன் அம்முனிவரை யழைத்துக் கொண்டு போய் முஞ்ச

வந்தமலையை அடைந்து சிவபிரானைப் பணிந்து அக்கடவுளுடைய அருளால் அளவற்ற பொருட் குவியல்களை ஒட்டகம் யானை முதலியவைகளில் ஏற்றிவந்து மேருமலையைப் போலக் குவித்துக் கொண்டு வேள்வி செய்யத் தொடங்கினான். வேள்வி நடை பெற்றுக் கொண்டிருந்தது. இதனை யறிந்து வியாழ பகவான் கவலை கொண்டார். இந்திரன் வியாழ பகவானுடைய கவலையை அறிந்தான். வியாழபகவானையே வேள்வியாசிரியராகக் கொண்டு வேள்வியைச் செய்யுமாறு தீக்கடவுளைக் கொண்டு அரசனுக்குத் தெரியப்படுத்தினான். அரசன் இதற்கு உடன்பட வில்லை. இந்திரன் பகைகொண்டு வச்சிரப் படையை எறிந்தான். அரசன் சம்வரத முனிவர்பால் அடைக்கலம் புகுந்தான். அவர் ஒரு மறையினால் வச்சிரப் படையைத் தடுத்தது மல்லாமல், அரசன் விரும்பியவாறே மற்றொரு மந்திரத்தினால் தேவர் பகையையும் போக்கினார். தேவர்கள் அவியருந்துமாறு வேள்வியை முடித்தார். அரசன் வேண்டிய மட்டும் அந்தணர் முதலியோர்க்குப் பலவகையான தானங்களைச் செய்தான். எவ்வளவோ தானங்களைச் செய்தும் செல்வம் குறைவு படாமல் மிஞ்சிக் கிடந்தது. அம்முனிவரால் எல்லாப் பெருமைகளையும் அடைந்து இன்புற்றான்.

சிற்றினஞ் சேராமை

46 வாக்கரசர் சாவகரான் மாழ்கித் தமக்கையான்
மோக்கநிலை பெற்றார் முருகேசா—பார்க்குங்கால்
நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில்.

(இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே!, வாக்கரசர் - திருநாவுக்கரசர், சாவகரால் மாழ்கி - சமணர்களால் வருத்தமடைந்து, தமக்கையால் - தம்முடைய உடன் பிறந்தாளாகிய அக்காளால், மோக்கநிலை பெற்றார் - பிறகு வீடுபேற்று நிலையை அடைந்தார், பார்க்குங்கால் - நோக்குமிடத்தில், நல்லினத்தின் - நல்ல இனத்தைவிட, ஊங்கும்

துணையில்லை - சிறந்ததாகிய துணையும் உலகத்தில் இல்லை, தீயினத்தின் - தீய இனத்தை விட, அல்லல் படுப்பதூஉம் இல் - துன்பப்படுத்தும் பகையும் இல்லை.

(வி - ம்.) திருநாவுக்கரசர் சமணரால் வருத்தமடைந்து பிறகு தம்முடைய தமக்கையாரால் வீடுபேற்று நிலையைப் பெற்ருர். இவ்வுலகத்திலே நல்ல இனத்தார்களுடைய நட்பை விடச் சிறந்த துணையும் இல்லை, தீய இனத்தார்களுடைய கூட்டுறவைப் பார்க்கினும் துன்பப் படுத்துவதும் இல்லை என்பதாம்.

திருநாவுக்கரசர் கதை

திருநாவுக்கரசர் முதலில் சமணர்களோடு நட்புக்கொண்டு அவர்களுடைய சமய நூல்களை ஆராய்ந்து கொண்டும் அச்சமயத்தாராகியும் விளங்கினர். அதனாலே அவருக்குப் பல வகையான தொல்லைகள் உண்டாயின. அச்சமணர்கள், நஞ் சருத்தியும் நீற்றறையிலிட்டும் யானைக்காலில் இடறியுங் கடலில் தள்ளியும் திருநாவுக்கரசரைக் கொலை புரிய முயன்ருர்கள். பிறகு நாவுக்கரசர் தம்முடைய தமக்கையாரிடஞ் சேர்ந்த பிறகு சிவபெருமானுடைய அருளைப் பெற்று வீடுபேறடைவதற்குத் தக்கவரானர்.

தெரிந்துசெயல்வகை

47 பாண்டவர்சேல் வங்கவர்வான் பண்டுதுரி
யோதனன்ருன்
முண்டிழிந்தான் மாய்ந்தும் முருகேசா—
வேண்டுங்கால்
எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மோடு
கொள்ளாத கொள்ளா துலகு.

(இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே!, பண்டு துரியோதனன் - முன்னுளிலே துரியோதனன், பாண்டவர்

செல்வங் கவர்வான் – பாண்டவர்களுடைய செல்வத்தைக் கைப்பற்றிக் கொள்ளும் பொருட்டு, மூண்டு இழிந்தான் - மிகுந்த இழிசெயலில் இறங்கினன் (அதனால்), மாய்ந்தும் - இறந்தும் போனன்; வேண்டுங்கால் - விரும்புமிடத்தில், உலகு - உலகத்தார்கள், எள்ளாத - இகழத்தகாத செயல்களை, எண்ணிச் செயல் வேண்டும் - ஆராய்ந்து செய்தல் வேண்டும், தம்மொடு கொள்ளாத கொள்ளாது - தமக்குப் பொருந்தாதவைகளை உலகினர் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

(வி - ம்.) முன்னாளில் துரியோதனன் பாண்டவர்களுடைய செல்வத்தைக் கவர்ந்து கொள்ளும் பொருட்டு மிகுந்த முயற்சி செய்து அதனால் இறந்தொழிந்தான்; உலகத்தார்கள் இகழாத காரியங்களை ஆராய்ந்து பார்த்துச் செய்தல் வேண்டும். உலகத்தார்கள் தங்களுக்குப் பிடிக்காதவைகளை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதாம்.

துரியோதனன் கதை

துரியோதனனுக்குச் செல்வம் மிகுதியாக இருந்தது. ஆயினும் அவன் அதனோடு அமைதி பெருமல் சகுனி முதலியோருடைய பேச்சைக் கேட்டுப் பாண்டவர்களுடைய செல்வத்தையுங் கவர்ந்து கொள்ள எண்ணி அறத்தொடு பொருந்தாத பல முயற்சிகளைச் செய்து பிறகு பாண்டவர்களோடு போரிலே ஈடுபட்டுத் தன்னுடைய சுற்றத்தார்களோடு மாண்டொழிந்தான். துரியோதனனுடைய செயல் நேர்மையற்றதாக விருந்தபடியால் உலகத்தார் இன்றுவரையில் அவனைப் பொல்லாதவனென்று இகழலானர்கள்.

வலியறிதல்

48. வாரிசுதை வவ்வுமுவ ணத்தையெதிர் வானவர்கள்
மூரியிழந் தெய்த்தார் முருகேசா—தேரின்
உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, வாரிசுதை வவ்வும் உவணத்தை - கடலில் தோன்றும் அமுதத்தைக் கவர்ந்த கருடனை, எதிர் வானவர்கள் - எதிர்த்த தேவர்கள், மூரி இழந்து - வலிமை கெட்டு, எய்த்தார் - இளைத்தார்கள், தேரின் - ஆராய்ந்து பார்க்குமிடத்து, உடை தம் வலி அறியார் - தமக்குள்ள ஆற்றலை அறிந்து கொள்ளாமல், ஊக்கத்தின் ஊக்கி - ஊக்கத்தால் முயற்சிசெய்து, இடைக்கண் முரிந்தார் பலர் - அதனை முடிக்க முடியாமல் இடையிலே அழிந்தவர்கள் பலர்.

(வி - ர்.) கடலில் தோன்றிய அமுதத்தைக் கவர்ந்த கருடனை எதிர்த்த தேவர்கள் தங்கள் ஆற்றல் கெட்டொழிந்தார்கள். தம்முடைய ஆற்றலின் அளவை அறியாமல் காரியத்தை முடிக்க முயற்சி செய்து இடையிலே கெட்டொழிந்தவர்கள் பலர் என்பதாம்.

தேவர்கள் கதை

காசிபமுனிவருடைய மனைவியருள்ளே கத்துரு என்பவள் ஒருநாள் இந்திரனுடைய உச்சைச்சிரவம் என்னுங் குதிரையைப் பார்த்தவுடன் விநதை என்பவளை நோக்கி, "இதன் வால் வெண்மையோ கருமையோ?" என்று கேட்டாள். அவள் வெண்மை யென்று சொன்னாள்; இவள் கருமை யென்று சொன்னாள். அப்பொழுது தோற்றவள் மற்றவளைச் சுமப்பதாக இருவரும் முடிவு செய்து கொண்டனர். கத்துரு தன்னுடைய மகன் கார்க்கோடகனால் அதன் வாலைக் கருமையாக்குவித்து விநதைக்குக் காட்டினாள். தன்னைச் சுமக்கும்படி அவளை அடிமையாக்கிக்கொண்டாள். பெருவிரலளவுள்ளவர்களாகிய வாலகில்லியர்கள் காசிபமுனிவர் செய்யும் வேள்விக்குரிய பொருளைக் கொண்டு வரும்பொழுது, பசுவின் குளம்பழுந்திய குழியிலுள்ள நீரில் உடம்பு முழுவதும் அமிழ்ந்தக்கண்டு இந்திரன் நகைத்தான். முனிவர்கள் சினந்து இந்த வேள்வியிலே இந்திரனுக்குப் பகைவனாக ஒருவன் தோன்ற வேண்டுமென்று அவி சொரிந்தனர்.

அதனால் கருடன் பிறந்தான். அவ்வாறுதித்த கருடன் தன் தாயாகிய விநதையைச் சிறையினின்றும் விடுவித்தற்குப் பாம்புகள் கேட்டபடியே விண்ணுலகடைந்து காவலைக் கெடுத்து அமுதத்தைக் கவர்ந்து மீளுங்கால், இந்திரன் முதலியோர் கருடனுடைய பகையை வியாழ பகவானு லறிந்திருந்தும் வீணாக எதிர்த்துப் போரிட்டுத் தம்முடைய ஆற்றலிழந்து இளைத்தனர்.

காலமறிதல்

49. சிந்துபதி யைத்தந்தை யோடிறுத்தான் செவ்வியுற
முந்திவிச யன்றான் முருகேசா—நந்தலின்றி
எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயல்.

(இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே!, முந்திவிசயன் - முன்னாளில் அருச்சுனன், செவ்வியுற - சமயம் நன்றாகப்பொருந்த, சிந்துபதியை தந்தையோடு இறுத்தான் - சயத்திரதனை அவனுடைய தந்தையோடு கொன்றொழித்தான், நந்தல் இன்றி - கெடுதல் இல்லாமல், எய்தற்கரியது இயைந்தக்கால் - கிடைத்தற்கரிய காலம் வந்து வாய்க்குமானால், அந்நிலையே-அதனைப் பயன் படுத்திக் கொண்டு அப்போதே, செய்தற்கரிய செயல் - செய்தற்கு அருமையான காரியங்களைச் செய்து முடித்தல் வேண்டும்.

(வி-ம்.) அருச்சுனன் காலம் நன்கு அமைந்த பொழுது சயத்திரதனையும் அவனுடைய தந்தையையுங் கொன்றான். கிடைத்தற்கரிய காலம் வாய்க்குமானால் அப்பொழுதே செய்தற்கரிய காரியங்களைச் செய்து முடிக்க வேண்டும் என்பதாம்.

சிந்துபதியையும் அவன் தந்தையையுங் கொன்ற கதை

அருச்சுனன் தன் மகன் அபிமன்னுவைக் கொன்ற சயத்திரதனை மறுநாள் மாலைக்குள் கொன்று முடித்துவிடுவதாகச் சூளுரை புகன்றான். மறுநாள் சயத்திரதனைப் பகைவர்கள் நன்கு

காப்பாற்றியபடியால் அவனை எளிதாகக் கொல்ல முடிய வில்லை. கொல்வதற்கு அருச்சுனன் சமயத்தை எதிர் நோக்கி யிருந்தான். கண்ணனுடைய மாயையால் அருச்சுனன் தீக்குளிப் பதற்கு ஏற்பாடு செய்தான். அதனைப் பார்க்கச் சயத்திரதனும் வந்தான். கண்ணன் கதிரவனைக் காட்டிச் சயத்திரதனை உடனே கொல்வாயாக என்று கூறினர். அப்பொழுதே அருச் சுனன் சயத்திரதனைக் கொன்று அவன் தந்தையையும் வீழ்த்தித் தன்னுடைய பகையை முடித்தான். அச்சமயத்தை அருச்சுனன் நழுவவிட்டிருப்பின் பிறகு உயிரிழக்குமாறு நேர்ந்திருக்கும். ஆகவே எதனையுஞ் சரியான காலம் வாய்த்த பொழுதே விரைந்து செய்து முடித்தல் வேண்டும்.

இடனறிதல்

50. சென்னியனீ கத்தைமோ திச்சிதைத்த தோர்கோழி
முன்னுறையூர்க் கானின் முருகேசா—மன்னுலகில்
அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின்.

(இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே! முன் - முன்னாளிலே, உறையூர் கானில் - உறையூர்க் காட்டிலே, ஓர் கோழி - ஒரு கோழியானது, சென்னி - சோழனது அனிகத்தை - படையை, மோதி சிதைத்தது - அடித்துக் கெடுத்தது; மன் உலகில் - நிலைபெற்ற உலகத்தில், எஞ்சாமை எண்ணி - குறைவில்லாமல் எண்ணிப் பார்த்து, இடத்தால் செயின் - இடமறிந்து செய்தால், அஞ்சாமை அல்லால் துணை வேண்டா - அஞ்சாமையை அல்லாமல் வேறு துணை வேண்டியது இல்லை.

(வி - ரை.) முன்னாளிலே உறையூர்க் காட்டில் ஒரு கோழி யானது சோழனுடைய படையை மோதியடித்துக் கெடுத்தது. இவ்வுலகில் சிறிதுங் குறைவில்லாமல் நன்றாக எண்ணமிட்டு

இடத்தையும் நோக்கிக் காரியத்தைச் செய்தால் அஞ்சாமை யல்லாமல் வேறு துணை வேண்டியது இல்லை என்பதாம்.

உறையூர்க் கோழியின் கதை

முன்னாளிலே சனநாத வளவனுடைய மகனாகிய அரச சூளாமணி என்பவன் நாட்டு வளங்களைக் காணவெண்ணிப் புறப்பட்டான். பல இடங்களையும் பார்த்துக் கொண்டு திரிசிராமலைக்கு மேல்பாலுள்ள உறையூர்க் காட்டையடைந்தான். அப்போது அங்கு ஒரு கோழியானது அந்த இடத்தின் வலிமையால் சோழனுடைய பெரிய படையிற் பாய்ந்து பட்டத்து யானை முதலியவைகளையும் மோதிக் கலங்குமாறு செய்தது. அதனைக் கண்ட அரசன்; இஃது இவ்வாறு செய்வதற்கு ஏது இந்த இடத்தின் வலிமையே என்று முடிவு செய்து அங்கு ஒரு நகரத்தை உண்டாக்கி அதனைத் தலைநகராகக் கொண்டான்.

தெரிந்து தெளிதல்

51. தீதெணுமி ராக்கதனைத் தேர்மித் திரசகன்றான்
மூதரக்க னானன் முருகேசா—ஆதலினால்
தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா விடும்பை தரும்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, மித்திரசகன் - மித்திரசகன் என்னும் அரசன், தீது எணும் இராக்கதனை - தீமை செய்தற் கெண்ணிய அரக்கனை, தேர்-சமையல் வேலைக்குத் தெரிந்தெடுத்துவைத்த படியினால், முது அரக்கன் ஆனான் - பெரிய அரக்கனாகித் திரிந்தான்; பிறனை - மற்றவனை, தேரான் - ஆராயாமல், தெளிந்தான் வழி முறை - தெரிந்தெடுத்தவனுக்கும் அவனுடைய வழி முறைக்கும், தீரா இடும்பை தரும் - தீராத துன்பத்தைக் கொடுக்கும்.

(வி - ம்.) மித்திரசகன் என்னும் அரசன் தீமை செய்யக் கருதிய அரக்கனை மடைத் தொழிலாளியாக ஆராயாது

ஏற்படுத்திய குற்றத்தால் அரக்கனுகித் திரிந்தான். பிறனை ஆராய்ந்து பார்க்காமல் தெளிந்து கொண்டவனுடைய வழி முறையானது திராத துன்பத்தையடையும் என்பதாம்.

மித்திரசகன் கதை

முன்னுளில் மித்திரசகன் என்னும் பெயருடைய அரசன் ஒருவன் இருந்தான். அவன் வேட்டையாடும் பொருட்டுக் காட்டிற்குச் சென்ருன். அப்பொழுது அங்கு எதிர்ப்பட்ட ஓர் அரக்கனைக் கொன்ருன். அவனுடைய உடன் பிறந்தானுகிய அரக்கன் இவ்வரசனுக்கு வஞ்சனையினுல் கெடுதியைச் செய்ய வேண்டுமென்று எண்ணியவனுய் மடைத்தொழிலாளி போல் கோலம் பூண்டு அரசன் அரண்மனைக்குச் சென்று தான் அட்டில் தொழிலில் வல்லவன் என்றும் தனக்கு வேலை வேண்டுமென்றுங் கேட்டான். அரசன் அவனுடைய வரலாற்றை உசாவாமல் சமையல் வேலையில் நிறுத்தினுன். அவன் ஒருநாள் முனிவர் சிலருக்கு மனித ஊனைச் சமைத்துப் படைத்து முனிவர்களுக்குச் சினமுண்டாக்கி அரசனுக்கு அரக்கனுகுமாறு வசவுரை ஏற்படச் செய்து விட்டான். அரசன் அவனைத் தேராது வேலையில் விட்டமையின் இத்தகைய தொல்லைக்குள்ளாகி வருந்தினுன்.

தெரிந்து வினையாடல்

52. காண்டலின்றிச் சச்சந்தன் கட்டியங்கா ரற்கரசை
மூண்டளித்து மாண்டான் முருகேசா—வேண்டி
எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையால்
வேருகு மாந்தர் பலர்.

(இ - ள்.) முருகேசா-முருகப்பெருமானே!, சச்சந்தன் - சச்சந்தன் என்பவன், காண்டலின்றி - நன்கு ஆராய்ந்து கொள்ளாமல், கட்டியங்காரற்கு - கட்டியங்காரன் என்பவனுக்கு, அரசை - தன்னுடைய அரசாட்சியை, மூண்டு அளித்து - அதிகமான அன்பு கொண்டு கொடுத்து, மாண்டான் - இறுதியில் இறந்தொழிந்தான், வேண்டி -

விரும்பி, எனை வகையால் தேறியக் கண்ணும் - எவ்வகையால் ஆராய்ந்து தெளிந்த பிறகும், வினை வகையால் - காரியத்தை மேற் கொண்டு செய்யும்பொழுது, வேருகும் மாந்தர் பலர் - வேறுபட்டுத் திரிந்து போகும் மக்கள் பலர் உலகத்திலே யிருக்கிருர்கள்.

(வி - ம்.) சச்சந்தன் கட்டியங்காரனுடைய உண்மையில்லையை உணர்ந்துகொள்ளாமல் அரசை அவனிடம் கொடுத்து இறுதியில் மாண்டொழிந்தான்; எவ்வகையால் ஆராய்ந்து தெளிந்தாலும் பிறகு காரியத்தை மேற்கொண்டு செய்யுங்கால் மனம்வேறுபட்டுத் திரிந்து போகின்ற மனிதர்கள் பலர் இருக்கிருர்கள் என்பதாம்.

சச்சந்தன் கதை

ஏமாங்கத நாட்டிலே இராசமாபுரத்திலே சச்சந்தன் என்னும் அரசன் ஒருவன் இருந்தான். அவன் விதைய நாட்டரசனுகிய சிதத்தன் மகள் விசயை என்பவளை மணந்து வாழ்க்கை நடத்தினுன். எப்பொழுதும் விசயையினுடைய இன்பத்திலே திளைக்கவேண்டுமென்னும் அவா அவற்கு மட்டிலாதெழுந்தமையின் தன்னுடைய அரசாட்சியைக் கட்டியங்காரன் என்னும் பொல்லாத அமைச்சனிடத்திலே ஒப்புவித்தான். அவனுடைய குணநலன்களை அரசன் ஆராய்ந்தறிந்து கொள்ளவும் இல்லை. அவ்வாறு ஒப்புவித்தால் ஏதமுண்டாமெனப் பிற அமைச்சர் கூறிய அறிவுரைகளையும் அரசன் ஏற்கவில்லை. மனைவியோடு மன்னன் இன்புற்றிருக்குங்கால் அக்கட்டியங்காரனுல் எதிர்க்கப்பட்டு அவனை வெல்லுமாற்றலில்லாமல் மடிந்தொழிந்தான்.

சுற்றந்தழால்

53\. எய்த்து மகத்திறந்துஞ் சூர னிளையோரான்
மோய்த்தவளம் பேற்ருன் முருகேசா—மேய்த்த
விருப்பருச் சுற்ற மியையி னருப்பரு
வாக்கம் பலவுந் தரும்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே! சூரன் - சூரபதுமனனவன், எய்த்து மகத்து இறந்தும் - வருந்தி வேள்வியிலே மாண்டும், இளையோரால் - தன்னுடைய தம்பி மார்களால், மொய்த்த வளம் பெற்றான் - மிகுந்த செல்வ நலத்தை அடையப் பெற்றான்; மெய்த்த - உண்மையாகப் பொருந்திய, விருப்பு அருச் சுற்றம் இயையின்-அன்பு நீங்கப் பெறாத உறவினர்களைப் பெற்றால், அருப்பு அரு - வளர்ச்சி குறையாத, ஆக்கம் பலவும் தரும்- செல்வம் பலவற்றையும் அவனுக்குக் கொடுக்கும்.

(வி-ம்.) சூரபத்மனனவன் வேள்வியிலே வருந்தியிறந்தும் தன்னுடைய தம்பிமார்களால் மிகுந்த செல்வ வளத்தைப் பெற்றான்; ஒருவனுக்கு அன்புநீங்காத சுற்றத்தார்கள் அமைவார்களானால் அவனுக்கு வளர்ச்சி குறையாத செல்வம் பலவும் உண்டாகுமென்பதாம்.

சூரபத்மன் கதை

சூரபத்மன் மிகவும் முயன்று அரிய வேள்வியைச் செய்தான். அவ்வாறு செய்தும் சிவபிரான் எழுந்தருளவில்லை. அதனால் வருந்தி வேள்வித் தீயில் விழுந்து இறந்தான். பிறகு அவ னிடத்திலே அன்புள்ள, சிங்கமுகன், தாரகன் என்னுந் தம்பி மார்கள் அவ்வேள்வியை முடித்தார்கள். அதனால் சிவபிரான் எழுந்தருளி இறந்துபோன சூரபத்மன் உயிர்பெற்றெழச் செய்தார். ஆயிரத்தெட்டு அண்டங்களின் அரசுரிமையையும் பிறவற்றையும் வழங்கினார். அதனால் சூரபத்மன் தன் உடன் பிறந்தார்களோடு மேன்மையுடன் வாழ்ந்தான். அன்புடைய உறவினர்களைப் பெற்றால் அவர்களால் நலமெலாம் உண்டா மென்பது சூரபத்மனிடம் நன்கு விளங்கியது.

பொச்சாவாமை

54. கோடியர்தன் போற்றேன்றக் குன்றிமதர்க் கும்பமுனி
மூடுவெண்ணோ யுற்றான் முருகேசா—நாடுங்கால்
முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னூ றிரங்கி விடும்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, மதர்க் கும்பமுனி-களிப்பினையுடைய அகத்திய முனிவர், கோடியர் தன் போல் தோன்ற குன்றி-கோடி அகத்தியர்கள் தம் போற் காணப்பட அதனால் மனஞ் சோர்ந்து, மூடு வெண்ணோய் உற்றான் - உடலெல்லாம் மூடுவதாகிய வெண்குட்ட நோயைப் பெற்றார்; நாடுங்கால் - ஆராயுமிடத்திலே, முன் உறக் காவாது - காக்கப்பட வேண்டிய துன்பகளையெல்லாம் அவை வருவதற்கு முன்னரே காத்துக் கொள்ளாது, இழுக் கியான் - மறந்து சோர்ந்திருந்தவன், பின் தன் பிழை ஊறு இரங்கிவிடும் - பிறகு தன் தவற்றினாலே இடையூறு உண் டாகியதை எண்ணி வருந்துவான்.

(வி - ம்.) ஆணவக்களிப்புக் கொண்டிருந்த அகத்திய முனிவர் தம்போல் கோடிக்கணக்கான அகத்தியர் தோன்றக் கண்டு அதனால் உள்ளங்குன்றி வெண்ணோய் அடைந்தார். காக்க வேண்டிய இடையூறுகளையெல்லாம் முன்னரே காத்துக் கொள்ளாமல் மறந்திருந்தவன் பிறகு தன் பிழையால் இடையூறு ஏற்பட்டதைக் கண்டு உள்ளம் இரங்குவான் என்பதாம்.

அகத்தியர் கதை

அகத்திய முனிவர் பல சிவப்பதிகளையும் வணங்கித் திருக் கோடிகா என்னும் பதியை அடைந்தார். மனத்தூய்மையோடு நாளும் சிவபெருமானைப் பூசித்துக் கொண்டிருந்தார். அப் பொழுது அங்குள்ள பெரியோர்களைத் தாம் பணியாமல் அவர்களை ஏவல் கொண்டார் கற்பிற்சிறந்த மனைவி வாய்க்கப்பெற்ற நம்

போற் சிறந்தவரில்லை யென்னும் செருக்கையும் உள்ளத்திலே கொண்டார். ஒருநாள் சிவபெருமானைப் பூசிக்கும் போது சிவபெருமான் அகத்தியருடைய செருக்கை அடக்க எண்ணினார். சிவலிங்கத்திலே கோடி அகத்திய முனிவர் மனைவியரோடு விரைவாகத் தோன்றி அதைப் பூசித்து அதிலே மறையும்படி ஒரு புதுமையைக் காட்டியருளினார். அதனை நோக்கிய அகத்திய முனிவர் நாணங்கொண்டார். அதனால் உடல் முழுவதும் விளர்த்தது. தம்முடைய தீய எண்ணத்தைப் பலவாறாக இகழ்ந்து கொண்டார். உருவிலி (அசரீரி)வாக்குப்படி திருவாவடுதுறையை அடைந்து சிவபெருமானை வழிபட்டு அந்நோய் நீங்கப்பெற்றார்.

செங்கோன்மை

55. மைந்தனுய்ந்தான் வற்சமமைச் சோடுமநு
நீதிகண்டோன்
முந்தைமுறை தன்னான் முருகேசா—வுந்தும்
இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கு முட்டாச் செயின்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, மநு நீதி கண்டோன் - மனு நீதி கண்ட சோழ மன்னன், முந்தை - முன்னாளில், முறை தன்னால் - மநு நீதி முறைப்படி அரசாட்சி செய்த படியினால், வற்சம் அமைச்சோடு, பசுங் கன்றுடனும் அமைச்சனுடனும், மைந்தன் உய்ந்தான் - அரசனுடைய மகனும் பிழைத்தான், உந்தும் - செலுத்தும்; வையகம் எல்லாம் இறைகாக்கும் - உலகத்தையெல்லாம் அரசன் காப்பாற்றுவான். முட்டாச் செயின் - அரசன் அரசாட்சியைத் தவறில்லாமற் செய்வானாயின், அவனை - அவ்வரசனை, முறை காக்கும் - அந்த ஆட்சி முறையே காப்பாற்றும்.

(வி - ம்.) மநு நீதி கண்ட சோழனுனவன் முன்னுளிலே முறைப்படி அரசாட்சி செய்தபடியினுல் பசுங்கன்ருேடும் அமைச்சனேடும் அவ்வரசனுடைய மகனும் உயிர்பெற்றுப் பிழைத்தான். உலகத்தையெல்லாம் அரசன் தன்னுடைய ஆட்சி முறையினுல் காப்பாற்றுவான்; அவன் தன்னுடைய ஆட்சி முறையைக் குற்றமில்லாமற் செய்வானுயின் அவ்வாட்சி முறையே அவனேக் காக்கும் என்பதாம். வற்சம் - பசுவின் கன்று.

மநு நீதி கண்ட சோழன் கதை

மநுநீதி மன்னன் என்னும் சோழனுடைய நல்வினேயினுல் வீதிவிடங்கன் என்னும் மகன் பிறந்தான். அவன் ஒரு நாள், தேரில் ஏறித் தெருவிலே சென்ருன். அப்பொழுது பசுவின் கன்று ஒன்று துள்ளிவந்து தேர்க்காலிலே அகப்பட்டு இறந்து போய் விட்டது. கன்றையிழந்த பசுவானது வருந்தி அரண்மனேக்குச் சென்றது. அரண்மனே வாயிலிற் கட்டியிருந்த ஆராய்ச்சி மணியைத் தன்னுடைய கொம்பினுல் அடித்தது. அதனேக் கேட்ட சோழமன்னன் வெளியே வந்து பசுவைப் பார்த்தான். நிகழ்ந்த செய்தியை உணர்ந்தான். அதனுற் பெருங்கவலே யடைந்தான். இதற்கு யாது செய்யலாம் என்று அமைச்சர்க ளோடு ஆராய்ந்தான். அவர்கள் சில கழுவாயைக் கூறினுர்கள். அவைகள் அரசனுக்குப் பொருத்தமின்மையாகத் தோன்றிய படியால் அவைகளே மறுத்துவிட்டு, இப்பசுவைப் போல்யானும் என்னுடைய ஒரே மகனேயிழந்து வருந்தினுல் அல்லாமல் இக் குற்றம் நீங்காது என்று முடிவு செய்தான். முதல் அமைச்சனேப் பார்த்து வீதிவிடங்கனுடைய மார்பிலே தேரைச் செலுத்துவா யாக என்று கட்டளேயிட்டான். அவ்வமைச்சன் அவ்வாறு செய்யாது தன்னுடைய உயிரைப் போக்கிக் கொண்டான். அரசன் அம்மகனுடைய மார்பின்மீது தானே தேரைச்செலுத்தி னுன். அவ்வளவில் சிவபெருமான் தோன்றித் திருவருள் செய்தார். அமைச்சனும் வீதிவிடங்கனும் உயிர் பெற்றெழப் பசுவின் கன்றும் உயிர் பெற்றெழுந்தது.

கொடுங்கோன்மை

56. வேர்த்திடுக்கண் செய்து விளிந்தான் கருநாடன்
மூர்த்திபான் மேனுண் முருகேசா—கூர்த்துணரில்
மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேன்
மன்னுவா மன்னர்க் கோளி.

(இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே !, கருநாடன் - கருநாட நாட்டு அரசன், மேனுள் - முன்னாளில், மூர்த்திபால் - மூர்த்திநாயனுரிடத்திலே, வேர்த்து இடுக்கண் செய்து - சினங் கொண்டு துன்பத்தைச் செய்து, விளிந்தான் - மாண்டொழிந்தான், கூர்த்து உணரில் - ஆராய்ந்து பார்த்தால், மன்னர்க்கு மன்னுதல் - அரசர்க்குப் புகழ்கள் நிலைபெறுதல், செங்கோன்மை - செங்கோன்மையினுலேயாம், அஃது இன்றேல் - செங்கோன் முறையில்லாவிடின், மன்னர்க்கு ஒளி - அரசருக்குப் புகழானது, மன்னுவாம் - நிலைபெறமாட்டாவாம்.

(வி - ம்.) கருநாட நாட்டு அரசன் மூர்த்தி நாயனுர்க்கு முன்னாளில் இடையூறுகள் செய்து அழிந்தொழிந்தான்; அரசருக்குப் புகழ் நிலைபெறுதல் செங்கோன்மையினுலேயாம்; செங்கோன்மையில்லா தொழியின், அரசர்கட்குப் புகழ் நிலை பெறமாட்டா வன்பதாம்.

மூர்த்தி நாயனுர் கதை

முன்னாளிலே மதுரைமா நகரிலே மூர்த்தி நாயனுர் என்பவர் சந்தனம் அரைத்துச் சோமசுந்தரப் பெருமானுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார். அந்நாளில் கருநாட நாட்டு அரசன் பாண்டியனை வென்று மதுரை மாநகர்க் கரசனுனன். அவன் ஆருகதசமயத்தவனு யிருந்தபடியால் மூர்த்தி நாயனுரையும் அச்சமயத்திலே சேர்க்க எண்ணினுன். அவருக்கு யாருஞ் சந்தனக் கட்டை கொடுக்காமல் தடுத்தான். அவர் ஒரு நாள் முழுதும் முயன்றும் சந்தனக்கட்டை அகப்படவில்லை.

அதனால் திருக்கோயிலுக்கு வந்து தம்முடைய விரதங் கெடாதவாறு தம்முடைய கையைச் சந்தனக் கல்லிலே சின்ன பின்னமாகுமாறு தேய்த்தார். அப்பொழுதுண்டாகிய உருவிலி வாக்குப்படி அவ்விரவிலே அவ்வரசன் இறந்தான். மூர்த்தி நாயனார் அரசாட்சி செய்து சிவதருமங்களை மிகுதியாகச் செய்து அதனால் வீடுபேற்றை யடைந்தார்.

வெருவந்த செய்யாமை

57. கார்த்தகபி லற்கிடும்பை செய்து கணனழிந்தான்
மூத்தோன் மழுவான் முருகேசா—வேத்தும்
இறைகடிய னென்றுரைக்கு மின்னாச்சொல் வேந்த
னுறைகடுகி யொல்லைக் கெடும்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, கணன் - கணன் என்னும் அரசன், காத்த கபிலற்கு இடும்பை செய்து - மெலிவைப் போக்கிப் பாதுகாத்த கபிலமுனிவருக்குத் துன்பஞ் செய்து, மூத்தோன் மழுவான் அழிந்தான் - நினக்கு மூத்தவனாகிய ஆனைமுகக்கடவுளுடைய மழுப் படையினாலே இறந்தொழிந்தான். ஏத்தும் - போற்றப் பெறுகிற, இறைகடியன் என்று உரைக்கும் - நம்முடைய அரசன் மிகவுங் கொடியவன் என்று குடிகளால் கூறப் படுகின்ற, இன்னாச் சொல் - துன்பச் சொல்லைப் பெறுகிற, வேந்தன் உறைகடுகி - அரசன் தன்னாயுள் குறைந்து, ஒல்லை கெடும் - விரைவில் அழிவான்.

(வி - ம்.) மெலிவைப் போக்கிக் காத்த கபிலருக்குத் துன்பஞ்செய்து கணன் என்பவன் ஆனைமுகக் கடவுளுடைய மழுப் படையினால் இறந்தொழிந்தான்; நம்முடைய அரசன் மிகவுங் கொடியவனென்று குடிமக்களால் கூறப்படுகின்ற துன்பச் சொல்லைப் பெறுகிற அரசன் தன்னாயுள் விரைவில் குறைந்து அழிவான் என்பதாம்.

கணன் கதை

முன்னாளில் கணன் என்னும் பெயருடைய ஓர் அரசன் இருந்தான். அவன் வேட்டைக்குச் சென்றபொழுது பசியாலுந் தாகத்தாலும் மெலிந்து கபிலமுனிவருடைய இருப்பிடத்திற்குச் சென்றான். அரசனுடைய நிலையைக் கண்டு அவர் இரங்கினார். தாம் இந்திரன்பாற் பெற்ற சிந்தாமணியைக் கொண்டு ஒரு நகரத்தையும் பல புதுமைமிக்க உணவையும் உண்டாக்கிக் கணனையும் அவனுடைய படையினரையும் உணவு கொள்ளச் செய்தார். பிறகு அரசன் பெருஞ்சிறப்புக்குக் காரணமாகவுள்ள சிந்தாமணியைத் தனக்குக் கொடுக்குமாறு கேட்டான். அவர் உடன்படவில்லை. வலுக்கட்டாயமாகப் பறித்துக் கொண்டு தன்னுடைய நகரத்திற்குச் சென்றான். தான் கவர்ந்து வந்த மணியைத் தந்தைக்குக் காட்டினான். தந்தை மனம் நடுங்கினான். "முனிவர்கட்குக் கேடு செய்தால் தீமையுண்டாவது திண்ணம். இதை மீண்டும் அவர்பால் கொடுத்து விடுவாயாக" என்று வற்புறுத்தினான். கணன் அம்மொழியை மறுத்து விட்டுச் சிந்தாமணியைக் கொடுக்காமலிருந்தான். பிறகு முனிவருடைய வழிபடு கடவுளாகிய ஆனைமுகக் கடவுள் கணனைக் கொன்றார். பொல்லாத மன்னன் விரைவில் கெடுவான் என்பது இவனிடம் உண்மையாகியது.

கண்ணோட்டம்

58. ஒவிவுழ வன்வேண்ட வுக்கிரனா ரிந்திரன் கோண்
மூவைவிடு வித்தார் முருகேசா—தரவலிலா
கண்ணோட்டத் துள்ள துலகிய லஃதிலா
ருண்மை நிலக்குப் பொறை.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே! ஒவில் உழவன் வேண்ட - ஒழிதலில்லாத வேளாளன் வேண்டிக் கொள்ள, உக்கிரனார் - உக்கிரபாண்டியன், இந்திரன் கோண்மூவை விடுவித்தார் - இந்திரனுடைய முகில்களைச்

சிறையிலிருந்து விடுவித்தார்; தாவல்இலா - அழிதல் இல்லாத, உலகியல் - உலகநடையானது, கண்ணோட்டத் துள்ளது - அருளினிடத்திலே உள்ளதாம், அஃதிலார் - கண்ணோட்டமாகிய அருளில்லாதவர்கள், உண்மை - நில வுலகிலிருத்தல், நிலக்குப் பொறை - நிலத்திற்குச் சுமை யாகும்.

(வி - ம்.) வேளாளன் வேண்டிக் கொள்ள உக்கிர பாண்டியன் இந்திரனுடைய முகில்களைச் சிறையிலிருந்து விடுதலை செய்தான்; உலகநடையானது அருளுடைமையோடு விளங்குத லில் தான் உள்ளது. அருளில்லாதவர்கள் உலகத்திலே யிருப்பது நிலத்துக்குச் சுமையாகும் என்பதாம்.

உக்கிரபாண்டியன் கதை

ஒரு காலத்திலே சேர சோழ பாண்டியர் என்னும் மூவேந்தர் களுடைய நாட்டிலே மழையில்லாமற் போய்விட்டது. அகத்திய ருடைய அறிவுரைப்படி மூவரும் இந்திரனுடைய அவைக்குச் சென்றார்கள். சேரனுஞ் சோழனும் இந்திரன் காட்டிய இருக்கை களிலே இருந்தார்கள். உக்கிரபாண்டியன் மட்டும் இந்திர னுடைய இருக்கையிலே ஏறி இந்திரனோடு ஒன்றாக விருந்தான். இதனைப் பார்த்த இந்திரனுக்குச் சினமுண்டாகியது. சேர சோழர்களுடைய செய்தியை வினவி அவர்களுடையநாடுகளிலே மட்டும் மழை பெய்யச் செய்தான். இருவரையும் அனுப்பிய பிறகு உக்கிரபாண்டியனுடைய செருக்கை யடக்க வேண்டு மென்று எண்ணினான். இந்திரன் பாண்டியனுக்குச் சிறப்புச் செய்வான் போலத் தூக்க முடியாத மாலை ஒன்றைக் கொண்டு வரச் செய்து அதனைப் பாண்டியனுடைய கழுத்திலே போட்டான். பாண்டியன் அம்மாலையை மலர்மாலை போலத் தாங்கிக் கொண்டு இந்திரனை மதியாமலிருந்தான். பிறகு தன் னுடைய நாட்டை யடைந்தான். ஒருநாள் இந்திரனுடைய புட்கலா வருத்த முதலிய நான்கு முகில்கள் பொதிய மலைச் சாரலில் மேயக்கண்டு அவைகளைச் சிறையிலிட்டான். இதனை உணர்ந்து இந்திரன் உக்கிரபாண்டியனை யெதிர்த்துப் போரிடத்

தொடங்கினன். போரில் பாண்டியனை வெல்ல முடியவில்லை. அதனல் தோற்றேடினன். பிறகு "உன்னுடைய நாட்டிலேயும் மழை பெய்யச் செய்கிறேன், அன்பு கூர்ந்து முகில்களைச் சிறை விடுக" என்று செய்தியனுப்பினன். அச்சமயத்தில் வேளாளன் ஒருவன் இந்திரன் பொருட்டுப் பிணை நின்று வேண்டிக் கொண்டான். உக்கிரபாண்டியனும் அருள் கொண்டு முகில் களைச் சிறையிலிருந்து விட்டுவிட்டான்.

ஒற்றுடல்

59. பின்னைகரம் வீடியபின் பேதுற்ருன் சூரனேற்றை
முன்னினிதா ளாமல் முருகேசா—வன்னதனல்
ஒற்றின லோற்றிப் பொருடேரியா மன்னவன்
கோற்றங் கோளக்கிடந்த தில்.

(இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே!, சூரன் - சூரபதுமனனவன், ஒற்றை - ஒற்றுடலை, முன் இனிது ஆளாமல் - முன்னரே நன்ருகச் செய்து கொள்ளாதபடி யினல், பின்னை கரம் வீடிய பின்-தங்கையாகிய அசமுகியின் கை வெட்டுண்ட பிறகு, பேதுற்ருன்-உள்ளம் வருந்தினன், அன்னதனல் - ஆகையால், ஒற்றினல் ஒற்றிப் பொருள் தெரியா மன்னவன் - ஒற்றர்களால் நாட்டு நிகழ்ச்சிகளை யறிந்து அவற்றின் பயனை அறிந்து கொள்ளாத அரசன், கொற்றம் கொள கிடந்தது இல் - வெற்றி பெறத்தக்க வழி வேறு இல்லை.

(வி - ம்.) சூரபத்மனனவன் ஒற்றரைக் கொண்டு செய்தி யறிந்து கொள்ளுதலை முன்னரே மேற்கொள்ளாத படியினல் தங்கையினுடைய கை வெட்டுண்ட பிறகு வருத்தத்தை யடைந் தான். ஒற்றர்களால் நாட்டு நிகழ்ச்சிகளை அறிந்து அவற்றின் பயனைத் தெரிந்து கொள்ளாத அரசன் வெற்றி யடைதற்கு வழி யொன்றுமில்லை யென்பதாம்.

சூரபதுமன் கதை

சூரபதுமனுக்கு அஞ்சி இந்திரன் இந்திராணியோடு நில வுலகத்தையடைந்து தங்கினுன். இந்திராணியை ஐயனுர் பால் ஒப்புவித்துவிட்டுத் தான் திருக்கைலேக்குச் சென்ருன். ஐயனுர் கட்டளைப்படி வீரமாகாளர் இந்திராணியைக் காவல் செய்திருந் தார். இந்திராணியைச் சூரபதுமனுடைய தங்கையாகிய அசமுகி ஒருநாள் கண்டாள். அவளைத் தன்னுடைய தமையனுக்கு மனைவி யாக்க வேண்டுமென்று எண்ணினுள். இந்திராணியினுடைய கையைப் பற்றி இழுத்தாள். அவ்வளவில்வீரமாகாளர் அசமுகியி னுடைய கைகளை வெட்டினுர். அவள் புலம்பிக் கொண்டு போய்ச் சூரபதுமனிடம் முறையிட்டாள். அவன் முன்னரே ஒற்றர்களை ஏற்படுத்தி வைத்திருந்தும் பகைவனுகிய இந்திர னிருக்குமிடத்தையும் அவன் செய்யுங் காரியங்களையும் ஒற்றர் கள் உணர்ந்து சென்று சூரனிடம் உரைக்கவில்லை. அதனுலேயே இவ்வாறு ஏற்பட்டது என்று வருந்தி அவ்வொற்றர்களைப் பல வாறு கடிந்துரைத்து இகழ்ந்தான். ஒற்றர்களால் நன்கு செய்தி உணர்ந்து கொள்ளாத படியால் சூரபதுமனுக்குப் பல தொல்லைகள் உண்டாயின.

ஊக்கமுடைமை

60. நாள்களோடு கோளியக்கு நற்பதவி யைத்துருவன்
மூள்கருத்தாற் பெற்ருன் முருகேசா—நீள்பெருக்கின்
வெள்ளத் தனைய மலர்நீட்ட மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு.

(இ - ள்.) முருகேசா-முருகப் பெருமானே!, துருவன்-துருவனுனவன், நாள்களோடு கோள் இயக்கும் நற்பதவியை-விண்மீன்களோடு ஒன்பது கோள்களை இயக்கும் நல்ல பதவியை, மூள் கருத்தால் பெற்ருன் - தனக்குண்டாகிய உயர்ந்த கருத்தினுலே அடையப்பெற்ருன்; நீள் பெருக்கின்-நீண்ட பெருக்கினையுடையதாகிய, வெள்ளத்து அனையது மலர்நீட்டம்-நீரின் அளவாவுள்ளது நீர்ப்பூக்களின் உயர்ச்சி;

அதைப்போல; மாந்தர்தம் - மனிதர்களுடைய, உள்ளத்து அனையது உயர்வு-ஊக்கத்தின் அளவாகும் பெருமையும்.

(வி - ம்.) துருவன் தான் கொண்டிருந்த உயர்ந்த கருத்தினாலே நாள்களையும் கோள்களையும் இயக்கும் உயர்ந்தபதவியைப் பெற்றான். மலர்களின் உயர்ச்சி நீரினளவினதாக இருக்கும்; மனிதர்களுடையபெருமை அவர்களுடைய முயற்சியினளவினதாக இருக்கும் என்பதாம்.

துருவன் கதை

உத்தானபாதன் என்னும் அரசனுக்குச் சுருதி சுநீதி என்னும் இரண்டு மனைவியர் இருந்தனர். மூத்தாள் சுருதி; இளையாள் சுநீதி. இருவருக்கும் உத்தமன் துருவன் என்னும் இரண்டு மக்களிருந்தனர். மூத்தாள்மகனாகிய உத்தமன் தந்தையின் மடியில் இருக்கும்போது இளையாள் மகனாகிய துருவனுந் தந்தையின் மடியில் ஏறச்சென்றான். அதனைச் சுருதியாகிய மூத்தவள் தடுத்தாள். துருவன் சிறுவனாக விருந்தும் அதனைப் பொறாமல் தாயினிடத்திலே கூறி உடன்பாடு பெற்றுக்கொண்டு ஏழு முனிவர்களிடம் போய் அவர்களுடைய அருளுரைப்படியே தவம் புரிந்தான். இந்திரனால் ஏவப்பட்ட பூதம் முதலியவைகட்குச் சிறிதும் அஞ்சாது நின்று நாள்களையுங் கோள்களையும் பிணித்த உருளையைச் சுழற்றி விளங்கும் பெரும் பதவியைத் திருமாலால் பெற்றான். அதனால் தன்னுடைய தாயோடு மிகுந்த சிறப்பை யடைந்தான். துருவன் மிகச்சிறியவனாக இருந்தும் தன்னுடைய உள்ளத்தின் ஊக்கத்தினாலேதான் இத்தகைய சிறந்த பேற்றைப் பெற்றான்.

மடியின்மை

61. அம்புவிமுற் றம்புரந்தா னுண்மைரகு மாற்றலரை
மொய்ம்பதனால் வென்றே முருகேசா—இம்பர்
மடியிலா மன்னவ னெய்த மடியளந்தான்
றாஅய தெல்லா மொருங்கு.

(இ - ள்.) முருகேசா-முருகப் பெருமானே!, ஆண்மை ரகு - பேராண்மையுடைய இரகு என்னும் அரசன், மாற்றலரை மொய்ம்பு அதனல் வென்று - பகைவர்களைத் தன்னுடைய ஆண்மையினுலே வெற்றி கொண்டு, அம்புவி முற்றும் புரந்தான் - அழகிய நிலவுலகம் முழுவதையும் அரசாட்சி செய்தான், இம்பர் - இவ்வுலகத்திலே, அடி அளந்தான் தாயது எல்லாம் ஒருங்கு-அடியால் உலகத்தை அளந்த கடவுள் தாவிய பரப்பு எல்லாவற்றையும் ஒன்ருக, மடிஇலா மன்னவன் எய்தும் - சோம்பலில்லாத அரசன் அடைவான்.

(வி - ம்.) ஆண்மை மிகுந்த இரகு என்னும் அரசன் பகைவர்களை யெல்லாம் தன்னுடைய ஆண்மையினுல் வெற்றி கொண்டு உலகம் முழுவதையும் அரசாண்டான்; திருமாலால் தாவியளக்கப்பட்ட இவ்வுலகங்கள் எல்லாவற்றையும் சோம்பலில்லாத அரசன் ஒருசேர அடைவான் என்பதாம். அடியளந்தான் - திருமால். இம்பர் - இவ்வுலகு.

இரகுவின் கதை

திலீபன் என்னும் அரசன் காமதேனுவை வழிபட்டு இரகு என்னும் மைந்தனைப் பெற்ருன். அந்த இரகு தன்னுடைய தந்தை இயற்றிய வேள்வியின் பொருட்டுத் திக்குகள் தோறுஞ் சென்றுவரும்போது இந்திரன் வேள்விக் குதிரையைக் கவர்ந்தான். இரகு அதனைக் குறித்துச் சிறிதும் தளர்ச்சி யடையாமல் அவனையும் வென்று வேள்விப்பலன் கைகூடும் பலத்தை அவனுற் பெற்ருன். சில காலஞ் சென்ற பிறகு தன் தந்தை தவஞ்செய்யும் பொருட்டுக் காட்டை யடைந்ததும் தான் அரசுரிமையை மேற்கொண்டான். திக்குகள் தோறுஞ் சென்று பெற்று எண்ணிறந்த பொருட் குவியலைக் கொண்டு விசுவசித்து என்னும் வேள்வியைச் செய்தான். அந்தணர்கட்குப் பொருள்களை யெல்லாம் தானஞ் செய்தான். அதனுல் வறுமையுடையவனுனன். இச்சமயத்தில் கௌத்ச முனிவர் என்பவர் குருகாணிக்கை கொடுத்தலுக்காகப்

பதினன்கு கோடிப் பொன்னை விரும்பி இரகுவினிடம் வந்தார். அவன் அவரை வணங்கி இருக்கச் செய்தான். தன்னிடம் பொருளின்மையால் குபேரனை வென்று வேண்டிய பொருளை யடைய வேண்டு மென்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தான். இதனைக் குபேரன் அறிந்து அஞ்சினன். அன்று இரவே அவ்வரசனுடைய பொருளறையில் பொன்மழை பொழியச் செய்தான். கௌற்ச முனிவர் விரும்பி வந்த பொருளைக் கொடுத்தான். அம் முனிவர் வழங்கிய வாழ்த்துரையின்படி அயன் என்னும் மகனைப் பெற்றுச் சிறந்த வாழ்வை யடைந்தான்.

ஆள்வினையுடைமை

62. ஆள்வினையால் மிக்கதவ மாற்றிச் சுவேதமன்னன்
முள்வினையற் றுய்ந்தான் முருகேசா—கோள்வினையாம்
ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

(இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே!, சுவேத மன்னன - சுவேதராசன் என்பவன், ஆள்வினையால் - மிகுந்த முயற்சியால், மிக்க தவம் ஆற்றி - மிகுந்த தவத்தைச் செய்து, முள்வினை அற்று உய்ந்தான் - நெருங்கிய தீவினையை வென்று நல்வாழ்க்கை பெற்றான்; கோள்வினையாம் - கோள்களால் உண்டாகும் தீவினையாகிய, ஊழையும் - ஊழ்வினையையும், உலைவு இன்றி தாழாது உஞற்றுபவர் - சோர்வு இல்லாமல் முயற்சியைச் செய்கின்றவர்கள், உப்பக்கம் காண்பர் - தோல்வியடையச் செய்வார்கள்.

(வி - ம்.) சுவேதன் என்னும் அரசன் மிகுந்த முயற்சியோடு தவஞ் செய்து சூழ்வினையை நீக்கி நல்வாழ்வு பெற்றான்; சிறிதுந் தளர்ச்சியில்லாமல் இடைவிடாது முயற்சி செய்பவர் ஊழ்வினையையும் வெல்வர் என்பதாம்.

சுவேத மன்னன் கதை

சுவேத மன்னன் என்பவன் தன்னுடைய அரசாட்சியை மகனிடம் ஒப்புவித்துவிட்டு மனைவியோடு காட்டையடைந்து முனிவனாகித் தவஞ் செய்து கொண்டிருந்தான். அப்போது அவனுடைய மனைவிக்குச் சாவுத் துன்பம் உண்டாகியது. அதனைக் கண்டு அந்தோ இத்தகைய துன்பம் என்னையும் வருத்துமே யென்று அஞ்சினன். சுக்கிராச்சாரியாரை யடைந்து வழிபட்டுச் சாவுத் துன்பம் நீங்கும்படி மிருத்தியுஞ்சய மந்திரோபதேசம் பெற்று, அவர் கூறியவாறே பல சிவப்பதிகளையும் வழிபட்டுத் திருநெல்வேலியை அடைந்து சிவவழிபாடு செய்து அகத்திய முனிவரால் அவ்வூரின் பெருமையை அறிந்து கடவுளை வழிபட்டுத் தங்கியிருந்தான். அங்கே சாங்காலம் நெருங்கியபடியினால் நமன் அச்சுறுத்திப் பாசக்கயிற்றை யெறிந்து பற்றினன். அரசன் சிறிதும் அஞ்சாது சிவபெருமானுடைய திருப்பெயர்களைக் கூறிக் கொண்டிருந்தான். சிவபிரான் எழுந்தருளி இயமனை உதைத்து அரசனைக் காப்பாற்றி யருளினர். அரசன் தன்னுடைய விடாமுயற்சியினால் சாவுத் துன்பத்தி லிருந்து விடுபட்டான்.

இடுக்கணழியாமை

63. செற்றுச் சுயோதனன்செய் தீங்கையின்பிற் றேர்தருமன்
முற்றுமின்பந் துய்த்தான் முருகேசா—பற்றிவரும்
இன்னாமை யின்ப மெனக் கோளி னாகுந்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு.

(இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே!, செற்று- வருத்தி, சுயோதனன் செய் தீங்கை - துரியோதனன் செய்த தீமையை, இன்பில் தேர் தருமன் - இன்பமாகவே கொண்ட தருமபுத்திரன், முற்றும் இன்பம் துய்த்தான்- தான் அடைந்த எல்லாவற்றையும் இன்பமாகவே கொண்டு நுகர்ந்தான்; பற்றிவரும் - தொடர்ந்து வருவதாகிய இன்னாமை - துன்பத்தை, இன்பம் எனக் கொளின் -

இன்பம் என்று ஒருவன் கொண்டால், தன் ஒன்னார் விழையும் சிறப்பு ஆகும் - தன் பகைவரும் விருப்பத்தக்க சிறப்பை அடைவான்.

(வி - ம்.) தருமரானவர் துரியோதனன் பகைகொண்டு செய்த தீமைகளையெல்லாம் இன்பமாகவே கொண்டு நுகர்ந்தார். துன்பத்தையே இன்பமாகக் கொண்டால் பகைவரும் விரும்பும்படியான சிறப்பு உண்டாகும் என்பதாம்.

தருமர் கதை

துரியோதனன் பாண்டவர்களிடத்திலே பகை கொண்டான். அவர்களுக்கு எப்பொழுதுந் தீமையையே செய்து கொண்டிருந்தான். வீமனைக் கொன்று தொலைத்து விடுவதற்குப் பலவாறு முயன்றான். ஐவருக்கும் அரக்கு மாளிகை கட்டி அதில் தீயிடச் செய்தான். தன் மாமனாகிய சகுனியைக் கொண்டு தருமரோடு சூதாடச் செய்து நாடு நகரங்களையெல்லாம் கைப்பற்றினான். திரௌபதியை அவைக்குக் கொண்டுவரச் செய்து துகிலுரிந்தான். காட்டிலேயிருந்தபொழுதும் ஐவருக்கும் பலவாறு தீமை செய்ய முயன்றான். தருமர் துரியோதனன் செய்த தீமைகளெவற்றையும் பாராட்டவில்லை. அவைகளையெல்லாம் நன்மையாகவே கொண்டு மகிழ்ந்திருந்தார். இதனால் துரியோதனனையும் வென்று சிறப்படைந்தார்.

அமைச்சு

64 சேக்கிழார் சென்னிக்குத் தோண்டர் சிறப்புணர்த்தி
மோக்கநெறி தந்தார் முருகேசா—ஊக்கி
அறிகோன் றறியா னெனினு முறுதி
உழையிருந்தான் கூறல் கடன்.

(இ-ள்.) முருகேசா—முருகப்பெருமானே!, சேக்கிழார்-பெரியபுராணம் பாடிய சேக்கிழார், சென்னிக்கு -சோழ மன்னனுக்கு, தொண்டர் சிறப்பு உணர்த்தி -சிவத்

தொண்டர்களுடைய சிறப்புக்களையெல்லாம் எடுத்துக் கூறி, மோக்க நெறி தந்தார் - வீடு பேற்று நெறியைக் கொடுத்தருளினர்; ஊக்கி - முயன்று, அறிகொன்று - அறிவுடையார் சொல்லையும் பிழைத்து, அறியான் எனினும் - தானும் அறியாதவனாக இருந்தாலும், உறுதி - உறுதியானவைகளை, உழை இருந்தான் - பக்கத்திலே இருப்பவன், கூறல் கடன் - கூறவேண்டியது கடமையாகும்.

(வி - ம்.) சேக்கிழார் சோழமன்னனுக்குத் திருத்தொண்டர் பெருமைகளையெல்லாஞ் சொல்லி வீடுபேற்று நெறியைக் கொடுத்தார். ஒருவன் அறிவுடையார் சொல்லையுங் கேளாது தானும் அறியாதவனாக இருந்தாலும் பக்கத்திலே யிருப்பவன் அவனுக்கு நன்மை யானவைகளைக் கூற வேண்டியது கடைமை யாகும்.

சேக்கிழார் கதை

சேக்கிழார் அநபாய மன்னனுடைய அமைச்சராக அமர்ந்திருந்தார். அவ்வரசன் சைவசமய நூல்களை ஆராயாமல் சமண நூல்களை ஆராய்ந்து மகிழ்ந்து கொண்டிருந்தான். சேக்கிழார் அவ்வரசனுக்கு இவ்வாறு புறச்சமய நூல்களை யாராய்தல் தக்கது அன்று என்று அறிவுரை கூறித் திருத்தொண்டர் புராணத்தை இயற்றிக் கொடுத்து அதனை ஆராயச் செய்தார். இவ்வாறு சைவ சமய நூல்களை அரசன் ஆராயத் தொடங்கியபடியால் வீட்டு நெறிக் குரியவனாகிச் சிறப்படைந்தான். சேக்கிழார் தம்முடைய கடமையைச் செய்தபடியால் தாமுஞ் சிறப்படைந்தார்.

சொல்வன்மை

65\. வாதவூ ராளிசெண்டால் வாங்கலின்னோர் வண்மையெனு
மோதமிறைக் கீந்தார் முருகேசா—தீதிலதாச்
சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, வாதவூராளி - திருவாதவூரர், செண்டால் வாங்கல் - கைச் செண்டினால் பெற்றுக் கொள்ளுதல், இன்னோர் வண்மை எனு - இவர்களுடைய வழக்கம் என்று கூறி, இறைக்கு மோதம் ஈந்தார் - பாண்டிய மன்னனுக்குக் களிப்பையுண்டாக்கினார், தீது இலது ஆ-தீமையில்லாததாக, பிறிது ஓர்சொல் அச் சொல்லை - வேறொரு சொல்லானது அந்தச் சொல்லை, வெல்லும் சொல் இன்மை அறிந்து - வெல்லுஞ் சொல்லாக இல்லாததை உணர்ந்துகொண்டு, சொல்லை சொல்லுக - கூறுகிற சொற்களைக் கூறுக.

(வி - ம்.) திருவாதவூரார் செண்டாலே வாங்குதல் இவர்களுக்கு வழக்கமென்று கூறிப் பாண்டியனுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கினார். தான் சொல்லுஞ் சொல்லை வேறொரு சொல்லானது வெல்லமாட்டாது என்பதனை உணர்ந்து கொண்டு சொற்களைச் சொல்லவேண்டும் என்பதாம். வாதவூராளி - திருவாதவூரர். மோதம் - மகிழ்ச்சி.

திருவாதவூரர் கதை

திருவாதவூரர் அரிமர்த்தன பாண்டியனுடைய அமைச்சராக இருக்கும் பொழுது அரசனுடைய பொருள்களில் நாற்பத்தொன்பது கோடிப் பொன்னைத் திருப்பணி செய்து விட்டார். இப்பொருள் அரசனால் குதிரை வாங்கும் பொருட்டுக் கொடுக்கப்பட்டது. திருவாதவூரர் பொருட்டுச் சிவபெருமான் காட்டிலே திரிந்த நரிகளையெல்லாம் பரிகளாகச் செய்து கொண்டு அரசனிடம் வந்தார். நரிக்குதிரைகளின் சிறப்பை அரசனுக்குக் காட்டினார். அரசன் கொடுத்த ஆடையைத் தம்முடைய தடியால் வாங்கித் தலையிலணிந்து கொண்டார். இதனைக் கண்ட அரசன் சினங் கொண்டான். திருவாதவூரர் சமயத்திற்குத் தக்கவாறு பேசக் கூடிய அறிவாளியாகையால், இவ்வாறு தண்டால் பெற்றுக் கொள்வது இவர்களுடைய நாட்டு வழக்கம் என்று அரசனுக்கு ஒப்புரை கூறினார். இதனைக் கேட்ட அரசன் வேறு

யாதுங் கூருமல் உண்மைதான் போலும் என்று எண்ணிக் களிப் படைந்தான்.

வினைத்தூய்மை

66. வேள்வியிற்கோ வூனுகர்ந்தும் வேடரிற்ருழ்ந்
தேழ்மறையோர்
மூள்விதன முற்ருர் முருகேசா—நீள்வின்
இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சியவர்.

(இ – ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, ஏழ்மறை யோர் - ஏழு அந்தணர்கள், வேள்வியில் - வேள்வியினிடத் திலே, கோ ஊன் நுகர்ந்தும் - பசுவின் ஊனைத்தின்றும், வேடரில் தாழ்ந்து - வேடர்களினுமிழிவை யடைந்து, மூள் விதனம் உற்ருர் - மிகுந்த வருத்தத்தை யடைந்தார்கள், நீள்வில் - அதிகமாக, இடுக்கண் படினும் - துன்பத்தை யடைந்தாலும், நடுக்கற்ற காட்சியவர்-அசைவற்ற தெளிந்த அறிவையுடையவர்கள், இளிவந்த செய்யார் - இழிவான காரியங்களைச் செய்யமாட்டார்கள்.

(வி - ரை.) ஏழு அந்தணர்கள் வேள்வியிற் பசுவின் ஊனை நுகர்ந்தும் வேடரைப் பார்க்கினுந் தாழ்வடைந்து மிகுந்த வருத்தமுற்ருர்கள். அசையாத தெளிந்த அறிவை யுடையவர்கள் துன்பத்தையடைந்தாலும் இழிவான காரியத்தைச் செய்ய மாட்டார்கள் என்பதாம். கோ - பசு. மூள் விதனம் - மிகுந்த வருத்தம்.

ஏழு அந்தணர்கள் கதை

கௌசிகன் என்னும் பெயருடைய அந்தணனுக்கு மக்கள் எழுவர் இருந்தனர். அவர்களுடைய பெயர் அசூயன், குரோதனன், வரக்குருஷ்டன், அயிஞ்சிரன், கவிபிசினன், பிதிர்வர்த்தி என்பதாம். இவர்கள் எழுவரும் கர்க்க

முனிவருடைய மாணவர்களாகி அவருடைய ஆவையுங் கன்றையும் மேய்த்துக் கொண்டிருந்தார்கள். அந்நாளிற் பெரும் பஞ்சம் வந்தது. அகப்பட்ட பலவற்றைத் தின்றும் அவர்களால் பசியை அடக்கமுடியவில்லை. பசியானது மிகுதிப் பட்டது. ஆகவே தாங்கள் மேய்த்துக்கொண்டிருந்த பசுவைக் கொன்று தின்பதற்கு முடிவு செய்தனர். பிதிர்வர்த்தி என்பவன் மற்றவர்களைப் பார்த்து, "இதனைத் தென்புலத்தார்கட்கு ஊட்டியுண்டால் நற்கதி பெறலாம்" என்று மற்றவர்கட்குக் கூறினன். இருவரைத் தேவர்களாகவும் மூவரைத் தென் புலத்தார்களாகவும் ஒருவனை அதிதியாகவும் ஏற்படுத்தித் தான் தலைவனாக இருந்து கொண்டு அதனைப் பாகஞ் செய்து முறைப்படி வேள்வி செய்து முடித்தான். பிறகு கர்க்கமுனிவரிடம் போய், "ஆவைப் புலி கொன்றுவிட்டது" என்று சொன்னன். சிலநாட் சென்ற பிறகு எழுவரும் இறந்தார்கள். அடுத்த இரு பிறவிகளில் முறையே வேடர்களாகவும் விலங்குகளாகவும் பிறந்தார்கள். பிறகு மானச சரசிலே சக்கரவாகப் பறவைக ளாகி முன்னுளிலே செய்த கொடிய வேலையை வேள்வியாகச் செய்த நல்வினையினல் யோகாப்பியாசம் பழகிக் கொண் டிருந்தார்கள். அப்போது பாஞ்சாலநாட்டு விப்பிராசனும் அமைச்சர் பலரும் அங்குள்ள பொழிலிலே உலாவினர்கள். அவர்களுடைய செல்வத்தை விரும்பிய மூவருள் இருவர் அமைச்சர் மக்களாகப் பிறந்தார்கள். பிரவர்த்தி என்பவன் அரசனுகப் பிறந்தான். இவன் பிரமதத்தன் என்னும் பெயரோடு வளருங்கால், முன்பு வேள்வியிற் கொல்லப்பட்ட பசு அந்நல்வினையினல் சந்நிதி என்னும் பெயரோடு வேருேர் அரசன் மகளாகப் பிறந்திருந்தது. பிரமதத்தன் அவளை மணந்தான். திருமாலின் வழிபாட்டால் எறும்பு முதலிய எல்லாவற்றின் மொழிகளையுமுணர்ந்து காம்பிலிநாட்டை அரசாட்சி செய்து கொண்டிருந்தான். அந்நாளில் சக்கரவாகப் பறவைகளாக இருந்த மற்றை நால்வரும் அந்நகரத்தில் சுதரித்திரன் என்னும் அந்தணனுக்குப் பிள்ளைகளாகப் பிறந்து ஒரு நூலியற்றி அதனைத் தந்தைபாற் கொடுத்து, "இதனை அரசனிடங் கொடுத்து வேண்டியபொருள் பெற்று வாழ்க" என்று கூறித் தவத்தின்மேற் சென்ருர்கள். அவ்வாறு

கிடைக்கப் பெற்ற நூலால் அரசன் தன்னுடைய முன்னேய நிலை முதலியவைகளை உணர்ந்து அவ்வந்தணனுக்கு வேண்டியன கொடுத்து அனுப்பிவிட்டு, அமைச்சரிருவரும் மனைவியும் உடன் வர அந்நால்வரையு மடைந்தனன். எண்மரும் அரிய தவங்களைச் செய்து திருமாலுடைய உலகத்தை யடைந்தார்கள்.

வினைத்திட்பம்

67. சீவகன்சீ ருதிருந்தே தெவ்வையழித் தான்முடிவின்
மூவுலகும் போற்று முருகேசா—யாவும்
கடைக் கோட்கச் செய்தக்க தாண்மை யிடைக்
கோட்கி
னெற்ரு விழுமந் தரும்.

(இ - ள்.) மூவுலகும் போற்றும் முருகேசா - மூவுலகத்தாரானும் வணங்கப்படுகிற முருகப்பெருமானே!, சீவகன்- சீவகன் என்பவன், சீருது இருந்தே - சினந்தெழாமல் அமைதியாக விருந்தே, முடிவில் - இறுதியில், தெவ்வை அழித்தான் - பகைவர்களை அழித்தொழித்தான், யாவும்- எல்லாவற்றையும், கடை கொட்க செய்தக்கது ஆண்மை- இறுதியிலே வெளிப்படும்படியாகச் செய்வது ஆண்மை யாகும்; இடை கொட்கின் - இடையிலே வெளிப்படுமானல், எற்ரு விழுமம் தரும் - நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

(வி - ம்.) சீவகன் சீறியெழாமல் அடக்கமாக இருந்தே இறுதியில் பகைவரை யழித்தொழித்தான். செய்யுங் காரியங்கள் இறுதியில் வெளிப்படும்படியாகச் செய்தலே ஆண்மையாகும். அக்காரியம் இடையிலே வெளிப்படுமானல் நீங்காத துன்பத்தைக் கொடுக்கும் என்பதாம்.

சீவகன் கதை

சீவகன் அச்சணந்தி என்னும் ஆசிரியனிடத்திலே கல்வி கற்று எல்லாக் கலைகளினுந் தேர்ச்சியடைந்தபிறகு, தன்தந்தை

யாகிய சச்சந்தன் என்னும் அரசன் கட்டியங்காரனுல் கொல்லப்பட்டமை முதலியவைகளை அவ்வாசிரியர் மூலமாக அறிந்தான். கேட்ட அளவிலே சினம் மூண்டது. அவருடைய கட்டளைப்படி அச்சினத்தை அடக்கிக் கொண்டிருந்தான். கட்டியங்கார விடத்திலிருந்த பட்டத்துயானை குணமாலை யென்பவளைக் கொல்லவருவதைப் பார்த்து அதனது மதத்தை அடக்கிறுன். அதுகாரணமாகப் பகை மூண்டது. கட்டியங் காரன் சீவகனைக் கொல்லத் துணிந்தான். சீவகன் சுதஞ்சணன் என்னும் தேவனுதவியால் மறைந்திருந்தான். காலமுடிவில் பதுமுகன் என்னுந் தோழன் முதலியவர்களோடு வெளிப்பட்டுக் கட்டியங்காரனைக் கொன்ருன்.

வினைசெயல்வகை

௬8. யாண்டுளனு ராயணனனென் றேற்றிரணி யன்மகன்பான்
மூண்டுசின மாண்டான் முருகேசா—வேண்டின்
முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

(இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே!, இரணியன் - இரணியன் என்பவன், யாண்டுளன் நாராயணன் என்று ஏற்று - எவ்விடத்திலே யிருக்கிறுன் நாராயணன் என்று எதிர்த்து, மகன்பால் சினம் மூண்டு மாண்டான் - மகனிடத்திலே சினம மிகுந்து இறந்தொழிந்தான், வேண்டின் - விரும்பினுல், முடிவும் - செயலை முடிக்கும் வகையும், இடையூறும் - நேரக்கூடிய இடையூறும், முற்றியாங்கு எய்தும் படுபயனும் - முடிந்தபோது கிடைக்கும் பெரும்பயனும், பார்த்து செயல் - ஆராய்ந்து பார்த்துச் செய்தல் வேண்டும்.

(வி - ம்.) இரணியன் நாராயணன் எவ்விடத்திலே இருக் கிறுன் என்று தன்மகனை எதிர்த்துச் சினம் மூண்டு இறந்

தொழிந்தான். ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கினால் அதனை முடிக்கும்வகை, இடையிலே நேரக்கூடிய இடையூறு, காரியம் முடிந்தபின் உண்டாகும் பயன் ஆகியவைகளை ஆராய்ந்து பார்த்துச் செய்தல் வேண்டும் என்பதாம்.

இரணியன் கதை

இரணியாட்சன் என்பவன் நிலத்தைப் பாயாகச் சுருட்டிக் கொண்டு பாதலத்திற்குச் சென்றான். திருமால் பன்றியுருவம் எடுத்துக்கொண்டு அவனைக் கொன்றார். இரணிய கசிபு என்னும் மூத்தவன் திருமாலிடத்திலே பகை கொண்டு நான்முகனைக் குறித்துத் தவஞ்செய்தான். உலகங்களை ஆக்கல் காத்தல் அழித்தல் முதலிய காரியங்களைத் தானே செய்தல் முதலிய பல வரங்களையும், மும்மூர்த்திகள் தமக்குரிய உருவத்தோடு படைக்கலமுடையவராயெதிர்த்தாலும், பகல் இரவு என்னுங் காலங்களினும், மண் விண் உள் புறம் என்னும் இடங்களினும் அழியாமையும் பிறவும் பெற்று எல்லோருந் தன்னையே வழிபடுமாறு செய்தான். இந்திரன் முதலானவர்கட்குத் துன்பம் விளைவித்தான். இவ்வாறு கொடுங்கோலனாக அரசியற்றிக் கொண்டிருக்கும் காலத்தில் அவனுடைய புதல்வர் நால்வருக்கும் சுக்கிராச்சாரியர்புதல்வராகிய சண்டன், மர்க்கன் இருவருக்கும் கல்விகற்பித்துக் கொண்டிருந்தார். அந்நால்வருள் மூத்தவனாகிய பிரகலாதன் திருமாலையே பரம்பொருளாகக் கொண்டமையை அறிந்து சினந்தான். அவனைக் கொல்லும் பொருட்டுப் பல துன்பங்களைச் செய்தான். எதற்கும் பிரகலாதன் இறவாமையைக் கண்டு மனம் புழுங்கினான். ஒரு நாள் மாலையில் மகனையழைத்து நீ கூறியபடி திருமால் எங்கும் உள்ளவனாயிருப்பின் இத்தூணிற் காட்டுவாயாக எனக் கூறி ஒரு தூணைப் புடைத்தான். அதிலிருந்து தோன்றிய நரசிங்க மூர்த்தியோடெதிர்த்து அவரால் மாண்டான்.

தூது

69. சூரனெதிர் தக்கவுரை சொற்றிறுமாந் துற்றகன்றான்
மூரிமிகும் வாகு முருகேசா—ஓரின்
விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சோரா வன்க ணவன்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே! 'மூரிமிகும் வாகு - தேவரீரால் தூதாக அனுப்பப்பட்ட வீரவாகு தேவர், சூரன்எதிர் - சூரபதுமனுக்குமுன், தக்க உரை சொற்று - தகுந்த உரைகளைக் கூறி, இறுமாந்து உற்று அகன்றான் - இறுமாப்போடிருந்து திரும்பினார், ஓரின் - ஆராயுமிடத்து, வடு மாற்றம் - குற்றமான சொற்களை, வாய் சோரா வன்கணவன் - வாய் சோர்ந்தும் சொல்லாத உறுதி யுடையவனே, விடுமாற்றம் - அரசன் சொல்லியனுப்பிய சொற்களை, வேந்தர்க்கு உரைப்பான் - மற்ற வேந்தர்கட்கு உரைக்குந் தகுதியுடையவன்.

(வி-ம்.) தேவரீரால் சூரபன்மனிடத்திலே தூதாக அனுப்பப் பட்ட வீரவாகுதேவர் சூரனுக்கு முன்னே சொல்ல வேண்டிய சொற்களைக் கூறி மிகுந்த இறுமாப்போடு இருந்து திரும்பினார். குற்றமான சொற்களை வாய் சோர்ந்தும் சொல்லாத உறுதி யுடையவனே அரசன் சொல்லியனுப்பிய தூதுச் சொற்களை மற்றைய வேந்தர்கட்கு உரைக்குந் தகுதியுடையவன் என்பதாம்.

வீரவாகுதேவர் கதை

முருகக் கடவுள் சூரபன்மனிடத்திற்கு வீரவாகு தேவரைத் தூதாக அனுப்பிவைத்தார். சூரபன்மன் வீரவாகு தேவரைச் சிறிதும் மதிக்கவில்லை. தகுந்த இருக்கையும் கொடுக்கவில்லை. வீரவாகுதேவர் முருகக் கடவுளை எண்ணினார். உயர்ந்த இருக்கையொன்று வந்தது. அவ்விருக்கையில் களிப்போடு ஏறி யமர்ந்தார். சூரபன்மனைப் பார்த்து, "சயந்தன் முதலியவர்களைச்

சிறைவிடப் போகிருயா? அல்லது போருக்கு வரப் போகிருயா? உன்னுடைய கருத்து யாது?'' என்று கேட்டார். அவன் கேட்ட கேள்விகளுக்குத் தக்க விடைகளையுங் கூறினர். அவன் போர் செய்யுங் கருத்துடையவனுக விருத்தலை யறிந்து கொண்டு திரும்பினர்.

மன்னரைச் சேர்ந்தொழுகல்

70. மன்னனயி ராதுமெல்ல மல்குவித்தார் சைவநெறி
முன்னுவச வேசர் முருகேசா—இன்னதனுல்
போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கு மரிது.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, முன்னு வசவேசர்-எண்ணப்படுகிற வசவதேவர், மன்னன் அயிராது- அரசன் ஐயங்கொள்ளாமல், மெல்ல - மெதுவாக, சைவ் நெறி - சைவசமயத்தை, மல்குவித்தார் - சிறந்தோங்குமாறு செய்தார், இன்னதனுல் - இதனுல், போற்றின் - தம்மைக் காத்துக் கொள்ள விரும்பினுல், அரியவை போற்றல் - அரிய தவறுகள் நேராமல், பார்த்துக்கொள்ள வேண்டும், கடுத்தபின் - ஐயுற்ற பிறகு, தேற்றுதல் யார்க்கும் அரிது - அவர்களைத் தெளிவித்தல் எவர்க்கும் இயலாததாகும்.

(வி - ம்) வசவதேவர் விச்சலராசன் ஐயப்படாமல் சைவ நெறியைப் பரப்பினர். தம்மைக் காத்துக் கொள்ள விரும்பினுல் அரிய தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். அரசர்கள் ஐயங் கொண்ட பிறகு அவர்களைத் தெளிவித்தல் எவர்க்கும் முடியாது என்பதாம்.

வசவதேவர் கதை

இங்குளா புரியில் தோன்றிய வசவதேவர் கலியாணபுரியி லிருந்த சமண சமயத்தவனுகிய விச்சலராசன் வேண்டுகோளின்

படியே அவனை நல்வழிப்படுத்தி உலகத்தில் சைவ சமயத்தைப் பரப்புதற் பொருட்டு அமைச்சுத் தொழில் பூண்டார். சிவ சரணர்களை மிகுதியாக வழிபட்டு வந்தார். பொறாமை மிகுதிப் பட்ட சமணர்கள் அரசனுக்குத் துர்ப்போதனை செய்து கொண் டிருந்தார்கள். அதனைக் கேட்டு அரசன் ஐயப்படாமல், சைவ சமயமே மெய்ச் சமயம் எனத் துணியுமாறு, கள்ளக் கோலம் பூண்ட சமணர்களை மெய்யடியாராக்கல், மண் முதலியவைகளால் இயற்றப்பட்ட வஞ்சனை வடிவங்களை மாதவர்களாக்கல் முதலிய அளவிறந்த பல புதுமைகளைச் செய்து அரசனைத் தம் வழிப் படுத்தினர்.

குறிப்பறிதல்

71. இந்தனக்கே லாமரமேன் றான் தருமன் வீமனெண்ணம்
முந்தவையிற் றேர்ந்தே முருகேசா—மைந்தருள்ளும்
ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே, வீமன் எண்ணம் - வீமனுடைய உள்ளக்குறிப்பை, முந்து அவையில் தேர்ந்தே - முன்னே அவையில் அறிந்தே, தருமன் - தருமர் இந்தனக்கு - விறகிற்கு, ஏலா மரம் என்றான் - ஆகாத, மரமாகும் இது வென்று கூறினர், மைந்தருள்ளும் - மனிதர் கட்குள்ளேயும், அகத்தது - மனத்தில் உள்ளதை, ஐயப்படாது உணர்வானை - சிறிதும் ஐயமில்லாமல் தெரிந்து கொள்ளுகின்றவனை, தெய்வத்தோடு ஒப்பக் கொளல் - கடவுளுக்கு நிகராகக் கொள்ளுதல் வேண்டும்.

(வி - ம்.) எல்லாருங் கூடியிருந்த அவையில் வீமனுடைய எண்ணத்தைத் தருமர் தெரிந்து கொண்டு இம்மரம் விறகிற்குப் பயன்படமாட்டாது இதனைப் பிடுங்காதே என்று கூறினர். ஒருவருடைய உள்ளத்துணர்ச்சியைச் சிறிதும் ஐயமில்லாதவாறு

உணர்ந்து கொள்ளுகின்றவனைக் கடவுளுக்கு ஒப்பாகவே எண்ணிக் கொள்ளுதல் வேண்டும் என்பதாம். இந்தனத்துக்கு என்று முடிய வேண்டியது அத்துச் சாரியை தொக்கு நின்றது. இந்தனம் - விறகு.

வீமன் கதை

பாண்டவர் ஐவரும் விராட நகரத்தில் மறைந்திருக்கும் போது திரௌபதைமேற் காதல் கொண்ட கீசகன் அவளைத் துரத்திக் கொண்டு வந்தான். திரௌபதை விராடனுடைய அவைக்கு ஓடிவந்து அடைக்கலம் புகுந்தாள். கீசகனும் அங்கு வந்தான். நிகழ்ந்ததையுணர்ந்து அவ்விடம் வந்த வீமன் அளவிலாச் சினங்கொண்டான். கீசகனை அடித்துக் கொல்வதற் காகப் பிடுங்கும் நோக்கதோடு அரசவைக்குப் பக்கத்திலே யிருந்த பெரிய மரம் ஒன்றின் மீது பார்வையைச் செலுத்தினன். அவனுடைய குறிப்பையுணர்ந்த தருமர், "அம்மரம் விறகாக அடுப்பெரிப்பதற்குத் தகுதியானதாக மாட்டாது, அதனைப் பிடுங்காதே" என்று கூறி வீமனைத் தடுத்து விட்டார். அவ்வாறு தடுத்து நிறுத்தியிராவிட்டால் ஐவரும் வெளிப்பட்டு மீண்டும் காட்டிற்குச் செல்லுமாறு நேர்ந்திருக்கும்.

அவையறிதல்

72 சோற்றவிடைக் காடர்கவி தோற்றதுதேன்
னன்சபையின்
முற்றுசுவை யுற்றும் முருகேசா—வுற்றணுகா
அங்கணத்து ளுக்க வமிழ்தற்றாற் றங்கணத்த
ரல்லார்முற் கோட்டி கொளல்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, தென்னன் சபையில் - பாண்டியனுடைய அவையின்கண், சொற்ற இடைக்காடர் கவி-பாடிய இடைக்காடருடைய பாடலானது, முற்றுசுவையுற்றும் - நிறைந்த சுவையைப் பெற்றிருந்தும், தோற்றது - இழிவடைந்து விட்டது. உற்று அணுகா -

பொருந்திச் சேராத, தம் கணத்தர் அல்லார் முன்-தம் இனத்தவர் அல்லாதவர்கட்கு முன்னே, கோட்டி கொளல் - ஒரு பொருள் பற்றிப் பேசுதல், அங்கணத்துள் உக்க அமிழ்து அற்று - தூய்மையற்ற இடத்திலே சிந்திய அமிழ்தத்துக்கு ஒப்பானதாகும்.

(வி - ம்.) பாண்டியனுடைய பேரவையில் இடைக்காடருடைய செய்யுளானது நிறைந்த சுவையோடிருந்தும் இழிவடைந்து விட்டது. தமக்கு நிகரான அறிவில்லாதவர்களுடைய கூட்டத்தின்கண் ஒன்றைப் பேசுதல் சாக்கடைக்குள் கொட்டிய அமுதத்திற்கு ஒப்பானதாகும் என்பதாம்.

இடைக்காடர் கதை

குலேசபாண்டியன் என்பவன் கல்வியறிவுடையவனாக விருந்தான். இடைக்காடர் அவனைக் காணும் பொருட்டுச் சுவையுள்ள செய்யுட்கள் சிலவற்றை இயற்றிக் கொண்டு சென்றார். அரசனுடைய அவையிலே கூறினார். அச் செய்யுள்களிலுள்ள சுவையைப் பாண்டியன் அறிந்தான். ஆயினும் பொறாமையினால் இடைக்காடருக்கு எத்தகைய சிறப்புஞ் செய்யாமலிருந்தான். ஆகவே அவருடைய பாட்டுப் பயனற்றதாக முடிந்தது.

அவையஞ்சாமை

73. தாதையைவெல் வந்திமுனி தன்னையட்ட
வக்கிரன்றன்
முதுணர்வால் வென்றான் முருகேசா—கேதமிலா
ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு.

(இ-ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, அட்டவக்கிரன் - அட்டவக்கிர முனிவர் என்பவர், தாதையைவெல் வந்திமுனிதன்னை - தந்தையைச் சொற்போரிலே தோற்கடித்த

வந்திமுனிவரை, மூதுணர்வால் வென்ருன் - தம்முடைய முதிர்ந்த பேரறிவினுலே வெற்றிகொண்டார், கேதம் இலா- குற்றம் இல்லாத, அவை அஞ்சாமாற்றம் கொடுத்தல் பொருட்டு - அவையிலே அச்சமில்லாமல் மறுமொழிகூறும் பொருட்டு, ஆற்றின் அளவு அறிந்து கற்க - கற்கும் நெறியின் அளவைத் தெரிந்து நூல்களைக் கற்கவேண்டும்.

(வி - ம்.) அட்டவக்கிர முனிவர் என்பவர் தம்முடைய தந்தையைச் சொற்போரிலே வென்ற வந்திமுனிவர் என்பவரைத் தம்முடைய பேரறிவால் வென்ருர். அறிஞர்களுடைய அவை யிலே அஞ்சாமல் மறுமொழி கூறும்பொருட்டுக் கற்கவேண்டிய முறைப்படி கல்வியைக் கற்க வேண்டும் என்பதாம்.

அட்டவக்கிரர் கதை

அநேகபதர் என்னும் முனிவர் தம்முடைய மாணவர்கட்கு இரவும் பகலும் ஓய்வில்லாமல் மறைகளைக் கற்பித்துக்கொண் டிருந்தார். அவருடைய மனைவியாகிய சுசாதையினுடைய கருப்பத்திலிருந்து நெடுநாளாக வெளிப்படாமலிந்த அவ ருடைய புதல்வர், “இவ்வாறு ஓயாமல் கற்பித்துக் கொண்டிருந் தால் மாணுக்கர்கள் என் செய்வார்கள்? உறக்கத்தினுலே சந்தம் தவறுகின்றது” என்றனர். இதனைக்கேட்ட தந்தை, “நீ மறைப்பொருளைக் கற்பதற்கு இடையூருகிய மொழிகளைக் கூறியபடியால் எட்டுக்கோணமுடைய உடலோடு பிறப்பாயாக” என்று வசவுரை கூறினர். மனைவி விநம்பிய சில பொருள்களின் பொருட்டு மிதிலையிலே சனக மன்னன் நடத்திய வேள்விக்குச் சென்ருர். அங்கு வந்தி முனிவர் என்பவர் இவரை எதிர்த்துச் சொற்போர் செய்தார். அச் சொற்போரிலே இவர் தோற்றுப் போனுர். நாணத்தினுல் தம்முடைய ஊருக்குச் செல்லாமல் கடற்கரையை அடைந்து அங்குத் தங்கி யிருந்தார். அந்நாளில் இவருக்குப் புதல்வர் தோன்றினுர். அவர் தந்தையினுடைய வசவுரைப்படி எட்டுக் கோணலாகப் பிறந்தமையால் அட்ட கோண முனிவர் என்னும் பெயரை யடைந்தார். உதானர் என்னும் முனிவரிடத்திலே மறை முதலியவைகளைப் பயின்று

தேர்ச்சியடைந்தார். தந்தையினுடைய நிலைமையைக் கேள்வி யுற்றுச் சனகராசனுடைய அவையை அடைந்தார். வந்தி முனிவரோடு சொற்போரிட்டு அவரை வென்றார். அரசனால் போற்றப் பெற்றார். பிறகு தந்தையை அடைந்து நிகழ்ந்த மையைக் கூறினார். அவரை யழைத்துக் கொண்டு தம்முடைய இருப்பிடத்தை யடைந்தார்.

நாடு

74 எச்சிறப்பேய்ந் தென்னிலங்கை வீந்ததர சீனத்தால்
முச்சகமு மேத்து முருகேசா—மேச்சவே
ஆங்கமை வேய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.

(இ - ள்.) முச்சகமும் எத்தும் முருகேசா - மூவுலகத்தி னும் உள்ளவர்களால் போற்றப்படுகின்ற முருகப்பெருமானே, எச்சிறப்பு எய்ந்து என் - எத்தகைய சிறப்பைப் பெற் றிருந்தும் என்னபயன்? அரசு ஈனத்தால் - அரசனுடைய இழிந்த செய்கையால், இலங்கை வீந்தது-இலங்கை அழிந் தொழிந்தது, மெச்ச - வியக்குமாறு, வேந்து அமைவு இல்லாத நாடு - நல்ல அரசன் அமையப் பெற்றிராத நாடு, ஆங்கு அமைவு எய்தியக் கண்ணும் பயம் இன்று - முற் கூறியபடி நன்மைகளெல்லாம் அமையப்பெற்றிருந்தாலும் பயனற்றதாகும்.

(வி - ம்.) எத்தகைய சிறப்பைப் பெற்றிருந்துதான் என்ன பயன்? இலங்கையானது அரசனுடைய இழிந்த செய்கையால் அழிந்தொழிந்தது; நல்ல அரசனைப் பெற்றிராத நாடு அமைய வேண்டியவைகளெல்லாம் முறைப்படி அமையப் பெற்றிருந்தா லும் அதனால் பயனடைய மாட்டாது என்பதாம்.

இலங்கையின் கதை

இலங்கையானது எல்லா வளங்களும் நன்கமையப் பெற்ற தாய்ச் சிறந்து விளங்கியது. ஆயினும் அதனுடைய அரசனாக விளங்கிய இராவணன் பிறர்மனை நயத்தல் முதலிய பொல்லாத செயல்களில் ஈடுபட்டபடியால் அனுமானால் எரியூட்டப் பெற்றும் வேறு பலவகையாகவும் அழிந்தொழிந்தது.

அரண்

75 நம்மரனார் செய்புன் னகையில்வெந்த வேயசுரர்
மும்மதிலு மேனாண் முருகேசா—அம்ம
எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்ல தரண்.

(இ - ள்.) முருகேசா-முருகப்பெருமானே!, நம் அரனார் செய் புன் நகையில் - நம்முடைய சிவபெருமான் செய்த புன்னகையினால், அசுரர் மும்மதிலும் மேல்நாள் வெந்த - அரக்கர்களுடைய மூன்று மதில்களும் முற்காலத்திலே எரிந்தழிந்தன; அம்ம-வியக்கத்தக்கவாறு, எனைமாட்சித்து ஆகியக் கண்ணும்-எவ்வளவு பெருமையுடையதாக விளங்கிய விடத்தும், வினைமாட்சி இல்லார்கண் - நற்செய்கை இல்லாதவர்களிடத்திலே, அரண் இல்லது - அரண் பயனற்றதாக முடியும்.

(வி - ம்.) சிவபெருமான் செய்த புன்னகையினால் அரக்கர்களுடைய மூன்று மதில்களும் முற்காலத்திலே வெந்தழிந்தன; எவ்வளவு சிறப்புடையதாக விளங்கியவிடத்தும் நற்செய்கை இல்லாதவர்களிடத்திலே அரண் பயனற்றதாக முடியும் என்பதாம். ஏ: அசைநிலை.

முப்புர அசுரர்கள் கதை

சூரபன்மனுடைய தம்பியாகிய தாரகனுக்குப் பிறந்த தாரகாக்கன், கமலாக்கன், வித்துன்மாலி என்னும் மூவரும் கோடியாண்டுகள் தவம்புரிந்து நான்முகனுல் பொன் வெள்ளி இரும்புகளாலாகிய மூன்றரண்கள் முறையே விண்ணுலகம் நடுவிடம் நிலம் என்னும் மூன்றிடங்களினும் நிலைபெற்றிருந்து வேண்டுமிடங்கட்கு உடன் வரவும் அவை ஆயிரம் ஆண்டுகட்கு ஒரு முறை மூன்றே முக்கால் நாழிகை நேரம் ஒருங்கு சேரவும், அக்காலத்தில் ஒருகணை விடுத்து அழித்தாலல்லாமல் வேறு எவ்வகையாலும் அழியா திருக்கவும் திருமால் முதலிய தேவர்கள் எதிர்த்தால் தமக்குத் தோற்றோடவும் வரம் பெற்று. மயனுல் வகுக்கப்பட்ட மாளிகைகளோடு கூடிய அவ்வரண்களில் இருந்து கொண்டு திருநீறு சிவகண்மணி முதலியன அணிந்தவராய்த் திருவைந்தெழுத்தை முறைப்படி உருவேற்றுவோராய்ச் சிவபெருமானை வழிபட்டு வந்தனர். இவர்கள் அரக்கர் குலத்தில் தோன்றிய படியால் தேவர்களுக்குத் தீமை செய்து கொண்டு திரிந்தார்கள். திருமால் புத்த குருவாகப் போய் நாரதரைக் கொண்டு அவ்வசுரர் மனைவியருடைய கற்பை யழித்ததுமல்லாமல், தாம் சிவபூசை முதலியவைகளால் பயனில்லையென்று போதித்து அசுரர்களைச் சிவ வழிபாட்டிலிருந்து நழுவச் செய்தார். பிறகு திருக்கைலையை அடைந்து சிவபெருமான் கட்டளைப் படியே நிலம் முதலிய தெய்வீகம் உள்ள பொருள்களையெல்லாம் தேர் முதலிய உறுப்புக்களாக்கித் தாம் கணையாகினர். சிவபெருமான் நான்முகனுற் செலுத்தப்பட்ட அத்தேரில் எழுந்தருளினர். முப்புர அசுரர்களுடைய நிலைமையை நோக்கி நகைத்தார். அவ்வளவில் முப்புர அரண்களும் தீயால் எரிந்து ஒழிந்தன.

பொருள்செயல்வகை

76 மன்னுகிழி பெற்றகுல பூடணனுன் மல்கினவே
முன்னுமற மேல்லாம் முருகேசா—துன்னியதோர்
குன்றேறி யானைப்போர் கண்டற்ருற் றன்கைத்தோன்
றுண்டாகச் செய்வான் வினை.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே! மன்னு கிழி பெற்ற குலபூடணனால் - நிலைபெற்ற உலவாக் கிழியைப் பெற்ற குலபூடணபாண்டியனால், முன்னும் அறம் எல்லாம் மல்கின - எண்ணுகின்ற அறங்களெல்லாம் மிகுதிப்பட்டன. தன் கைத்து ஒன்று உண்டாகச் செய்வான் வினை - தன் கையிலே பொருளானது இருக்க ஒரு காரியத்தைச் செய்பவனுடைய செயல், துன்னியது ஓர் குன்று ஏறி - பொருந்தியதாகிய ஒப்பற்ற சிறுமலையின் மீது ஏறி நின்று, யானைப் போர் கண்டற்று - யானைப் போரைப் பார்த்தாற் போன்றதாம்.

(வி - ம்.) உலவாக் கிழி பெற்ற குலபூடண பாண்டியனால் அறங்ளெல்லாம் மிகுதிப்பட்டு விளங்கின. தன் கையிலே பொருளிருக்க ஒருவன் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்குதல் மலை மீது ஏறி யானைப் போரைக் கண்டதனுக்கு நிகராகும் என்பதாம். மலை மீதிருப்பவனுக்கு யானைப் போரால் துன்பம் உண்டாகாமை போன்று கையிலே பொருளுடையானாகக் காரியஞ் செய்வானுக்குந் தொல்லையுண்டாகாது என்க.

குலபூடண பாண்டியன் கதை

குலபூடண பாண்டியன் சிவதருமங்களை விடாது செய்கிறோம் என்று செருக்கடைந்தான். அந்தணரை மதியாது நடந்து கொண்டான். அவர்கள் மனம் வருந்தி வேள்வி முதலியவைகளைச் செய்யாமல் நிறுத்திவிட்டார்கள். அதனால் மழை குன்றி விளைவுகள் குறைந்தன. ஆகவே குடிகள் பிறநாடு சென்று பிழைக்கத் தொடங்கினார்கள். இதனை உணர்ந்த பாண்டியன் மதுரைக்கடவுளைப் போற்றி உலவாக்கிழி பெற்றான். அப்பொருளைக் கொண்டு குடிகளைக் காத்ததோடு அறங்களையுஞ் செய்தான். அதனால் நாடு செழித்து அறம் வளர்ந்தோங்கியது.

படைமாட்சி

77 பற்றுநிரை மீட்டெதிர்த்த பார்த்தனுற் புண்பட்டார்
முற்றினவர் யாரும் முருகேசா—சுற்றி
ஒலித்தக்கா லென்னு முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும்

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, முற்றினவர் யாரும் - வந்து எதிர்த்துப் போர்செய்யத் தொடங்கியவர்களனைவரும், பற்றுநிரை மீட்டு - பகைவர்கள் கைப்பற்றிய ஆநிரையை மீட்டு, எதிர்த்த பார்த்தனல் புண்பட்டார் - எதிர்த்துப் போரிட்ட அருச்சுனனுல் புண்பட்டு வருந்தினர்கள். சுற்றி - சூழ்ந்து, எலிப்பகை உவரி ஒலித்தக்கால் என்னும் - எலியாகிய் பகைகள் கூடிக்கடல் போல ஒலித்தாலும் யர்து தீங்கு ஏற்படும், நாகம் உயிர்ப்பக் கெடும் - பாம்பு மூச்சுவிட்ட அளவிலே அவைகள் கெட்டொழியும்.

(வி - ம்.) விராட நகரத்திலே ஆநிரையைக் கவர வந்த துரியோதனன் கூட்டத்தினர் எதிர்த்துப் போரிட்ட அருச்சுனனுற் புண்ணடைந்தார்கள். எலியாகிய பகைகள் கடல் போலக் கூடி ஆரவாரஞ் செய்தாலும் அதனுல் யாது பயன்? அப்பகை பாம்பு மூச்சுவிட்ட அளவிலே கெட்டொழியும் என்பதாம்.

பசுநிரை கவர்ந்த கதை

பாண்டவர்கள் விராட நகரத்தில் இருந்தால் அவர்களைக் கண்டுபிடித்து மீண்டும் காட்டிற்கே விரட்டி விடலாம் என்று எண்ணிய துரியோதனன் தன்னுடைய படையை அனுப்பி விராட மன்னனுடைய ஆநிரையைக் கைபற்றச் செய்தான். அப்பொழுது அருச்சுனன் அப்படையோடெர்த்திதுப் போரிட்டு

ஆநிரையை மீட்டான். பின்னர்த் தனியனாக எதிர்த்த ஆண்மை மிக்க அருச்சுனனோடு போரிட்ட துரோணர் முதலிய பலரும் அருச்சுனனால் நன்கு அடிக்கப்பட்டுத் தோற்றோடினார்கள்.

படைச்செருக்கு

78 மாலுறுத்தி வீடுமன்பான் மாண்டசிவே தற்கயர்ந்தார்
மோலிபுனை மன்னர் முருகேசா—சாலப்
புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து.

(இ - ள்) முருகேசா - முருகப்பெருமானே!, வீடுமன் பால் மால் உறுத்தி - வீடுமரிடத்திலே கலக்கத்தை யுண்டாக்கி, மாண்ட சிவேதற்கு - இறந்து போன சிவேதன் பொருட்டு, மோலிபுனை மன்னர் அயர்ந்தார் - முடியை அணிந்த அரசர்கள் தளர்ந்து வருந்தினார்கள், சால - மிகவும், புரந்தார் கண் நீர் மல்க - தம்மைக் காத்தவர்களுடைய கண்களிலே நீர் பெருகுமாறு, சாகின் - சாகப் பெற்றால், சாக்காடு இரந்துகோள் தக்க துடைத்து - சாவும் இரந்தாவது பெற்றுக் கொள்ளக் கூடிய சிறப்புடைய தாகும்.

(வி - ம்.) வீடுமன் முதலியோருக்குக் கலக்கத்தை உண்டாக்கி மாண்டு போன சிவேதன் பொருட்டு அரசர்கள் தளர்ந்து வருந்தினார்கள், தம்மைக் காத்தவர்களுடைய கண்களிலே நீர்மல்குமாறு ஒருவர் சாகப் பெற்றால் அத்தகைய சாக்காடானது இரந்தாவது பெற்றுக் கொள்ளக் கூடிய சிறப் புடைய தாகும் என்பதாம்.

சிவேதன் கதை

சிவேதன் என்பவன் விராட மன்னனுடைய புதல்வன். இவன் பாரதப் போரில் பாண்டவர்களுடைய படைக்குத்

தலைவனாக ஏற்படுத்தப் பெற்றான். முதல் நாள் போரில் எண்ணிறந்த படைகளை யழித்துத் தன்னுடைய ஆண்மையைக் காட்டினான். இவனுடைய பேராண்மையைக் கண்டு வீடுமரும் அஞ்சிக்கலங்கினார். பிறகு வீடுமருடைய வஞ்சனையால் அவன் மடிந்தான். சிவேதனுடைய வீரத்தைப் பாராட்டித் தருமன் முதலிய அரசர்கள் உள்ளம் வருந்தினார்கள்.

நட்பு

79 மேவ விதூமனொடு விண்ணிழிந்திம் மண்ணடைந்தார்
மூவரகல் வஞ்சி முருகேசா—தாவில்
அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்க
ணல்ல லுழப்பதா நட்பு.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே! மூவர் அகல்வு அஞ்சி - விதூமனைப் பிரியாத நட்புப் பூண்ட மாலியவான், புட்பதந்தன், பலோற்கடன் என்னும் மூவரும் விதூமனைப் பிரிந்திருப்பதற்கு அஞ்சி, விதூமனொடு - அவ்விதூமனுடனே, விண் இழிந்து - விண்ணுலகத்திலிருந்தும் இறங்கி, இம்மண்மேவ அடைந்தார் - இம் மண்ணுலகத்தைப் பொருந்துமாறு அடைந்தார்கள்; தாவில்-குற்றமற்ற, அழிவின் அவை நீக்கி-அழிவைத்தரும் தீமைகளிலிருந்து விலக்கி, ஆறுஉய்த்து- நல்ல வழியில் நடக்கச்செய்து, அழிவின்கண் - அழிவு வந்தவிடத்து, அல்லல் உழப்பதாம் நட்பு - துன்பப்படுவதே நட்பாகும்.

(வி - ரை.) விதூமனைப் பிரிவதற்கு அவனுடைய நண்பர்கள் மூவரும் அஞ்சி அவனோடு மண்ணுலகத்தை அடைந்தார்கள். அழிவைத் தரும் தீமைகளில் இருந்து விலக்கி நல்வழியில் நடக்கச் செய்து அழிவு வந்தவிடத்துத் தாமும் துன்பப்படுவதே நட்பாகும் என்பதாம்.

மூவர் கதை

வசுக்களில் ஒருவனாகிய விதூமன் என்பவன் நான்முக னுடைய அவையிலே நடித்து நின்ற அலம்புசையின் ஆடை காற்றால் விலகுங்கால் அவளைக் காதலொடு பார்த்த குற்றங் காரணமாக நிலவுலகிலே அவளைச் சேருமாறு நான்முகன் வசவுரை புகன்றவாறே சதாநீகன் என்னும் அரசன்பால் சகத்திராணீகன் என்னும் பெயரோடு பிறக்கத்துணிந்த பொழுது அவனோடு பிரியாத நட்புப் பூண்ட மாலியவான், புட்பதந்தன் பலோற்கடன் என்னும் மூவரும் பிரிவையஞ்சித் தாமும் விண்ணுலகத்தை யிழந்து அவனோடு மண்ணுலகத்திற் பிறந்து பழகியிருந்து முடிவில் அவனோடு விண்ணுலத்தை யடைந் தார்கள்.

நட்பாராய்தல்

80 வஞ்சகவா னந்தனட்பாற் சூரியசன் மாவாளா
முஞ்சுமிடர் பெற்றான் முருகேசா—நெஞ்சதனில்
ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, சூரிய சன்மா-சூரியசன்மா என்பவன், வஞ்சக ஆனந்தன் நட்பால்- வஞ்சகத் தன்மை பொருந்திய ஆநந்தன் என்பவனுடைய நட்பினால், வாளா - வீணாக, முஞ்சும் இடர் பெற்றான் - இறத்தலுக் கேதுவாகிய துன்பம் உண்டாகப் பெற்றான்; நெஞ்சதனில் - உள்ளத்தில், ஆய்ந்து ஆய்ந்து கொள்ளா தான் கேண்மை - நன்றாக ஆராய்ந்து நட்புக் கொள்ளாதவ னுடைய நட்பு, கடை முறை - இறுதியில், தான் சாம் துயரம் தரும்-தான் சாவதற்குக் காரணமாகிய துன்பத்தை உண்டாக்கி விடும். முஞ்சுதல் - இறத்தல்.

(வி - ம்.) வஞ்சகம் பொருந்திய ஆனந்தன் என்பவனுடைய நட்பினால் சூரியசன்மா என்பவன் சாதற் கொத்த துன்பத்தை யடைந்தான். நன்றாக ஆராய்ந்து பார்த்து அதன் பிறகு மேற் கொள்ளாத நட்பு இறுதியில் தான் இறக்கக்கூடிய துன்பத்தினை உண்டாக்கும் என்பதாம்.

சூரியசன்மா கதை

கௌசிக நாட்டிலே விக்கிரம நகரத்திலே சூரியசன்மன் என்னும் பெயருடைய அந்தணன் ஒருவன் இருந்தான். ஒரு நாள் அவனுடைய பகைவனாகிய ஆனந்தன் என்பவன் சூரியசன்மாவை வஞ்சிக்கக் கருதி வந்து வணங்கி நின்றான். சூரியசன்மா ஆனந்த னுடைய வஞ்சகத்தினை உணர்ந்து கொள்ளாமல் அவனோடு நட்புக்கொண்டான். அவன் ஓர் இரவில் சூரியசன்மாவைப் பார்த்து, "நம்முடைய ஊர் மலைக்கு அண்மையிலிருத்தலின் தெருவில் வேங்கைகள் சுற்றித் திரிகின்றன. நான் அவைகள் வருதலைப் பார்த்துக் கூறுகிறேன். நீ அவைகளைக் கொல்வா யாக" என்று கூறிச்சென்றான். பிறகு ஒரு பசுவைப் புலித்தோல் போர்த்துத் தெருவிலே கொண்டு வந்து நிறுத்திவிட்டு சூரியசன்மாவை அழைத்துவந்து காட்டினான். சூரியசன்மா அது புலியெனத் துணிந்து அம்பு எய்து கொன்றான். பிறகு ஆனந்தன், "நீ இங்கே புலியைப் பார்த்துக் கொண்டிரு, நான் உன் வீட்டிற்குச் சென்று கள்ளர்கள் வராதபடி பார்த்துக் கொண்டு வருகிறேன்" என்று கூறி விட்டுச் சூரியசன்மாவி னுடைய வீட்டிற்குச் சென்றான். சூரியசன்மனுடைய மனைவி யைப் பார்த்து, "இங்கே கள்ளர்கள் வருவார்கள் வெளியே வருக" என்று அவளை அழைத்துக் கொண்டுபோய் அவளுடைய மகன் வீட்டில் இருக்கச் செய்துவிட்டு, மகனை மனைவியோடு சூரியசன்மனுடைய வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்து இருக்கச் செய்துவிட்டு அவனைப் பார்த்துத், "தம்பீ! கள்வர்கள் இங்கே வந்து உன்னுடைய தந்தையைப் போலக் கூப்பிடுவார் கள். நீ கதவைத் திறவாதே" என்று வற்புறுத்திக் கூறிவிட்டுச் சூரியசன்மனிடம் போய், "உன்னுடைய மனைவி வேறு ஆடவனைச் சேர்ந்திருக்கிறாள்" என்று சொன்னான். அதனைக் கேட்ட

சூரியசன்மா சினத்தோடு தன்னுடைய வீட்டிற்குச் சென்று கதவைத் தட்டினன். கதவு திவாமற் போகவே சுவரேறிக் குதித்தான். படுத்திருந்த இருவரையும் மகனென்றும் மருமகளென்றும் உணர்ந்து கொள்ளாமல் வெட்டினன். பிறகு மகனும் மருமகளும் என்று உணர்ந்து வருந்தினன்.

இத்தகைய வஞ்சனைகளைச் செய்த ஆனந்தன் ஊரார்கட்குச் செய்தி தெரியப் படுத்தினன். நகரத்து அந்தணர்கள் ஒருங்கே திரண்டு வந்து சூரியசன்மாவைப் பார்த்து, "ஏன் இத்தகைய கொடுமையைச் செய்தாய்?" என்று உசாவினர்கள். சூரியசன்மா இஃது ஆனந்தனுடைய வஞ்சனையால் நிகழ்ந்தது என்று கூறினன். அவர்கள் தன் மீது கொண்ட ஐயம் நீங்குமாறு திருவைந்தெழுத்தின் வலிமையால் கேதார நாதர் திருமுன்புள்ள காளையேயன்றி மதில்களிலுள்ள காளைகளும் புல்லருந்தச் செய்தான். பசுவும் மருகியும் மகனும் பிழைக்கப் பெற்றுக் குற்றத்திலிருந்து நீங்குனன்.

பழமை

81 நம்பனமர்க் கேன்றவா ணற்புரந்தான் றேன்மை யுன்னி
மோய்ம்புதோலே யாமன் முருகேசா—அம்புவியில்
பேதைமை யோன்ரே பெருங்கிழமை யேன்றுணர்க
நோதக்க நட்டார் சேயின்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, நம்பன் - சிவபெருமான், தொன்மை யுன்னி - பழமையை நினைத்து, மொய்ம்பு தொலையாமல் - வலிமை கெடாமல், அமர்க்கு ஏன்ற வாணன் புரந்தான் - போர் செய்ய வேண்டுமென்று எதிர்த்த வாணசுரனைக் காப்பாற்றி யருளினர்; அம்புவியில் - அழகிய நிலவுலகத்தில், நோதக்க - வருந்தத் தக்க செயல்களை, நட்டார் செயின் - நண்பர்கள் செய்வார்களானல் பேதைமை ஒன்ரே-அறியாமை என்ருவது, பெருங்கிழமை

என்று - மிகுந்த உரிமை என்றுவது, உணர்க - அறிந்து கொள்க.

(வி - ம்.) சிவபெருமான் போர் செய்ய வேண்டுமென்று எதிர்த்த வாணுசுரனைப் பழமையை நினைத்து வலிமை குலையாமல் காத்தார்; வருந்தத் தக்க காரியங்களை நண்பர்கள் செய்வார்களாயின் அதனை அறியாமை என்றுவது உரிமை யென்றுவது கொள்ளவேண்டுமென்பதாம்.

வாணுசுரன் கதை

வாணுசுரன் என்பவன் நாள்தோறும் ஆயிரம் சிவலிங்கங்களை வழிபட்டு வந்தான். அதனுல் சிவபிரான் அவனுக்குக் காட்சி கொடுத்தருளினுர். அப்பொழுது அவன் குடமுழா முழக்கினுன். சிவபெருமான் மகிழ்ந்து ஆயிரங் கைகளும் அவன் விரும்பியவாறே தீக்கோட்டையும் அளவற்ற பொருளும் பேராற்றலும் பிறவுங் கொடுத்தருளினுர். அவன் திருமால் முதலிய தேவர்களை வென்று நாள்தோறுந் திருக்கைலைக்குப் போய் வழிபாடு செய்து கொண்டு வந்தான். ஒரு நாள் திருக்கூத்துக் காட்சி தந்தருளும் போது ஆயிரங்கைளாலும், குடமுழா முழக்கி அப்பெருமான் உமாதேவி பொருந்திய திருவோலக்கத்தோடு தனது வாயிலில் நாள் தோறுங் காட்சி தந்து வீற்றிருக்க வரம் பெற்றுன். அவ்வாறே வீற்றிருக்குங் காலத்தில் ஒரு நாள் பெருமானைப் பார்த்து, "திருமால் முதலிய தேவர்களும் தோற்றுவிட்டார்கள். என்னுடைய தோளின் தினவு நீங்குமாறு தேவரீரோடு போர் செய்ய எண்ணினேன்" என்று கூறினுன். பெருமான் தம்மிடங் கொண்ட பழைய அன்பை எண்ணித் தாம் அவனை ஒறுத்தல் தக்கதன்று என்று முடிவு செய்தார். அவனைப் பார்த்து, "முன்பு தோற்ற திருமால் இப்போது கண்ணுகத் தோன்றியுள்ள பிறப்பில் உபமன்னியுவால் நம்மை வழிபட்டு ஆற்றல் மிகுந்திருக்கிறுர். அவர் வந்து உன்னேடு போரிட்டு வெல்வார் என்று கட்டளையிட்டருளினுர். இவ்வாறிருக்கும்போது கண்ணபிரானுடைய பேரனுகிய அநிருத்தனை வாணுசுரன் மகள் உசை என்பவள்

கனவிலணைந்து புலம்பியதால், அவனைத் தூங்கும் போது சித்திர லேகை என்னுந் தோழி கவர்ந்து வந்து கூட்டுவித்தமையை வாணாசுரன் உணர்ந்து அநிருத்தனைச் சிறையிலிட்டான். கண்ணபிரான் போருக்கு வந்தபோது வாணாசுரனுடைய கைகளில் நான்கைத் தவிர மற்றவைகளையெல்லாம் அறுத்து வீழ்த்தினார். பிறகு சிவபிரான் வாணாசுரனைப் பார்த்துத் "தோளின் தினவு நீங்கியதா?" என்று உசாவினார். முன் போலவே கைகளைக் கொடுத்துத் திருக்கைலைக்குச் சென்றார். இங்கு வாணாசுரன் தம்மை எதிர்க்க விரும்பியதை இறைவன் அறியாமையென்றோ உரிமையென்றோ கொண்டார்.

தீநட்பு

82 இன்னலே பல்குநம்பா லென்று விபீடணன்றன்
முன்னவனை நீத்தான் முருகேசா—துன்னிப்
பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்ற லினிது.

(இ-ள்.) முருகேசா-முருகப்பெருமானே!, விபீடணன்-விபீடணனானவன், இன்னலே பல்கும் நம்பால் என்று-நாம் இராவணனையே பற்றிக் கொண்டிருந்தால் நமக்குத் துன்பமே மிகுதிப்படும் என்று, தன் முன்னவனை நீத்தான்-தன் தமையனாகிய இராவணனை விட்டுப் பிரிந்தான்; துன்னி - பொருந்தி, பருகுவார் போலினும் - அன்பு மிகுதியால் பருகுவார் போலத் தோன்றினாலும், பண்பு இலார் கேண்மை - நல்லியல்பு இல்லாதவர்களுடைய நட்பு, பெருகலில் குன்றல் இனிது - மிகுதிப்படுவதைவிடக் குறைதலே நல்லதாகும்.

(வி - ம்.) நாம் இராவணனைப் பற்றிக் கொண்டிருந்தால் துன்பமே மிகுதிப்படுமென்று விபீடணன் தன்னுடைய தமையனை விட்டுப் பிரிந்தான்; அன்புமிகுதியாற் பருகுவார் போலக் காணப்

பட்டாலும் நல்லியல்பு அற்றவர்களுடைய நட்பானது மிகுதிப் படுவதைப் பார்க்கினும் குறைதலே நல்லது என்பதாம்.

விபிடணன் கதை

விபீடணன் இராவணனுக்கு உறுதி மொழிகளைப் பன்முறை யுரைத்தும் இராவணன் உடன்படாதபடியினால், நாம் இவனோடு கலந்து நிற்போமாயின் நமக்குத் துன்பமே விளையும் என்று முடிவுசெய்து இராவணனை விட்டுப் பிரிந்து இராமபிரானிடம் அடைக்கலம் புகுந்தனன். அவ்வாறு விபீடணன் இராவணனை விட்டுப் பிரிந்தபடியினால் நலம் பெற்றான்.

கூடாநட்பு

83. நேசன்போற் காடுவெட்டி நேரியன்றென் னற்றழுவி
மோசமே செய்தான் முருகேசா—மாசின்
மனத்தி னமையா தவரை யெனைத்தொன்றுஞ்
சொல்லினாற் றேறற்பாற் றன்று.

(இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே!, காடு வெட்டி நேரியன் - காடு வெட்டிய சோழன், நேசன் போல் தென்னன் தழுவி - நட்புடையவனைப்போல அரசபுரந்தர பாண்டியனிடத்திலே பொருந்தியிருந்து, மோசமே செய் தான் - பிறகு ஏமாற்றிவிட்டான், மாசின்-குற்றத்தினாலே, மனத்தின் அமையாதவரை - மனத்தோடு பொருந்தாதவர் களை, சொல்லினால் - அவர்கள் சொல்லும் சொற்களைக் கொண்டு, எனைத்து ஒன்றும் - எத்தகைய ஒரு செயலினு லும், தேறல் பாற்று அன்று - நம்பித் தெளியக் கூடாது.

(வி - ம்.) காடுவெட்டி சோழன் நண்பனைப் போல நடித்து அரசபுரந்தர பாண்டியனை மோசஞ் செய்தான்; மனத்தொடு பொருந்தாமல் பழகுகின்றவர்களை அவர்கள் கூறுஞ் சொற் களைக் கொண்டு எத்தகைய ஒரு செயலினும் நம்பித் தெளியக் கூடாது என்பதாம்.

காடு வெட்டிய சோழன் கதை

அரசபுரந்தர பாண்டியனிடத்திலே பகை கொண்ட காடு வெட்டிய சோழன் அன்புடையவனைப்போலப் பாண்டியனிடத்திலே புறத்தே உறவாடி, "என் மகளை உனக்குத் தருவேன் என்று உறுதிமொழி கூறினன். பிறகு அவன் தம்பியாகிய அரசசிங்க பாண்டியனைத் தன் வழிப்படுத்திக் கொண்டு தன் மகளை அவனுக்குத் திருமணஞ் செய்து கொடுத்து வஞ்சகமாக அவனுக்கும் அரச புரந்தர பாண்டியனுக்கும் பகையை உண்டாக்கி வரலாயினன். மனத்தொடு பொருந்தாமற் பேசுகின்றவர்களுடைய பேச்சை நம்புதல்கூடாது என்பது இவன் செயலால் விளங்கியது.

பேதைமை

84. வேதசன்மா பல்கலையின் மிக்குமுனி வர்ப்பழிப்பான்
மூதரக்க ஞனன் முருகேசா—காதலினல்
ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே !, வேதசன்மா - வேதசன்மா என்னும் அந்தணன், பல்கலையின் மிக்கும்-பல கலைகளை நன்கு கற்றுணர்ந்திருந்தும், முனிவர்ப் பழிப்பான் - முனிவர்களைப் பழித்துக் கொண்டிருந்தபடியினலே, மூதரக்கன் ஆனன் - அவர்கள் வைத வசவால் பெரிய அரக்கனுக மாறிவிட்டான்; காதலினல் விருப்பத்தோடு, ஓதி உணர்ந்தும் - நூல்களைக் கற்றுணர்ந்தும், பிறர்க்கு உரைத்தும் - மற்றவர்கட்குப் போதித்தும், தான் அடங்காப் பேதையில் - தான்மட்டும் அவ்வழியில் அடங்கி நடவாத அறிவற்றவனைப் போல, பேதையார் இல்-அறிவற்றவர்கள் இல்லை.

(வி - ம்.) வேதசன்மா என்பவன் பல கலைகளையும் நன்கு ஓதியுணர்ந்திருந்தும் முனிவர்களைப் பழித்தபடியினலே பெரிய அரக்கனுனன்; விருப்பத்தோடு நூல்களை ஓதியுணர்ந்தும்

பிறர்க்குப் போதித்தும் தான்மட்டும் அவ்வழியில் அடங்கி நடவாதவனைப் போல அறிவற்றவன் இல்லை யென்பதாம்.

வேதசன்மாவின் கதை

கௌசிகன் வழிமுறையிற் பிறந்த வேதசன்மா என்னும் அந்தணன் மனமொழி மெய்கள் அடங்குவதற்குரிய அறிவு நூல்களைக் கற்றிருந்தான். பிறர்க்குப் போதிப்பதினும் வல்லவனாக இருந்தான். ஆயினும் அவனுடைய உள்ளம் அடங்கி நிற்கவில்லை. பேதைமையால் கற்றோர் பலரையும் இழித்துரைத்துக் கொண்டு திரிந்தான். ஒருநாள் அரச அவையில் சில முனிவர்களோடு வீணே சொற்போரிட்டான். அதனால் அவர்கள் சினங்கொண்டு வசவுரை வழங்கினார்கள். அவ்வசவுரையினால் வேதசன்மா அரக்கனானான்.

புல்லறிவாண்மை

85. ஓகையினால் வேதா வுரையையுமேள் ளிச்சுதன்மன்
மூகையனாய்ச் சோர்ந்தான் முருகேசா—வாகை
அருமறை சோரு மறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, சுதன்மன் - சுதன்மன் என்பவன், ஓகையினால் - மகிழ்ச்சிப் பெருக்கினால், வேதா உரையையும் எள்ளி-நான்முகனுடைய உரையையும் இகழ்ந்து, மூகையனாய் சோர்ந்தான் - ஊமையனாகித் தளர்வடைந்தான்; வாகை - வெற்றி பொருந்திய, அருமறை சோரும் அறிவு இலான்-அரிய மறைப் பொருளை உள்ளத்திலே வைத்துக் காக்காமல் சோர்ந்து வெளிப்படுத்தும் அறிவில்லாதவன், தனக்குத்தானே பெருமிறை செய்யும் - தனக்குதானே பெருந்தீங்கு செய்து கொள்வான்.

(வி - ம்.) சுதன்மன் என்னும் அந்தணன் மகிழ்ச்சிப் பெருக்கினால் நான்முகனுடைய உரையையும் இகழ்ந்து

ஊமையாகித் தளர்ச்சியடைந்தான்; அரிய மறைப்பொருளை உள்ளத்திலே வைத்துக் கொள்ளாமல் சோர்ந்து வெளிப் படுத்தும் அறிவில்லாதவன் தனக்குத் தானே பெருந் தீங்கைச் செய்து கொள்வான் என்பதாம்.

சுதன்மன் கதை

காசுமீர நாட்டையாண்ட வச்சிரதேய மன்னனுடைய வேள்வியாசானுகிய சுதன்மன் திருமாலை வழிபட்டு அரிய கல்வியைக் கற்றிருந்தான். ஆயினும் அடக்கமாக நடந்து கொள்ளவில்லை. கற்றுணர்ந்த பெரியோர்கள் பலரையும் இழித்துரைத்து வந்தான். இதனையுணர்ந்த நான்முகன் இரக்கங் கொண்டான். அந்தண வடிவத்தோடு வந்து நல்லறிவுச் சுடர் கொளுத்தினுன். நான்முகனுடைய மொழியையுங் கேளாது இகழ்ந்தான். நான்முகன் வசவுரை வழங்கவே வாய் பேச முடியாமல் ஊமையானுன்.

இகல்

86. ஆதியையும் வெல்வான் சலந்தரன்சென் ருழியெஃக
மோதமுடி வுற்ருன் முருகேசா—ஓதில்
இகலின் மிகலினி தேன்பவன் வாழ்க்கை
தவலுங் கேடலு நணித்து.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, ஆதியை யும் வெல்வான் - சிவபிரானையும் வெல்லும் பொருட்டு, சலந்தரன் சென்று - சலந்தரன் போய், ஆழிஎஃகம் மோத முடிவுற்ருன் - உருளைப்படையானது மோதுதலால் இறந் தொழிந்தான், ஓதில் - கூறுமிடத்து, இகலின் - பகை கொள்ளுதலில், மிகல் -மிகுதிப்படுதல், இனிது என்பவன் வாழ்க்கை- இனிமையானது என்று பகைகொள்பவனுடைய வாழ்க்கை, தவலும்-தவறிப் போதலும், கெடலும்-அழிந்து போதலும், நணித்து - விரைவிலே உண்டாவனவாம்.

(வி - ம்.) சலந்தரன் சிவபெருமானையும் வெல்லும் பொருட்டுச் சென்று ஆழிப்படையானது தாக்க அதனால் இறந் தொழிந்தான், சொல்லுமிடத்துப் பகை கொள்ளுதலில் மிகுதிப் படுதல் இனிமையானது என்று பகை கொள்பவனுடைய வாழ்க்கை தவறிப் போதலும் அழிந்து போதலும் விரைவிலே நிகழக் கூடியன என்பதாம்.

சலந்தரன் கதை

சலந்தராசுரன் நான்முகன் திருமால் முதலியவர்களை வென்ற செருக்கினால் சிவபெருமானையும் வெல்லத் துணிந்து புறப்பட் டான். அப்பொழுது அவனுடைய மனைவியாகிய பிருந்தை போருக்குப் புறப்பட வேண்டாம் என்று தடுத்தாள். அவன் அவளைத் தடுத்து விட்டுத் திருக்கைலை மலைச் சாரலையடைந்தான். சிவபெருமான் அந்தணராக எழுந்தருளிவந்தார். அவனைப் பார்த்து, 'நீ சிவபெருமானை வெல்லுதல் அரிது; மீண்டு போய் விட்டால் பிழைப்பாய்'' என்று கூறினார். அவன் அதற்கு உடன் படவில்லை. ''உனக்குச் சிவபெருமானை வெல்லு மாற்றலுண்டாயின் யாம் நிலத்திலே கீறும் இவ்வுருளைப் படையை எடுப்பாயாக'' என்று கூறி நிலத்திலே பெருவிரலால் ஓர் உருளைப் படையைக் கீறினார். சலந்தராசுரன் அதனை வலிந்தெடுத்துத் தலைமீது தாங்கினான். அஃது அவனுடைய தலையைப்பிளந்தது; அதனால் அவன் மாண்டான்.

பகைமாட்சி

87. நந்தியெதிர் செம்மாந்தே நாகாரி யெஞ்சலிலா
முந்தைவலி தோற்றான் முருகேசா—உந்தும்
வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார்மேன் மேக பகை.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, நாகாரி - கருடன், நந்தி எதிர்செம்மாந்து - நந்தி தேவருக்கு முன்னால் இறுமாப்போடிருந்து, எஞ்சல் இலா - குறைதலில்லாத,

முந்தை வலி தோற்ருன்-முன்னர் இருந்த பெருவலியை இழந்தான், உந்தும்-மேற்செல்லும், வலியார்க்கு-தம்மினும் வலியவரோடு, மாறு ஏற்றல் ஓம்புக-மாறுபட்டு எதிர்த்தலை விடுக, மெலியார் மேல் பகை - மெலியவர் மேல் பகை கொள்வதை, ஓம்பா மேக - விடாமல் விரும்பி மேற் கொள்ளுதல் வேண்டும்.

(வி - ம்.) நந்திதேவருக்கு முன்னே கருடன் இறுமாப்புக் கொண்டு தன்னுடைய பேராற்றலை யிழந்தான்; தம்மினும் வலியவர்களிடம் பகை கொள்ளுதலை விடுக. மெலியவர்களிடமோ பகை கொள்ளுதலை விரும்பி மேற் கொள்ளுக என்பதாம்.

கருடன் கதை

சிவபிரானைப் போற்றி வழிபடும் பொருட்டுத் திருமால் திருக்கைலைக்குச் சென்ருர். திருமால் உள்ளே சென்ற பொழுது அவருடைய ஊர்தியாகிய கருடன் வாயிலில் இருந்த நந்திதேவரை வணங்காது பகைத்து இறுமாந்து நின்ற படியினுல் அவர் விடுத்த சிறுமூச்சிற் பிறந்த பெருங்காற்ருல் மோதுண்டு சிறகு முறிபட்டு முன்பு இந்திரன் முதலியோரை வென்ற ஆற்றலையிழந்து வருந்தினுன். வலியவருடைய பகையை மேற்கொண்டபடியால் கருடனுக்கு இத்தகைய தொல்லை யேற்பட்டது.

பகைத் திறந்தெரிதல்

88\. ஆர்த்தோரன்பர் புத்தநந்தி யைச்சேகுத்தார் சம்பந்த
மூர்த்திதிரு வாக்கான் முருகேசா— சீர்த்திமிகு
வில்லே ருழவர் பகைகோளினுங் கோள்ளற்க
சோல்லே ருழவர் பகை.

(இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே!, சம்பந்த மூர்த்தி திருவாக்கால் - திருஞானசம்பந்தருடைய திரு

வாக்கைக் கொண்டு, ஆர்த்து - ஆரவாரஞ் செய்து, ஓர் அன்பர் புத்த நந்தியை செகுத்தார் - ஓர் அடியவர் புத்த நந்தியைக் கொன்ருர்; சீர்த்திமிகு - சிறப்புமிகுந்த, வில்ஏர் உழவர் பகைகொளினும் - வில்லே யேராக வுடைய உழவ ராகிய வீரர்களோடு பகையைக் கொண்ட போதினும், சொல் ஏர் உழவர் பகை-சொல்லே ஏராகக் கொண்ட உழவ ராகிய அறிஞருடன் பகையை, கொள்ளற்க - கொள்ளா தொழிக.

(வி-ம்.) திருஞானசம்பந்தருடைய திருவாக்கைக் கொண்டு ஓர் அன்பர் ஆரவாரஞ் செய்து புத்த நந்தியின் தலையில் இடிவிழச் செய்தார். சிறப்பு மிகுந்த வில்லே யேராகவுடைய உழவராகிய வீரர்களோடு பகையைக் கொண்ட போதினும் சொல்லே யேராகக் கொண்ட உழவராகிய அறிஞருடன் பகையைக் கொள்ளா தொழிக என்பதாம்.

புத்த நந்தி கதை

திருஞான சம்பந்தர் எழுந்தருளுங்கால், பரசமய, "கோளரி வந்தார்" என்று முழங்கிய திருச்சின்ன வொலியைப் புத்த நந்தியென்பவன் கேட்டுப் பொருமை கொண்டான். "நீவிர் இவ்வாறு ஊதுதல் கூடாது" என்று மறுத்தான். சம்பந்தருடைய அடியவர்களில் ஒருவருக்குச் சின முண்டாகியது. சம்பந்தர் திருவாக்காகிய, "புத்தர் சமண் கழுக்கையர்" என்னுந் தேவாரத்தைப் பாடி அவன் தலையிலே இடிவிழச் செய்தார். அதனுல் அவன் இறந்தான்.

உட்பகை

89. சத்திமுத ஞற்றுவர்மாய்ந் தார்விசுவா மித்திரனுண்
மோய்த்தபகை யாலே முருகேசா—வைத்த
அரம்பொருத பொன்போலத் தேயு மரம்பொரு
துட்பகை யுற்ற குடி.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, விசுவா மித்திரன் உண் மொய்த்த பகையால் - விசுவாமித்திரருக்கு உள்ளத்திலே மூண்ட பகையினுல், சத்திமுதல் நூற்றுவர் மாய்ந்தார் - சத்திமுனிவர் முதலிய நூறு பேர் இறந் தொழிந்தார்கள், வைத்த - வைக்கப்பட்ட, உட்பகை உற்ற குடி - உட்பகை கொண்ட குடியானது, அரம் பொருத பொன் போல - அரத்தினுல் தேய்க்கப்பட்ட இரும்பைப் போல, உரம் பொருது தேயும் - வலிமை குறைக்கப்பட்டுத் தேய்ந்து போகும்.

(வி - ம்.) விசுவாமித்திர முனிவர் மிகுந்த உட்பகை கொண்டபடியினுல் சத்தி முனிவர் முதலிய நூறு பேர் இறந் தொழிந்தார்கள்; உட்பகை கொண்ட குடியானது அரத்தினுலே தேய்க்கப்பட்ட இரும்பைப் போல் வலிமை குறைக்கப்பட்டுத் தேய்ந்து போகும் என்பதாம்.

விசுவாமித்திரர் கதை

கௌசிகன் என்னும் அரசன் ஒருநாள் வேட்டைக்குச் சென்று களைப்படைந்தான். பிறகு படைகளோடு வசிட்ட முனிவருடைய இருப்பிடத்தை யடைந்தான். வசிட்ட முனிவருடைய கட்டளைப்படி காமதேனு பல மாதர் உருக்கொண்டு அரசனுக்கும் படைகட்கும் விருந்து செய்தது. அதனைக் கண்ட அரசன் மிகுந்த வியப்படைந்தான். காமதேனுவைத் தனக்குக் கொடுக்க வேண்டுமென்று வசிட்ட முனிவரைக் கேட்டான். அவர், "இக் காமதேனு தேவருலகைச்சேர்ந்தது; யான் கொடுப்ப தற்கு உரிமையுடையவனல்லேன்" என்று உரைத்தார். அரசன் அதனை வலிந்து பற்றிக்கொண்டு செல்லத்தொடங்கினுன். அது படைகளை அழித்துவிட்டு விண்ணுலகத்தை யடைந்தது. அரசனுடைய மக்கள் நூறுபேரும் வசிட்டமுனிவரை யெதிர்த்துக் கணைகளைப் பொழிந்தார்கள். வசிட்டருடைய பார்வையால் அனைவரும் இறந்தார்கள். அரசன் மிகுந்த சின மடைந்தான், சிவபெருமானிடம் பெற்ற அரிய கணைகளைச்

செலுத்தினன். அவை யாவும் முனிவர் நாட்டிய தடியில் ஒளித்தன. அரசன் தவத்தின் பெருமையை உணர்ந்து வியந்தான். அரசுரிமையைத் துறந்து தவஞ் செய்தான். விசுவாமித்திரர் என்னும் பெயருடைய முனிவனானன். ஆகியும் முன்னே தம் புதல்வரைக் கொன்றமை காரணமாக வசிட்டமுனிவர்பால் உட்பகை கொண்டான். அவ்வசிட்டமுனிவர்பால் வைத்த உட்பகையால் ஓர் அரக்கனை யேவினான். அவ்வரக்கனால் அம்முனிவருடைய புதல்வராகிய சத்திமுனிவர் முதலிய நூறு பேர் மடிந்தனர்.

பெரியாரைப் பிழையாமை

90. தெற்றியுதங் கற்கமிழ்தீ யாதுவஞ்சித் திந்திரன்சீர்
முற்றுமிழந் தெய்த்தான் முருகேசா—உற்றுணரின்
ஏந்திய கோள்கையார் சீறி னிடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, இந்திரன்- இந்திரனானவன், தெற்றி உதங்கற்கு-தெளிந்த அறிவினையுடைய உதங்க முனிவருக்கு, அமிழ்து ஈயாது வஞ்சித்து - அமுதங் கொடுக்காமல் வஞ்சனை செய்து, சீர் முற்றும் இழந்து எய்த்தான் -சிறப்பு முழுவதையும் இழந்து வருந்தினன், உற்று உணரின் - ஆராய்ந்து பார்த்தால், ஏந்திய கொள்கையார் சீறின் -உயர்ந்த கொள்கையினையுடைய பெரியோர்கள் சீறினால், வேந்தனும் - அரசனும், இடைமுரிந்து -நடுவே கெட்டு, வேந்து கெடும் - அரசு இழந்து கெடுவான்.

(வி - ம்.) 'தெற்றிய' என்னும் பெயரெச்சத்து ஈறு தொக்கது. இந்திரன் உதங்கருக்கு அமுதத்தைக் கொடுக்காமல் வஞ்சித்தபடியால் எல்லாவற்றையும் இழந்து வருந்தினன். உயர்ந்த கொள்கையினையுடைய பெரியவர்கள் சினங்கொண்டால் அரசனும் இடையே கெட்டு அரச பதவி யிழப்பான்.

உதங்க முனிவர் கதை

உதங்கமுனிவர் அமுதத்தை விரும்பி அருந்தவம் புரிந்தார் சிவபிரான் அதனையளிக்குமாறு இந்திரனுக்குக் கட்டளையிட்டருளினுர். இந்திரன் முனிவரை வஞ்சிக்க எண்ணினுன். அமுதத்தைத் தோலிற் பொதிந்து கையிலெடுத்துக்கொண்டு இழிந்த கோலத்தோடு போய் முனிவர் முன்பு வைத்தான். "இவ்வமுதத்தை எடுத்துக் கொள்க" என்று சொன்னுன். அவர், "நீசனே தூரச் செல்க" என்று துரத்தினுர். பிறகு உண்மையை உணர்ந்தார். "இவ்வாறு செய்தவன் முனிவர் வசவுரையால் செல்வமும் வன்மையும் இழக்கக் கடவன்" என்று வசவுரை வழங்கினுர். இஃதிவ்வாருகப் பிருகுமுனிவருடைய புதல்வராகிய சிவனர் என்பவர் உடல் முழுதும் புற்றுமூடத் தவஞ்செய்து கொண்டிருந்தார். அப்பொழுது சையாதி வேந்தனுடைய மகள் சுகன்னி யென்பவள் மலர் கொய்யச்சென்ருள். புற்றிலேயுள்ள தொளையில் கண் விளங்குவதைப் பார்த்தாள்; பொன்வண்டு என்று எண்ணினுள். துரும்பிட்டுக் கண்ணைக் கிண்டினுள். அவர் கண்ணை மூடியமையால் படை முழுமையும் கண்ணொளி மழுங்கியது. அதனை அரசன் கண்டு இஃது எதனுல் நேர்ந்தது என்று உசாவினுன். நிகழ்ந்ததை உணர்ந்தான், அச்சங் கொண்டு முனிவரையடைந்து வணங்கினுன். குற்றத்தைப் பொறுக்குமாறு வேண்டிக் கொண்டு தன்னுடைய மகளை அம் முனிவருக்குத் திருமணஞ் செய்து கொடுத்துவிட்டுத் தன்னகரடைந்தான். அம்முனிவர் அவளோடு வாழ்கின்ற காலத்தில் தமக்கு இளமையளித்த அச்சுவினி தேவர்கட்கு வேள்வியிலே தேவருணவு ஏற்படுத்த எண்ணினுர். தாமியற்றிய வேள்வியிற் பாகம் வகுத்தார். இந்திரன் அவர்க்குக் கொடாவண்ணந் தடுத்தான். அவர் உடன்படாமையாற் சீறினுன். தன்னுடைய வச்சிரப்படையைச் செலுத்தித் தோல்வி யடைந்தான். அவருடைய வசவுரையால் செல்வமிழந்து துன்பமடைந்தான். இவற்றிற்குக் காரணம் உதங்கரை வஞ்சித்தமையே எனத் துணிந்து அவரை வழிபட்டு அமிழ்தீந்து பழையநிலையை அடைந்தான்.

பெண்வழிச் சேறல்

91. தாசரதி யுஞ்சீதை தன்வழிப்பட் டோர்மானுன்
மோசம்போய்ச் சோர்ந்தான் முருகேசா—பேசுங்கால்
எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க்
கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே !, தாசரதியும் - இராமனும், சீதை தன் வழிப்பட்டு - சீதையின் சொல்லைக் கேட்டு, ஓர்மானுல்-வஞ்சிப்பதில் ஒப்பற்ற மாரீசனென்னும் பொன்மானுல், மோசம் போய் சோர்ந்தான் - ஏமாந்து தளர்ச்சி யடைந்தான்; பேசுங்கால் - கூறுமிடத்து, எண் சேர்ந்த நெஞ்சத்து இடன் உடையார்க்கு - நன்ருக எண்ணுதல் பொருந்திய நெஞ்சத்தோடு தக்க நிலையும் உடையவர்கட்கு, எஞ்ஞான்றும் - எப்பொழுதும், பெண் சேர்ந்து ஆம் பேதைமை இல் - மனைவியின் சொல்லைக் கேட்டு இணங்கும் அறியாமை யில்லை.

(வி - ம்.) இராமபிரானுஞ் சீதாபிராட்டியின் சொல்லைக் கேட்டு ஒருமானின் பின்னே போய் ஏமாந்து தளர்ச்சி யடைந்தான். சொல்லுமிடத்தில் நன்ருக ஆராய்ந்து பார்க்கும் நெஞ்சத்தோடு தகுந்த நிலையும் உடையவர்கட்கு எக்காலத்திலும் மனைவியின் சொல்லைக்கேட்டு இணங்கி நடக்கும் அறியாமை யில்லையென்பதாம்

இராமன் கதை

மாரீசன் இராவணனுடைய கட்டளைப்படி இளமையும் பொன்னிறமும் வாய்ந்த மான் வடிவு கொண்டு தண்டகாரணியத்தை யடைந்தான். அதனைப் பிடித்துத் தருமாறு சீதாபிராட்டி இராமபிரானை வேண்டினுள். அப்பொழுது இலட்சுமணன் இஃது அரக்கருடைய வஞ்சகத்தினுல் வந்த

மாயமான் என்று கூறியும் இராமபிரான் அம்மொழியைக் கேட்கவில்லை. அதனைப் பிடிக்கச் சென்று சீதையையும் இழந்து சிந்தை கலங்கினன். பிறகு ஏற்பட்ட தொல்லைகள் பல.

வரைவின்மகளிர்

92. மாழ்கிவரை வின்மகளிர் வஞ்சனையில்
பாட்களன்றான்
மூழ்கியல்லாப் புற்றான் முருகேசா—வீழ்கும்
பொருட்பொருளார் புன்னலந் தோயா ரருட்பொரு
ளாயு மறிவி னவர்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே !, பாட்களன் - பாட்களன் என்பவன், வரைவு இல்மகளிர் வஞ்சனையில் மாழ்கி - விலைமகளிர்களுடைய வஞ்சனையிலே மயங்கி, மூழ்கி - அதில் நன்கு அமிழ்ந்து, அல்லாப்பு உற்றான் - வருத்தத்தை யடைந்தான் ; வீழ்கும் - விரும்பும், பொருள் பொருளார் - பொருள் ஒன்றையே பொருளாகக் கொண்ட பொதுமகளிருடைய, புன்னலம் - இழிந்த இன்பத்தை, அருள் பொருள் ஆயும் அறிவினவர் தோயார் - அருளாகிய சிறந்த பொருளை ஆராயும் அறிவுடையோர் பொருந்த மாட்டார்.

(வி - ம்.) பாட்களன் என்பவன் விலைமாதர்களுடைய வஞ்சனையிலே மூழ்கி மிகுந்த துன்பத்தை யடைந்தான். பொருளையே பொருளாகக் கொண்ட விலைமாதர்களுடைய இழிந்த இன்பத்தை அருளாகிய பொருளையே தேடுகின்ற பெரியோர்கள் பொருந்த மாட்டார்கள் என்பதாம்.

பாட்களன் கதை

முன்னாளில் அளகை நகரத்திலிருந்த பாட்களன் என்னும் பெயருடைய ஓர் அந்தணன் தான் தேடிய மிகுந்த பொருட்

குவியல்களையெல்லாம் விலைமாதர்கட்கு வழங்கினன். பிறகு கொடுப்பதற்குப் பொருளில்லாதபடியால் களவு செய்து அப் பொருளைக் கொடுத்துக் கொண்டிருந்தான். ஒரு நாள் அந்தணர்களுடைய வேள்விக்குரிய ஆவைக் களவு செய்தான். அப்பொழுது காவலராற் பிடிக்கப் பட்டுக் கால் வெட்டுண்டான். ஆதரிப்பாரின்றி அலைந்து வருந்திப் பல தொல்லைகட்கு உள்ளானன்.

கள்ளுண்ணுமை

93. தூயபல பத்திரன்றன் சூதனைமாய்த் தல்லலுற்றன்
மூயமது மாலான் முருகேசா—ஆயுங்கால்
துஞ்சினர் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.

(இ - ள்.) தூய பலபத்திரன் - தூய்மையுடையவராக இருந்த பலராமர், மூய மதுமாலால் - மிகுந்த கள்ளினை யுண்ட மயக்கத்தினல், சூதனை மாய்த்து - சூதமுனிவரைக் கொன்று, அல்லல் உற்றன் - துன்பத்தை யடைந்தான்; ஆயுங்கால் - ஆராய்ந்து பார்க்குமிடத்து, துஞ்சினர் செத்தாரின் வேறு அல்லர் - உறங்கினவர் இறந்தவரைவிட வேறு பட்டவர் அல்லர், எஞ்ஞான்றும் - எப்பொழுதும், கள்உண்பவர் - மதுவைக் குடிப்பவர், நஞ்சுஉண்பார் - நஞ்சுண்பவரேயாவர்.

(வி - ம்.) பலராமர் மதுமயக்கத்திலே மூழ்கிச் சூத முனிவரைக் கொன்று துன்புற்றர்; உறங்கினவர் இறந்தவரை விட வேறுபட்டவர் அல்லர், அவ்வாறே கள்ளுண்பவரும் அறிவு மயங்குதலால் நஞ்சுண்பவரே யாவர் என்பதாம்.

பலராமர் கதை

ஒருநாள் பலராமர் மதுபானஞ் செய்தார். அதனல் அவருக்கு மிகுந்த மயக்கம் உண்டாகியது. தம்மனைவியாகிய

ரேவதியோடு பலமாதர்கள் புடை சூழத் தளர்நடையுடன் இரைவதமலையை அடைந்தார். வனச் சிறப்புக்களையெல்லாம் பார்த்துக் கொண்டே சூத முனிவர் புராணச் சொற்பொழிவு செய்து கொண்டிருக்குமிடத்திற்குச் சென்றார். பலராமரைக் கண்ட முனிவர்கள் இவர் மதுபானத்தால் மயங்கியிருக்கிறார்; வழிபாடு செய்து அனுப்பி விடுதலே தக்கதெனத் துணிந்து ஒருங்கெழுந்து போற்றி வழிபட்டனர். சூத முனிவர் மட்டும் எழாதிருந்தார். பலராமர் மிகுந்த சினங் கொண்டார். மது மயக்கத்தால் அவரைக் கொன்றார். பிறகு தெளிவடைந்து, ''நான் இப்பெரிய தீவினையைச் செய்தமையால் என்னைப் பெருங் குற்றந் தொடரும், மதுபானஞ் செய்வது மிகப் பொல்லாதது' என்று தம்மைத்தாமே வெறுத்துக் கொண்டு சூதமுனிவரைப் பிழைப்பித்தார். பிறகு புனித நீர்ப்பயணஞ் சென்று அக் குற்றத்தைப் போக்கிக் கொண்டார்.

சூது

94. வெஞ்சூதாற் றந்தை வெறுக்கக் குணநிதிதான்
முஞ்சினனூண் வவ்வி முருகேசா—துஞ்சும்
அகடாரா ரல்ல லுழப்பர்சூ தென்னும்
முகடியான் மூடப்பட் டார்.

(இ - ள்.) குணநிதிதான் - குணநிதி என்பவன், வெம் சூதால் தந்தை வெறுக்க - கொடிய சூதாடித்திரிந்த படியினாலே தந்தை வெறுத்தொதுக்க, ஊண் வவ்வி முஞ்சினன் - சிவபெருமானுக்குப் படைத்த உணவைக் கவர்ந்து இறந்தான்; சூது என்னும் முகடியால் மூடப் பட்டார் - சூது என்று சொல்லப்படுகிற மூதேவியினாலே விழுங்கப்பட்டவர், அகடு ஆரார் - வயிறு நிறைய உண்ணுதற்கு உணவும் அற்றவராய், துஞ்சும் அல்லல் உழப்பர் - இறக்கத்தக்க துன்பத்தையும் அடைவார்கள்.

(வி - ம்.) குணநிதி என்பவன் கொடிய சூதாட்டத்தில் படிந்த குற்றத்தினுல் தந்தையும் வெறுத்தொதுக்கச் சிவபிரானுடைய உணவைக் கவர்ந்து இறந்தான். சூது என்று சொல்லப்படுகிற மூதேவியினுலே விழுங்கப் பட்டவர்கள் வயிற்றுக்குப் போதிய உணவும் பெருதவர்களாய் மிகுந்த துன்பத்தை அடைவார்கள் என்பதாம்.

குணநிதி கதை

காம்பிலிநாட்டிலே வேள்விதத்தன் என்னும் பெயருடைய அந்தணன் ஒருவன் இருந்தான். அவனுக்குக் குணநிதி என்னும் பெயருடைய மைந்தன் ஒருவன் இருந்தான். அவன் தன்னுடைய தந்தை தேடி வைத்த பொருள்களைக் கவர்ந்து கொண்டு போய்ச் சூதிலே தோற்றுக் கொண்டிருந்தான். அவனுடைய தாய் அவனுக்குப் பலவகையாக அறிவுரைகள் கூறியும் அவன் அவ்வறிவுரைகளைச் சிறிதுங் கேட்கவில்லை. அவளோ தன்னுடைய கணவன், "மகன் எங்கே?" என்று கேட்கும் பொழுதெல்லாம், "மறையோதச் சென்றிருக்கிருன்" என்று கூறிக் கொண்டிருந்தாள். ஒருநாள் அச் சூதாடி தந்தையினுடைய கைம்மோதிரத்தையுங் கவர்ந்து கொண்டுபோய்ச் சூதிலே தோற்ருன். அவன் தந்தை அதை யணிந்து கொண்டிருந்த ஒருவனுல் தன் மகனுடைய செய்கையை அறிந்து கொண்டான். மகனுடைய செய்கையை மறைத்துக் கூறிய மனைவியையும் மகனையும் நீக்கி விட்டுவேறு மணஞ் செய்து கொண்டான். குணநிதி ஒரு நாள் கோயிலிலே சிவனிரவில் சிவபெருமானுக்குப் படைத்த உணவைக் கவர்ந்து காவலரால் வெட்டுண்டிறந்தான்.

மருந்து

95. சீலமிலாப் பேய்ச்சமணர் சிந்தைநோந்தார்
பாண்டியனேய்
மூலமறி யாத முருகேசா—ஏலவே
நோய்நாடி நோய்முத னுடி யததணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே !, பாண்டியன் நோய் மூலம் அறியாது - பாண்டிய மன்னனுடைய நோயின் மூலகாரணத்தை உணர்ந்து கொள்ளாமல், சீலம் இலாப் பேய்ச் சமணர் - நல்லொழுக்கமில்லாத பேய்த் தன்மைபொருந்திய சமணர்கள், சிந்தை நொந்தார் - மனம் வருந்திஞர்கள், ஏல - பொருந்துமாறு, நோய் நாடி - நோய் இன்னதென்று ஆராய்ந்து, நோய் முதல் நாடி - நோயின் மூல காரணத்தையாராய்ந்து, அது தணிக்கும் வாய்நாடி- அதனைத் தணிக்கும் வழியையும் ஆராய்ந்து, வாய்ப்பசெயல்- பொருந்தும்படியாகச் செய்தல் வேண்டும்.

(வி - ம்.) பாண்டிய மனனனுடைய நோயின் மூல காரணத்தை யுணர்ந்து கொள்ளாமல் பேய்த்தன்மை பொருந்திய சமணர்கள் உள்ளம் வருந்திஞர்கள். நோய் இன்னது என்று ஆராய்ந்து அது உண்டாகிய காரணத்தையும் ஆராய்ந்து அதனைப் போக்கும் வழியையும் தெரிந்து பொருந்துமாறு செய்தல் வேண்டும் என்பதாம்.

சமணர்கள் கதை

சமணர்கள் திருஞானசம்பந்தர் தங்கியிருந்த திருமடத்திலே தீயை வைத்தபடியினுல் பாண்டியற்குக் காய்ச்சல் நோய் உண்டாகியது. சமணர்கள் அஃதுண்டாகிய காரணத்தையும் அதனைப் போக்கத் தக்க வழியையும் உணர்ந்து கொள்ளவில்லை. வீண் முயற்சி செய்து கலங்கிஞர்கள். திருஞானசம்பந்தரோ நோய் உண்டாகிய காரணத்தை எளிதில் உணர்ந்து கொண்டு திருநீற்றிஞல் அந்நோயைப் போக்கியருளிஞர்.

குடிமை

96. நித்திரையோர்க் கோன்றவசு வத்தாம னீக்கமுற்முன்
முத்தமுனி வோரான் முருகேசா—மெய்த்த
குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே! நித்திரையோர் கொன்ற அசுவத்தாமன் - உறங்கிக் கொண்டிருந்தவர்களைக் கொலைபுரிந்த அசுவத்தாமன், முத்த முனிவோரால் - முற்றத்துறந்த முனிவர்களால், நீக்க முற்றான் - கொடியவனென்று விலக்கப்பட்டான்; மெய்த்த - உண்மையாகிய சிறந்த, குடி பிறந்தார் கண் விளங்கும் குற்றம் - குடியிலே பிறந்தவர்களிடத்தில் உண்டாகிய குற்றம், விசும்பின் - விண்ணில் உள்ள. மதிக்கண்-திங்களினிடத்ததாகிய, மறுப்போல் - மறுவைப்போல், உயர்ந்து விளங்கும் - மேலோங்கி விளங்குவதாகும்.

(வி - ம்.) உறங்கிக் கொண்டிருந்தவர்களைக் கொலை புரிந்த அசுவத்தாமன் மிகப் பொல்லாதவனென்று முனிவர்களனைவராலும் விலக்கப்பட்டான். உயர்ந்த குடியில் பிறந்தவர்களிடத்திலுண்டாகிய குற்றமானது விண்ணின்கண்ணுள்ள திங்களினது மறுவைப் போல் மேலோங்கி விளங்கும் என்பதாம்.

அசுவத்தாமன் கதை

திட்டத்துய்மன் முதலியோர் பதினெட்டாம் நாட் பகலிற் செய்த போரினால் மெலிவடைந்து அன்றிரவு பாசறையிலே அயர்ந்து உறங்கிக் கொண்டிருந்தார்கள். அப்போது அசுவத்தாமன், சிவபிரானிடம் பெற்ற வாட் படையினால் அவர்களைக் கொலை புரிந்தான். பிறகு அவன் சென்றவிடங்களிலெல்லாம் இருந்த முனிவர்களால் மிகப்பொல்லாதவன் என்று விலக்கப் பெற்றான். அதனால் மிகத் தளர்ச்சியடைந்த அவன் பிறகு சேதுவுக்குப் போய்ப் புனித நீராடி அப்பழியைப் போக்கிக் கொண்டான். அசுவத்தாமன் புகழ் பெற்று விளங்கியவனாகையால் அவன் செய்த குற்றம் எல்லோராலும் மிகப்பெரிதாகக் கொள்ளப் பட்டது.

மானம்

97\. தேசுருவா னின்னிலைமை தேர்ந்துமா னத்திறந்தான்
மூசுபுகழ்ச் சூரன் முருகேசா—நேசமிகுஞ்
சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரோடு
பேராண்மை வேண்டு பவர்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே ! தேசு உருவால் - பேரொளி தங்கிய நின்னுடைய உருவச் சிறப்பினால், மூசுபுகழ் சூரன் - உலகெங்கும் பரவி புகழையுடைய சூரபதுமனனவன், நின் நிலைமை தேர்ந்தும் - தேவரீரே முழுமுதற் கடவுள் என்னும் உண்மையை உணர்ந்தும், மானத்து இறந்தான் - தன்னுடைய பெருமையைக்காப்பாற்றிக்கொள்ள வேண்டும் என்னும் எண்ணத்தோடு இறந்தொழிந்தான்; நேசம் மிகும் - நட்பானது மிகுதிப்படுகிற, சீரினும்-சிறப்பைத் தேடுகிற காலத்தினும், சீரொடு பேராண்மை வேண்டுபவர் - புகழையும் ஆண்மையையும் விரும்புகிறவர்கள், சீர் அல்ல செய்யார் - குடிப்பெருமைக்கு ஒவ்வாத காரியங்களைச் செய்யமாட்டார்கள்.

(வி - ம்.) சூரபதுமனனவன் தேவரீருடைய முழு முதற் றன்மையை ஒளிவடிவத்தினாற் கண்டுணர்ந்தும் தன்னுடைய பெருமையைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்னும் எண்ணத்தோடு இறந்தொழிந்தான்; சிறப்பைத் தேடுகிற காலத்தினும் புகழையும் ஆண்மையையும் விரும்புகிறவர்கள் குடிப் பெருமைக்கு ஏற்காத காரியத்தைச் செய்யமாட்டார்களென்பதாம்.

சூரன் கதை

சூரபன்மன் முருகக் கடவுளோடு போர் புரிந்தான். ஒரு நாள் முருகக் கடவுள் தம்முடைய ஒளி தங்கிய பேருருவத்தைச் சூரபதுமனுக்குச் காட்டியருளினார். அதனால் சூரபத்மன் முருகக்

கடவுளே முழுமுதற் கடவுளென்றுணர்ந்து உள்ளத்திலே போற்றினன். ஆயினும் பகைவனுக விருக்கும் இந்நிலையில் இக்கடவுளை வணங்கித் தாழ்ந்து போவது நம்முடைய பெருமைக்கு ஏற்றதல்ல வென்று முடிவு செய்து மேலும் போரிட்டு மாண்டொழிந்தான்.

பெருமை

98. கும்பமுனி யானகுடன் சர்ப்பவென்றே குண்டலியாய்
மோய்ம்பிழந்து வீழ்ந்தான் முருகேசா—உம்பரினும்
மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல் லவர்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, நகுடன் சர்ப்ப என்று - நகுடன் ஆனவன் சர்ப்ப என்று கூறி, கும்ப முனியால் - அகத்திய முனிவரால், குண்டலியாய் மொய்ம்பு இழந்து வீழ்ந்தான் - பாம்பாகி வலிமை கெட்டு நிலத்தில் விழ்ந்தான், உம்பரினும் தேவர்களைப் பார்க்கினும்- மேல் இருந்தும்-மேல் நிலையில் இருந்தாலும், மேல் அல்லார் மேல் அல்லர்-மேன்மைத் தன்மையில்லாதவர்கள் மேலான வர்களல்லர்: கீழ் இருந்தும் - கீழான நிலையில் இருந்தாலும் கீழ் அல்லார் கீழ் அல்லவர் - இழி குணமில்லாதவர்கள் கீழ் மக்களாக மாட்டார்கள்.

(வி- ம்.) நகுடனானவன் சர்ப்ப என்று கூறி அகத்திய முனிவரால் பாம்பாகி வலிமை கெட்டு நிலத்திலே வீழ்ந்தான்; மேல் நிலையில் இருந்தாலும் மேன்மைத் தன்மையில்லாதவர்கள் மேலானவர்களல்லர், கீழான நிலையில் இருந்தாலும் இழி குணமில்லாதவர்கள் கீழ் மக்களாகமாட்டார்கள் என்பதாம்.

நகுடன் கதை

நகுடன் என்பவன் நூறு பரி வேள்விகள் செய்தபடியால் தேவேந்திரனுனன். விண்ணுலகம் புக்க அவன் விரைந்து

இந்திராணியிடஞ் செல்ல எண்ணினன். அவ்வாறு செல்ல வேண்டுமாயின் பெருமையிற் சிறந்த ஏழு முனிவர்கள் சிவிகை தாங்கச் சிவிகையிலேறிச் செல்லுதல் வேண்டும். நகுடன் செய்த வேள்விச் சிறப்பால் முனிவர்கள் சுமக்கும் சிவிகை நகுடனுக்கு வந்தது. நகுடன் அச்சிவிகையிலேறிக் கொண்டு இந்திராணியிடஞ் சென்றான். அவ்வாறு செல்லுபவனிடம் புன்மைக் குணந்தான் மிகுந்தது. விரைவாக இந்திராணியிடம் போக எண்ணினன். சிவிகை தாங்கும் முனிவர்களுடைய பெருமையைச் சிறிதும் எண்ணிப் பாராமல், "விரைவாகச் செல்லுங்கள்" என்று சொல்வதற்காகச் "சர்ப்ப சர்ப்ப" என்றான். இதனைக் கேட்டதும் அகத்திய முனிவருக்குச் சின முண்டாகியது. அவர், "நீ சர்ப்பமாகுக" என்று வசவுரை வழங்கினர். அவ்வளவில் நகுடன் பாம்பாகி நிலத்திலே விழுந்து புரண்டான். இவ்வாறு நகுடன் இந்திர பதவியை அடைந்தும் மேன்மையில்லாதவனாகிக் கீழ்நிலையை அடைந்து விட்டான்.

சான்றாண்மை

99\. தொக்கிடும்பை கௌசிகனாற் சூழ்ந்துமரிச்
சந்திரன்சொல்
முக்கியமாக் காத்தான் முருகேசா—அக்கணமே
ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்றாண்மைக்
காழி யெனப்படு வார்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, அரிச் சந்திரன் - அரிச்சந்திரனனவன், கௌசிகனால் - விசுவா மித்திர முனிவனால், இடும்பை தொக்கு சூழ்ந்தும் - துன்பங்களானவை கூட்டமாகச் சூழ்ந்து வந்தும், சொல் முக்கியமாகக் காத்தான் - அவன் தன்னுடைய வாய்ச் சொல்லை முதன்மையானதாகக் காப்பாற்றினன், அக் கணமே - அப்பொழுதே, ஊழி பெயரினும் - ஊழிக் காலமுண்டாகி உலகம் அழிவதாக இருந்தாலும், சான்றாண்

மைக்கு ஆழி எனப்படுவார் - பெருந்தன்மைக்குக் கடல் என்று கூறப் பெறுபவர், தாம் பெயரார் - தாம் சிறிதும் மாறுபட மாட்டார்கள்.

((வி - ம்.) அரிச்சந்திரனானவன் விசுவாமித்திர முனிவனால் பல துன்பங்கள் மேலும் மேலும் தொடர்ந்து வரப் பெற்ற பொழுதும் தன்னுடைய வாய்ச் சொல் பொய்யாகாதவாறு அதனைக் காப்பாற்றினான்; பெருந்தன்மையில் கடலைப் போல விளங்குபவர் ஊழியே வருவதாயினும் தாம் தம்முடைய இயற்கையிலிருந்தும் பிறழமாட்டார்கள் என்பதாம்.

அரிச்சந்திரன் கதை

தேவர்களுடைய அவையிலே வசிட்ட முனிவர் இவ்வுலகத்தில் அரிசந்திரன் ஒருவனே மெய்ம்மையாளன் என்று கூறினார். விசுவாமித்திரரோ அவன் பொய் பேசுபவன்தான் என்றார். பிறகு தம்முடைய வாக்கை மெய்ப்பிப்பதற்காக அரிச்சந்திரனுடைய அரசுரிமை முதலியவைகளை வஞ்சனையினால் கவர்ந்தார். அவனுடைய மனைவியையும் புதல்வனையும் அந்தணனுக்கு அடிமையாக்கினார். அரசனை நீசனுக்கு அடிமையாக்கினார். புதல்வன் இறத்தல் முதலிய் துன்பங்களை விளைத்தும் அரிச்சந்திரனைப் பொய்யனாக்க முடியவில்லை. அவன் தன்னுடைய மெய்ம்மைப் பண்பிலிருந்து சிறிதுந் தவறாதவனாக விளங்கினான். சான்றாண்மைக்கு ஆழியெனப் படுவார் ஊழி பெயரினுந் தாம் பெயரார் என்பது அரிச்சந்திரனிடத்தில் நன்கு விளங்கியது.

பண்புடைமை

100. ஓவாச் சிவசமய மோங்கியதே நால்வரான்
மூவா முதலே முருகேசா—தாவாத
பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேன்
மண்புக்கு மாய்வது மன்.

(இ - ள்.) மூவா முதலே முருகேசா - என்றும் மூப்பினையடையாத முழுமுதற்பொருளாக விளங்குகின்ற

முருகப் பெருமானே!' நால்வரால் - சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் சமயாச்சாரியர்கள் நால்வரால், ஓவா சிவசமயம் ஓங்கியது - என்றுமழியாத சைவசமயமானது மேலோங்கியது, தாவாத - கெடாத, உலகம் - இவ்வுலகமானது, பண்பு உடையார்ப் பட்டு உண்டு - பண்புடையவரிடத்திலே பொருந்தியிருப்பதால் உள்ளதாக விளங்குகின்றது, அது இன்றேல் - அஃதில்லை யானல், மண்புக்கு மாய்வது - மண்ணிலே புகுந்து அழிந்து போவதாகும்.

(வி - ம்.) என்று மழியாத சைவ சமயமானது சமயாசாரியர்கள் நால்வரால் சிறந்து விளங்கியது. இவ்வுலகம் பண்புடையவர்களிடத்திலே பொருந்தியிருப்பதால் சிறந்து விளங்குகின்றது. பண்புடையாரைப் பெற்றிராமலிருக்குமாயின் மண்ணிலே புகுந்து அழிந்து போயிருக்கும் என்பதாம். மன்: அசைநிலை.

நால்வர் கதை

சமணர் பௌத்தர் முதலிய புறச் சமயிகள் அடிக்கடி தோன்றித் தம் சமயத்தை வளர்க்கத் தொடங்கியதால் சைவசமய வளர்ச்சி குன்றிய பொழுது சமயாசாரியர்கள் நால்வருந் தோன்றிச் சிவபெருமானுடைய திருவருளைக் கொண்டு புறச் சமயங்களை களைந்து சைவசமயத்தை வளர்த்தார்கள். அதனல் சைவ சமயந் தழைத்தோங்கியது.

நன்றியில் செல்வம்

101. மாழ்கிநிதி நல்காநால் வாணிகர்மாண் டார்கடவுண்
முழ்கிநிதி யோடு முருகேசா—வாழ்வுமிக
ஈட்ட மிவறி யிசைவேண்டா வாடவர்
தோற்ற நிலக்குப் பொறை.

(இ - ள்.) முருகேசா -- முருகப்பெருமானே!' நிதி நல்கா நால் வாணிகர் - கோயில் திருப்பணிக்கும் பொருளைக் கொடாத நான்கு வணிகர்களும், கடலுள் நிதியோடு மூழ்கி மாழ்கி மாண்டார் - கடலுள் செல்வத்தோடு மூழ்கி வருந்தி இறந்தார்கள், வாழ்வு மிக - வாழ்வு மிகுதிப்படுமாறு, ஈட்டம் இவறி - சேர்த்துவைப்பதையே விரும்பிப் பற்றுள்ளங் கொண்டு, இசை வேண்டா ஆடவர் தோற்றம்- புகழை விரும்பாத மக்கள் பிறந்து வாழ்தல், நிலக்கு பொறை - நிலத்திற்குச் சுமையாகும்.

(வி - ம்.) கோயில் திருப்பணிக்கும் பொருளைக் கொடாத நான்கு வணிகர்களும் தம்முடைய பொருளோடு கடலிலே மூழ்கி வருந்தி மாண்டார்கள்; செல்வம் சேர்த்தலையே விரும்பிப் பற்றுள்ளங் கொண்டு புகழை விரும்பாத மனிதர்களுடைய பிறப்பானது நிலத்திற்குச் சுமையாகும் என்பதாம்.

நான்கு வணிகர்கள் கதை

யவன நாட்டிலே ஆதித்த புரத்திலே விச்சுவவசு என்னும் பெயருடைய வணிகன் ஒருவன் இருந்தான். அவனுக்கு நான்கு மக்களிருந்தார்கள். அவர்கள் பொருளைப் பெருக்கிச் சிறப்புடன் வாழ்ந்திருந்தார்கள். ஆதித்தேசுரர் கோயில் திருப்பணியின் பொருட்டு ஓர் அந்தணன் அவர்களிடம் பொருள் வேண்டினான். பொருளுதவி செய்வதாகக் கூறி அலையச் செய்தார்களே யன்றிக் கொடுக்கவில்லை. கொடுக்காத தீவினையினால் அவர்கள் கடலிற் சென்றபொழுது பெருங்காற்றால் கப்பல் கவிழ்ந்தது. செல்வத்தோடு மூழ்கியிறந்தார்கள். அவர்கள் நிலவுலகிலே வாழ்ந்திருந்தது நிலத்திற்குச் சுமையாக முடிந்தது.

நாணுடைமை

102. அந்தணற்கீந் தில்லினைநா ணத்தனன்மூழ்
கத்துணிந்தான்
முந்துபத்தி ராயு முருகேசா—நந்தலிலா
நாண்வேலி கொள்ளாது மன்னே வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே !, முந்து - முன்னாளிலே, பத்திராயு - பத்திராயு என்னும் அரசன், இல்லினை அந்தணற்கு ஈந்து - மனைவியை அந்தணனுக்குக் கொடுத்து, நாணத்து - நாணத்தினால், அனல் மூழ்கத் துணிந்தான் - தான் தீயிலே மூழ்குவதற்கு முடிவுசெய்தான் ; மேலாயவர் - சிறந்தவர்கள், நந்தல் இலா - கெடுதலில்லாத, நாண்வேலி கொள்ளாது-நாணமாகிய வேலியைத் தமக்குக் காவலாகச் செய்து கொள்ளாமல், வியன் ஞாலம்-பரந்த உலகில் வாழும் வாழ்க்கையை, பேணலர் - விரும்பி மேற்கொள்ள மாட்டார்கள் ; மன, ஓ:அசை நிலைகள்.

(வி - ம்.) பத்திராயு என்னுமரசன் மனைவியை அந்தணனுக்குக் கொடுத்துத் தான் தீயில் மூழ்கி உயிர்விடத் துணிந்தான்; மேலானவர்கள் நாணமாகிய வேலியைத் தமக்குக் காவலாகச் செய்து கொள்ளாமல் பரந்த உலகில் வாழும் வாழ்க்கையை விரும்பி மேற்கொள்ள மாட்டார்கள் என்பதாம்.

பத்திராயு கதை

பத்திராயு என்னும் அரசன் விடபர் என்னுஞ் சிவயோகியினுடைய அருளால் மகதநாட்டரசனை வென்று அரசுரிமை பெற்று வாழ்ந்தான். ஒருநாள் தன்னுடைய மனைவி கீர்த்திமாலினி என்பவளோடு ஒரு சோலையை அடைந்து தங்கியிருந்தான். சிவபிரான் அவனுடைய அறநெறியை அனைவருக்கும் புலப்படுத்த எண்ணினர். உமாதேவி பார்ப்பனியாகிப் பின்வர

அந்தணவுருக் கொண்டு வந்தார். சிவபிரான் மாயையால் ஒரு புலி அவர்களைத் துரத்தியது. சிவபிரான் அரசனைப் பார்த்து, ''எங்களை இப்புலியினின்றுங் காப்பாற்றுவாயாக'' என்று கூறினர். உடனே அரசன் கணை செலுத்தினன். தொடர்ந்து வந்த மாயப்புலி கணையைப் பொருட்படுத்தாமல் பார்ப்பனியைக் கொன்று தூக்கிச் சென்றது. மாய அந்தணன் அரசனைப் பார்த்து, ''இதனைக் காவாத உன்னுடைய செங்கோல் எத்தன்மையது? நீ பிழைக்க வேண்டுமானல் உன்னுடைய மனைவியை எனக்குக் கொடுப்பாயாக, இன்றேல் நீ கொடிய நிரயத்தினையடையுமாறு வசவுரை வழங்குவேன்'' என்றனர். அரசன் தன்னுடைய மனைவியை அவர்க்குக் கொடுத்து அந்நாணத்தால் இவ்வுலக வாழ்வை வெறுத்துத் தீயில் விழத் துணியும்போது சிவபிரான் தோன்றி அருள்புரிய மனைவியோடு சிவலோகமடைந்தான்.

குடிசெயல்வகை

103. சத்துருவை மாய்த்தான் பராசரன்றன் சந்ததியை
முத்திபதத் துய்த்தே முருகேசா—மேத்தில்
கருமஞ் சேயவோருவன் கைதூவே னேன்னும்
பேருமையிற் பீடுடைய தில்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே! பராசரன் - பராசர முனிவர், சந்ததியை முத்தி பதத்து உய்த்து - தம்முடைய வழி முறையை வீடு பேற்றிலே செலுத்தி, சத்துருவை மாய்த்தான் - தம்முடைய பகைவரையுங் கொன்றார்; மெத்தில் - மென்மையாக, கருமம் செய - குடிப் பெருமைக்கு உரிய கடமையைச் செய்வதற்கு, கை தூவேன் என்னும் பெருமையில் - சோர்வடைய மாட்டேன் என்று முயலும் பெருமையைப் போல, பீடு உடையது இல் - மேம் பாடானது வேறு ஒன்றும் இல்லை.

(வி - ம்.) பராசரமுனிவர் தம்முடைய வழிமுறையினரை வீட்டு நெறியிற் செலுத்தியதோடு தம்முடைய பகைவரையுங்

கொன்றொழித்தார்; குடிப்பெருமையை உயர்த்துவதற்குரிய கடமையைச் செய்வதற்குச் சோர்வடைய மாட்டேன் என்று ஒருவன் முயலும் பெருமையைப் போலச் சிறப்புடையது வேறு ஒன்றும் இல்லையென்பதாம்.

பராசரமுனிவர் கதை

பராசரமுனிவர் தம்முடைய தந்தையாகிய சத்திமுனிவர் முதலிய நூற்றுவரையும் உதிரன் என்னும் அரக்கன் விசுவாமித்திரமுனிவருடைய தூண்டுதலால் கொன்றமையைத் தம்முடைய தாயாகிய அதிர்சந்தியால் உணர்ந்தார். கலக்கமுற்றுச் சிவபெருமானைக் குறித்துத் தவஞ் செய்தார். சிவபெருமான் எழுந்தருளிப் பகைவனையழிக்கும் ஆற்றலைத் தந்தருளினார். முனிவர் சிவபிரானோடு வந்த தந்தை முதலியோரை வழிபட்டுத் தம்முடைய தவத்தால் அவர்கள் பிதிர் உலகத்திலிருந்து சிவலோகமடைவதை உணர்ந்து மகிழ்ந்தார். பகைவனாகிய அரக்கனையும் அவன் வழிமுறையோடு வேள்வியில் கொன்றார். தாம் பிறந்த குடியை இவ்வாறு முயற்சி செய்து உயர்த்தினார்.

உழவு

104 இன்னலோற்கத் தும்முழவை யேற்றலினீ சற்கமுது
முன்னமைத்தார் மாறர் முருகேசா— உன்னில்
இரவா ரிரப்பார்க்கோன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே! மாறர் - இளையான் குடிமாற நாயனார், இன்னல் ஒற்கத்தும் - துன்பம் பொருந்திய வறுமைக் காலத்திலும், உழவை ஏற்றலின் - உழவுத்தொழிலை விடாது அதனை மேற்கொண்டிருந்த படியினால், முன்னம் - முன்னாளில், ஈசற்கு அமுது அமைத்தார் - சிவபெருமானுக்கு உணவு சமைத்துப் படைத்தார், உன்னில் - எண்ணுமிடத்தில், கரவாது - வஞ்சகமில்லாமல், கை செய்து ஊண் மாலையவர்-

கையால் தொழில் செய்து உணவு தேடி உண்ணும் இயல்புடைய தொழிலாளர், இரவார் - பிறரிடஞ் சென்று இரக்கமாட்டார்கள், இரப்பார்க்கு ஒன்று ஈவர் - தம்மிடம் இரந்தவர்க்கு ஒளிக்காமல் ஒரு பொருள் ஈவர்.

(வி - ம்.) இளையான்குடிமாற நாயனர் துன்பம் பொருந்திய வறுமை வந்த காலத்தினும் உழவுத் தொழிலை மேற் கொண்டிருந்தபடியினுல் சிவபெருமானுக்கு அமுது சமைத்துப் படைத்தார். வஞ்சகமில்லாமல் தொழில் செய்துண்ணுந் தன்மையுடையவர்கள் தாம் பிறரிடஞ் சென்று இரவார்; இரப்பார்க்குத் தம்மால் இயன்றதைக் கொடுப்பார் என்பதாம்.

இளையான்குடிமாறர் கதை

இளையான்குடிமாறநாயனர் சிவனடியார்களைப் போற்றுபவராக விளங்கினர். தம்முடைய செல்வங் குன்றிய வறுமைக் காலத்தினும் உழவுத் தொழிலை விடாது தமக்குக் கிடைத்த நெல்லை வயலில் விதைத்து விட்டுப் பசியால் வருந்தியிருந்தார். அவ்வாறிருந்த சமயத்திலே சிவபிரான் அவரை ஆராய்ந்து பார்ப்பதற்காக ஓரடியவராக வந்து உணவு வேண்டினர். மழை பெய்து கொண்டிருந்த இராப் போதில் இருள் மிகுதியாக விருத்தலையும் பொருட் படுத்தாது தம்முடைய வயலுக்குச் சென்று, அதிலே மழையால் மிதக்கும் நென்முளைகளை வாரிக் கொண்டு வந்து திருவமுது செய்வித்து அதனல் ஏற்பட்ட நல்வினையால் சிவபதமடைந்தார்.

நல்குரவு

105. ஆலவா யண்ணறேழும் பைத்தருமி நீங்கவோற்கு
மூலமாத் தேர்ந்தான் முருகேசா—ஞாலமிசை
இன்மை யெனவோரு பாவி மறுமையும்
இம்மையு மின்றி வரும்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, ஆலவாய் அண்ணல் தொழும்பை - திருவாலவாயிலெழுந்தருளிய சிவ

பெருமானுடைய திருத்தொண்டை, தருமி - தருமி என்னும் அந்தணன், ஒற்கம் மூலமா நீங்க தேர்ந்தான் - வறுமையின் காரணமாக விட்டுவிடுவதற்கு முடிவு செய்தான், ஞாலமிசை - உலகத்திலே, இன்மை என ஒரு பாவி - வறுமை யென்று சொல்லப்படுகிற ஒரு தீவினையாளன், மறுமையும்-மறுமையின்பமும், இம்மையும்—இம்மையின்பமும், இன்றி வரும்-இல்லாமற் போகுமாறு வருவான்.

(வி - ம்.) தருமியென்னும் அந்தணன் திருவாலவாய்ச் சிவ பெருமானுடைய திருத்தொண்டையும் வறுமை காரணமாக விட்டுவிடுவதற்கு முடிவு செய்தான். வறுமை யென்று சொல்லப்படுகிற ஒரு தீவினையாளன் மறுமையின்பமும் இம்மையின்பமும் இல்லாமற் செய்து கொண்டு வருவான் என்பதாம்.

தருமி கதை

திருவாலவாயிலே தருமி யென்னும் அந்தணன் சோமசுந்தரக் கடவுளைப் பூசித்து வழிபட்டு அரிய திருத்தொண்டுகள் செய்து கொண்டிருந்தான். நெடு நாள் மழை பெய்யாதபடியினாலே நாட்டில் பஞ்ச முண்டாகியது. அதனால் தருமி மிகுந்த துன்பத்திற்குள்ளானான். திருத்தொண்டை விட்டு விடுவதற்கு முடிவு செய்தான். கடவுள் திருமுன்னர்ச் சென்று, "இங்கிருப்பின் உணவில்லாமல் மாண்டு போவேன். ஆகவே வேறு நாடடைந்து உயிர் வாழ்ந்து இந்நாடு செழித்தபின் இங்கு வருகின்றேன்" என்று முறையிட்டான். சோமசுந்தரப் பெருமான் திருவருள் கூர்ந்து "கொங்குதேர் வாழ்க்கை" என்னுஞ் செய்யுளைப் பாடிக் கொடுத்தார். தருமி அதனைப் பாண்டியனிடங் கொடுத்துப் பொற்கிழி பெற்று வாழ்க்கையை நடத்தினான்.

இரவு

106\. ஒக்கலைவீட் டிக்களத்தை யோகையினி
யற்பகையார்
முக்கணனுக் கீந்தார் முருகேசா—மிக்குவரும்
இன்ப மோருவற் கிரத்த லிரந்தவை
துன்ப முறாஅ வரின்.

(இ — ள்.) முருகேசா-முருகப் பெருமானே!, இயற்பகை நாயனார், ஓகையின்-உவகையோடு, களத்தை - மனைவியை, ஒக்கலை வீட்டி - உறவினர்களைக் கொன்று, முக்கணனுக்கு ஈந்தார் - சிவபெருமானுக்குக் கொடுத்தார், இரந்தவை துன்பம் உறுவரின் - இரக்கப்பட்ட பொருள் துன்பமில்லாமற் கிடைக்குமாயின், ஒருவற்கு - ஒருவனுக்கு, இரத்தல் - இரத்தலாலும், மிக்கு வரும் இன்பம் - மிகுதியாக இன்பம் உண்டாகும்.

((வி - ம்.) இயற்பகைநாயனார் தம்முடைய உறவினர்களைக் கொலைபுரிந்து தம்முடைய மனைவியை மிகுந்த மகிழ்ச்சியோடு சிவபெருமானுக்குக் கொடுத்தார். இரக்கப்பட்ட பொருள் துன்பமில்லாமல் ஒருவனுக்குக் கிடைக்குமாயின் இரத்தலும் இன்பமே என்பதாம்.

இயற்பகைநாயனார் கதை

சிவபெருமான் இயற்பகை நாயனாருடைய அன்பை உலகினருக்கு விளக்க எண்ணினார். காமுகன் போல் கோலம் பூண்டு இயற்பகையாரிடஞ் சென்றார். "உன்னுடைய மனைவியை எனக்குக் கொடுத்தல் வேண்டும்" என்று இரந்தார். இயற்பகையார் அவர் விரும்பிய வாறே மனைவியைக் கொடுத்தார். பிறரால் இவருக்கு இடையூறு உண்டாகாதபடி உடன் சென்று வழிவிட்டார். அது பொழுது எதிர்த்த உறவினர்களையெல்லாந் தாமே கொன்றார். இயற்பகையாருடைய இச்செயல் இறைவனுக்கு மகிழ்ச்சியை அளித்ததால் இயற்பகையாருக்கு வீடு

பேற்றைக் கொடுத்தருளினர். இறைவன் விரும்பியவாறு இயற்பகையாருடைய மனேவியைப் பெற்றதால் அஃது அவருக்கு மிகுந்த மகிழ்ச்சியை உண்டு செய்தது.

இரவச்சம்

107. துன்பகல்வோ மென்று துருபதன்பா
லேற்றயர்ந்தான்
முன்பு துரோணன் முருகேசா—இன்பமிக
இன்மை யிடும்பை யிரந்துதீர் வாமேன்னும்
வன்மையின் வன்பாட்ட தில்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, முன்பு - முன்னளிலே, துரோணன் - துரோணச்சாரியர், துன்பு அகல்வோம் என்று - இரந்து நம்முடைய துன்பத்தைப் போக்குவோமென்று, துருபதன்பால் ஏற்று அயர்ந்தான் - துருபதனிடத்திலே இரந்து தளர்ச்சியடைந்தார்; இன்மை இடும்பை - வறுமைத்துன்பத்தை, இன்பம்மிக - மகிழ்ச்சி மிகுமாறு, இரந்து தீர்வாம் என்னும் - இரந்து போக்கிக் கொள்வோம் என்னும், வன்மையின் - வன்னெஞ்சத்தைப் போல, வன்பாட்டது இல் - வன்மையானது வேறு இல்லை.

(வி - ம்.) முன்னளிலே துரோணச்சாரியார் துருபதனிடத்திலே இரந்து நம்முடைய வறுமையைப் போக்கிக் கொள்வோமென்று போய் இரந்து தளர்ச்சியடைந்தார். வறுமைத் துன்பத்தை இரந்து போக்கிக் கொள்வோமென்று எண்ணுகிற கொடிய தன்மையைப் போல் வன்மையானது வேறு இல்லை என்பதாம்.

துரோனர் கதை

முன் காலத்திலே துரோணச்சாரியார் தம்முடைய குழந்தையருந்துவதற்குப் பாலின்மையை எண்ணி உள்ளம்

வருந்தினர். நம்மோடு முன்பு அக்கினி கோத்திர முனிவரிடம் வில் வித்தை கற்ற துருபதனால் இத்துன்பத்தைப் போக்கிக் கொள்வோமென்று முடிவு செய்தார். அவனிடஞ் சென்று, "எனக்குக் கற்று ஒன்று தரவேண்டும், நீ முன்பு என்னோடு வில் வித்தை கற்றுயல்லையோ?" என்று சொன்னார். அத்துருபதனே உம்மை நான் இதற்கு முன்பு பார்த்ததில்லை, உமக்கு எதுவும் தரமுடியாது உடனே இவ்விடம் விட்டுச் செல்லுவீராக' என்று வன்சொல் வழங்கினான். துரோணர் தம்முடைய அவாக்கெட்டு மீண்டார்.

கயமை

108. வஞ்சநலன் வாமதே வற்குதவான் வாசியைச்சேய்
முஞ்சியபின் னீந்தான் முருகேசா—எஞ்சலின்றிச்
சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோல்
கொல்லப் பயன்படுங் கீழ்.

(இ-ள்.) முருகேசா-முருகப்பெருமானே!, வஞ்சநலன்-வஞ்சகத்தன்மை பொருந்திய நலன் என்பவன், வாசியை-குதிரையை, வாமதேவற்கு உதவான் - வாமதேவ முனிவருக்குக் கொடாதவனாகவிருந்தான், சேய் முஞ்சியபின் ஈந்தான் - குழந்தை இறந்தபிறகு கொடுத்தான், சான்றோர் - பெரியோர்கள், எஞ்சல் இன்றி - குறைவில்லாமல், சொல்லப் பயன்படுவர் — தம்முடைய குறையைச் சொல்லக் கேட்ட அளவிலேயே ஆகவேண்டியதைச் செய்வார்கள், கீழ் - கீழ்மக்களோ, கரும்புபோல் — கரும்பைப் போல், கொல்லப் பயன்படுவர் - வருத்திக் கசக்கிய பின்னரே பயனைச் செய்வார்கள்.

(வி-ம்.) நலன் என்பவன் குதிரையை வாமதேவ முனிவர் கேட்டபொழுது கொடாமல் மறுத்துப் பேசினான். பிறகு குழந்தையிறந்த பிறகு கொடுத்து விட்டான்; பெரியோர்கள்

மற்றவர்கள் கூறியதைக் கேட்ட அளவிலேயே நல்ல பயனைச் செய்வார்கள்; கீழ்மக்களோ கரும்பைக் கசக்கிப் பிழிவதைப் போல் நெருக்கி வருத்தினால்தான் பயனைச் செய்வார்கள் என்பதாம்.

நலன் கதை

நலன் என்னும் ஓர் அரசன் காட்டிற்குச் சென்று வேட்டையாடினான். தப்பியோடிய ஒரு மானைத் துரத்த முடியாமல் அவனுடைய குதிரைகள் இளைத்திருந்தன. அக்காட்டிலிருந்த வாமதேவ முனிவருடைய சிறந்த இரண்டு குதிரைகளை உடனே கொடுத்து விடுவதாகக் கூறிப் பெற்றுக்கொண்டு சென்றான். சில நாட்களாகியுங் கூறியபடி கொடுக்கவில்லை. குதிரையைப் பெறுவதற்குத் தூதனுப்பினார். அப்பொழுதுங் கொடுக்கவில்லை. பிறகு முனிவரே நேரிற்சென்று கேட்டார், அப்பொழுது நலன், "உம்முடைய குதிரைகளைக் கொடுக்க முடியாது என் குதிரைகளைத் தருகிறேன்" என்று சொன்னான். முனிவர் அந்தணர் பொருளைப் பறிப்பது நேர்மையன்று; தீமையுண்டாவதற்கு முன்னர்த் தந்துவிடுக என்று வற்புறுத்தினார். அரசன் சினங் கொண்டான். அவரைக் கொல்லும் பொருட்டு ஒரு வீரனை விடுத்தான். முனிவர் அசுரரை மனத்தாற் படைத்து அரசனையும் வீரனையுங் கொன்றார். அரசுரிமையை அவனுடைய தம்பியாகிய நலன் என்பவன் மேற்கொண்டான். முனிவர் நலனிடமுஞ் சென்று குதிரையைக் கேட்டார். வஞ்சகம் மிகுந்த அவன் முனிவருடைய பெருமையை உணர்ந்திருந்தும் முனிவரைக் கொல்லுதற்குத் துணிந்தான். கணையைக் கையிலே எடுத்தான். அவனுடைய கை அசைவற்று நின்றது. அவர் வசவுரைப்படி நலனுடைய மகனும் இறந்தான். இதன் பிறகு நலன்பணிந்து குதிரைகளைக் கொடுத்து விட்டான் முனிவர் மொழிப்படி கை இயங்கியது. மகனும் உயிர் பெற்றெழுந்தான்.

௩. காமத்துப்பால்

தகையணங்குறுத்தல்

109. ஓகையினு ருக்குமணி யோண்மைகண்டு
சூர்கோலெனு
மோகமிக்கான் கண்ணன் முருகேசா—வாகின்
அணங்குகோ லாய்மயில் கோல்லோ கனங்குழை
மாதர்கோன் மாலுமேன் னேஞ்சு.

(இ-ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, கண்ணன் - கண்ணபிரானனவர், ஓகையின் - உவகையோடு, உருக்குமணி ஒண்மை கண்டு - உருக்குமணியினுடைய அழகைப் பார்த்து, சூர் கொல் எனு - இவள் தெய்வப் பெண்ணே என்று, மோகம் மிக்கான் - காமம் மிகுந்தவரானர்; வாகின் - அழகினையுடைய, அணங்கு கொல் - தெய்வப்பெண்ணே?, ஆய்மயில்கொல் - அழகிய மயிலோ?, கனங்குழை மாதர் கொல் - கனமான குழையணிந்த மனிதப்பெண்ணே?, என் நெஞ்சம் மாலும் - என்னுடைய உள்ளம் மயங்குகின்றது.

(வி-ூ.) கண்ணபிரான் மிகுந்த மகிழ்ச்சியோடு உருக்குமணியினுடைய அழகைப் பார்த்து இவள் தெய்வப் பெண்ணே என்று கூறி மயங்கினர்; தெய்வப்பெண்ணே அழகிய மயிலோ? கனமான குழையணிந்த மானிடப் பெண்ணே என்று என்னுடைய நெஞ்சம் மயங்குகின்றது என்பதாம்.

கண்ணபிரான் கதை

உருக்குமணி என்பவள் விதர்ப்ப நாட்டு அரசனுடைய மகள். இவள் கண்ணபிரானுடைய சீர்த்தியை உணர்ந்து அப் பண்ணவனைத் திருமணஞ் செய்து கொள்ள வேண்டுமென்று எண்ணியிருந்தாள். திருக்கோயிலை அடைந்து அம்பிகையை நாளும் வேண்டினுள்; ஒருநாள் ஒரு பொழிலில் இருந்தாள்.

அவளைக் குறித்தே துவாரகையினின்றும் புறப்பட்ட கண்ண பிரான் அச் சோலையை அடைந்து உருக்குமணியைக் கண்டார். அவள் உருக்குமணியென அறியாது இவள் தெய்வப் பெண்ணோ மானிடப் பெண்ணோ என்று எண்ணி மயங்கினர். பிறகு அவள் தான் தாம் நாடி வந்த உருக்குமணி என்று உணர்ந்தார்; அவளைத் திருமணம் புரிந்து மகிழ்ந்தார்.

குறிப்பறிதல்

110. உற்றபிணி யும்மருந்துங் காசிபனோர்ந் தான்மாயை
முற்றுழிக்கண் ணோக்கின் முருகேசா—பற்றும்
இருநோக் கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கோன் றந்நோய் மருந்து.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, மாயை - மாயையினுடைய, முற்றுஉழிகண் நோக்கில் - முற்றிய கண் பார்வையிடத்திலே, உற்ற பிணி - நோய் உண்டாதலையும், மருந்தும் - அந் நோய்க்கு அவளே மருந்தாதலையும், காசிபன் ஓர்ந்தான் - காசிபமுனிவர் உணர்ந்தார், பற்றும் - பொருந் தும், இவள் உண்கண் - இவளுடைய மையுண்ட கண்ணானது இரு நோக்கு உள்ளது - இருவகைப் பார்வைகளை உடைய தாக விருக்கிறது, ஒரு நோக்கு நோய் நோக்கு - ஒரு பார்வை யானது நோயை உண்டாக்கும் பார்வை, ஒன்று அந்நோய் மருந்து - ஒரு பார்வை அந்நோய்க்கு மருந்தாக விளங்குவது.

(வி - ம்.) காசிப முனிவர் மாயையினுடைய கண்பார்வை யிடத்திலே நோயையும் அதற்கு மருந்தையுங் கண்டார்; இவளுடைய மையுண்ட கண்களானவை இருவகையான பார்வையை உடையதாக விருக்கின்றன. ஒரு பார்வை நோயை உண்டு செய்வது, ஒரு பார்வை அந்நோய்க்கு மருந்தாக அமைந்தது என்பதாம்.

காசிபர் கதை

அவுணராசன் பெற்ற சுரசையென்பவள் சுக்கிரசாரியரிடத்திலே மாய வித்தைகளைக் கற்றுத் தேறினுள். அவரால் மாயை என்று பெயர் பெற்ருள். அவர் கூறியவாறே காசிப முனிவர்பாற் சென்று அவரைத் தன்னுடைய கண்களால் மயக்கினுள். அவர் அவளுடைய பார்வையால் தமக்குத் துன்பமும் இன்பமும் விளைதல உணர்ந்தார்; அவளோடு கலந்து மகிழ்ந்தார்.

புணர்ச்சி மகிழ்தல்

111. பூரிளமை யேற்றுவெருப் போகநனி
துய்த்துவந்தான்
மூரி யயாதி முருகேசா—ஓரின்
அறிதோ றறியாமை கண்டற்ருற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு.

(இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே!, மூரி யயாதி - பெருமை பொருந்திய யயாதி மன்னன், பூரு இளமை ஏற்று - பூரு என்பவனுடைய இளமைப் பருவத்தைத் தான் பெற்று, வெருப் போகம் நனி துய்த்து வந்தான் - வெறுக்காத போகத்தை நன்ருக நுகர்ந்து வந்தான், ஓரின் - ஆராயுமிடத்து, சேய் இழை மாட்டு - செந்நிற அணிகலன்களை அணிந்த இவளிடத்திலே, காமம் செறிதோறும் - காமவின்பத்தைப் பொருந்தி நுகரும் பொழுதெல்லாம, அறி தோறு அறியாமை கண்டற்று - நூற்பொருள்களை அறிய அறிய அறியாமையைக் கண்டாற் போன்றதாம். ஆல் - அசைநிலை.

(வி - ம்.) யயாதி மன்னன் பூருவின்இளமையைப் பெற்றுப் போக இன்பங்களை மிகுதியாக நுகர்ந்து மகிழ்ந்தான்; செந்நிற அணிகலன்களை அணிந்த இவளிடத்திலே காமவின்பத்தைப்

பொருந்தி நுகரும் பொழுதெல்லாம் நூற் பொருளை அறிய அறிய இன்பமுண்டாதலைப் போல மகிழ்ச்சியானது மிகுதியாக உண்டாகின்றது என்பதாம்.

யயாதி கதை

விடபருவா என்னும் அசுரராசன் மகளாகிய சன்மிட்டையென்பவளும் சுக்கிராச்சாரியார் மகளாகிய தேவயானை என்பவளும் ஒருநாள் நீராடிய பிறகு தவறுக ஒருவர் உடையை ஒருவர் அணிந்து கொண்டனர். அப்பொழுது தேவயானை சன்மிட்டையைப் பார்த்துப், ''புனிதையல்லாத நீ என்னுடைய ஆடையை அணியலாமோ?'' என்று கேட்டாள். அதற்குச் சன்மிட்டையானவள், "என்னுடைய தந்தையால் உன்னுடைய தந்தை உயிர் வாழ்தலை அறியாயோ?'' என்று கேட்டதுடன் தேவயானையை ஒரு பாழ்ங்கிணற்றிலே தள்ளிவிட்டுச் சென்றாள். தேவயானை அங்கு வந்த யயாதிராசனுற் கரையேறிச் சென்று தன்னுடைய தந்தைக்குச் செய்தியைக் கூறினாள். விடபருவா அங்கு வந்து சுக்கிராச்சாரியாருடைய சினந்தணியுமாறு தன் மகள் சன்மிட்டையைத் தேவயானைக்கு அடிமையாக்கினான். அவள் ஆயிரந் தோழிகளோடு ஏவல் புரிந்து கொண்டிருந்தாள்.

வியாழ பகவான் மகனாகிய கசன் சுக்கிராசாரியாருடைய மகளை அந்தணர்க்குரிமையாகாதவாறு வசவுரை வழங்கியிருத்தலின் அவர் யயாதி மன்னனுக்குச் 'சன்மிட்டையை விரும்பற்க' என்று கூறித் தம் மகளைத் திருமணஞ் செய்து கொடுத்தார். அவன் அவளோடுகூடி, யது, துருவசு என்னும் இரண்டு மக்களைப் பெற்றான். ஒருநாள் யயாதி மன்னன் சோலையை அடைந்தபொழுது அங்கு வந்த சன்மிட்டை யயாதி மன்னனிடம் மக்கட் பேறு வேண்டினாள். அவன் அவளோடு சேர்ந்து துருகு, அனு, பூரு, என்னும் மூன்று மக்களைப் பெற்றான். இதனைச் சுக்கிராச்சாரியார் அறிந்தார். "நீஎன் மொழியைக் கடந்தாயாதலின் மூப்புப் பருவம் அடைவாயாக'' என்று யயாதி மன்னனுக்கு வசவுரை வழங்கினார். "வேறு எவரேனும் மூப்பினையேற்றால் இளமைபெறுவாய்'' என்று வசவுரை நீக்கமுங் கூறினார். யயாதி தன் மக்களையழைத்து, ''என் மூப்பையேற்று இளமைதந்த

வனுக்குப் பிறகு அரசாட்சியைத் தருவேன்'' என்று கூறினன். பூரு தன்னுடைய இளமையைக் கொடுத்து விட்டுத் தந்தையி னுடைய மூப்பையேற்றுக் கொண்டான். யயாதி தன்னுடைய மனைவியர்பால் எல்லையற்ற இன்பங்களைப் புதிது புதிதாக நுகர்ந்து மகிழ்ந்தான்.

நலம்புனைந் துரைத்தல்

112. சந்தமிகு வாலைநலத் தைத்தவவா லன்வியந்து
முந்திமண நேர்ந்தான் முருகேசா—கந்த
முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.

(இ - ள்.) முருகேசா-முருகப்பெருமானே!, தவவாலன்-தவஞ் செய்திருந்த வாலமுனிவர் என்பவர், சந்தம்மிகு - அழகு மிகுந்த, வாலை நலத்தை வியந்து - வாலை என்பவளுடைய அழகு முதலியவைகளைப் புகழ்ந்து, முந்தி மணம் நேர்ந்தான் - முன் காலத்திலே மணஞ் செய்து கொண்டார். வேய்த்தோள் அவட்கு - மூங்கில் போன்ற தோளையுடைய இவளுக்கு, முறுவல் முத்தம் - பற்களானவை முத்துப் போன்றவை, கந்தம் - மணம் பொருந்திய, வெறிநாற்றம் - இயற்கை மணமே மணம், உண்கண் வேல் - மையுண்ட கண்கள், வேலைப் போன்றவை.

(வி - ம்.) வாலமுனிவர் என்பவர் அழகிய வாலை என்பவளுடைய அழகு முதலியவைகளை வியந்து முன்னுளிலே திருமணஞ் செய்து கொண்டார்: மூங்கில் போலுந் தோளை யுடைய இவளுக்குத் தளிரே மேனி; முத்தே பல்; இயற்கை மணமே மணம்; மையுண்ட கண்கள் வேற்களைப் போன்றன என்பதாம்.

வாலமுனிவர் கதை

முற்காலத்திலே எக்காலத்தும் மாருத இளமையும் அழகும் ஒழுக்கமும் ஒருங்கமைந்த வாலமுனிவர் என்பவர் நருமதை யாற்றுக்கரையிலே சிவபூசை செய்துகொண்டிருந்தார். அப்பொழுது நான்முகன் அம்முனிவரிடஞ் சென்று, "நீ சித்திரகேது என்னும் அரசனும் அவனுடைய மனைவியாகிய சந்திரவதனியுஞ் செய்த அருந்தவத்தாற் பிறந்த வாலை என்பவளைத் திருமணஞ் செய்து கொள்" என்று கூறினுன். முனிவர் நான்முகன் உரையை மறுத்தார். பிறகு அந்த வாலையை நேரே கண்டார். அப்பொழுது அவருக்கு வியப்புந் திகைப்பும் உண்டாகிவிட்டது. அவளுடைய உறுப்புக்களைத் தனித்தனியே வியந்து புகழ்ந்தார். மணஞ் செய்து கொள்வதற்கு உடன்பட்டு மணஞ்செய்து கொண்டார். நூற்றெட்டுப் பிள்ளைகளைப் பெற்று அவளோடு இனிது வாழ்ந்திருந்தார்.

காதற்சிறப் புரைத்தல்

113. தேர்ச்சியய னிந்துமதிச் சேர்ந்துழிவாழ்ந் தேமடிவில்
மூர்ச்சித்து மாய்ந்தான் முருகேசா—நேர்ச்சிமிக
வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாத
லதற்கன்ன ணீங்கு மிடத்து.

(இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே!, தேர்ச்சி அயன் - எல்லாவற்றினுந் தேர்ச்சி பெற்றவனுகிய அயன் என்னும் அரசன், இந்துமதி சேர்ந்துழி வாழ்ந்து - இந்துமதி யென்பவள் தன்னையடைந்தவிடத்து வாழ்ந்து கொண்டிருந்து, மடிவில் மூர்ச்சித்து மாய்ந்தான் - அவள் இறந்தொழிந்தபோது தான் மூர்ச்சித்துப் பிறகு மாய்ந்தான், நேர்ச்சி மிக - அழகு மிகுமாறு, ஆய் இழை - ஆராய்ந்து செய்யப்பட்ட அணிகலன்களை அணிந்தவள், வாழ்தல் உயிர்க்கு அன்னள் - கூடும்போது உயிர்க்கு வாழ்

வைப் போன்றவள், நீங்கும் இடத்து — பிரியுமிடத்திலே, சாதல் அதற்கு அன்னள்-உயிருக்குச் சாவைப்போன்றவள்.

(வி - ம்.) அயன் என்னும் அரசன் இந்துமதி யென்பவள் தன்னைச் சேர்ந்திருந்த போது இனிது வாழ்ந்திருந்தான். அவள் இறந்த போதோ மூர்ச்சித்துப் பிறகு தானும் இறந்தான். ஆராய்ந்த அணிகலன்களையுடைய இவள் கூடும் போது உயிருக்கு வாழ்வைப் போன்றவள்; பிரியும் போது உயிர்க்குச் சாவைப் போன்றவள் என்பதாம்.

அயன் கதை

திரணவிந்து முனிவர் என்பவர் தவஞ் செய்து கொண்டிருந்தார். இந்திரன் அவருடைய தவத்தை யழிக்குமாறு அரிணி என்னும் அரம்பையை அனுப்பினான். அவள் அவருடைய தீமொழியால் விதர்ப்ப நாட்டரசன் மகளாய் இந்துமதி என்னும் பெயரோடு பிறந்தாள். அவளை அயன் என்னும் அரசன் திருமணஞ் செய்து கொண்டான். அவளோடு பிரிவின்றி இன்பம் நுகர்ந்து கொண்டிருக்கும் போது விண்ணிற் சென்ற நாரதமுனிவருடைய யாழிலிருந்து விழ்ந்த மலர்மாலையால் அவள் இறந்தாள். அரசன் மூர்ச்சித்துத் தெளிந்தான். அவளுடைய பிரிவாற்றாமையால் எட்டு ஆண்டுகள் வருந்தியிருந்தான். பிறகு இறந்து விண்ணுலகடைந்து அங்கே அவளுடன் இன்பம் நுகர்ந்தான்.

நாணுத்துற வுரைத்தல்

114\. கோளோடுநா ணீத்தகலி கைக்கயர்ந்தான் கோமகவான்
மூளுறுகா மத்தான் முருகேசா—ஆளுறுமக்
காமக் கடும்புன லுய்க்குமே நாணொடு
நல்லாண்மை யென்னும் புணை.

(இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே!, கோமகவான் - தலைமைத் தன்மை பொருந்திய இந்திரன், மூள் உறு

காமத்தால் - உண்டாகிய காமத்தினுல், கோள்ஒடு நாள் நீத்து - கோளையும நாளையும் விலக்கி, அகலிகைக்கு அயர்ந் தான் - அகலிகையின் பொருட்டுத் தளர்ச்சியடைந்தான், ஆளுறும்அ - ஆளப்படுகிற அந்த, நாண் ஒடு நல் ஆண்மை என்னும் புணை - நாணமும் நல்ல ஆண்மையுமாகிய தோணி களை, காமம் கடும்புனல் உய்க்கும் - காமம் என்கிற கடுமை யான வெள்ளமானது என்னிடமிருந்து அடித்துக் கொண்டு போய் விடுகின்றது.

(வி - ம்.) தலைமைத்தன்மை பொருந்திய இந்திரனுனவன் காமத்தினுல் கோளையும் நாளையும் நீத்து அகலிகையின் பொருட்டுத் தளர்ச்சியடைந்தான்: நாணமும் நல்ல ஆண்மையு மாகிய தோணிகளைக் காமம் என்கிற கடுமையான வெள்ள மானது என்னிடமிருந்து அடித்துக்கொண்டு போய் விடுகின்றது என்பதாம்.

இந்திரன் கதை

இந்திரன் கௌதம முனிவருடைய மனைவியாகிய அகலிகையின் பேரழகை நாரதமுனிவரால் அறிந்தான். அவள் மீது அதிக மோகங்கொண்டான். ஒருநாள் அம்முனிவர் காலைக் கடன் கழிக்கச் சென்ற சமயத்தில் அம்முனிவருடைய வடிவத்தையெடுத்துக் கொண்டு அவளிடஞ் சென்ருன். "பெண்ணே! வழியில் ஒரு தடாகத்தில் ஆடையில்லாமல் நீராடிய ஒரு பெண்ணைக் கண்டு காமம் அதிகரித்து மீண்டேன்" என்று கூறி அவளைக் கூடினுன். இருப்பிடத்தில் நிகழ்வதை முனிவர் உணர்ந்தார். விரைந்து இருப்பிடத்திற்கு வந்தார். அகலிகையைப் பார்த்து, 'நீ ஆராயாது இவனுடன் சேர்ந்த மையால் கல்லாகுக'வெனத் தீ மொழி புகன்ருர். இந்திரனை 'உன்னுடைய உடல் முழுவதும் பெண்குறிகளையடைக' வென்று சொன்னுர். இந்திரன் அவ்வாறே ஆகி நாணத்தையும் ஆற்றலையும் இழந்து வருந்தினுன்.

அலரறிவுறுத்தல்

115. மேயருக்கு மாங்கதனை வெஃகியொரு
நாண்முகுந்தை
மூயபழி பூண்டாள் முருகேசா—நேயமிகக்
கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்
திங்களைப் பாம்புகோண் டற்று.

(இ - ள்.) முருகேசா—முருகப்பெருமானே!, முகுந்தை-முகுந்தை யென்பவள், மேய ருக்குமாங்கதனை ஒருநாள் வெஃகி- தானிருக்கு மிடத்திற்கு வந்த ருக்குமாங்கதனை ஒருநாள் விரும்பி, மூய பழி பூண்டாள் - மிகுந்த பழியை அடைந்தாள்; நேயம்மிக - அன்புமிகுமாறு, கண்டது ஒருநாள் - காதலரைக் கண்டது ஒருநாள்தான், அலர் - அதனால் உண்டாகியபழிச் சொல்லோ, மன்னும் திங்களைப் பாம்பு கொண்ட அற்று - நிலைபெற்ற திங்களைப் பாம்பு கொண்ட செய்தியைப்போல் எங்கும் பரவிவிட்டது. மன்னும் உம்மையும் அசைநிலை.

(வி - ம்.) முகுந்தை யென்பவள் ருக்குமாங்கதன் என்பவனை ஒருநாள் விரும்பி அதனால் என்றும் நிலைத்திருப்ப தாகிய பெரும்பழியினைப் பூண்டாள்; காதலரைக் கண்டது ஒரு நாள் தான், அதனால் உண்டாகிய அலரோ திங்களைப் பாம்பு கொண்டாற் போல எங்கும் பரவி விட்டது என்பதாம்.

முகுந்தை கதை

கவிமுனிவருடைய மனைவியாகிய முகுந்தை யென்பவள் தன்னுடைய இருப்பிடத்திற்குத் தண்ணீர் வேண்டி வந்த உருக்குமாங்கதன் என்னும் அழகன் மீது பெருங்காதல் கொண்டாள். அவனோ அவளுடைய காதலை மறுத்தான். அவனுக்குக் குட்ட நோயுண்டாகுமாறு தீ மொழிபுகன்றாள்.

உடனே அவ்வுருக் கொண்டுவந்த இந்திரனைக் கூடி இன்பம் நுகர்ந்தாள். அதனால் என்றும் நீங்காத பெரும்பழியைப் பூண்டாள். அப்பழி என்றும் உலகத்திலே நிலைபெற்று நிற்பதாயிற்று.

பிரிவாற்றுமை

116. அற்றதுணி யோடுதம யந்திபுன லார்ந்துநளன்
முற்றுழியுஞ் சோர்ந்தாண் முருகேசா—பற்றி
அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற்
றேறியார்க் குண்டோ தவறு.

(இ - ள்.) முருகேசா-முருகப்பெருமானே!, தமயந்தி - தமயந்தியானவள், அற்ற துணியோடு - பாதி கிழிபட்ட ஆடையோடு, புனல் ஆர்ந்து - நீரையே பருகி, நளன் முற்றுழியும் சோர்ந்தாள்-நளன் தன்னையடையும்வரையிலும் தளர்ந்திருந்தாள், பற்றி - தொடர்ந்து, அளித்து - அருள் செய்து, அஞ்சல் என்றவர் நீப்பில் - அஞ்சவேண்டாமென்று முன்னே கூறியவர் பிரிந்து செல்வாரானால், தெளித்தசொல்- அவர் கூறிய உறுதிமொழியை, தேறியார்க்கு தவறு உண்டோ - தெளிந்தவர்களிடத்தில் குற்றம் உளதோ?

(வி - ம்.) தமயந்தியானவள் பாதி கிழிபட்ட ஆடையோடு தண்ணீரையே உண்டு அவனையடையும் வரையும் தளர்ந்திருந்தாள்; 'உன்னைவிட்டுப்பிரியேன் அஞ்சற்க' என்று கூறியவர் பிரிந்து செல்வாரானால் அவர்கூறிய உறுதிமொழியை நம்பியவரிடத்திலே தவறுண்டாகுமோ? பிரிந்து செல்பவரிடத்திலேதான் தவறுண்டாகும் என்பதாம்.

நளன் கதை

நளனானவன் தமயந்தியை மணந்து இன்புற்று வாழுங் காலத்தில், "நான் உன்னை என்றும் பிரியேன்"னென்றுரைத்து இனிது

வாழ்ந்திருந்தான். பிறகு புட்கர நாட்டரசனிடஞ் சூதாடி நாடு நகரம் யாவுமிழந்து காட்டையடைந்தான். தமயந்தி விருப்பப் படி ஓர் அன்னத்தைப் பிடிப்பதற்கு ஆடையை வீசியபோது அன்னம் அவ் ஆடையைப்பற்றிச் சென்றது. பிறகு நளனும் தமயந்தியும் ஓர் ஆடையை அணிந்தவர்களாய் அன்றிரவு உறங்கும்போது நளன் ஆடையிற் பாதியைக் கிழித்துக்கொண்டு அவளைவிட்டுப் பிரிந்து சென்றான். தமயந்தி பிரிவாற்றாமையால் வருந்தி எங்குந் தேடினாள். பிறகு தாய் வீட்டை யடைந்தாள். தாய் தேற்றவுந் தேறாதவளாய், முன்பு கிழிக்கப்பட்ட அவ் வாடையை அன்றி வேறு ஆடையையும் அணியாதவளாய் நீரையே பருகித் தளர்ந்திருந்தாள். பிறகு நளனை யடைந்த பிறகுதான் அவளுடைய துன்பங்கள் ஒழிந்தன.

படர்மெலிந் திரங்கல்

117. ஆகமெலிந் தாள்சீதை வான்மீகி யாதரித்தும்
மோகமோடு நாணால் முருகேசா—வேகமிகும்
காமமு நாணு முயிர்காவாத் தூங்குமென்
ஞேனு வுடம்பி னகத்து.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, சீதை - சீதாபிராட்டியானவள், வான்மீகி ஆதரித்தும் - வான்மீகி முனிவரால் பாதுகாக்கப்பட்டிருந்தும், மோக மொடு நாணால் ஆகம் மெலிந்தாள் - மோகத்தினாலும் நாணத்தினாலும் உடல் மெலியப்பெற்றாள், வேகம மிகும் - விரைவுமிகுந்த காமமும் நாணும் - காமமும் வெட்கமும், என்னோனு உடம் பின் அகத்து - துன்பத்தைப் பொறுக்காமல் வருந்துகின்ற என் உடம்பினிடத்திலே, உயிர்காவா - உயிரேகாவடித் தண்டாக, தூங்கும் - தொங்கிக் கொண்டிருக்கும்.

(வி - ம்.) வான்மீகி முனிவரால் ஆதரிக்கப் பெற்றிருந்தும் சீதையானவள் காமமும் நாணமும் வருத்த உடல் மெலிந்தாள்; துன்பத்தைப் பொறுக்கமுடியாமல் வருந்துகின்ற என்னுடைய

உடம்பினிடத்திலே உயிரே காவடித் தண்டாகக் காமமும் நாணும் பக்கத்திற்கு ஒன்றாகத் தொங்கும் என்பதாம்.

சீதை கதை

இராமபிரான் இராவணனை வென்று அயோத்தியை அடைந்த பிறகு முடிசூட்டிக்கொண்டு அரசாட்சி செய்திருந்தார். ஒற்றர்களைப் பார்த்து, "உலகத்தார் நம்முடைய அரசாட்சியைக் குறித்து என்ன சொல்லுகிறார்கள்?" என்று உசாவினார். அதற்கு ஒற்றர்கள், "பகைவனுடைய ஊரில் சிறையிருந்த சீதையோடு வாழ்தலைத்தவிர மற்றவைகளெல்லாம் சரிதான்" என்றுகூறு கிறார்கள் என்று உரைத்தனர். இதனைக்கேட்ட இராமபிரான் அப்பழிச் சொல்லை மாற்றிக்கொள்ள எண்ணினார். சீதா பிராட்டியைக் காட்டிலே கொண்டுபோய் விடுமாறு செய்தார். சீதாபிராட்டியை வான்மீக முனிவர் தம்முடைய இருப்பிடத்திற்கு அழைத்துக் கொண்டு போய்ப் பாதுகாத்தார். ஆயினும் சீதாபிராட்டி இராமபிரானை எண்ணுந்தோறும் விரகமும் காட்டில் வசிக்கநேரிட்டதைக் குறித்து நாணமுங்கொண்டு மிகவும் வருந்தியிருந்தாள்.

கண்விதுப்பழிதல்

118. ஒல்லையிற்கண் ணன்வருங்கோ லென்றயர்ந்தா ருத்
[தவன்பால்
முல்லை மடமாதர் முருகேசா—புல்லலுறப்
பேணாது பெட்டா ருளர்மன்னோ மற்றவர்க்
காணா தமைவில கண்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே !, முல்லை மடமாதர்-முல்லைநிலத்தவராகிய கோவியர்; உத்தவன்பால்- உத்தவனிடத்திலே, கண்ணன் ஒல்லையில் வரும் கொல் என்று அயர்ந்தார்- கண்ணபிரான் விரைவிலே வந்து சேருவாரோ என்று கேட்டுக் கலங்கினார்கள், புல்லல் உற -

தழுவுதல் பொருந்த, பேணுது பெட்டார் உளர் - உள்ளத்தால் விரும்பாமலே சொல்லளவில் விரும்பிப் பழகியவர் ஒருவர் இருக்கிறுர், அவர் காணுது - அவரைக் காணுமல், கண் அமைவு இல - கண்கள் அமைந்திருக்கமாட்டேம் என்கின்றன. (அஃதாவது கலங்குகின்றன.)

(வி - ம்.) முல்லை நிலப் பெண்களாகிய கோவியர் தம்மைத் தெளிவிக்க வந்த உத்தவனிடத்திலே கண்ணபிரான் விரைவிலே வந்தருளுவாரோ என்று கேட்டுக் கலங்கினுர்கள்; உள்ளத்தால் விரும்பாமலே சொல்லளவில் பழகியவர் ஒருவர் இருக்கின்றனர்; அவரைப் பார்க்காமல் என்னுடைய கண்கள் கலங்குகின்றன என்பதாம். மன், ஓ: அசைநிலை. மற்று: பிரி நிலைப் பொருளில் வந்தது.

கோவியர் கதை

கண்ணபிரான் கோகுலத்தில் உள்ள பதினுருயிரங் கோவியப் பெண்களோடுங்கூடி இன்ப நுகர்ந்திருந்த நாளில் அவரைப் பிரிந்து சென்று கஞ்சனை வதைத்தார்; பிறகு மதுரையை அடைந்தார்; கோவியர்களைத் தேற்றுமாறு அவர்களிடம் உத்தவன் என்னும் நண்பரை அனுப்பினுர். கோவியர்கள் உத்தவனைக் கண்ட அளவிலே, "கண்ணபிரான் விரைவிலே எங்களிடம் வந்து சேருவாரோ?" என்று கேட்டு உள்ளங் கலங்கினுர்கள்.

பசப்புறு பருவரல்

119\. சீவகனீங் கப்பசந்து சேடிழந்தேய்த் தாள்பதுமை
மூவலிலா தோங்கும் முருகேசா—ஓவலிலாச்
சாயலு நாணு மவர்கோண்டார் கைம்மாறு
நோயும் பசலையுந் தந்து.

(இ - ள்.) மூவல் இலாது ஓங்கும் முருகேசா - என்று மழிதலற்ற பரம் பொருளாக உயர்ந்து விளங்குகின்ற

முருகப் பெருமானே!, பதுமை-பதுமையென்பவள், சீவகன் நீங்க-சீவகன் தன்னைவிட்டுப் பிரிய, பசந்து சேடு இழந்து எய்த்தாள்-பசலை யடைந்து அழகுகெட்டு மெலிந்தாள், நோயும் பசலையும்தந்து-காமநோயையும் பசலையையும் எனக்குக் கொடுத்து, கைம்மாறு - கைம்மாற்றுதலாக, சாயலும் நாணும் அவர் கொண்டார் - என்னுடைய அழகையும் நாணத்தையும் அவர் என்னிடமிருந்து பெற்றுக்கொண்டார், சேடு - அழகு, மூவல் - அழிதல்.

(வி - ம்.) பதுமையானவள் சீவகன் தன்னை விட்டு நீங்கப் பசலை யடைந்து அழகிழந்து வருந்தினள்; காம நோயையும் பசலையையும் எனக்குக் கொடுத்து விட்டு என்னிடத்திலேயிருந்து கைம்மாறாக என்னுடைய அழகையும் நாணத்தையும் அவர் கவர்ந்து கொண்டார் என்பதாம்.

பதுமாபதி கதை

பதுமாபதி என்பவள் பல்லவதேய மன்னனாகிய உலோகமாபாலன் என்பவனுடைய மகள். இவள் சீவகனைமணந்து இன்பம் நுகர்ந்து வாழும் நாளில் சீவகன் நாட்டுவளங்களைக் காணுதற்குப் பிரிந்து சென்றான். பதுமை அவனுடைய பிரிவைப் பொறாதவளாய்க் கலங்கிப் புலம்பினள். சீவகனைக் காணுமளவும் அழகையிழந்து உடல்முழுவதும் பசலையடைந்து மெலிந்திருந்தாள்.

தனிப்படர்மிகுதி

120. பற்றி னுருப்பசியைப் பார்த்தன்வேஃகான் சிற்சபையின்
முற்றம்ப மேவு முருகேசா—உற்ற
ஒருதலையா னின்னாது காமங்காப் போல
இருதலை யானு மினிது.

(இ - ள்.) சிற்சபையின் முன் தம்பம் மேவும் முருகேசா- தில்லைப் பொன்னம்பலத்திற்கு முன்னிடத்திலுள்ள தூணிலே பொருந்திய முருகப்பெருமானே ! பற்றின் - காமப் பற்றுக்கொண்ட, உருப்பசியை - ஊர்வசியை, பார்த்தன் வெஃகான் - அருச்சுனன் விரும்பாதவனானான் ; உற்ற - பொருந்திய, காமம் - காமமானது, ஒருதலையான் இன்னாது- ஒருபக்கமாக விருத்தல் துன்பமானது, காப்போல - காவடி யின்பாரத்தைப்போல, இருதலையானும் இனிது - இருபக்க மாகவும் ஒத்திருப்பது இன்பமானது.

(வி - ம்.) காமப்பற்றுக் கொண்ட ஊர்வசியை அருச்சுனன் விரும்பாதவனானான் ; காமமானது ஒரு தலைப்பக்கமாக உண்டானால் அது துன்பத்தைக் கொடுக்கும் ; காவடித்தண்டைப் போல இருபக்கமாகவும் ஒத்திருப்பது இனிமையைத்தரும் என்பதாம்.

ஊர்வசி கதை

அருச்சுனன் விண்ணுலகத்திற்குச் சென்றான். தேவேந் திரனால் போற்றப் பெற்று அங்கே தங்கி யிருந்தான். அருச்சுனன் தங்கி யிருந்த விடத்திற்கு ஊர்வசி வந்து தன் னுடைய காமத்தைச் சொல்லித் தன்னைத் தழுவவேண்டுமென்று வேண்டிக் கொண்டாள். அருச்சுனனுக்கு அவளிடம் காமப்பற்று உண்டாக வில்லை. சிலதகுதி மொழிகளைக்கூறி அவளுடைய காதலை ஏற்க மறுத்தான். சினங் கொண்ட ஊர்வசி அவன் அலியாகுமாறு தீமொழி கூறிவிட்டு நீங்கினாள். அதனால் அருச்சுனனுக்குத் துன்பம் உண்டாகியது. பிறகு இத்தீமொழிப் பலன் விரும்பியபோது மட்டும் உண்டாகுமாறு இந்திரன் வேண்டுகோட்படி ஊர்வசியால் மாற்றப்பட்டது ; ஒரு பக்கத்தில் மட்டுங் காமம் உண்டாகு மானால் அது தீமையை உண்டாக்கு மென்பது இவ்விடத்தில் விளங்கியது.

நினைந்தவர் புலம்பல்

121. சித்தமுள வல்லமன்சிந் திப்பனோ
வென்றுலைந்தாள்
முத்தநகை மாயை முருகேசா—மத்தமுறும்
யாமு முளேங்கோ லவர்நெஞ்சத் தெங்நெஞ்சத்
தோஒ வுளரே யவர்.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே !, முத்த நகை மாயை - முத்துப்போன்ற பற்களையுடைய மாயை யானவள், சித்தம் உள அல்லமன் - நன்மனம் உள்ளவராகிய அல்லமதேவர், சிந்திப்பனோ என்று - நம்மைக்குறித்து உள்ளத்தில் நினைப்பாரோ என்று, உலைந்தாள் - உள்ளம் வருந்தினாள்; மத்தம் உறும்-காமக்களிப்புப் பொருந்திய. எம் நெஞ்சத்து - எம்முடைய உள்ளத்திலே, ஓஒ உளரே அவர் - காதலராகிய அவர் இருக்கின்றாரே, அவர் நெஞ்சத்து - அவருடைய உள்ளத்திலே, யாமும் உளேம் கொல் - நாமும் நீங்காமல் இருக்கின்றோமா ?

(வி - ம்.) முத்துப் போன்ற பற்களையுடைய மாயை யானவள் அல்லமதேவர் நம்மைப் பற்றி அவருடைய உள்ளத் திலே நினைப்பாரோ என்று எண்ணி வருந்தினாள்; களிப்புப் பொருந்திய எம்முடைய உள்ளத்தில் காதலர் இருக்கின்றார் ; அவருடைய உள்ளத்திலே நாமும் இருப்பேமோ? என்பதாம்.

மாயையின் கதை

மாயை என்பவள் அல்லம தேவரிடத்திலே அளவு கடந்த காதல் கொண்டாள். எப்பொழுதும் அவரைப் பற்றிய நினைவுடையவ ளாகவே இருந்தாள். அல்லம தேவரிடத்திற்கு மதமானி என்பவளைத் தூதனுப்பினாள். நாம் அவரைப்பற்றியே எப்பொழுதும் எண்ணிக் கொண்டிருக்கிறோமே அவர் நம்மைப் பற்றி நினைப்பாரோ என்று எண்ணமிட்டு ஏங்கினாள். அல்லம

தேவரும் தன்னை நினைக்கிறார் என்று செய்தி யறிந்து உள்ளங் களித்தாள்.

கனவுநிலை யுரைத்தல்

122. காதலனை நாளுங் கனவணைந்தே சாரதைதான்
முதுவகை யுற்றாண் முருகேசா—தீதின்
நனவென வொன்றில்லை யாயிற் கனவினால்
காதலர் நீங்கலர் மன்.

(இ ள்.) முருகேசா - முருகப் பெருமானே!, சாரதை - சாரதை என்பவள், காதலனை - தன்னுடைய அன்பனை, நாளும் கனவு அணைந்து - நாள்தோறுங் கனவிலே சேர்ந்து, மூது உவகை உற்றாள் - மிகுந்த மகிழ்ச்சி அடைந்தாள், தீதின் - தீமையினையுடைய, நனவு என ஒன்று இல்லை ஆயின் - நனவு என்று கூறப்படும் ஒன்று இல்லை யென்றால், காதலர் - அன்பரானவர், கனவினால் நீங்கலர் - கனவினாலே நீங்க மாட்டார். மன் : அசை.

(வி - ம்.) சாரதை என்பவள் தன்னுடைய காதலனை நாள் தோறுங் கனவிலே கூடி மிகுந்த மகிழ்ச்சி யடைந்தாள்; நனவு இல்லையானால், கனவிலே வருங் காதலர் பிரியமாட்டார் என்பதாம். கனவுக்கு இடையூறாக நனவு நேர்தலின் இவ்வாறு கூறப்பட்டது.

சாரதையின் கதை

ஆனந்த தேசாதிபதியின் நண்பனாகிய பதுமநாபன் என்னும் அந்தணன் மூப்படைந்தான்; மூப்படைந்தும் வேதவிரதன் என்னும் அந்தணனுடைய மகளாகிய சாரதை என்பவளை மணஞ் செய்தான். மணமுடித்த வன்றே பாம்பு கடித்த படியினால் இறந்து போனான். அவள் தன்னுடைய தந்தையின் வீட்டி லிருந்தாள். ஒருநாள் முனிவர் ஒருவர் அவளுடைய இல்லத்திற்கு

வந்தார். சாரதை அம்முனிவரை வணங்கினாள். அம்முனிவர் சாரதையின் கைம்மை நிலையை உணர்ந்து கொள்ளாமல், "பெண்ணே நீ நெடுங்காலம் உன் கணவனோடு இன்பம் நுகர்ந்து மக்களைப் பெற்று வாழ்வாயாக" என்று வாழ்த்துரை வழங்கினார். பிறகு அவள் கைம்மை என்பதை உணர்ந்தார். தாம் வாழ்த்திய வாழ்த்துரை பொய்யாகாத வாறு அவளைக் கொண்டு ஓராண்டு உமாமகேசுர நோன்பு செய்யச் செய்தார். நோன்பின் முடிவிலே உமாதேவி காட்சி கொடுத்தாள். முனிவரைப் பார்த்து, "இறந்தவன் இவளுக்குரிய கணவனல்லன்; முற்பிறப்பிலுள்ள கணவன் பாண்டிநாட்டிலே அந்தணர் குலத்திற் பிறந்து ஒரு பெண்ணை மணஞ் செய்து வாழ்கின்றான். அவனிடம் இவள் நனவில் நுகரும் இன்பத்தினும் மிகுந்த இன்பத்தைக் கனவில் நுகர்ந்து புதல்வனைப் பெற்று அவனோடு நம்முடைய பதவியை அடைக" என்று அருள் செய்து மறைந்தாள். அவ்வாறே கனவில் அவனோடு மிகுந்த இன்பம் நுகர்ந்து புதல்வனைப் பெற்றாள். கோகர்ணத்தில் சிவராத்திரி நாளில் கணவனை நனவிலுங் கண்டாள். தன் நோன்புப் பலனில் பாதியை அவனுக்குக் கொடுத்தாள். அவனது நகரத்தையடைந்து அங்குங் கனவின்பமே நுகர்ந்து வாழ்ந்தாள்.

பொழுதுகண்டிரங்கல்

123. அந்திப் பொழுதின்மணிச் சூடனினை வாலயர்ந்தாள்
முந்துமணி வல்லி முருகேசா—சிந்தைசெயில்
காதல ரில்வழி மாலை கோலைக்களத்
தேதிலர் போல வரும்.

(இ - ள்.) முருகேசா - முருகப் பெருமானே!, முந்து - முன்னாளிலே, மணிவல்லி - இரத்தினவல்லி யென்பவள்' அந்திப்பொழுதில்-மாலைநேரத்தில், மணிச்சூடன் நினைவால்- இரத்தின சூடன் எண்ணத்தால், அயர்ந்தாள்-வருந்தினாள்; சிந்தை செயில் - எண்ணிப் பார்க்குமிடத்தில், காதலர்

இல்வழி - காதலர் இல்லாத பொழுது, மாலை - மாலைப் பொழுதானது, கொலைக் களத்து - கொலைக் களத்திலே, ஏதிலர் போல வரும் - பகைவர்களைப்போல் உயிரைக் கவர வரும்.

(வி - ர்.) முன்னாளிலே இரத்தினவல்லியானவள், மாலைப் பொழுதில் இரத்தினசூடனுடைய எண்ணத்தால் தளர்ந்து வருந்தினாள்; காதலர் இல்லாத போது மாலை நேரமானது கொலைக் களத்திலே பகைவர்கள் உயிரைக் கவர வருவது போல வரும் என்பதாம்.

இரத்தினவல்லி கதை

வசுபூதி என்னும் காந்தருவ மன்னனுடைய மகளாகிய இரத்தினவல்லி என்பவள், சந்திரலேகை, அநங்கலேகை, சித்திரலேகை என்னுந் தோழிமாரோடு யாழ்முதலிய பயின்று முன்பிறப்பு வாசனையால் காசியில் இரத்தினேசுவரரை வழி பட்டுக் கொண்டிருந்தாள். அக்கடவுள் திருவுளமகிழ்ந்து அவளைப்பார்த்து, "நீ கீழ் உலகில் உள்ள சங்கசூடன் மகனாகிய இரத்தினசூடனைக் கணவனாகப் பெறுவாயாக" என்று திருவருள் செய்தார். அதனைக் கேட்டதுமுதல் இரத்தினவல்லி இரத்தினசூடனையே எண்ணிக் கொண்டிருந்தாள். மாலைக் காலத்தில் காமநோய் மிகுதிப்பட்டு வருந்தினாள். அந்தோ இம் மாலைப்பொழுது என்னைக் கொலை செய்யும் கொலைஞனாகவிருக்கிறதே என்று சொல்லி ஏங்கினாள். பிறகு அவனை மணந்து மகிழ்ந்தாள்.

உறுப்புநலனழிதல்

124. துன்பமுற்றார் தாருவனத் தோகையரேம் மானைவெஃகி
முன்புவளை தோற்றே முருகேசா—வன்பிற்
பணைநீங்கிப் பைந்தொடி சோருந் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்.

(இ - ள்.) முருகேசா-முருகப்பெருமானே!, தாருவனத் தோகையர் - தாருகாவனத்திலே யிருந்த முனிவர்களின் மனைவிமார், எம்மானை வெஃகி - பிட்சாடன மூர்த்தியாக வந்த சிவபெருமானை விரும்பி, முன்பு - முன்னாளிலே, வளை தோற்று துன்பம் உற்றார் - வளையல்களை இழந்து துன்ப மடைந்தார்கள், வன்பில் - வலிமையுடைய, துணை நீங்கி- துணைவர் விட்டுப் பிரிந்தமையால், தொல்கவின் வாடிய தோள் - பழைய அழகு கெட்டு வாடிய தோள்கள், பணை நீங்கி பைந்தொடி சோரும் - பருத்த தன்மை கெட்டு மெலிந்ததனால் பசிய வளையல்களும் கழலுகின்றன.

(வி - ம்.) தாருகாவன முனிவர்களின் மனைவிமார் சிவ பெருமானை விரும்பி வளையலை யிழந்து துன்பமுற்றார்கள்; துணைவர் நீங்கியபடியால் பழமையான அழகு கெட்டு வாடிய தோள்கள் பருமை நீங்கி மெலிந்ததனால் பசிய வளையல்களும் கழலுகின்றன என்பதாம்.

முனிவர் மனைவியர் கதை

முன் காலத்திலே தாருகாவனத்து முனிவர்கள் கடவுள் ஒருவரில்லையென்னுங் கொள்கையுடையவர்களாய்த் தருக்கி யிருந்தார்கள். இம்முனிவர்களுடைய மனைவிமார்கள் கற்பில் வழுவா திருந்தபடியினால் அம்முனிவர்களை எவரானும் வெல்ல முடியவில்லை. சிவபெருமான் உலகினரை நல்வழிப்படுத்த எண்ணினார். மோகினியுரு வெடுத்துப்போய் அம் முனிவர்களை மயக்குமாறு திருமாலுக்குக் கட்டளையிட்டார். தாம் பேரழகு வாய்ந்த பிட்சாடனக் கோலத்தோடு சென்று முனிவர்களின் மனைவிமார்களிடத்தே ஐயமேற்றார். அப்பெண்கள் பெருமானைக் கண்டவுடன் கட்டுக்கடங்காத காமம் கொண்டார்கள். அவர்களது இடையிலே இருந்த உடையும் கையிலேயிருந்த வளையல்களுஞ் சோர்ந்தன. அவர்கள் காமக் காழ்ப்பேறப் பெற்றபடியினால் மிகுந்த துன்பத்தையடைந்து வருந்தினார்கள்.

நெஞ்சொடுகிளத்தல்

125. மெய்த்தவ வீடுமனை வேண்டியலைந் தேவெறுத்தாள்
மொய்த்தகுழல் அம்பை முருகேசா—உய்த்துணரில்
காத லவரில ராகநீ நோவது
பேதைமை வாழியென் னெஞ்சு.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, மொய்த்த குழல் அம்பை - நெருங்கிய கூந்தலையுடைய அம்பை என்பவள், மெய் தவ வீடுமனை - உண்மையான தவம் பொருந்திய வீடுமனை, வேண்டி அலைந்து வெறுத்தாள் - மணஞ்செய்து கொள்ளுமாறு கேட்டு அலைந்து பிறகு வெறுத்தாள்; உய்த்துணரில் - ஆராய்ந்து பார்க்குமிடத்தில், என் நெஞ்சு வாழி - என்னுடைய மனமே நீ வாழ்வாயாக, காதல் அவர் இலர் ஆக - தலைவர் நம்மிடம் காதல் இல்லாதவராக இருக்க, நீ நோவது பேதைமை - நீமட்டும் அவரை நினைத்து வருந்துவது அறியாமையாகும்.

(வி - ம்.) நெருங்கிய கூந்தலையுடைய அம்பையானவள் வீடுமனைத் திருமணஞ் செய்துகொள்ள விரும்பி வேண்டி அலைந்து பின் அவனை வெறுத்தாள்; என்னுடைய மனமே நீ வாழ்வாயாக! தலைவர் நம்மிடத்திலே அன்பில்லாதவராக இருக்கும் போது நீமட்டும் அவரை எண்ணி வருந்துவது அறியாமையாகும் என்பதாம்.

அம்பை கதை

அம்பை என்பவள் காசிராசனுடைய மகள். இவள் வீடுமரைத் திருமணஞ் செய்து கொள்ள விரும்பினாள். அதன் பொருட்டுப் பரசுராமர் முதலியோரைக் கொண்டும் முயற்சி செய்தாள். மிகமுயன்றும் அவளுடைய முயற்சி பலனளிக்கவில்லை. காதலற்றவராக இருந்த வீடுமரை யாதுஞ் செய்ய முடியாது வெறுத்துச் சென்றாள்.

நிறையழிதல்

126. போகமுவர்த் தேதவன்விண் போதல்கண்டுங் கௌசிகிபின்
மோகமிகச் சென்ருள் முருகேசா—ஆகையினுல்
செற்ருர்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய்
உற்ரு ரறிவதோன் றன்ரு.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, போகம் உவர்த்து - இன்பத்தை வெறுத்து, தவன் விண்போதல் கண்டும் - இரிசிகர் விண்ணகம் நோக்கிச் செல்லுதலைப் பார்த்தும், கௌசிகி - கௌசிகி யானவள், பின், முனிவருக்குபின்னே, மோகம் மிக சென்ருள் - காமம் மிகுதலால் போனுள், ஆகையினுல் - ஆனபடியினுல், செற்ருர் பின் செல்லாப் பெருந்தகைமை - தம்மை வெறுத்து நீங்கியவரின் பின்செல்லாமல் மானத்தோடு நிற்கும் பெருந்தகைமை, காமநோய் உற்ருர் அறிவது ஒன்று அன்று - காமநோய்கொண்டார் அறிந்து கொள்ளக் கூடிய ஒன்று அன்று.

(வி - ம்.) இரிசிகமுனிவர் உலக போகத்தை வெறுத்து விட்டு விண்போதலைப் பார்த்தும் கௌசிகியானவள் அம் முனிவருக்குப் பின்னே காமமிகுதியினுல் சென்ருள்; தம்மை வெறுத்து நீங்கியவரின் பின் செல்லாமல் மானத்தோடிருக்கும் பெருந்தகைமையானது காம நோய் கொண்டவர்களால் அறிந்து கொள்ளக் கூடிய ஒன்று அல்லவென்பதாம்.

கௌசிகி கதை

காதிமன்னனுடைய மகளாகிய கௌசிகி யென்பவள் பிருகு முனிவருடைய மகனுகிய இரிசிகர் என்பவரை மணந்து இன்பம் நுகர்ந்து கொண்டிருந்தாள். முனிவர் உலகவின்பங்களை வெறுத்து வீடுபேற்றையடைய வெண்ணி விண்ணகத்தை

நோக்கிச் சென்றார். அவர் அவ்வாறு செல்லுதலைக் கௌசிகி யுணர்ந்தும் மோகத்தினால் அவரைப் பின் தொடர்ந்தாள். அவர் திமொழி கூறியபடியே கௌசிகி ஆமுனாள்.

அவர்வயின் விதும்பல்

127. காதலனெந் நாள்வருங்கொ லென்றுதத்தை
கவ்வைமிக்காள்
மூதுணர்வாற் றேர்ந்தும் முருகேசா — தீதின்
ஒருநா ளேழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, தத்தை - காந்தருவ தத்தையானவள், மூது உணர்வால் தேர்ந்தும் - மெய்யுணர்வினால் உணர்ந்தும், காதலன் எந்நாள் வரும் என்று - நம்முடைய காதலர் எப்பொழுது வருவார் என்று, கவ்வைமிக்காள் - துன்பத்தை யடைந்திருந்தாள், தீது இல் - தீதற்ற, சேண் சென்றார் - தொலைவிலே சென்றவர், வருநாள் வைத்து ஏங்குபவர்க்கு - திரும்பிவரும் நாளை நினைத்து ஏங்கும் பெண்கட்கு, ஒருநாள் எழுநாள் போல் செல்லும் - ஒருநாள் ஏழுநாள் போல நெடிதாகக் கழியும்; கொல்: அசைநிலை.

(வி - ம்.) காந்தருவதத்தையானவள் நம்முடைய காதலன் எப்போது வருவாரோ என்று துன்பமடைந் திருந்தாள்- தொலைவில் உள்ள நாட்டிற்குச் சென்ற காதலர் திரும்பிவரும் நாளைநினைத்து ஏங்கியிருக்கும் பெண்கட்கு ஒருநாள் ஏழு நாட்களைப் போல நெடிதாகச் செல்லும் என்பதாம்.

காந்தருவதத்தை கதை

வித்தியாதர மன்னனாகிய கலுழவேகன் தன் மகளாகிய காந்தருவதத்தைக்கு இராசமாபுரத்திலே திருமணம் நிகழும்

என்பதைக் காலக்கணிதரால் தெரிந்தான். அந்நகரத்து வணிகனுகிய சீதத்தன் என்பவன் ஒரு தீவுக்குப் போய்ப் பெரும் பொருளீட்டிக் கப்பலேறி வருவதை அறிந்தான். "இசையில் வென்றேனுக்கு என்னுடைய மகளைத் திருமணஞ் செய்து கொடுப்பாயாக" என்று கூறிப் பெரும் பொருளோடு மகளை அனுப்பினான்.

சீதத்தன் தன்னுடைய நகரத்தையடைந்து கட்டியங்காரனுடைய உடன்பாடு பெற்றுப் பல மன்னரை அழைப்பித்தான். அவர்களெல்லாருங் காந்தருவத்தைக்குத் தோற்ருர்கள். சீவகன் காந்தருவத்தையை இசையில் வென்ருன். தன்னேடெதிர்த்த பல அரசர்களையும் வென்ருன். மணம் முடித்து வாழும் நாளில் பிரிவு ஏற்பட்டது. ஏமமாபுரத்தையடைந்து தடமித்தன் என்னும் அரசனுடைய மகளாகிய கனகமாலையை மணந் திருந்தான். காந்தருவதத்தை சீவகனிருக்குமிடமும் வருங் காலமும் பிறவும் அறிவாலறிந்திருந்தும் காதல் மிகுதியால் காணவிரைந்தாள். என்று வருவாரோ என்று நாளை எண்ணி எண்ணி நைந்தாள்.

குறிப்பறிவுறுத்தல்

128. தந்தைக் குணர்த்தித் தவன்குறிப்பைக் காந்திமதி
முந்தியுடன் சென்ருண் முருகேசா—அந்தில்
பெரிதாற்றிப் பெட்பக் கலத்த லரிதாற்றி
யன்பின்மை சூழ்வ துடைத்து.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, தவன் குறிப்பை - சோழமன்னனுடைய குறிப்பை, காந்திமதி - காந்திமதியானவள், தந்தைக்கு உணர்த்தி - தன்னுடைய் தகப்பனுக்குத் தெரியப்படுத்தி, முந்தி உடன் சென்ருள் - முன்னுளிலே கூடச் சென்ருள்; பெரிது ஆற்றி பெட்ப கலத்தல் - பெரிதும் அன்புசெய்து விரும்புமாறு கூடுதல், அரிது ஆற்றி அன்பு இன்மை சூழ்வது உடைத்து -

அரிதாகிய பிரிவைச் செய்து பிறகு அன்பில்லாமல் கைவிட எண்ணுகிற குறிப்பை உடையதாகும்.

(வி - ம்.) காந்திமதியானவள் சோழனுடைய குறிப்பைத் தன்னுடைய தந்தைக்குத்தெரியப்படுத்தி முன்னுளில் அவனேடு சென்ருள்; மிகுதியான அன்பைச்செய்து கூடுதல் பிறகு அரிய பிரிவை உண்டாக்கி அன்பில்லாமல் கைவிட எண்ணுகிற நோக்கத்தைக்கொண்டது என்பதாம்.

காந்திமதி கதை

சூரவாதித்த சோழன் என்பவன் திரிசிராமலையிலே சிவதீர்த்தத்திலே நாககன்னிகைகள் எழுவர் நீராடும் போது கண்டான்; கரையிலிருந்த ஆடைகளைக் கவர்ந்தான். அரசன் மடியுமாறு அப்பெண்கள் தீமொழி புகன்ருர்கள். பாம்புகளால் கடிக்கபட்ட அவன் நஞ்சின் விரைவைக் கருடமறையினுலே தடுத்துக்கொண்டான். அவர்களுடைய ஆடைகளை அவர்களிடங் கொடுத்தான். அவர்களைப்பார்த்து, ''உங்களிலே ஒருவரைக் கூடுதற் பொருட்டே இவ்வாறு செய்தேன்'' என்று சொன்னுன். அவர்கள் தாய்தந்தையர்களுடைய உடன்பாடு வேண்டுமென்று கூறிவிட்டுச் சிவபெருமானை வழிபட்டுச்சென்ருர்கள். சோழனும் அவர்களோடு சென்ருன். ஆதிசேடனைக்கண்டு வணங்கினுன். அவனுல் போற்றிப் பாராட்டப் பெற்ருன். அவனுடைய மகளாகிய காந்திமதியைத் திருமணஞ்செய்து இனிது வாழ்ந்தான். ஒருநாள் தன்னுடைய மனைவியைப் பார்த்து, ''என் மாலையில் உள்ள இவ்வண்டு முன்னிருந்த பூம்பொழிலை அடையுமோ?'' என்று உசாவினுன். அம்மொழியால் அவள் அவனுடைய பிரிவுக்குறிப்பை உணர்ந்துகொண்டாள். அதனுல் மனஞ்சோர்ந்தாள். தன்னுடைய தந்தைக்குச் செய்தியைக் கூறினுள். தந்தையினுடைய உடன்பாடு பெற்றுச் சோழனேடு உறையூரையடைந்து வாழ்ந்திருந்தாள்.

புணர்ச்சி விதும்பல்

129\. செற்ற மிகுபரவை வன்றொண்டர் சென்றவழி
முற்றவற்றைக் காணாள் முருகேசா—உற்றவரைக்
காணுங்காற் காணேன் தவறாய காணாக்கால்
காணேன் தவறல் லவை.

(இ - ள்.) முருகேசா - முருகப்பெருமானே!, செற்றம் மிகுபரவை - சினங்கொண்டிருந்த பரவையானவள், வன் தொண்டர் சென்றவழி - சுந்தரர் சென்றபொழுது, முன் தவற்றைக் காணாள் - முன்பு அவரிடத்திலே கண்ட குற்றத்தை அப்பொழுது காணாதவளானாள். உற்ற வரை - பொருந்தியவரை, காணுங்கால் - பார்க்கும்பொழுது- தவறாகிய காணேன் - குற்றமானவைகளைக் காணாதவளாகிறேன், காணாக்கால் - அத்தலைவரைப் பார்க்காம லிருக்கும் பொழுதோ, தவறு அல்லவை காணேன்- குற்றமல்லாதவைகளைப் பார்க்க முடியாதவளாகிறேன்.

(வி - ம்.) சினங்கொண்டிருந்த பரவையார் சுந்தரர் சென்ற பொழுது அவருடைய முந்திய தவறுகளையெல்லாம் காணாத வரானார்; தலைவரைக்காணும்போது அவர் செய்த குற்றங்களைப் பார்க்கமுடியவில்லை; அவரைப் பார்க்காத பொழுதோ அவர் செய்கின்றவெல்லாம் குற்றமாகத் தோன்றுகின்றன என்பதாம்.

பரவையார் கதை

சுந்தரர் திருவொற்றியூரிலே சங்கிலியாரைத் திருமணஞ் செய்துகொண்ட செய்தியைத் திருவாரூரில் இருந்த பரவையார் உணர்ந்து அவர் மீது மிகுந்த சினங்கொண்டிருந்தார். சிவ பிரான் பரவையாரிடந் தூது போய்ச், "சுந்தரன் நின்பால் வருதற்கு நீ இணங்கவேண்டு" மென்று கூறிப் பரவையாரைத் தெளிவித்தார். அதன் பிறகு சுந்தரர்பரவையாரிடஞ் சென்றார்.

பரவையார் சுந்தரரிடம் எத்தகைய குற்றத்தையுங் காணுத வராய் மகிழ்ந்திருந்தார்.

நெஞ்சொடு புலத்தல்

130. மேவாக் கணவனைமுன் வெஃகி நளாயனிதான்
மூவாத்துன் புற்ருள் முருகேசா —ஓவாமல்
கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல்.

(இ - ள்.) முருகேசா-முருகப்பெருமானே!, நளாயனி - நளாயனி என்பவள், மேவா கணவனை முன் வெஃகி - தன்னெடு மனங் கலந்து பொருந்தாத கணவனை முன்விரும்பி, மூவா துன்பு உற்ருள் - என்றுங் கெடாத துன்பத்தை யடைந்தாள்; ஓவாமல் - ஒழியாமல், நெஞ்சே - மனமே!, நீ, பெட்டாங்கு - உன் விருப்பத்தின்படியே, அவர்பின் செலல் - தலைவருடைய பிறகே செல்வதற்குக் காரணம், கெட்டார்க்கு நட்டார் இல் என்பதோ - துன்பத்தால் அழிந்தவர்க்கு நண்பர் இல்லை என்னும் வழக்கோ ?

(வி - ம்.) நளாயனியானவள் மனத்தொடு பொருந்தாத கணவனை விரும்பி மிகுந்த துன்பத்தையடைந்தாள்; நீ உன்னுடைய விருப்பப்படியே தலைவர் பின் செல்வதற்குக் காரணம் துன்பத்தால் வருந்தியவர்கட்கு நண்பர்களில்லையென்னும் கொள்கையோ என்பதாம். தான் : அசை

நளாயனி கதை

மௌற் கல்லிய முனிவர் என்பவர் நளாயனியை மணந்து அவளுடைய கற்பையும் அன்பையும் ஆராய்ந்து பார்த்தற்கு எண்ணினர். யாவரும் வெறுக்கும் படியான நோயோடு மூப் புடையவரைப்போல நடித்தார். அவள் யாதும் மனந்திரியாமல் தொண்டு செய்திருத்தலை நோக்கி மகிழ்ந்தார். அவளுடைய

விருப்படியே பல வடிவங்களையெடுத்துக் கொண்டு அவளுக்கு இன்பமளித்தார். பிறகு தாம் தவத்திற்குச் செல்லத் தொடங்கினர். அப்பொழுது அவள் பிரிவாற்ருமல் பலவாறு எண்ணி எண்ணி வருந்தினள்.

புலவி

131. நீளையின்பாற் செல்கெனமா னெஞ்சயர மாலூடி
மூளஞர்கோட் பட்டாண் முருகேசா—கோளகலும்
உப்பமைந் தற்ருற் புலவி யதுசிறிது
மிக்கற்ரு னீள விடல்.

(இ . ள்) முருகேசா - முருகப்பெருமானே!, மா - திருமகளானவள், மால் நெஞ்சு அயர - திருமாலுடைய மனம் வருந்துமாறு, நீளையின்பால் செல்க என ஊடி - நீளாதேவியினிடத்திலே செல்க என்று சொல்லிப் பிணங்கி, மூள் அஞர் கோள் பட்டாள் - மிகுந்த துன்பத்திற்குள்ளானுள்; கோள் அகலும் - குற்றம் நீங்கும், புலவி - ஊடலானது, உப்பு அமைந்த அற்று - உப்பு உணவில் அளவோடு அமைந்திருத்தலைப் போன்றது, அது சிறிது நீள விடல் - அப்புலவியானது சிறிது நீடிக்குமாறு செய்தல், அது சிறிது மிக்க அற்று - அந்த உப்புச் சிறிதளவு மிகுதியாகப் போனதைப் போன்றது.

(வி - ம்.) திருமகளானவள் திருமாலுடைய நெஞ்சம் வருந்துமாறு பிணங்கி மிகுந்த துன்பத்திற்குள்ளானுள்; புலவியானது உணவிலே உப்பு அளவோடு அமைந்திருத்தலைப் போன்றது. அப் புலவியைச் சிறிது நீட்டித்தால் உணவிலே உப்புச் சிறிதளவு மிகுதியாகப் போனதைப் போன்றது ஆகும் என்பதாம்.

திருமகள் கதை

திருமால் தமக்குரிய ஸ்ரீதேவி, பூதேவி, நீளாதேவி என்னும் மூன்று மனைவியர்கட்குள்ளே நீளாதேவியினிடத்திலே அதிகக் காதலையுடையவராக விருத்தலை மற்றிருவருங் கண்டு பொறாமை கொண்டிருந்தார்கள். ஒருநாள் திருமால் காமநோய் மிகுந்து திருமகளைத் தழுவத் தொடங்கினர். அவள் "இதனை நீளை காண்பாளாயின் நீளப்பிணங்குவாள்" என்று கூறினள். திருமால் மேலும் ஊடலைத் தணித்தும் திருமகள் தணியவில்லை. அதனாற் சினங்கொண்ட திருமால், "நீ மானிடப் பெண்ணாகுக" என்று தீமொழி புகன்றார். திருமகள் அவ்வாறே பிருகு முனிவருடைய மகளாகப் பிறந்து பிறகு திருமாலை மணந்து மகிழ்ந்தனள். ஊடலைச் சிறிது நீட்டித்த படியால் திருமகளுக்குத் தொல்லை உண்டாகியது.

புலவிநுணுக்கம்

132. இன்பி னெழுமையுநீங் கேனென்னக் காந்திமதி
முன்பு புலந்தாள் முருகேசா—அன்பதனால்
இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனக்
கண்ணிறை நீர்கோண் டனள்.

(இ-ள்.) முருகேசா - முருகப்பெருமானே! காந்திமதி - காந்திமதியானவள், இன்பின் எழுமையும் நீங்கேன் என்ன - சூரவாதித்தசோழன் மிகுந்த இன்பத்தோடு உன்னை ஏழு பிறப்பினும் நீங்க மாட்டேன் என்று கூற, முன்பு புலந்தாள் - முன்னாளிலே ஊடினள், அன்பு அதனால் - அன்பால், இம்மைப்பிறப்பில் - இப்பிறப்பில், பிரியலம் என்றேனா - யாம் பிரிய மாட்டேமென்று காதலியிடம் கூறினேமாக, கண்நிறை நீர் கொண்டனள் - இதனைக்கேட்ட அவள் கண்கள் நிறையுமாறு நீரைக் கொண்டாள்.

(வி - ம் .) காந்திமதியானவள் சூரவாதித்த சோழன் ஏழு பிறப்பினும் உன்னை விட்டுப் பிரியே னென்று கூறப் புலந்து ஊடினுள் ; இப்பிறப்பிற் பிரிய மாட்டேன் என்றேனுக இதனைக் கேட்டவள் இனிவரும் பிறப்பிற் பிரிவாய் போலும் என்று கூறிக் கண்ணீர் ததும்பக் கலங்கினுள் என்பதாம்.

சூரவாதித்தன் கதை

சூரவாதித்த சோழன் என்பவன் நாகலோக நங்கை யாகிய காந்திமதி யென்பவளை மணந்து எல்லா இன்பங்களையும் இனிது துய்த்துக்கொண்டிருந்தான். ஒருநாள் அவன் அவளைப்பார்த்து "உன்னை ஏழுபிறப் பினும் பிரியமாட்டேன்" என்று கூறினுன். இதனைக்கேட்ட அவள் "ஏழு பிறப்பிற்கும் பிற்பட்ட பிறப்பில் பிரிவாய் போலும்" என்று கூறி ஊடினுள். இதனைக் கண்ட சோழன் வியந்து திகைத்தான்.

ஊடலுவகை

133. காதல்குண மாலைபிணக் கைத்தவிர்த்துச்
சீவகன்றன்
மோதமிக்கான் கூடி முருகேசா—ஆதலினுல்
ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்.

(இ - ள்) முருகேசா - முருகப்பெருமானே !, சீவகன் - சீவகன், காதல் குணமாலை பிணக்கை தவிர்த்து - காதல் பொருந்திய குணமாலையினுடைய ஊடலைப் போக்கி, கூடி மோதம் மிக்கான் - அவளைச் சேர்ந்து மிகுந்த மகிழ்ச்சியை அடைந்தான், ஆதலினுல் - ஆகையால், காமத்திற்கு இன்பம் ஊடுதல் - காமத்திற்கு இன்பமாவது பிணங்குதலாம், கூடி முயங்கப்பெறின் - கூடித்தழுவப் பெற்றுல். அதற்கு இன்பம் - அந்த ஊடலுக்கு இன்பமாகும்.

(வி - ம்.) குணமாலையினுடைய ஊடலைப் போக்கிக் கூடிச் சீவகன் மிகுந்த மகிழ்ச்சியை அடைந்தான். காமத்திற்கு இன்பம் ஊடுதலாகும், கூடித்தழுவப்பெறுதலே அந்த ஊடலுக்கு இன்பமாகும் என்பதாம்.

சீவகன் கதை

சீவகன் ஒரு பொழிலில் இருக்கும் போது தன் நகரிலுள்ள குணமாலையுஞ் சுரமஞ்சரியும் தம்முள் மாறுபட்டனுப்பிய பொன் சுண்ணத்திலே குணமாலை சுண்ணமே சிறந்ததென்று உண்மை கூறினன். சீவகன் குணமாலையைக் காதலித்துக் கூறியதாகச் சுரமஞ்சரி எண்ணி, அவளைக் காதலித்தது போலவே தன்னையுங் காதலிக்க வேண்டுமென்று தவஞ் செய்யச் சென்றாள். அச் சமயத்தில் சீவகன் தன்பால் காதல் கொண்ட குணமாலையை மணந்து இன்புற்றான். அவன் அவளைப் பார்த்து, "பெண்ணே! சுரமஞ்சரி என்பால் பகை கொண்டு சென்றது நின்னை மணத்தற்குக் காரணமாயிற்று" என்றான். குணமாலை அச் சமயத்தில் அவனை எண்ணியமையைக் குறித்து ஊடினாள். சீவகன் பல இனிய மொழிகளால் அவளுடைய ஊடலைத் தணித்துச் சேர்ந்து மிகுந்த இன்பத்தை யடைந்தான்.

முருகேசர் முதுநெறி வெண்பா முற்றுப் பெற்றது.

——:0:——

செய்யுள் முதற்குறிப்பு அகரவரிசை

[எண் : செய்யுள் எண்]

அண்டமுதல் வற்பழி	10
அத்தனையி மப்ப	42
அந்தணற்கிங்	102
அந்திப் பொழுதின்	123
அம்புவிமுற் றும்பு	61
அற்றதுணி யோடு	116
அற்றமின்றிச் சாம	4
அன்பரிடர் கண்ட	2
ஆகமெலிந் தாள்சீ	117
ஆதியையும் வெல்	86
ஆர்த்தபொரு மைச்சி	17
ஆாத்தொரன்பர்	88
ஆலவா யண்ண	105
ஆள்வினையால் மிக்க	62
இந்தனக்கே லாம	71
இன்பி னெழுமை	132
இன்னலே பல்கு	82
இன்னலொற்கத்	104
ஈண்டிவச வேசர்	41
ஈண்டுதச தோற்ற	3
உற்றபிணி யும்ம	110
உற்றபுற வம்புர	39
எச்சிறப்பேய்ந் தென்	74
எத்தனையோ வாசவ	24
எய்த்து மக	53
ஒக்கலைவீட் டிக்க	106
ஒல்லையிற்கண் ணன்	118
ஓகையினால் வேதா	85
ஓகையினா ருக்கு	109
ஓங்குதருக் கம்வாத	13
ஓவாச் சிவ	100
ஓவிலுழ வன்	58
கதிநெறியர் நெஞ்சிற்	(காப்பு)
கற்றும் பயனில	20
காண்டலின்றிச் சச்ச	52
காதலனெங் நாள்	127
காதலனை நாளுங்	122
காதல்குண மாலை	133
காத்தகபி லற்கி	57
காழுறுமூன் றுய்த்த	26
கின்னரரோ டேமேதா	8
கும்பமுனி யான	98
கோடியர்தன் போற்	54
கோதில் சுதரிசனன்	6
கோளொடுநா ணீத்த	114
சத்திமுத னாற்று	89
சத்துருவை மாய்	103
சந்தமிகு வாலை	112
சங்கியா சம்புனைந்தே	28
சித்தமுள வல்ல	121
சித்தரா மன்வெகுளி	31
சிந்துபதி யைத்த	49
சீலமிலாப் பேய்	95
சிவகனீங் கப்ப	119
சிவகன்சி ருதி	67
சூரனெதிர் தக்க	69
செம்மைப் பொரு	36
செற்ற மிகு	129
செற்றுச் சுயோத	63
சென்னியனி கத்தை	50
சேக்கிழார் சென்னி	64
சொற்றவிடைக் காட	72
தக்கன்மதர்த் தெச்ச	34
தத்திநடங் தெவ்வு	33
தந்தைக் குணர்	128
தன்னைவதை முத்தி	32
தாசரதி யுஞ்சீதை	91
தாதையைவெல் வந்தி	73
தீதெனுமி ராக்க	51
தீதையுன்னி நீங்கி	48

துஞ்சுமனத் தோடு	19
துற்றுநர குற்றேர்	7
துன்பகல் வோ	107
துன்பமுற்றார் தாரு	124
துன்னுவனத் துந்தரு	9
தாயபல பத்தி	93
தெய்வநிதி யாதி	44
தெற்றியதங் கற்க	90
தேசுமலி தெய்வ	(காப்பு)
தேசுருவா னின்னி	97
தேர்ச்சியய னிந்து	113
தேவரையுஞ் சூரனையுந்	1
தொக்கிடும்பை	99
தொண்டருக்கேற்	22
நந்தியெதிர் செம்மா	87
நம்பனமர்க் கேன்ற	81
நம்மரனார் செய்	75
நாகவசுக் கள்வசி	29
நாரதனாற் சம்	45
நாள்களொடு கோளி	60
நித்திரை யோர்க்	96
நீதியிற்பாஞ் சாலிகடா	12
நீளையின்பாற் செல்	131
நேசன்போற் காடு	83
பற்றறுத்து வாம	37
பற்றிலனந் தன்புற்	27
பற்றி னுருப்பசி	120
பற்றுநிரை மீட்டெ	77
பாண்டவர் செல்	47
பார்க்கவனார் பண்ணிய	15
பாவ மெனாதரன்	21
பின்னைகரம் விடிய	59
பூரிளமை யேற்று	111
பொன்னகர்க் கோ	23
போகமிவர்த் தேத	126
மன்னவனாற் றன்னை	16
மன்னனயி ராது	70
மன்னியின்பந் துய்த்த	40
மன்னுகிழி பெற்ற	76
மாண்டுநக ரோடளறு	18
மாலுறுத்தி வீடு	78
மாழ்கித் தருமனொரு	30
மாழ்கிநிதி நல்கா	101
மாழ்கிவரை வின்	92
மெய்த்தமிழ்வே தத்து	5
மெய்த்தவ வீடு	125
மெய்த்தரும தெய்வ	11
மேக்குவணை யின்பும்	35
மேயருக்கு மாங்க	115
மேவ விதாம	79
மேவாக் கணவ	130
மைந்தனுயந்தான்	55
யாண்டுள னாரா	68
வஞ்சசவா னந்த	80
வஞ்சநலன் வாம	108
வாக்கரசர் சாவ	46
வாதவூ ராளி	65
வாரிசுதை வவ்வு	48
வாழ்கணங்க ளாக்கி	25
விஞ்சுகங்கைத் தம்ப	38
வெஞ்சூதாற் றத்தை	94
வேதசன்மா பல்கலை	84
வேதநெறி பெனாத்	14
வேர்த்திடுக்கண்	56
வேள்வியிற் கோ	66